விஜய மஞ்சரி. மலர். 4.

முருகன் துணை.

நாடார் என்னுஞ் சொல் ஆராய்தல்.

அரச குலத்தைக் குறித்து

எழுதிய

ஓர் பிரபந்தம்.

இஃது

சென்னை, தண்டையார்பேட்டை

க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபரும்,

தொ. சா. த. ப. சங்கக் காரியதரிசியும்,

பஞ்சாலய தரும பரிபாலன சபைத் தலைவரும்,

கிராமணிகுலப் பிரதிநிதியும்,

ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம், நமது குலத் தொழில்,

க்ஷத்திரியன் முதலிய நூற்களின்

ஆசிரியருமாகிய

த. விஜய துரைசாமி கிராமணி அவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை

க்ஷத்திரிய மித்திரன் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1927.

1-8.] Registered. [தபால் பிரத்தியேகம்.

''துலாக்கோ லியல்பே தூக்குங் காலை
மிகினுங் குறையினு நில்லா தாகலு
மையந் தீர்த்தலு நடுவு நிலைமையோ
டெய்தக் கூறுப வியல் புணர்ந் தோரே''

சிவமயம்

சிறப்புப் பாயிரம்

சென்னை கோமளேசுவரன்பேட்டை,

ஆசிரியர், ஸ்ரீமத் - கோ. வடிவேலு செட்டியார்

அவர்கள் இயற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

உலகம் போற்று முத்தம நாட்டுள்
திலகமா விளங்குஞ் சீர்சால் பாண்டி
நாடே பழம்பதி நாக ரிகத்தால்
பாடேய்ந் ததுவெனப் பாவலர் புகழும்
பான்மை யுற்ற பாண்டிய நாட்டை
மேன்மையா யாண்டு விளங்கிய வரசராம்
பாண்டிய வரசரின் பாரம் பரியமாய்
ஆண்டவ னருளா லருளுந் தெருளும்
பெற்றுப் பிறங்கும் பீடுறு நாடார்
உற்றிடு சிறப்பை யுலக மறிய
ஆரிய மரபின னருஞ்சத் திரியன்
வீரிய வினன்குல வேந்தராஞ் சோழர்
பரம்பரை வந்தோன் பளகறு காசிப
மரபுகோத் திரத்தன் வரமுறு தமிழைக்
கற்றவ னன்றிக் கருதுமாங் கிலமுங்
கற்றவ னற்றவர் கைக்கொளா ரியமுங்
கற்றவன் க்ஷத்திரிய மித்திர னென்று
சொற்றிடு பத்திரிகை தூரிய மாக
நடாத்தும் புலவ னற்றமிழ் வாணன்
அடாத மொழிசொலா வன்பனே காம்பர
கிராமணி செய்த கிளர்தவப் பயனு
லராவணி சடைய னருள்பெறப் பிறந்தவன்
வாணுதி போற்று மாண்பினைக் கொண்ட
வேணுதி நாதனு ரெழிலடி மறவான்
கண்டவர் விரும்புங் கவினுர் சென்னைத்
தண்டையார் பேட்டையைத் தன்பதி யாக்கொ
ளன்பன் பன்னூ லாராச்சி செய்தவன்
மன்பதை போற்று மாதவன் பொன்னடி

மறவா தேத்தும் வளர்மதி யுள்ளா
னுறழா நெஞ்சின னுத்தம விஜய
துரைசா மியெனுந் தூயவன் பன்னூல்
வரையா தாய்ந்து மனத்துட் கொள்வன
கொண்டு மேலோர் கூறுவ வெல்லாங்
கொண்டு பண்டைய வழக்கெலாங் காட்டி
நாடா ரென்னுஞ் சொல்லா ராச்சிப்
பீடார் நூலைப் பெருமையாக் கத்திய
நடையி லெழுதி நாவலர் புகழத்
தடையறு புகழைத் தாங்கினன் மாதோ.

சாற்றுக் கவிகள்.

வேலூர், ஊர்ஹீஸ் கலாசாலை, தலைமைத் தமிழாசிரியர்,

ஸ்ரீமான், பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்கள்

இயற்றியவை.

நாடார்க ளெனுஞ்சொல்லின் றகுபொருளை
நுண்ணுணர்வி னுடி யாய்ந்தே
பாடாரு நூற்பிரமா ணத்துடனற்
சமன்செய்யும் பண்பு வாய்ந்து
கோடாது சீர்தூக்குங் கோல்போல
நடுநிலைமை கொண்டு சார்ந்த
ஈடாக வொன்றில்லா வியற்றமிழி
னினிதாக விளம்பி னானே. (1)

அன்னவன்மற் றூர்கொலெனி லெடுத்துரைப்ப
னறைகடலி னந்தீ ரத்தார்
சென்னபுரி சார்தண்டை யார்பேட்டை
வாழ்பவனீள் சிறப்பெண் ணின்றி
மன்னுதின மணிபோலு மேகாம்ர
க்ராமணியின் வரச்சேய் சீரிற்
றன்னிகரில் விஜயதுரை சாமிகிரா
மணிபுலவர் மணிமே தக்கோன். (2)

பன்னியநூல் குறித்தபொருள் யாதென்னி
னுடாரென் பதத்தி னுக்கு
மன்னுபுகழ் மதிமரபி னுதித்தவரே
யன்னவர்தா மதியி னுடின்

தன்னும்பொரு ளது நான்மேற் கோள்களொடு
மாதாரந் தொடர்ச்சி யாகப்
பின்னுநிறை யுத்தியொடு நிறுவவதாம்
பெரிதுமுறை பிறழ்ந் திடாதே. (3)

கும்பகோணம், டவுன்ஹைஸ்கூல், தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,

ஸ்ரீமான், அ. பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இயற்றியது.

நல்வழக்கை மிகவுணர்ந்த விஜயதுரை
சாமிபுகழ் நாடார் என்னுஞ்
சொல்வழக்கை முறையுணர்த்தித் தனதுகுலத்
தவர்பெருமை துவன்றப் பெற்றுப்
புல்வழக்கை யறவொழிக்க இனிதிதொரு
நூலமைத்தான் போந்த வலைதால்
எல்வழக்கி னொளியடைந்தாங் கவர்குலத்தா
ருயர்வுசெறிந் திருப்ப ரன்றே.

சென்னை மயிலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பண்டிதர்,

பிரம்ஹஸ்ரீ அருணபுரம்,

வீரராகவாசார்யர் அவர்கள் இயற்றிய நிலைமண்டில வாசிரியப்பா.

நாடா ரென்னு நற்சொற் பொருளை
நாடி வழக்கி னவிலுறு மதியினன்
தண்டையம் பதிவரு தாதையே காம்பரப்
புண்ணியக் குரிசிற் புலமைசா லறிவோன்
தொன்னூற் பொருளுரை துரைசாமி யென்போன்
வண்டமிழ்க் கடலை வாய்மடுத் ததனுட்
டிண்ணமாய்த் தேர்ந்த பொருடனை நாடி
நுட்பமா யாவரும் நுகர்ந்திடத் தந்து
பண்ணவர் புகழப் பாரினற் சீர்த்தி
படிபிலா தடைந்த பான்மையோன் றனது
படிகளைச் சொல்லப் பாரினி லரிதே
அன்னவன் கூறிய வருமொழி யனைத்தும்
தென்னவ நாடார் தெளிவாய்க் கொள்ள
இன்னு லதனி லினிதுரை மேற்கோள்
சொன்னு னதலாற் சுவையென வதனை
பன்னுட் பருகப் பரிவுடைத் தாமே.

பொருளடக்கம்.

அணிந்துரை.

நாடு என்பது வினைச்சொல்லாகவும், பெயர்ச்சொல்லாகவும் வழங்கும். 1

1. பெயர்ச்சொல். 2

நாடு என்பது பெயர்ச்சொல்லாயின் ஊரைத் தெரிவிக்கும். 2

நாடு என்பது நெடிற்றொடர்க் குற்றியலுகரம். 3

நாடார் என்பது பெயர்ச் சொல்லாகும் 4

நாடார் என்பது அரசரை குறிக்கும். 8

நாடா என்பது சேய்மை விளிப்பெயர். 9

2. அன் ஆன் ஒருபொருள். 10

நாடன் என்பதும், நாடான் என்பதும் ஒருபொருள் 11

3, இடுகுறி காரணம். 14

நாடார் என்பது அரசருக்குக் காரண விடுகுறிப்பெயர் 14

4. இரட்டிப்பின் அரசரைக் குறியா. 15

நாடார் என இரட்டியாமலும், நாட்டார் என இரட்டித்தும் வழங்கும். 16

நாடார் என்பது நாட்டை யுடையவரைக் குறிக்கும். 18

நாட்டார் என்பது நாட்டிலுள்ளவரைக் குறிக்கும். 18

5. வினைச்சொல் 23

நாடு என்பது வினைச்சொல்லாயின் தேடு என்னும் பொருளைத் தெரிவிக்கும். 23

வினைச் சொல்லின் தன்மை 24

நாடார் என்பது வினைச்சொல்லாயின் அதற்கு இலக்கணம் 25

6. பெயர் வினை பேதம் 28

சாதிப் பெயர்களெல்லாம் பெயர்ச் சொல்லாகும் 30

7. நாடார் என்பது எதிர்மறை வினையாலணையும் பெயராகாது 32

வினையாலணையும் பெயர் சாதிப் பெயராகாது 33

வினையாலணையும் பெயரின் உற்பத்தி 34

எதிர்மறையின் தன்மை 35

நாடு என்பதிலிருந்து பிறந்துவரும் வினையாலணையும்பெயர் 36

நாடான் என்பது எதிர்மறை வினையாலணையும் பெயராகாது. 38
வினையாலணையும் பெயர் பெண்பாலில் "அள்" விகுதியைப் பெறுமே யன்றி, சாதிப்பெயரைப்போல் 'த்தி' விகுதியைப் பெறாது 41
சாதிப்பெயர் இகரவிகுதியைப் பெறும், வினையாலணையும் பெயர் இகர விகுதியைப் பெறாது. 41
8. சாதிப்பெயர் எதிர்மறைப் பொருளைக் கொள்ளாது. 43
சாதிப்பெயர்கள் எதிர்மறைச் சொல்லைப்போல் காணப்படினும், எதிர்மறைப் பொருளைக் கொள்ளாது. 44
9. நாடார் என்பது தொழிற் பெயரடியாகப் பிறந்த சாதிப் பெயராகாது. 45
10. சாதிப்பெயர் விகுதி மாற்றம் பெறாது. 46
11. சாதிப்பெயர் ஆர் விகுதியைப் பெற்றே உலகில் வழங்கும் 51
12. சாதிப்பெயர் அவரவர்களுக்குரிய குலப்பொருளாலும், குலத்தொழிலாலும், இடத்தாலும் ஏற்பட்டவை. 52
பிராமணர் அவர்களது குலப்பொருளால் சாதிப்பெயரைப் பெற்றனர் 53
வணிகர் அவர்களது குலப்பொருளால் சாதிப்பெயரைப் பெற்றனர் 54
வேளாளர் அவர்களது குலப்பொருளால் சாதிப்பெயரைப் பெற்றனர். 55
மற்ற சாதியார்களும் அவரவர்களது குலப்பொருள்களால் சாதிப்பெயர்களைப் பெற்றனர். 57
13. அரசர் பெயர்கள் நாடடியாகப் பிறந்தவை 64
அரசர்களுக்குப் பெருமையால் ஏற்பட்டப் பெயர்கள். 65
அரசர்களுக்குக் குலத்தொழிலால் ஏற்பட்டப் பெயர்கள். 66
அரசர்களுக்கு இடத்தால் ஏற்பட்டப் பெயர்கள். 67
14. நாடார் என்பது நாடடியாகப் பிறந்தது. 69
நாடன், நாட, நாடனை என்பவை அரசனை விளக்கும் 69
நாடன்மார், நாடன்மீர், நாடவர் என்பவை அரசனை விளக்கும். 70
நாடான், நாடா, நாடான்மார், நாடான்மார்கள், நாடார் என்பவை நாட்டை யுடையவனை விளக்கும். 71
நாடார்மார் என்பது அரசனை விளக்கும். 72

நாடார்மார்கள், நாடார்கள், நாடார்கள்மார் என்பவை அரசரை விளக்கும். 73

நாடாக்கள், நாடாக்கள்மார் என்பவை நாட்டையுடைய வரசரை விளக்கும். 74

நாடாக்கமார், நாடாவி, நாடாளர், நாடாள்வார் என்பவை நாட்டை ஆளுந்தலையுடைய அரசரை விளக்கும். 75

நாடாத்தி, நாடாச்சி, நாடாச்சிமார் என்பவை நாட்டையுடைய அரசியை விளக்கும். 76

15. நாடு ஆளல் அரசர்க் குடைமை. 77

16. நாடு உடைமையால் அரசர் நாடார் எனப்படுவர். 83

17. நாடார் என்பதிலுள்ள அரச சப்தம். 95

18. நாடார் என்பதை திவாகர நிகண்டுகளில் அரசர் பெயர்களில் ஒன்றெனக் கூறாததற்குக் காரணம். 97

திவாகரத்தில் கூறாத பெயர்களை உபலக்கணத்தால் சேர்த்துக் கொள்ளப்படும். 98

திவாகர நிகண்டார் "எண்ணியநாமம் இன்னமும் பலவே" எனக்கூறி தாம் எடுத்தாளாது விடப்பட்ட பெயர்கள் இன்னும் பலவென விளக்கியுள்ளார். 99

19. திவாகர நிகண்டுகளில் குறித்திடப் படாத நாடு சம்பந்தப் படும் அரசர் பெயர்கள். 100

20. நாடார் என்பது நாடு, நகர், நதி, மலைப் பெயர்களோடுஞ் சேர்ந்துவரும். 103

அரசர்களை பட்டப்பெயராலேயே அழைக்கப் படும். 106

பட்டப்பெயரே குலப்பெயராகவும் வழங்கும். 107

21. நாடன் என்பது அரசரைக்குறிக்கும். 108

சேரன் பெயர். 109

குடநாடன் என்பதிலுள்ள நாடன் என்பது அரசரைக் குறிக்கும் 110

சேரன் சந்திரகுலத்தவன் 111

சோழன் பெயர் 112

புனனாடன் என்பதிலுள்ள நாடன் என்பது அரசரைக் குறிக்கும் 113

நாடன் என்பது கிருத்திகை நட்சத்திரத்தைக் குறிக்கும் 115

பாண்டியன் சந்திரகுலத்தவன். 117
ஈழநாடன் என்பதிலுள்ள நாடன் என்பது அரசரைக் குறிக்கும். 118
கம்பநாடன் என்பதிலுள்ள நாடன் என்பதும் அரசரைக் குறிக்கும். 122
கம்பன் சூரிய குலத்தவன். 123
தொண்டநாடன் என்பதிலுள்ள நாடன் என்பது அரசரைக் குறிக்கும். 125
நாடன் பருத்தி என்றால் இராஜ பருத்தி எனப்பொருள் கொள்ளும். நாடன் தேக்கு, நாடன்வாழை, நாடன் மூங்கில் என்பவையும் அவ்விதமே; 126
22. நாட என்பது அரசரைக் குறிக்கும். 129
23. நாடா என்பது அரசரைக் குறிக்கும். 130
24. நாடான் என்பது அரசரைக் குறிக்கும். 132
சென்னிநாடார் என்பது சோழராஜர் என்னும் பொருள் கொள்ளும். 132
விதர்ப்பநாடான் என்பது விதர்ப்பராஜன் என்னும் பொருள் கொள்ளும். 134
நாடார் என்பது நாட்டையுடைய அரசன் என்னும் பொருள் கொள்ளும். 135
நாடார்கள் நில ஆதிபத்தியத்தை யுடையவர்கள் 142
தமிழ்நாடு பன்னிரண்டாகும். 155
நாடார்களது சிற்றரசுக் குட்பட்ட நாடுகள். 155
ஆயுதத்தொழில் அரசருக் குரியது. 160
நாடார்கள் ஆயுதத் தொழிலர் 162
நாடார்கள் வடதேசத்திலிருந்து தென்தேசத்தில் குடியேறியவர்கள். 164
நாடார்கள் தேசத்தை யாண்டவர்கள். 195
திராவிட அரசர்கள் குறும்பராவர். 169
25. நாடாள்வான் என்பது அரசரைக்குறிக்கும். 170
26. ஆகவே நாடார் அரச வம்ஸத்தவர் ஆவர். 175
அதனால் சங்கராச்சாரியார் நாடார்களை க்ஷத்திரிய வம்ஸத்தவர் என முடித்தனர். 178

தந்துரை.

1. நாடார்கள் நிலயாத்திய முடைத்தா யிருத்தல். 180
நாடார்களது நிலைமை பாத்தியதையுள்ள ஊர்கள். 181
2. நாடார்களுக்கு இயற்கையாயுள்ள வீரம். 183
3. நாடார்களுக்குள் விதவா விவாகம் கிடையாதெனல். 186
அரசசாதிக்குள் விதவாவிவாகங் கிடையாதெனல். 186
4. நாடார்குல விதவைகள் வெண்ணுடை யுடுத்தல். 191
5. நாடார்கள் சமயமாறினும் சாதிமாறி மணத்தல் வழக்கின்று. 192
6. நாடார்களில் பிச்சை எடுத்தல் முற்றும் வழக்கின்றும். 193
7. நாடார்களது சுபாசுபங்களில் இரட்டைச் சங்கு ஊதுதல் 194
8. நாடார்கள் கூடைதொட்டு மண்ணெடாதிருத்தல் 194
திருமாணிக்கம் கூடைதொடாத கேஸ் 196
9. கோயிலின் மேலைகோபுரவாயில் நாடார்கள் செல்லும் வாயில். 197

புறவுரை.

பூர்வ குடிகளின் உற்பத்தி ஸ்தானம். 200
திராவிடர் உற்பத்தி. 201
ஆரியர் உற்பத்தி ஸ்தானம். 202
மரீசி பிர்மாவழியில் சூரியகுலமும், அத்திரி பிர்மா வழியில் சந்திரகுலமும் உதித்தன. 203
பாண்டியர் உற்பத்தி. 204
பாண்டிய அரசின் முடிவு. 208
வடுகரசர் ஆளுகை. 208

முடிவுரை.

கலியுகத் தியற்கை, 209
அரசர்கள் கலியில் மாறுபட்டு உழல்வர். 211
அரசர்கள் கலியில் சூத்திரர்களைப்போல் விளங்குவர் 214
பிடித்த அரசர்கள் பிடிபட்ட அரசர்களைத் தாழ்த்துவர் 215
சிவபிரான் சந்திரகுல பாண்டிய அரசர்களை ஏத்தகாலத்தில் மகிமைபெறச் செய்வார் என்பது சத்தியம். 218

புனைந்துரை.

நாடார்களது குலங் கோத்திரங்களை விளக்கல். 220

இந்நூலில் மேற்கோளாக எடுத்துக்காட்டிய நூற்களின் பெயர்கள்.

—:o:—

கிரந்த தமிழ் தெலுகு நூற்கள்.

அபிதானகோசம்
அமரம் (கிரந்தம்)
அரிச்சந்திர புராணம்
அருணாசல புராணம்
அன்னிபெஸ்ஸண்டுஉபந்நியாசம்
ஆரீத ஸ்மிருதி(கிரந்தம்)
இரண்டாம் இலக்கணம்
இந்துலா
இராமாயணம் (வால்மீகி)
இராமாயணம்(கம்பர்)
இராமாயணத்தனியன்
இலக்கண விளக்கம்
இலக்கணக்கொத்து
இலக்கணத்திரட்டு
இலக்கணசிந்தாமணி(ஞானமணி)
இலக்கணசிந்தாமணி (ஜெகராவ்)
இலக்கணநூல் பாட்டியல்
இலக்கணச்சுருக்கம்(மகாலிங்கர்)
இலக்கணச்சுருக்கம்(வாசுதேவர்)
இலக்கணச்சுருக்கம் (ஜெகனாதம்)
இலக்கணச்சுருக்கம் (விசாகபெருமாளையர்)
இலக்கணச் சுருக்கம் (ஆறுமுக நாவலர்)
இலக்கண வினாவிடை (போப்பையர்
இலிங்கபுராணம்
உரிச்சொல் நிகண்டு
ஏரெழுபது
ஐங்குறுநூறு
ஔவை தனிச்செய்யுள்.
கம்பர் தனிச்செய்யுள்
கல்லாடம்
குவலயானந்தம்
கூர்மபுராணம்
கௌதம ஸ்மிருதி(கிரந்தம்)
சங்கலிகித ஸ்மிருதி (கிரந்தம்)
சதுரகராதி
ஜனரல் தமிழ்(ஜெகராவ்)
ஜனரல் தமிழ்(சண்முகம்பிள்ளை)
க்ஷத்திரியகுல விளக்கம்
க்ஷத்திரியமித்திரன் (பத்திரிகை)
சாதகசிந்தாமணி
சாதிநூல்(ஞானப்பிரகாச சுவாமி
சான்றோர்குல மரபுகாத்தல்
சான்றோர் மரபு
சிலப்பதிகாரம்
சிற்பசாஸ்திரம்
சீவகசிந்தாமணி
சுதேசமித்திரன் (பத்திரிகை)
சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்
சூடாமணி நிகண்டு
சேந்தன்திவாகரம்
தக்ஷ ஸ்மிருதி (கிரந்தம்)
தண்டியலங்காரம்
தமிழ் இலக்கணத் தெளிவு
தனிப்பாடற்றிரட்டு
திருவாதவூரார்புராணம்
திருவாசகம்

திருக்குறள்
திருக்காளத்திப் புராணம்
திருக்குற்றாலக் குறவஞ்சி
திருநட்சத்திரக்கோவை
திருமந்திரம்
திருவிளையாடற்புராணம்
தொல்காப்பியம்(நச்சினார்க்கினியர்
தொல்காப்பியம் (இளம்பூரணர்)
தொல்காப்பிய சூத்திரவிருத்தி
தொன்னூல் விளக்கம்
நளவெண்பா
நன்னூல்
நாலடியார்
நீதிவெண்பா
நேமிநாதம்
நைடதம்
பகவத்கீதை (கிரந்தம்).
பஞ்சரத்தினம் (இராமச்சந்திர
பதிற்றுப்பத்து (கவிராயர்
பராசர ஸ்மிருதி (கிரந்தம்)
பன்னிருபாட்டியல்
பாரதவெண்பா
பாரதம் (வியாசர்)
பாரதம்(வில்லிபுத்தூரார்)
பாரதம்(நல்லாப்பிள்ளை)
பிங்கலநிகண்டு
பிரகஸ்பதி ஸ்மிருதி (கிரந்தம்)
புத ஸ்மிருதி (கிரந்தம்)
புறநானூறு
பெரியபுராணம்
பேரகத்தியம்
பேரகராதி
மணிமேகலை
மதுரைக்கலம்பகம்
மநு ஸ்மிருதி(கிரந்தம்)
முத்துவீரியம்
முதற்பயிற்சி இலக்கணம்
யாக்கியவல்கியஸ்மிருதி (கிரந்தம்
யாப்பருங்கலம்
ருக்குவேதம் (கிரந்தம்)
வணங்காமுடிமாலை
விஷ்ணுபுராணம்
வியாச ஸ்மிருதி(கிரந்தம்)
வினையுருவ விளக்கம்
வீரசோழியம்
வெற்றிவேற்கை

ஆங்கில நூற்கள்.

Ancient India.
Ancient History of India.
Account of The Hindoos.
Annals and Antiquities of Rajasthan (Tod)
Assam District Gazetteer.
Bengal District Gazetteer.
Bellary Gazetteer.
Bhagwat Gita. (Wilkins)
Biblical Cyclopadia or Biblical Dictionary.
Brief History of The Indian People. (Hunter)
Burma, Past and Present.
Castes and Tribes of Southern India. (Thurston)
Census of India, 1891. Madras Report.

Census Operation of The Madras Presidency, 1871.
Ceylon (Tennent)
Ceylon (Davy)
Chingleput District Manual.
Christianity and Caste.
Cochin Tribes and Castes.
Comparative Grammar of The Dravidian Languages.
Eleven Years in Ceylon.
English and Tamil Dictionary (Percival)
Epigraphia Carnataca.
Epitome (Turnour)
Essay on Hindu Caste.
Ethnographic Survey of South India. (Thurston)
Far Off or Asia Described.
Gazetteer of Mysore.
Geography and Statis Memoir of Tirunelvely.
Glossory of Judicsal and Revenue Terms.
Graphic English Dictionary.
Hallam.
History of India, (Sinclair)
History of India, (Wheeler)
History of India, (Marsden)
History of India, (Pope)
History of The Hindustan
History of British India,
History of Mysore (Wilks)
History of Ceylon
Hindu Tribes and Castes.
Imperial Gazetteer of India.
Indian Church Quarter Review.
Indian Companion or General Statistics of India.
Inquiries made by The Lord Bishop of Madras, 1868.
Land of Charity. (Mateer)
Lexicon and Concordance to Tiruvasagam (pope)
Letters to Indian Youth.
Little Arthur's History of England.
Madras Government Museum Bulletin.
Madras Journal of Literature and Science.
Madura District Manual
Mahavansa (Turner)
Mahavansa (Wijesinha)
Manual of The Administration of The Madras Presidency.
Mission of Edeyenkoody.
Mission to The Mysore.
Mysore and Coorg.
Naladiyar (Pope)
Native States of India and Their Princes.
Nilagiri District Manual.
North Arcot District Manual
Pondion Coins.

On The Original Inhabitant of Bharatavarsa or India.
Oriental Historical Manuscript
Pen and Ink Sketches of Native Life in Southern India.
Prem Sagur.
Rajavali.
Reminiscence (Caldwell)
Sacred Kural of Tiruvalluva Nayanar (Pope)
Salem District Manual.
Sanskrit aud English Dictionary (Wilson)
Sanskrit and English Dictionary (William).
School Geography.
South Indian Inscription.
South Indian Sketches.
Statistical Account of Bengal.
Tamil and English Dictionary (Rottler)
Tamil and English Dictionary (Winslow)
Tamilian antiquary.
Tanjore Maharatta Principality.
Tarangambadi Tamil and English Dictionary.
Tinnevelly and The Tinnevelly Mission (Caldwell)
Tinnevelly District Manual.
Travancore Goverment Gazettee Supplement.
Travancore State Manual.
Wars of The Rajas.

——:o:——

Prof- Max Muller says:—

"Let everything be weighed in the just scales of argument. Those who argue for victory, and not for truth, can have no hearing in our court. There is too much serious work to be done to allow time for wrangling or abuse. Strong arguments, require honest labour, sound judgment, and above all, a genuine love of truth."

சந்திரன் பரம்பரை.


பிர்மா.
மரீசி
சூரியன்
வைவஸ்வதமநு
அத்திரி
சந்திரன்
புதன்
புரூரவன்
அமாவசு
வீமன்
சுமந்து
குசன்
குசநாபன்
சேரன்
நாடார் குலத்தவர்
ஆயுசு
யயாதி
எது
கிருது
வசுதேவன்
கிருஷ்ணன்
துருவசு
துஷ்யந்தன்
பாண்டியன்
நாடார் குலத்தவர்
பூரு
குரு
விசித்திரவீரியன்
பாண்டவர்கள்



த. விஜயதுரைசாமி கிராமணி,

க்ஷத்திரியமித்திரன் பத்திராதிபர்.

சிவமயம்.

விநாயகர்துதி.

"உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
 தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
 யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
 களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
 நினைந்துவரு வினைக டீர்ப்பாம்."

முகவுரை.

சீர் நிறைந்தோங்கிய நெடுங்கடலால் சூழப்பெற்ற கண்டங்களுள் ஆசியாகண்டம் எல்லா மதங்களின் உற்பத்திக்கும், எவ்வித மனிதர் பிறப்பிற்கும், மற்றெவ்வித நாகரீகத் தொழில்களுக்கும் தாயகமாயுள்ளது.* அவ்வாசியாகண்டத்தின் தென்பாகத்துள் விளங்கும் ஒரு பகுதியையே பரதகண்டம் எனப்படும். இப்பரதகண்டத்துக்கு "சம்புத்தீவு, இந்தியா" என மறுபெயர்களும் உண்டு. இந்தியாவே ஆரியர்களின் உற்பத்திக்கும், அவர்களுடைய வசிப்பிற்கும் இடமாயுள்ளது. இவ்விந்தியாவின் தட்சணபாகத்தையே பாண்டியநாடு என்பர். இந்தப் பாண்டியநாடு:—

---

* Far Off or Asia Described, part. 1, P. 1.

"பொன்னாடு மணிநாடு புலவரெலாங்
களிதுளும்பிப் புகழ்ந்துப் பாடும்
எந்நாடு மிந்நாட்டிற் கில்லையிணை
யென்றுமையோ டிறைவ னந்நாள்
பன்னாடு பலவினைத்தெம் பசுபோத
மறவெறிந்து பறித்த நாடு
சொன்னாடு தமிழ்நாடு சுருதிபுகழ்
தென்பாண்டிச் சோதி நாடு."

என்பனவாகிய சிறப்பினையடைந்துள்ள பாண்டிய நாட்டிற்கு எல்லை வடக்கே வெள்ளாறு என்றும், தெற்கே கன்னியாகுமரி என்றும், கிழக்கே மன்னார் குடாக்கடல், வங்காளக்குடாக்கடல் என்றும், மேற்கே மேற்குமலைத் தொடர்ச்சி என்றுங்கூறுப.* இவ்வெல்லைகளுக்குட்பட்டபாண்டியநாடு சுமார்நானூறு வருடங்களுக்கு முன் சந்திரகுல பாண்டியர்களால் அரசுபுரியப்பட்டு வந்தது. அதனால் அந்நாடு பாண்டியம் என்றும், பாண்டியநாடு என்றும், பாண்டிய மண்டலம் என்றும் பெயர்கள் பூண்டு விளங்குகின்றது. இப்பாண்டிய நாட்டிற்குக் கொற்கையும், மதுரையுமே தலைநகராக இருந்தன.

இப்பாண்டிய நாட்டை ஆண்ட சந்திரகுலப் பாண்டிய அரசர்களின் சந்ததியார்கள் தற்போது அப்பாண்டிய தேசத்தில் வசித்து வரும் நாடார் குலத்தவர்கள் எனவே துணியப்படுவர். அப்படித் துணிதற்குக் காரணம் பாண்டிய தேசத்தை ஆண்ட அரசர்களின் சந்ததியார்கள் . நாங்கள் தாயென்று இந்த நாடார்களை யன்றிப் போட்டி போட்டுக்கொண்டு முன்வரக்கூடிய வேறு சாதியார் இல்லாமையாலும், அந்தப் பாண்டிய தேசத்தின் அரச சந்ததியார்கள் இவர்கள் தாமென்று அறிந்துக்கொள்ள பல முக்கிய அறிகுறிகள் இந்த நாடார்களிடத்தில் இயற்கையாகவே ஏற்பட்டிருத்தலாலும், இந்த நாடார்களே பாண்டிய அரச சந்ததியார்கள் எனப்படுவர்.

என்றாலும், பாண்டிய நாட்டின் சரித்திரங்களையும், அதை ஆண்ட பாண்டிய அரசர்களின் ஜீவிய சரித்திரங்களையும், விரிவாக

---

* வெள்ளா றதுவடக்காம் மேற்குப்·பெருவெளியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும் - உள்ளார
ஆண்ட கடல்கிழக்கா மைம்பத் தறுகாதம்
பாண்டியநாட் டெல்லைப் பதி (கம்பர்)

வும், வரிசைக்கிரமமாகவும் வரையப் பல நான்முகத்தால் தேடிப் பார்த்தும் கஷ்டமாகவே முடிகின்றன. அதேனென்றால்:—சில நூறு வருடங்களுக்கு முன் சென்றதும், நாம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாத சரித்திரப் போக்கை யுடையதும், அவ்வித சரித்திரமும் ஒன்றுக்கொன்று முரண்படக்கூடிய சந்தர்ப்பத்தில் உள்ளதும், நாம் படித்ததெல்லாம் சரியென்று நம்புதற்கு முடியாததுமா யிருத்தலாலென்க.

இவ்வித நிலைமைக்கு வந்ததன் காரணம் நம் பூர்வீகர்கள் தங்களிஷ்ட வகுப்பினரில் எவரிடத்தேனும் சில குணங் குறி செயல்கள் சிறந்து தோன்றினால் அவைகளைக் கர்ன பாரம்பரையில் பாரித்துத் தூலிக்கச் செய்தும், விரோதிகளாகிய வகுப்பினர்களிடத்தில் தமக்குரிய மாற்சரியத்தால் 'உலக்கை தேய்ந்து உளிப்பிடி யானதைப் போல்' அவர்களது கீர்த்திப் பிரதாபங்களையும், வம்சப்பிரதாபங்களையும் நாளாவட்டத்தில் அமுக்கித் தாழ்த்திக் கீழ்ப்படுத்தியும் வந்ததாலென்க.*

அப்படித் தாழ்த்திவந்த அந்த அற்பர்கள் வாக்கை அப்புறப் படுத்தி§ இருந்த இடந்தெரியாமல் பெட்டிப் பேழைகளில் உக்கி மக்கிக்கிடந்த பழம் பனுவல்களும், சிலாசாசனங்களும், தற்காலத்தில் அங்கிலேயராலும், மற்றைபோராலும் ஒவ்வொன்றாய் அச்சுயந்திர

---

* "With regard to the epics themselves, it will probably ever remain a hopeless task to separate the portions which are genuine and ancient, from those which are later additions." Vide, Romesh Chander Dutt's Ancient India, preface P. XVIII. 'For it has been ascertained that the Puranas, which exist now were composed in the puranic period, and have since been altered and considerably enlarged, during many centuries after the Mahomadan Conquest of India.' Vide, Romesh Chunder Dutt's Ancient India. Book. IV. Ch. III.

§ 'The legend goes that after Parasurama had swept the Kshatriya race from the surface of the earth, ignorance and infidelity began to spread again in the land". Vide, On the Original Inhabitants of Bharatavarsha or Iidia (Madras Journal in 1888) C›. VI, P. 118.

த்தின் மீது ஏறிவரினும், அவைகளும் அந்த அரசர்களை மூடியிருக்கும் அந்தகாரத்தை அவ்வளவாய்ப் போக்காதிருப்பினும்; கிடைத்த மட்டும், அந்த ஆதரவுகளை ஒருங்குசேர்த்து, அவைகளை நாம் என்ன செய்யவேண்டும் என்றும், அவற்றுள் எதைத் தள்ளவேண்டும் என்றும், எதைக் கொள்ளவேண்டும் என்றுங் கருதுதலோடு, ஏனைய அரசர்களுக்கு உண்டாயிருக்கும் ஆதிக்கத்தில் இந்த நாடார்களுக்கு உண்டாயிருக்கும் ஆதிக்கம் எம்மாத்திரம் என்றும், ஏனைய நூற்களில் கூறியிருக்கும் அரசர்களுக்குரிய ஆதிக்கத்தில் இந்த நாடார்களுக்கு உண்டாயிருக்கும் ஆதிக்கம் எம்மாத்திரம் என்றும்; தமிழ் நாடு எங்கும் தமிழர்களோடு கலந்து குடியிருந்து வருகிற 'வடுகர், மராட்டியர், கன்னடர், மலையாளர், துலுக்கர்' முதலிய அந்நிய பாஷைக்காரர்களைக் களைந்துவிட்டு, சுத்த தமிழ்க் குலத்தவர்களை எல்லாம் ஒன்றுபடத்திரட்டி, அவர்களுக் குள்ளே நாற்பாற்குல வரம்புபடிக்கு அந்த நாலுகுலங்களில் ஒவ்வொரு குலத்தைச் சார்ந்தவர்கள் இன்னார் இன்னார் என்று வகுத்துப் பார்க்கும்போது, தமிழ்ப்பார்ப்பாரும் தமிழ்ச்செட்டிகளும், தமிழ்ச்சூத்திரரும் வெளிப்பட மற்ற இத்தமிழ் நாட்டை ஆண்ட தமிழ் அரசர்களின் சந்ததியார்கள் என்னுயினோர்கள் என்றும், தற்காலம் அந்த வம்ஸத்தி லுதித்தவர்கள் யாராயிருக்கலாம் என்றும், ஆழ்ந்து யோசித்து, நம் சுய புத்தியை ஸ்திரப்படுத்தி உண்மைக்கு உத்தாரமாக முன்னிற்கும் நூற்களின் போக்கை அனுசரித்து யோசிக்கப் புகின் சந்திரகுல பாண்டிய வம்ஸத்தவர்கள். பாண்டிய தேசத்தில் வசிக்கும் நாடார் குலத்தவர்கள் என்பது ஐயமற விளங்கும். நாம் எவ்விஷயத்தை எடுத்துரைப்பினும் அவைகள் நியாயசமூகத்தில் புராதன நூற்களுக்கு மாறுபடாமல் நிலைத்து நிற்பதுதான் கனம்பெறும். ஆகையால், யாங்கூறத் தொடங்கியதும் நியாயவாதிகள் சமூகத்தில் கனம் பெறுவதே உசிதம். இனி ஆன்றோர்களுக்கு வந்தன மளித்து யாம் எழுதிய நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி என்னும் பிரபந்தத்தை பிரகாசப் படுத்துவாம். சுபம்! சுபம்!! சுபம்!!!

சிவமயம்

நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி.

"நாடார் என்று உலகத்தவர் கூறுஞ்
சொல்லின் வழக்கை ஆராய்ச்சி செய்தலின்
இந்நூற்கு இப்பெயர் அமைந்தது."

அணிந்துரை.

"நாடார்" என்பது "நாடு" என்னுஞ் சொல்லடியாகப் பிறந்தது. "நாடு" என்பதனுடன் "ஆர்" என்னும் உயர்திணைப் பலர்பால் விகுதி சேர்ந்து "நாடார்" என்றாயிற்று. "நாடு" என்பதை பெயர்ச்சொல்லாகவும், வினைச்சொல்லாகவுங் கொள்ளலாம். பெயர்ச் சொல்லாகக் கொள்ளின் "ஊர், தேசம்" என்னும் பொருள்களையும், வினைச்சொல்லாகக் கொள்ளின் "தேடு, விரும்பு" என்னும் பொருள்களையுந் தரும். அது,

பாரார்:—"பார்" என்னும் மூலபதத்தி னின்று பிறந்த இரு பொருள் குறிக்குஞ் சொல்லாம்.

பார்=பூமி. (பெயர்ச்சொல்) இந்த மூலப்பெயர்ப் பதத்தினின்று "பாரார்" என்னும் பெயர்ச்சொல் பிறந்தது. ஆகவே 'பாரார்' என்னும் பெயர்ச் சொல்லுக்கு "பூமியையுடையவர்" அல்லது "பார்த்திபர்" என்பது பொருளாம்.

பார்=காண். (வினைச்சொல்) இந்த மூல வினைப்பதத்தி னின்று "பாரார்" என்னும் வினைச்சொல் பிறந்தது. ஆகவே "பாரார்" என்னும் வினைச்சொல்லுக்கு 'காணார்' அல்லது "காணமாட்டார்" என்பது பொருளாம். இதைப்போல் "நாடு" என்பதும், அச்சொல்லடியாகப் பிறந்த "நாடார்"

என்பதும், இரண்டுவிதமான சொற்களாக வழங்கி, இரு பொருள் கொண்டு, பெயர்ச்சொல் வினைச்சொல் என இருவகைச் சொற்களாக் விரியும்.

1. பெயர்ச் சொல்.

பெயர்ச்சொல் என்றால் ஒரு பொருளினது பெயரைத் தெரிவிக்குஞ் சொல்லாம். "பல்பொருட் பெயரே பெயர்ச் சொல்லாகும்" என்பர் குவலயானந்தத்தார். "**நாடார்**" என்பதின் பகுதியாகிய '**நாடு**' என்பது வேற்றுமை உருபுகளை ஏற்கக்கூடிய இடுகுறிப் பெயராய் நின்று, ஓர் இடத்தைச் சுட்டி நிற்றலால் பெயர்ச்சொல் எனப்படும். "**நாடு** என்பதை இடத்தால் வருபெய ரியற்சொல்" என்பர் வீரமா முனிவர்.*

நாடு=ஊர் (பெயர்ச்சொல்). "பைதிர மண்டிலம் பாடித் தேயம், தண்ணடை சநபத மகளுள் சும்மை, கண்ட மேணி யுலகென் றிவைநாடே" (சேந்தன் திவாகரம்) 'பைதிர மண்டிலம் பாடி தேயந், தண்ணடை நீவரங் கோட்டஞ் சநபதஞ், சும்மை யகலுள் கண்ட மேணியென், றின்ன விராச்சிய முலகு நாடென்ப' (பிங்கல நிகண்டு); "பாடி மண்டிலமே சும்மை பைதிர முலகு தேயம், நீடிய வகலுளேணி நீவரங் கோட்டங் கண்டம், பீடுறு சநபதங்கள் பெரும்பொழி லிவைபன் மூன்றும், நாடுதண் ணடையுமாகு மழுவமு நாட்டு மப்பேர்" (சூடாமணி நிகண்டு); "அரசு, உலகம், ஊர், தேயம், பூமி" (சதுரகராதி, பேரகராதி).

என்னும் பிரயோகங்களில் வரும் "**நாடு**" என்பது இடுகுறிப் பெயர்ச்சொல்லாக நின்று, "**ஊர், தேசம்**" என்னும் பொருள்களைத் தந்து நிலைத்தது. ஆகவே, மேற்படி நூற்களான் "**நாடு**" என்பதும், '**அரசு**' என்பதும், '**இராச்சியம்**' என்பதும், '**உலகு**' என்பதும், '**ஊர்**' என்பதும், "**தேசம்**" என்பதும், "**மண்டலம்**" என்பதும் ஒரு பொருட் கிளவிகள் எனத் துணியப்படும். இவைகள் எல்லாம் பெயர்ச் சொற்களேயாம். இப்பெயர்ச் சொற்களில் ஒன்றாகிய '**நாடு**' என்பது,

---

* தொன்னூல் விளக்கம், சொல்லதிகாரம், சொற் பொதுவியல், 3-வது சூத்திரம்,

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், மொழிமரபு,
3-வது சூத்திரம்;

"நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே." *

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் "நெடிற்றொடர்க் குற்றியலுகர" மாம். "நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழிகளெல்லாம் முதலில் நெட்டெழுத்தைப்பெற்று, ஈரெழுத்துடையன" என்பர் மழவை - மகாலிங்க ஐயர். "நாடு என்னும் வார்த்தை கடைசியில் வல்லெழுத்தாறில் ஒன்றாகிய டகர மெய்யின் மேல் ஊர்ந்தும், தனி நெடில் எழுத்தோடு கூடியும் இருப்பதால் நெடிற்றொடர்க் குற்றிய லுகரமாம்" என்பர் தமிழ் இலக்கணத்தெளிவு நூலாரும். அத்தகைய நெடிற்றொடர்க் குற்றியலுகரமாகிய "நாடு" என்பது,

தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல்,
9-வது சூத்திரம்;

"அர் ஆர் பவ்வென வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே" †

என்னுந் தொல்காப்பியச் சூத்திர விதிப்படி "ஆர்" என்னும் உயர்திணைப் படர்க்கைப் பலர்பால் விகுதியைப் பெற்று, 'நாடு + ஆர்' என நின்றது.

நன்னூல், உயிரீற்றுப் புணரியல்,
14-வது சூத்திரம்.

"உயிர்வரி னுக்குறள் மெய்விட் டோடும்"

என்னும் நன்னூற் சூத்திர விதியால் நிலைமொழியின் ஈற்றி லுள்ள குற்றியலுகரம், உயிர்முதன் மொழிவரக் கெட்டு, "நாட் + ஆர்" என நின்று, நின்ற மெய்யின்மீது,

நன்னூல், மெய்யீற்றுப் புணரியல்
1-வது சூத்திரம்.

"உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே"

என்னும் நன்னூலின் விதிப்படி வருமொழியின் ஆகார உயிர், நிலைமொழியின் டகரமெய்யின்மேல் ஏறிப் புணர்ந்து, "நாடார்" என்

* நன்னூல், எழுத்தியல், 39-வது சூத்திரம்; முத்துவீரியம், எழுத்ததிகாரம், எழுத்தியல், 36-வது சூத்திரம்.

† நன்னூல், வினையியல், 8-வது சூத்திரம்; முத்துவீரியம், சொல்லதிகாரம், வினையியல், 11-வது சூத்திரம்.

ருகி வழங்குவதாயிற்று. இவ்வித இலக்கணமுடிபைப்பெற்ற 'நாடார்' என்பது "நாட்டையுடையவர், அரசர்" என்னும் பொருள்களைத்தர வின் பெயர்ச்சொல் எனப்படும்.

இலக்கண விளக்கம், சொல்லதிகாரம், பெயரியல்,
18-வது சூத்திரம்;

"பெயரெனப் படுபவை தெரியுங் காலை
யிடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்ற
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாகிப் பாற்படப்
பொருள்புலப் படுப்பன வென்மனார் புலவர்" *

என்று இலக்கணவிளக்கத்தார் கூறி, "ஒரு பொருளின் பெயரைக் குறித்து, திணை, பால், இடம், வேற்றுமை என்னும் நான்கிற்கும் இடனாய் நிற்பதே பெயர்ச்சொல்" என நிறுத்துவர். இளம்பூரணரும் "பயனிலை செப்பலு முருபேற்றலுங் காலந்தோற்றாமையும் பெயரிலக்கணம்" என்பர். அத்தகைய பெயர்கள்.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், பெயரியல்,
11-வது சூத்திரம்.

"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெய ருடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கி னாடியற் பெயரே
யின்றிவ ரென்னு மெண்ணியற் பெயரோ
டன்றி யனைத்து மவற்றியல் பினவே"

நன்னூல், பெயரியல்,
19-வது சூத்திரம்.

"கிளையெண் குழூஉமுதற் பல்பொரு டிணைதேம்
ஊர்வா னகம்புற முதல நிலன்யாண்

---

* முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல், 4-வது சூத்திரம்; தொன்னூல்விளக்கம், பெயர், வேற்றுமையியல், 1-வது சூத்திரம்.

டிருது மதிநா ளாதிக் காலந்
தோள்குழன் மார்புகண் காது முதலுறுப்
பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினைப்பிற மற்றோ
டுற்ற னவ்வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குரிசி லோன்றல்
இன்னன வாண்பெய ராகு மென்ப,,*

என்னுந் தொல்காப்பியம், நன்னூற் சூத்திரங்களால் பெயர்ச் சொற்கள் உயர்திணை ஆண் பெண் பலரையும், சாதி குடி குணந் தொழில் முதலியவைகளையும் விளக்கி நிற்குமென விளங்கின. இப் பெயர்களெல்லாம்,

முத்துவீரியம், எழுத்ததிகாரம், மொழியியல்,
5-வது சூத்திரம்;

"பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலொடு
வருவது பெயரென வழுத்தப் படுமே"†

என்னும் முத்துவீரியச் சூத்திரத்தால் அறுவகையாக வழங்கு மென்ப. அவற்றுள்:—

தமன் எமன் நமன் என்பனபோன்று சுற்றத்தால் வரு பெயரையும்,

ஒருவன் ஒருத்தி என்பனபோன்று எண்ணால் வரு பெயரையும்,

அவையத்தான் அத்திகோசத்தான் என்பன போன்று குழூஉ வால் வரு பெயரையும்,

பொன்னன் முடியன் என்பன போன்று பொருளால் வரு பெயரையும் பொருட் பெயர்ச்சொல் என்றும்;

குறவன் குன்றவன் என்பன போன்று குறிஞ்சித் திணையால் வரு பெயரையும்,

மறவன் எயினன் குறும்பன் என்பன போன்று பாலைத் திணை யால் வரு பெயரையும்,

---

* இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், பெயரியல் 19-வது சூத்தி ரத்தையுங் கவனிக்க.

† நன்னூல், பதவியல், 5-வது சூத்திரம்.

ஆயன் இடையன் என்பன போன்று முல்லைத் திணையால் வரு பெயரையும்,

களமன் உழவன் என்பன போன்று மருதத் திணையால் வரு பெயரையும்,

பரவன் பரதவன் பட்டினவன் என்பன போன்று நெய்தத் திணையால் வரு பெயரையும்,

அருவாளன் சோழியன் என்பன போன்று தேயத்தால் வரு பெயரையும்,

நாடான் இராஜன் என்பன போன்று ஊரால் வரு பெயரையும்,

வானத்தான் விசும்பான் என்பன போன்று வானால் வரு பெயரையும்,

அகத்தான் புறத்தான் என்பன போன்று அகம்புறங்களால் வரு பெயர்களையும்,

மண்ணகத்தான் பாதாளத்தான் என்பன போன்று பிறவிடங்களால் வரு பெயரையும் **இடப் பெயர்ச்சொல்** என்றும்;

பிரபவன் மூவாட்டையன் என்பன போன்று வருடத்தால் வரு பெயரையும்,

வேனிலான் காரான் என்பன போன்று பருவத்தால் வரு பெயரையும்,

தையான் சித்திரையான் என்பன போன்று மாதத்தால் வரு பெயரையும்,

ஆதிரையான் விசாகத்தான் என்பன போன்று நாளால் வரு பெயரையும்,

நெருநலான் காலையான் என்பன போன்று பிறகாலத்தால் வரு பெயரையும் **காலப் பெயர்ச்சொல்** என்றும்;

திணிதோளான் செங்குஞ்சியான் வரைமார்பன் செங்கண்ணன் குழைக்காதன் நெடுங்கையான் என்பன போன்று தோள் முதலிய உறுப்புக்களால் வரு பெயரையுஞ் **சினைப் பெயர்ச்சொல்** என்றும்;

பெரியன் சிறியன் என்பன போன்று அளவால் வரு பெயரையும்,

அறிஞன் புலவன் என்பன போன்று அறிவால் வரு பெயரையும்,

பொன்னொப்பான் அமுதனையான் என்பன போன்று ஒப்பால் வரு பெயரையும்,

கூனன் குறளன் குள்ளன் என்பன போன்று வடிவால் வரு பெயரையும்,

கரியன் சிவப்பன் என்பன போன்று நிறத்தால் வருபெயரையும்,

தேவன் மானுடன் என்பன போன்று கதியால் வரு பெயரையும்,

பார்ப்பான் அரசன் செட்டி வேளாளன் என்பன போன்று சாதியால் வரு பெயரையும்,

சேரன் சோழன் பாண்டியன் ஈழன் என்பன போன்று குடியால் வரு பெயரையும்,

ஆசிரியன் படைத்தலைவன் என்பன போன்று சிறப்பால் வரு பெயரையும்,

நல்லன் தீயன் என்பன போன்று பிறகுணங்களால் வரு பெயரையுங் **குணப் பெயர்ச்சொல்** என்றும்;

ஈவான் உறங்குவான் ஓதுவான் தச்சன் தட்டான் பொருநன் பார்ப்பான் என்பன போன்று ஈதல் முதலிய தொழில்களால் வரு பெயரையுந் **தொழிற் பெயர்ச்சொல்** என்றுங் கூறுப.* "பல பொருட் பெயரே பெயர்ச்சொல் லாகும்" என்பர் குவலயானந்தத்தார். "கண்டதும் காணப்படாமல் மனதில் பாவிக்கப் பட்டதுமான பொருள்களைக் காட்டியதே பெயர்ச்சொல்"† என்பர் தமிழ் இலக்கணத்தெளிவு நூலாரும்.

ஆகவே, இப்பெயர்கள் எல்லாம் பெயர்ச் சொற்கள் என்று இலக்கண நூலுடையார் இசைப்பர். இவைகளோடு இன்னுஞ் சுட்டுப்பெயர்களும், இவைகளைப்போன்ற பிறபெயர்களும் ஆண் பெண் பலரைக் குறிக்கும் என நன்னூலுடையாரும், ஆசிரியர் தொல்காப்பியனாருங் கூறியவாற்றானு முணர்க. இவற்றுள் "**நாடார்**" என்பது இவ்வறுவகைப் பெயர்களுள் அடங்குமோ வெனின்,

தொன்னூல்விளக்கம், பொருளதிகாரம், இடவுரிமை,

8-வது சூத்திரம்.

"இடனெனப் படுவது மலைநா டியாறே"

என்னுஞ் சூத்திரத்துள் தொன்னூல் விளக்கத்தாரும், தண்டியலங்கார நூலாசிரியரும் '**நாடு**' என்பது இடத்தை விளக்கு மென்ப

* தொன்னூல் விளக்கம், பெயர், வேற்றுமையியல், 2-வது சூத்திரம்,

† தமிழ் இலக்கணத்தெளிவு, Ch. III, P. 36,

தாலும், அதனடியாகப் பிறந்த 'நாடார்' என்பது '**நாட்டை யுடையவர், ஊரை யுடையவர், தேசத்தை யுடையவர்** என்னும் பொருள்களைத் தருதலாலும் இடப்பெயராகி அவ்வறு வகையினுள் அடங்கி நிற்குமெனத் துணிவாம். '**நாடுடைமையும், நாடோம்பலும்**' அரசர்க்குடைமையின், அவர்க்கு **நாடார்** என்னும் பெயர் அமைந்ததென்க.

பெருந்தேவனார், பாரத வெண்பா, உத்தியோகப்பருவம்,
52-வது செய்யுள்.

நாடறிய **நாடார் சபையகத்தே** பாஞ்சாலி
நாடறிய தூசுரிந்த நாசத்தால்—நாடறியத்
தன்னேவந் தீர்க்கத் தழைபூங் குழல்விரித்த
பொன்னேயவ் வண்ண மகள்.

(ப-ரை.) "நாடு அறிய=நாட்டில் உள்ளோர் அறியும்படி, **நாடார் =அரசர்களது, சபையகத்தே=கொலு மண்டபத்திலே,** பாஞ்சாலி= த்ரௌபதையினது, நாடு=நாடுதற்கு, அரிய=அரியதாகிய, தூசு= சேலையை, உரிந்த = அவிழ்த்த, நாசத்தால் = கேட்டினால், நாடு அறிய=நாட்டில் உள்ளோர் அறியும்படி, தன் ஏவம்=தனக்கு உண்டாகிய வருத்தத்தை, தீர்க்க=தீர்த்துக்கொள்ளும்பொருட்டு, தழை =மயிற்றோகையை யொத்த, பூ=அழகிய, குழல்=கூந்தலை, விரித்தாள் = (முடியாது) தொங்கவிட்டாள், (அவள் யாரெனில்) அவ்வண்ண மகள்=அந்த (விராடன் பட்டணத்தில்) வண்ணமகளாயிருந்த, பொன்னே=இலட்சுமிக்குஒப்பாகிய த்ரௌபதியே" என்பதாம்.

(க-ரை.) "த்ரௌபதையின் சேலையை இராஜ சபையில் அவிழ்த்து மானபங்கஞ் செய்தமையின், அவ்வருத்தந் தீரும் பரியந்தம் கூந்தலை முடியாது தொங்கவிட்டாள்" என்பதாம்.

இச்செய்யுளில் சந்திரகுலத் துரியோதன மகாராஜன் சபையை அதாவது கொலு மண்டபத்தை "**நாடார் சபை**" என்றழைத்தனர் பெருந்தேவனார். '**நாடார்**' என்பது இங்கு "**நாட்டை ஆளும் உரிமை யுடையார்**" என **அரசருக்குக்** கொள்ளப்பட்டது. "நாடார்" என்பது இடப்பெயர் பகுபதம். "நாடு" என்னும் பகுதியும், "ஆர்" என்னும் பலர்பால் விகுதியும், "உயிர்வரி னுக்குறண்" என்பதனால் உகரக்கேடு சந்தியும் பெற்று, உடன்மேல் உயிரேறி முடிந்தது. சாத்தகி பலராமனைப் பார்த்துச் சொல்லியது.

பெருந்தேவனார் பாரத வெண்பா,

உத்தியோகப் பருவம்.

மூத்தா னிருக்க விளையா னரசாளல்
கோத்தரும மென்கின்றாய் கொற்றவனே—மாத்தன்
செறிகுன்றத் தெள்ளருவி செய்யலைக்கு நாடா
நெறிகுன்றச் சொல்லுவதோ நீ.

(ப-ரை.) "கொற்றவனே!=அரசனே! செறி குன்றம் தெள் அருவி=நெருங்கிய மலையினின்றும் வருகின்ற தெளிவான அருவிகள், செய் அலைக்கும்=கழனிகளை அலைக்கும்படியான, நாடா!=நாடுடையானே! மூத்தான் இருக்க=மூத்தவன் இருக்கையில், இளையான்=இளையவன், அரசு ஆளல்=அரசு புரிதல், கோத்தருமம்=இராஜ தருமம், என்கின்றாய்=என்று சொல்லுகின்றாய், நீ=நீ, மா தன்=பெருமையான தனது, நெறி=ஒழுக்கம், குன்ற=தாழும்படி, சொல்லுவதோ=சொல்வது நியாயமோ" என்பதாம்.

(க-ரை.) "நாடானே! மூத்தவன் இருக்கையில் இளையவன் அரசு புரிதல் நியாயமாமோ" என்பதாம்.

இதில் வரும் "சே யலைக்கு நாடா" என்பது மூன்று சொல், இரண்டு சந்தியை யுடையது. செய் என்பது சேய் என முதல் நீண்டு வயலைக் குறித்தது. அலைக்கும் என்னும் பெயரெச்சம் நாடா என்பதில் நாடு என்னும் பகுதியைக்கொண்டு முடிந்தது. நாடா என்பது நாடான் என்னும் இடமடியாகப்பிறந்த ஈறு கெட்ட விளிப்பெயராம். இச்செய்யுளில் சாத்தகி பலராமனை முன்னிலைச் சுட்டாக வைத்து "நாடா" என்று அழைத்ததாகக் கூறினர் பெருந்தேவனார். இது எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமை (Vocative case) எனப்படும். "எட்டாம் வேற்றுமையின் உருபு ஏ ஆ முதலியவையாம். இவை படர்க்கைப் பொருளை முன்னிலையாக வைத்து அழைத்தலைக் காட்டும்" * என்பர் கோபாலாச்சாரியார்.

முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல்,

108-வது சூத்திரம்.

"உயர்திணை மருங்கின் னரலள விறுதி
விளிக்கு மென்மனார் மெய்யுணர்ந் தோரே"

---

* முதற்பயிற்சி இலக்கணம், 34-வது சூத்திரம்.

2

என்னும் முத்துவீரியச் சூத்திரத்தில் னகார ரகார லகார ளகார விறுதிப் பெயர்களே விளியை யேற்கும் என்பதால், இந்த "நாடான், நாடார்" என்னும் பெயர்களும் னகார ரகார விறுதிப் பெயர்க ளாயினமையின் விளியை யேற்றது. *

நன்னூல், பெயரியல், 50-வது சூத்திரம்.

"ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
அளபீ றழிவய னீட்சி யதனோடு
ஈறு போத லவற்றோ டோவுறல்
ஈறழிந் தோவுறல் இறுதியவ் வாதல்
அதனோ டயல்திரிந் தேயுற வீறழிந்து" †

என்னும் நன்னூற் சூத்திரத்தால் ஈற்று னகார ரகார மெய் கெட்டு, நாடா என அயல் நீண்டிருத்தலால் சேய்மை விளி எனப் படும். சேய்மை விளி எனின் தூரத்தி லுள்ளதை அழைத்தலாம். ஆகவே, நாடான் என்பது நாடுடையான், அரசன் எனப் பொருள்கள் தருதலால் பெயர்ச்சொல்லாகும்.

2. அன் ஆன் ஒருபொருள்.

நாடான் என்னும் பொருளிலேயே நாடன் என்பதும் நிற்கும். அன்றியும், "நாடன், நாடான்" என்னும் இரண்டு பெயர்களுக்கும் "நாடு" என்பதே மூலபதமாகும். "நாடு" என்பது,

நன்னூல், வினையியல், 6-வது சூத்திரம்.

"அன்னா னிறுமொழி யாண்பாற் படர்க்கை" ‡

என்னும் நன்னூற் சூத்திரத்தையேற்று, "நாடன், நாடான்" என நின்றது.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம்,
5-வது சூத்திரம்.

'னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்'

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், விளிமரபு, 11-வது சூத்திரம்; இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், பெயரியல், 47-வது சூத்திரம்.

† தொன்னூல் விளக்கம், சொல்லதிகாரம், பெயர், வேற்றுமையியல், 20-வது சூத்திரம்.

‡ இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், வினையியல், 6-வது சூத்திரம்,

என தொல்காப்பியர் கூறிய சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் "அன் ஆன், என்னும் இரண்டினையும் ஒன்றெனத் தொகுத்து 'னகரம்' னென்றார்" எனக்கூறி, அவ்விரு விகுதிகளின் பொருளும் ஒன்றென முடித்தனர்.

நாடன்
நாடான்

என்பன ஆண்பாற் பெயர்களாம். இவற்றின் ஈற்றில் வரும் 'அன், ஆன்' என்னும் விகுதிகள் ஒரு பொருள் குறித்த ஆண்பால் விகுதிகளாம். இவற்றிற்குப் பலர்பாற் பெயர்கள்,

நாடர்
நாடார்

என்பனவாம். இவற்றின் ஈற்றில் வரும் 'அர் ஆர்' என்னும் விகுதிகள் ஒரு பொருள் குறித்த பலர்பால் விகுதிகளாம். இவ் விகுதிகள்,

தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல்,
14-வது சூத்திரம்.

"பாலறி மரபி னம்மூ வீற்று
மாவோ வாகுஞ் செய்யு ளுள்ளே"*

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் செய்யுள் வழக்கில் ஆகாரம் ஓகாரம் ஆகுமெனக் கூறி, இரண்டும் ஒரு பொருளையே கொள்ளுமென முடித்து இருத்தலைப்போல்;

முத்துவீரியம், எழுத்ததிகாரம், புணரியல்,
79-வது சூத்திரம்.

"யாப்பினுள் அஆ வாகு மென்ப"

என்னுஞ் சூத்திரத்துள் முத்துவீரியரும் அகரம் ஆகாரம் ஆகுமென முடித்து, பொருளும் ஒன்றெனவே விளக்கினமையின் ஒரு பொருள் கொள்ளும். இதை விளக்கவே "சந்தனக்கோல் குறுகினால் பிரப்பங்கோல் ஆகாது, அதுபோல் உயிரது குறுக்கமும் உயிரேயாம்" எனக்கூறுவர் நச்சினார்க்கினியர். † இன்னும்

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், பெயரியல், 41-வது சூத்திரம்; நன்னூல், பொதுவியல், 2-வது சூத்திரம்; முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல், 47-வது சூத்திரம். [கீழ் காண்க.

† தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூன்மரபு, 2-வது சூத்திரவுரையின்

தொல்காப்பியம், சொல்லதிகாரம், விளிமரபு,
13-வது சூத்திரம்.

"அன்னெ னிறுதி யாவா குமே" *

எனத் தொல்காப்பியருங்கூறி, அகரம் ஆகாரம் ஆகுமென்றனர். இதனால் "நாடன்" என்பதே "நாடான்" எனவாகி, இரண்டுக்கும் பொருள் ஒன்றெனவே முடியும்.

அருணாசல புராணம்,
வச்சிராங்கத பாண்டியன் சருக்கம்,
40-வது செய்யுள்.

வேழமும் பரியுந் தேரும் வீரருஞ் சுவடு நாடிச்
சூழ மந்திரிக ளோடுஞ் சூழ்ந்தனர் துயரந் தீர்ந்தான்
தாழையின் கமுகின் காடுந் தவளவான் கதிரைத் தீண்டும்
வாழையின் கரும்பின் சாற்றின் வளர்ந்திடும் வையை நாடான்.

(இ-ள்) "யானையும் குதிரையும் தேரும் காலாளும் அடிபற்றிக் கொண்டு மந்திரிகளுடனே அரசனைச் சுற்றிக்கொள்ள, அப்பொழுது தென்னை மரங்களும் கமுக வனமும் கரும்பின் சாற்றினால் செழித்து சந்திரமண்டலத்தைத் தடவும் வாழை மரங்களும் வளரும்படியான வைகை நதிக்கு அரசனாகிய பாண்டியன் விசனம் நீங்கினான்" என்பதாம்.

இக்கவியில் வச்சிராங்கத பாண்டியனுக்கு "வையை நாடான்"† எனப் பெயர் வந்திருக்கின்றது. இத்தொடர் மொழியின் ஈற்றில் வரும் "நாடான்" என்பதற்கு உரையாசிரியராகிய மழவை-மகாலிங்க ஐயர் "அரசன்" எனப்பொருள் எழுதி யிருக்கின்றார். ஆகவே "வையை நாடான்" என்பதற்கு,

வையை=வைகை நதிக்கு,
நாடான்=அரசன், பாண்டியன்

எனப்படும். அதாவது வைகை நதிக்கரசன் என்பது பொருள்.

திருவாதவூரர் புராணம்,
திருப்பெருந்துறைச் சருக்கம், 84-வது செய்யுள்.

"சென்றவர் வையை நாடன் திகழ்சபை முன்ன ரெய்தி
வன்றிறன் மன்ன போற்றி மாமது ரேச போற்றி

---

*முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல், 110-வது சூத்திரம்.
†தற்காலம்அச்சிட்டிருக்கும் அருணாசலபுராணத்தில் மாற்றப்பட்டுள்ளது.

யென்றுபின் வாத வூர ரெய்திய செய்தி யெல்லாம்
ஒன்றிய கவற்சிகூறு முளத்துட னின்று சொல்வான்"

(இ-ள்) "அப்படிப் போனவர்கள் வைகைக் கரசனுடைய சிறப்புப் பொருந்திய சபைக் கெதிரேபோய்த் திருவாதவூரர் அடைந்த செய்கைகளை எல்லாம் மிகுந்த கவலை பொருந்திய மனத்துடனே பராக்கிரமத்தை யுடைய அரசனே! சரணம், பெரிய மதுரைக்கு அரசனே! சரணம் என்று வணங்கி நின்று சொல்லுவார்கள்" என்பதாம். இக்கவியில் அரிமர்த்தன் பாண்டியனுக்கு "வையை நாடன்" எனப் பெயர் வந்திருக்கின்றது. "வையை நாடன்" என்பதற்கு,

வையை=வைகை நதிக்கு,
நாடன்=அரசன், பாண்டியன்

எனப்படும். அதாவது வைகை நதிக்கு அரசன் என்பது பொருள். இவ்விரு செய்யுள்களிலும் பாண்டியனையே "நாடான்" எனவும், "நாடன்" எனவுங் கூறியிருக்கின்றனர். இவைகளால் "நாடன்" "நாடான்" என்னும் இருபதங்களும் ஒரு பொருளையே குறிக்குமெனத் துணியப்படும். அதை விளக்கவே,

"வைகை நாடன்'
வைகை நாடான்"

என்றனர். அன்றியும், அகரத்திற்கு ஆகாரம் இனவெழுத்தென்பதோடு, அகரத்தின் விகாரமே ஆகார மாதலின் ஒரு பொருள் கொண்டு பாண்டியனைத் தெரிவித்தன.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், விளிமரபு,
27-வது சூத்திரம்.

"எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே
நின்ற வீற்றிய னீட்டம் வேண்டும்"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எடுத்தாண்ட "குரிசில் குரிசீல், ஏந்தல் ஏந்தால், தோன்றல் தோன்றால், குழையன் குழையான், அணியன் அணியான், மக்கள் மக்காள்" என்பன வாகிய மேற்கோள்கள் ஒரு பொருள் கொண்டு வருவன போன்று, "நாடன் நாடான், நாடர் நாடார்" என்னும் பெயர்களும் விகுதிகளால் வடிவம் மாறினும், பகுதியும் விகுதியும் பொருளும் ஒன்றெனத் துணியப்படும்.

3. இடுகுறி காரணம்.

ஏரெழுபது. 17-வது செய்யுள்.

"பார்பூட்டுந் திசையனைத்தும் பகடுகளும் பரம்பூண
போர்பூட்டுங் காமனுந்தன் பொருசிலைமேற் சரம்பூட்டான்
கார்பூட்டுங் கொடைத்தடைக்கைக் காவேரி வளநாடர்
ஏர்பூட்டி னல்லதுமற் றிரவியுந்தேர் பூட்டானே"

இச்செய்யுளில் "காவேரி வளநாடர் ஏர்பூட்டி னல்லாது" என்னும் பகுதி பெறப்படுகின்றது. அது "காவேரி சலத்தால் வளப்பமுடைய நாட்டி லுள்ளவர்கள் ஏர் பூட்டா விட்டால்" என விரியும். இதனால் "நாடர்" என்பது நாட்டி லுள்ளவர்களையுங் குறிக்குமென விளங்கினது. "நாடர்" என்னுஞ் சொல் அரசகுலத்தாருக்கு இடுகுறியுங் காரணமுமாம். நாட்டிலுள்ளவருக்குக் காரணமாத்திரமாம்* நாட்டிலுள்ளவருக்குக் கூறுங்காரணம் அரசகுலத்தாருக்குக் கூறுங் காரணத்தால் விபசரித்திடும். அரசகுலத்தாருக்கு இடுகுறியே† முக்கிய மாதலால் விபசரித்திடாது சிறந்திடும். அது "அந்தணர்" என்னும் பெயர் காரணங் கருதியவழி "அம்=அழகை, தணர்= உடையவர்" அதாவது அழகிய தன்மையினை யுடையோர் பலருக்குஞ் சேரலானும், காரணங் கருதாதவழி இடுகுறி மாத்திரையேயாய் "அந்தம்=வேதமுடிவை, அணர்=பொருந்தினவர்" அதாவது வேதமுடையோர் என பிராமணருக்கே சேறலானுங் காரண இடுகுறி‡ யாயிற்று. இதைப்போல் நாடர் என்பதும் நாட்டை யுடையவர்களையும், நாட்டி லுள்ளவர்களையுங் குறிக்குமென்று ஏற்படும். அப்படி ஏற்பட்டதை இடத்துக் கேற்றவாறும், வகுப்பிற்கு ஏற்றம் போலும் பொருள் கொண்டு அமைத்துக் கொள்ளலே அறிவுடையோர் கடன். என்றாலும், நாடர் என்பது காரணத்தால் நாட்டி லுள்

---

* யாதாமொரு காரணம் பற்றி ஒரு பொருளுக்கு வழங்கிவரும் பெயர் காரணப் பெயர்.

† ஒரு பொருளைக் குறித்தற்குக் காரணமில்லாமல் கடவுளானும் அறிவுடையோரானும் இட்ட குறியாகிய பெயர் இடுகுறிப்பெயர்.

‡ ஒரு வகையில் காரணம் பற்றியும், மற்றொரு வகையில் காரணம் பற்றாமலும் ஒரு பொருளுக்கே வழங்கி வரும் பெயர் காரண விடுகுறிப் பெயர். (நன்னூல், எழுத்தியல், 7-வது சூத்திரம்; ஜனரல்தமிழ், பெயரியல், 8-வது சூத்திரம்.)

ளவரை விளக்குதலைப்போல், நாடார் என்பதும் அவ்வாறு நாட்டி லுள்ளாரை விளக்க நூற்பிரமாணம் இல்லாமையால் விளக்காதெனத் துணியப்படும்.

4. இரட்டிப்பின் அரசரைக்குறியா.

நன்னூல், உயிரீற்றுப் புணரியல்,
33-வது சூத்திரம்;

"நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே"*

என நன்னூல் ஆசிரியரும்,

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகரப் புணரியல்,
6-வது சூத்திரம்.

"ஈரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயி னொற்றிடை யினமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி"

எனத் தொல்காப்பியருங் கூறிய சூத்திரங்களை நோக்கி "நாடு" என்பதனோடு "ஆன்" விகுதியைப் புணர்த்த "நாட்டான்" என இரட்டித்தே தீரவேண்டு மெனவும், அப்படி இரட்டாமல் "நாடான்" எனப் பட்டமையால், அது பெயர்ச்சொல் ஆகா வெனவும், எதிர் மறை வினைச்சொல்லே ஆகுமெனவுங் கூறுவர். இஃதறியாமை. மேற்கூறிய சூத்திரங்களின் கடையில் தொக்கிவரும் "மிகவே, மிகுதி" என்பதால் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டித்தும், சிறு பான்மை வேற்றுமையில் இரட்டியாமலும் வருமெனத் தாமே போத ரும். இலக்கண சிந்தாமணியாரும் "டு று ஈற்றையுடைய நெடிற் றொடர்க் குற்றிய லுகரங்களுக்குப் பின் உயிர்வரின் வேற்றுமையில் சிறுபான்மை உகரமேறிய மெய்யிரட்டும்" என்பர். இதை நன்னூல் விருத்தியுரை ஆசிரியரும் சிறு பான்மை என்பதை ஒப்பியே இருக் கின்றனர். அன்றியும்,

முத்துவீரியம், எழுத்ததிகாரம், புணரியல்,
69-வது சூத்திரம்.

"ஒற்றிடை மிகூஉங் குற்றுகரமு முளவே"

---

* முத்துவீரியம், எழுத்ததிகாரம், புணரியல், 232-வது சூத்திரம்; இலக் கணவிளக்கம், எழுத்ததிகாரம் உயிரீற்றுப்புணரியல், 50-வது சூத்ரம்,

என்னும் முத்துவீரியச் சூத்திரத்தில் ஒற்று மிகுத்த குற்றிய லுகரங்களும் உளவென்பதால், மிகாததும் உளவெனத் தாமே விளங்கும். அப்படி உண்டெனவே,

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகரப் புணரியல்,
7-வது சூத்திரம்.

"ஒற்றிடை யினமிகா மொழியுமா ருளவே
யத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே"

எனத் தொல்காப்பியரும்,

முத்துவீரியம், எழுத்ததிகாரம், புணரியல்,
233-வது சூத்திரம்.

"ஒற்றிடை மிகாக்குற் றுகரமு முளவே"

என முத்துவீரியருங்கூறி இரட்டியாமையையும் நன்கு விளக்கி யிருக்கின்றார்கள். இன்னும் திவாகர நிகண்டார்களுங் கூறிய "குட நாடன், தமிழ்நாடன், புனனாடன்" என்பவைகளில் வரும் "நாடன்" என்பதும் பெயர்ச் சொல்லேயாம். "நாடான்" என்பதும் அதுவே. இவைகட்கு நூலாசிரியர்கள் "நாட்டை யுடையவன்" என்னும் பொருளைத் தந்தெழுதி யிருக்கின்றார்கள். அவைகள் "நாட்டன்" என இரட்டிக்காமல் "நாடன்" என வெளிப் பட்டமைக்குக் காரணம், இலக்கண வாதிகள் வேற்றுமையில் இரட்டியா வென்பதேயாம். சங்க நூல்களி லெல்லாம் அரசனை முன்னிலைச் சுட்டாக வைத்து "நாட, நாடா" என அழைக்கப்பட்டு வருகின்றன. அவைகள் "நாட்ட, நாட்டா" என ஒற்று இரட்டியாமலே வந்தமையால் அவைகளை பெயர்ச்சொல் அல்ல வெனக் கூற முடியாது.

வில்லிபாரதம், ஆதிபருவம், வாரணாவதச் சருக்கம்,
84-வது செய்யுள்.

"மறுகிற் பணிலந் தவழ்பழன வளநா டுடையா னெதிர் வணங்கி
முறுகிப் புரிவெங் கலைக்கோட்டு முனியே போலு முனிவரைத்
தறுகட் குருவின் றலை துணிக்கத் தகவோர் மகவுந் தனஞ் சயன்றோ
ளுறுகைகொருபூங்கன்னியையும் பெறுவான்வேண்டியுற்றிரந்தான்"

என்னும் வில்லிபாரதப் பகுதியிலும்,

"பன்னு வலர்புகழ் தென்னு டாண்ட
இராவணன் றனையவ ணிராவணம் போக்கியும்

இலங்குறு பொதியில் விலங்கல்வாழ் பெருந்தவத்
தகத்தியன் புரந்தருண் மருத்துவ மிகுத்த
அமிழ்தினிற் சிறந்த தமிழெனு மடந்தை"

என்னும் பத்துப்பாட்டு முகவுரையிலும் வெளிப்படும் *"நாடுடையான், நாடாண்டான்" என்பவைகளைப் போல் இரட்டியாது விளங்கின. "இரண்டாம் வேற்றுமைத் தொகையின் முன் வலி மிகாது" என்பர் † மழவை - மகாலிங்க ஐயரும், ச. ஜெகராவ் முதலியாரும், பேறை - ஜெகனாதம் பிள்ளையும், வாசுதேவ முதலியாரும். அதனால் அவர்கள் கருத்து தொகையின் முன் மிகாதென விளங்கினது. ஆகவே "நாடுடையான்" என்பதும், "நாடாண்டான்" என்பதும், "நாடன்" என்பதும், "நாடான்" என்பதும் இரண்டாம் வேற்றுமைத் தொகையா யினமையின் இரட்டியா தொழிந்தன.

நன்னூல், சொல்லதிகாரம், பெயரியல்,
39-வது சூத்திரம்.

"இரண்டா வதனுரு பையே யதன்பொருள்
ஆக்க லழித்த லடைத னீத்தல்
ஒத்த லுடைமை யாதி யாகும்‡"

என்னும் நன்னூற் சூத்திரத்தால் இரண்டாம் வேற்றுமை உருபு ஐ ஆகும். இதன்பொருள் "ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை" முதலியனவாம். இவற்றுள் "நாடான்" அல்லது "நாடுடையான்" என்பது ஐ உருபு தொக்கி உடைமைப் பொருளில் நின்றது. இதற்கு "நாட்டை யுடையான்" என்பது பொருள். இது இரண்டாம் வேற்றுமை விரியாகும். இரண்டாம் வேற்றுமையை "கர்மக்காரகம்" என்பர் வீரசோழிய நூலார். அதன் பொருள் செயப்படு பொருளாம். பெயரைக் குறித்து இரட்

* "கோடுயர் பன்மலை யிறந்தன ராயினும்" (ஐங்குறு நூறு) என்பதில் வரும் கோடுயர் என்பது கோட்டுயர் என இரட்டியா தொழிந்தது.

† இலக்கணச்சுருக்கம், புணரியல், 137-வது சூத்திரம்.

‡ இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், பெயரியல், 41-வது சூத்திரம், தொன்னூல்விளக்கம், சொல்லதிகாரம், பெயர், வேற்றுமையியல், 5-வது சூத்திரம்; முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல் 55, 56-வது சூத்திரங்கள்.

டாமலே வரும் "நாடான், நாடா, நாடன், நாட" என்பன ஆன்றோர் செய்யுள் வழக்கிலிருந்து ஆயிரக் கணக்காக எடுத்துக் காட்டுத லோடு, அவைகள் அரசரைக் குறித்தலைப்போல், "நாட்டார்" என் னும் ஒற்று இரட்டித்த பதமும் அரசரைக் குறிக்க ஒரு உதாரண முங் காட்டக் கண்டிலம். ஆயின் அவ்வொற்று இரட்டித்தப் பதங்கள் நாட்டின் கண் வசிப்பவர்களைக் குறித்து வருகின்றன.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல்,
4-வது சூத்திரம்.

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"

என்னுஞ் சூத்திரத்தின் கீழ், *"பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலையமாநாடு, அருவாநாடு, அருவாவடதலை நாடு" என்னும் பன்னிரு நாட்டையும் விளக்கி;

"தென்பாண்டி நாட்டார் ஆ வைப் பெற்ற மென்றும்,
குட்டநாட்டார் தாயைத் தள்ளை யென்றும்,
குடநாட்டார் தந்தையை அச்ச னென்றும்,
கற்காநாட்டார் வஞ்சகரை லகைய ரென்றும்,
சீதநாட்டார் ஏடாவென்பதனை எலுவ னென்றும்,
பூழிநாட்டார் நாயை ஞமலி யென்றும்,
அருவாநாட்டார் செய்யைச் செறு வென்றும்†"

வழங்கி வருவர் என நச்சினார்க்கினியர் கூறியவற்றுள் வரும் நாட்டார் என்பன: நாட்டிலுள்ளவரைத் தெரிவித்தமை காண்க.

திருவாசகம், திருவம்மானை,
6-வது பாசுரம்.

"கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்

* "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன் வடக்கு—நன்றாய
சீதமலாடு புனனாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட் டெண்"

† நன்னூல், சொல்லதிகாரம், பெயரியல், 16-வது சூத்திரஉரையின் கீழுங் காண்க.

காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
வாட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்''

திருமூலநாயனார் திருமந்திரம், ஆக்கை நிலையாமை,
11-வது செய்யுள்.

''நாட்டுக்கு நாயக னம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.''

பெருந்தேவனார் பாரதவெண்பா,
உத்தியோகப் பருவம்.

''எங்கள் துணையா யெமக்கா யவர்க் கானாய்
கங்கைசூழ் நாட்டவர்தங் காவலனே—துங்கப்
படைக்கடைமுன் னீனிற்கப் பாரதப்போர் வெல்லக்
கடைப்படுமோ வென்றான் கலந்து.''

இம் மூன்று செய்யுட்களிலும் வரும் நாட்டார் என்பது நாட்டிலுள்ளவர்களைத் தெரிவித்தமை காண்க.

நாட்டார்=ஊரார் (சதுரகராதி, பேரகராதி.)
=Inhabitants of the Country. (Rottler's Tamil and English Dictionary.)
=People of a Country=தேயத்தார் (Winslow's Tamil and English Dictionary.)
=A Vague term, meaning people of the country, reported by some to be a main caste. (Thurston's Castes and Tribes of Southern India. Vol. V, p. 249.)

இவ் வகராதிகளில் வரும் ''நாட்டார்'' என்பது நாட்டில் வசிப்பவர்களைத் தெரிவித்தன. நாடு - பகுதி, ஆர் - பலர்பால் விகுதி, ''நெடிலோ டுயிர்த்தொடர்'' என்னுஞ் சூத்திரத்தில் மிக என்றதனால் டகரம் இரட்டித்து, உகரங்கெட்டது சந்தி. ஊரிலுள்ளவர்களை ''நாட்டார்'' என்பது உலகவழக்காதலோடு; ''காடு+புலி=காட்டுப்புலி', என்பது ஏழாம் வேற்றுமை பிறிதின் கிழமையாகி

காட்டிலுள்ள புலியை விளக்குவதைப் போலும், "நாடு+ஆர்= நாட்டார்" என்பதும் ஏழாம்வேற்றுமை பிறிதின் கிழமையாகி, நாட்டிலுள்ளவரை விளக்குமே யன்றி, நாட்டையுடையவரை விளக்காது.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புணரியல்,
12-வது சூத்திரம்.

"வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்
கொல்வழி யொற்றிடை மிகுதல் வேண்டும்"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் ஏழாம் வேற்றுமையில் இரட்டித்தே தீரவேண்டு மென்றார்.

முத்துவீரியம், எழுத்ததிகாரம், புணரியல்,
8-வது சூத்திரம்.

"ஏழுநான்கு மொற்றிடை மிகு மென்ப"

என முத்துவீரியருங் கூறி ஒப்புகின்றனர். அப்படி இரட்டித்த "நாட்டார்" என்பது,

நன்னூல், சொல்லதிகாரம், பெயரியல்,
44-வது சூத்திரம்.

"ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப*"

என்னும் நன்னூற் சூத்திரத்தால் ஏழாம் வேற்றுமைத் தொகையாகும். "ஏழாம் வேற்றுமைக்கு கண் இல் உள் மேல் முதலானவை உருபாய் வரும்· இவை பொருளிருக்கும் இடத்தைக் குறிக்கும்" என்பர் †கோபாலாச்சாரியாரும், ‡தாவீது யோசப்பு B. A. உபாத்தியாயரும். அப்படி பொருளிருக்கும் இடத்தை விளக்கலால் "ஆதாரக்காரகம்"என்பர் வீரசோழிய நூலார். "ஆதார காரகம்" என்றால் "இடத்தை ஆதாரமா யுடைய பொருள்" எனப்

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல், 20-வது சூத்திரம்; தொன்னூல் விளக்கம், சொல்லதிகாரம், வேற்றுமையியல், 10-வது சூத்திரம்.

† முதற்பயிற்சி இலக்கணம், 33-வது சூத்திரம்.

‡ தமிழ் இலக்கணத்தெளிவு, பெயர்ச்சொல் 100-வது சூத்திரம்.

படும். அதனுலேயே ஏழாம் வேற்றுமையை "இடப்பொருள்" அல்லது "இடவேற்றுமை (Locative)" என்பர் இலக்கண நூலுடையார். *"ஐ ஆல் கு இன் அது கண் என்பன வேற்றுமைக்கு அசையுருபுகள் எனவும், உடைய கொண்டு பற்றி நிமித்தம் இடத்தில் முதலியன சொல்லுருபுகள்" எனவுங் கூறுவர் தமிழ் இலக்கணத் தெளிவு நூலார். இதனுல் "உடைமையை" விளக்குவது இரண்டாம் வேற்றுமையும், "இட ஆதாரத்தை" விளக்குவது ஏழாம் வேற்றுமையு மாமெனை விளங்கும். இவ்வகையால் "நாடர்" என்பதும், "நாடார்" என்பதும் இரண்டாம் வேற்றுமையாகி உடைமையை விளக்குகின்றமையின் நூலாசிரியர்கள் அவைகட்கு "நாட்டை யுடையவர்" என்னும் பொருளைத்தந் தெழுதியும்; "நாட்டார்" என்பது ஏழாம் வேற்றுமையாகி இடப்பொருளை விளக்குகின்றமையின் தொல்காப்பியம், நன்னூல், தொன்னூல், முத்துவீரியம் முதலிய நூற்களின் உரையாசிரியர்கள் "தென்பாண்டி நாட்டார், குட்டநாட்டார், குடநாட்டார், கற்காநாட்டார், சீதநாட்டார்" என்பனவாகிய மேற்கோள்களை விளக்கி, அவைகளில் வரும் "நாட்டார்" என்பது, "நாட்டில் உள்ளவரை" விளக்குமெனை விளக்கியும் இருக்கின்றனர். ஆகவே, "நாட்டார்" என்பது ஏழாம் வேற்றுமைத் தொகையாயினமையின் இட ஆதாரத்தைப் பெற்று "நாட்டின் கண் உள்ளவர்" அல்லது "நாட்டில் உள்ளவர்" எனப் பொருள் கொண்டு விரியுமே யன்றி, "நாட்டை யுடையவரை" அல்லது "அரசரை" விளக்காது. விளக்குமென ஏகதேச உதாரண மேனும் எடுத்துக் காட்டவும் முடியாது.

"In 1901, was to record the 'manners and customs, and physical characters of more than 300 castes and tribes, representing more than 40, 000, 000 individuals." vide Edgar Thurston's Castes and Tribes of Southern India, Vol. 1, Introduction, p. xiii.

"சென்னை இராஜதானியில் உள்ள நாற்பது லட்சம் ஜனங்கள் 300-சாதியார்களாகப் பிரிந்திருக்கிறுர்கள்' எனக் கூறியிருக்கின்றது. அந்த 300-ஜாதிகளில், 15-லட்சமுள்ள நாடார் என்னும் பட்டமுடைய ஜாதியும் ஒன்ருகும்.

---

* தமிழ் இலக்கணத்தெளிவு, பெயர்ச்சொல் 92-வது சூத்திரம்.

"Nadan.—Nadan, meaning ruler of a country, is a title of the Shanans." Vide, Edgar Thurston's Castes and Tribes of Southern India, Vol. V, p. 134.

"நாடான் என்பதற்கு நாட்டுக்கரசன் எனப் பொருள்படும். அது சான்றார் குலத்தவர்களுக்குரிய பட்டப்பெயரா யிருக்கின்றது" எனத் தர்ஸ்டன் துரை கூறியிருக்கின்றார்.

"Nadan is a ruler of a Nadu or District. It is the usual title of the Southern Chantrar." Vide, Census of India 1891. Vol. XIII, p. 297.

"நாட்டுக்கரசனை நாடான் எனப்படும்.*நாடான் என்பது தென் தேசத்து சான்றார் குலத்தவர் களுக்குர் வழக்கமான பட்டப்பெயர்" என இந்திய ஜனக்கணித புத்தகத்தில் கூறி யுள்ளது.

இப்பகுதிகளில் "நாடார்" என்னும் பட்டப்பெயரை உடையவர் கள் ஒரு வகுப்பினரே என்றும், அவ்வகுப்பினரும் இந்த பாண்டிய குலத்தவர்களே என்றும், இவர்களை அன்றி வேறு சாதியார் இந்த "நாடார்" என்னும் பெயரை வைத்து வழங்குதலில்லை என்றும், இப்பெயர் நாட்டை அரசாட்சி செய்த அரசர்களைக் குறிக்கும் என் றுங் கூறி முடித்திருக்கின்றார்கள். அதனால் பூர்வம் தமிழ் நாட்டை அரசாட்சி செய்த பாண்டிய குலத்தவர்களின் சந்ததியார்கள் இவர்கள் தான் எனவே துணியப்படும்.

"Nattan.—At the Census, 1901, nearly 12,000 individuals returned themselves as Nattan, which is stated by the Census Superintendent to be 'a vague term meaning people of the country, reported by some to be a main caste, and by others to be a sub-caste of vellala. Nattan also occurs as a title of the Tamil Sembadavan and Pattanavan fishing castes, and of the Vallambans." Vide, Edgar Thurston's Castes and Tribes of Southern India, Vol. V, p. 249.

"நாட்டார் என்னும் பட்டப்பெயரை வேளாளரும், வேளாளரில் ஒரு வகுப்பினரும், மீன் பிடிக்குஞ் சாதியாராகிய பட்டணவரும்

* Thurston's Ethnographic Survey of South India. Vol. IV, p. 368.

செம்படவரும், இன்னும் வலம்பரும் பெற்று வழங்கி வருவதாக வும்" கூறி யிருக்கின்றார். இதனால் "நாட்டார்" என்னும் பட்டப் பெயரை பல சாதியார்கள் பெற்று வழங்கி வருவதாகவும், அது அரசரைக் குறிக்கா தெனவும் விளங்குகின்றது. ஆகவே பெயர்ச் சொல் இரட்டித்தும், இரட்டியாமலும் வழங்கி வருமெனவும், இரட் டித்த பதம் அரசரைக் குறிக்கா தெனவும், இரட்டியாத பதமே அரசரைக் குறிக்கும் எனவும் பெறப்படுகின்றன.

5. வினைச்சொல்.

வினைச்சொல் என்றால் ஒரு பொருளினது செயலைத் தெரிவிக் குஞ் சொல்லாம். "நாடார்" என்பதின் பகுதியாகிய "நாடு" என் பது *"நடவா மடிசீ விடுகூ வேவை"என்னும் வினைப்பகுதிகளின் சூத்திரத்திலுள்ள "செய்" என்னும் வாய்பாட்டில் அடங்கி நிற்கு மேல் வினைச்சொல் எனப்படும்.

நாடு=விரும்பு, தேடு (வினைச்சொல்). "நாடலு நேடலுந் தேட லாகுங், கூடுங் கையரிக் கொள்ளலு மதற்கே" (சேந்தன் திவாகரம்); "நாடலு நேடலுந் தேட லாகும்" (பிங்கல நிகண்டு); "கடுகிய நாடனேடல் கையரிக் கொளலே தேடல்" (சூடாமணி நிகண்டு); "நாடலு நேடலுந் தேர்தலுந் தேடல்" (உரிச்சொல் நிகண்டு); "தேடு, நேடு, விரும்பு, விசாரி" (சதுரகராதி, பேரகராதி); to search, to inquire, to desire greatly (Rottler's Tamil and English Dictionary); to seek, inquire after, தேட;to desire earnestly, விரும்பு; to examine, to investigate, விசாரிக்க. (Winslow's Tamil and English Dictionary.)

என்னும் இப்பிரயோகங்களில் வரும் **நாடு** என்பது வினைச் சொல்லாக நின்று "**தேடு, விரும்பு**" என்னும் பொருள்களைத் தந்து நிலைத்தது. ஆகவே, மேற்படி நூற்களான் "நாடு" என்பதும், 'தேடு' என்பதும், "தேர்" என்பதும், "விரும்பு" என்பதும், "விசாரி"

---

* நன்னூல், எழுத்ததிகாரம், பதவியல், 10-வது சூத்திரம்.

என்பதும் முன்னிலை ஏவல் ஒருமை எனத் துணியப்படும். இவைக ளெல்லாம் வினைச் சொற்களேயாம். இவ் வினைச்சொற்களில் ஒன்றா கிய "நாடு" என்பத னடியாகத் தோன்றிய "நாடார்" என்பதும் "விரும்பார், தேடார்" என்னும் பொருள்களைத் தரவின் எதிர்மறை வினைமுற்று எனப்படும்.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல்,
1-வது சூத்திரம்;

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்*"

என்று தொல்காப்பியரும்;

நன்னூல், சொல்லதிகாரம், வினையியல்,
1-வது சூத்திரம்.

"செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ்
செய்பொரு ளாறுந் தருவது வினையே"

என்று நன்னூலாருங் கூறி ஒரு பொருளின் தொழிலைக் குறித்து, காலத்தைக் காட்டி நிற்பதே வினைச்சொல் என நிறுத்துவர்.

முத்துவீரியம், எழுத்ததிகாரம், மொழியியல்,
6-வது சூத்திரம்.

"வினைபல நிகழினும் வினையெனப் படுமே"

என முத்துவீரியரும்;

"பலதொழிற் பெயரே வினைச்சொல் லென்ப"

எனக் குவலயாநந்தத்தாருங் கூறி முடிப்பர். அத்தகைய வினைத் தன்மையைப்பெற்ற நாடார் என்னுஞ் சொல்லின் பகுதியாகிய 'நாடு' என்பது,

நன்னூல், சொல்லதிகாரம், வினையியல்,
16-வது சூத்திரம்.

"ஐயா யிகர வீற்ற மூன்றும்
ஏவலின் வரூஉ மெல்லா வீற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே"

---

* இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், வினையியல், 1-வது சூத்திரம்; முத்துவீரியம், சொல்லதிகாரம், வினையியல், 1-வது சூத்திரம்.

என்னும் நன்னூற் சூத்திரத்தால் முன்னிலை ஏவல் வினைப் பகுதி எனப்படும். *"ஏவல் வினைமுற்று இடைநிலை பெறாது கட்டளைப் பொருளுடையதாய் எதிர்காலம் ஒன்றற்கே வரும்" என்பர் இலக்கண சிந்தாமணியார். ஏவல்வினைப் பகுதியாகிய "நாடுவாய்" என்பதில் ஏவல் விகுதியாகிய "ஆய்" என்பது புணர்ந்து கெட்டு "நாடு" என நின்றது. அப்படி நின்ற, "நாடு" என்பது,

தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல்,
9-வது சூத்திரம்.

"அர் ஆர் ப என வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே"

என்னுந் தொல்காப்பியச் சூத்திர விதிப்படி "ஆர்" என்னும் உயர்திணைப் படர்க்கைப் பலர்பால் விகுதியைப் பெற்று, "நாடு+ஆர்" என நின்று,

நன்னூல், சொல்லதிகாரம், வினையியல்,
10-வது சூத்திரம்.

"ஆ வே யெதிர்மறைக் கண்ண தாகும்"

என்னும் நன்னூற் சூத்திர விதியால் †எதிர்மறையைக் காட்டும் ஆகார இடைநிலையை இடையில் பெற்று, "நாடு+ஆ+ஆர்" என நின்று, ‡காலத்தைக் காட்டக்கூடிய இடநிலை இருந்த இடத்தில் எதிர்மறை ஆகார இடைநிலை வந்ததனால் முக்காலத்தையுந் தொழிலையும் மறுத்து;

முத்துவீரியம், எழுத்ததிகாரம், மொழியியல்,
35-வது சூத்திரம்.

"அஆ விருதிமுன் அஆ வரினே
யிருமையுங் கெடவா வேற்கு மென்ப¶"

* ச. ஜெகராவு முதலியார், இலக்கண சிந்தாமணி, வினையியல், 43-வது பக்கம்.

† எதிர்மறை (Nagative), உடன்பாடு (Positive) வினைச்சொல்லுக்கு உபயோகிக்கப் படுமேயன்றி, பெயர்ச்சொல்லுக்கு உபயோகிக்கப்பட மாட்டாது.

‡ தமிழ் இலக்கணத்தெளிவு, வினையியல், 155-வது சூத்திரம்.

¶ தொன்னூல்விளக்கம், எழுத்ததிகாரம், எழுத்தின் விகாரம், 18-வது சூத்திரம்; இலக்கண சிந்தாமணி, உயிரீற்றுப் புணரியல்.

என்னும் முத்துவீரியச் சூத்திரத்தால் எதிர்மறை ஆகாரம் உயிர் முதன்மொழி வந்தமையால் கெட்டு, "நாடு+ஆர்" என நின்று, *"உயிர்வரி னுக்குறண்" என்னுஞ் சூத்திரத்தால் நிலைமொழியின் ஈற்றுகரங்கெட்டு, "நாட்+ஆர்" என வாகி, உடன்மேல் உயிரேறி "நாடார்" எனப் புணர்ந்து எதிர்மறை வினைமுற்றாகி, †"பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழில்" என்ற அறுவகைப் பெயரினடியாகப் பிறந்த எழுவாய்க்குப் பயனிலையாக வரும்.

ஔவையார் வாக்கு.

"பாடல் பெறுனே பலர் மெச்ச வாழானே
நாடறிய நன்மணங்கள் நாடானே—‡சேடன்
இவன்வாழும் வாழ்க்கை யிருங்கடல்சூழ் பாரிற்
கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண்."

(ப-ரை) சேடன்=சேடசாதியான், பாடல் பெறுன்=பாடல் பெறுதவனும், பலர் மெச்ச வாழான்=பலரால் புகழும்படி வாழாதவனும், நாடு அறிய=நாட்டிலுள்ளோர் அறியும்படி, நன்மணங்கள்=நல்லோர் கூட்டங்களை, நாடான்=விரும்பான், இவன் வாழும் வாழ்க்கை= (ஆகிய) இத்தகையோன் வாழும் வாழ்க்கை, இருங் கடல் சூழ் பாரில்=அகன்ற கடலால் சூழப்பட்ட உலகத்தில், கவிழ்ந் தென் = கெட்டா லென்ன, மலர்ந்தென்ன = இருந்தா லென்ன, காண்= (இரண்டும் ஒன்றே)பார்" என்பதாம்.

(க-ரை) "பலரால் புகழ வாழாதவன் இருந்தென்ன போ யென்ன" என்பதாம்.

இச்செய்யுளில் "சேடன்" எழுவாய், "நாடான்" பயனிலை, "நன்மணங்கள்" செயப்படு பொருள். அதனால் நாடான் என்பது எதிர்மறை வினைமுற்று எனப்படும். நாடு-பகுதி, ஆன் - ஆண்பால் விகுதி, ஆ-எதிர்மறை இடைநிலை, உகரங் கெட்டதும், எதிர்

* நன்னூல், எழுத்ததிகாரம், உயிரீற்றுப் புணரியல், 14-சூத்திரம்.

† முத்துவீரியம், எழுத்ததிகாரம், மொழியியல், 5-வது சூத்திரம்.

‡ சேடன் என்பவன் ஒருவகை நெசவுக்கார சாதியான். A weaver of certain tribe (Vide Winslow's Tamil and English Dictionary; and Thurston's Castes and Tribes of Southern India, Vol. VI, p. 260.)

மறை ஆகாரங்கெட்டதுஞ் சந்தி, *"வினை யெனப் படுவது வேற்று மை கொள்ளாது" என்பதால் இது வினையாதலின் வேற்றுமையை ஏலாது ஒருவனது தொழிலை விளக்கி நின்றது. பெயரைக் குறிக்கு மேல் வினையைக் கொண்டு முடியும். வினையைக் குறிப்பதால் கருத் தாவைத் தேடினது. பெயரைச் சொல்லுஞ் சொல் பெயர்ச்சொல் எனப்பட்டதே யன்றி, "நெருங்கான்" என்னும் வினையை விளக் குஞ் சொல்லும் பெயர்ச்சொல் லாவதில்லை.

நீதிவெண்பா, 92-வது செய்யுள்.

"எல்லோர் தமக்கு மினிதுதவ லன்றியே
நல்லோர் தமக்குதவி நாடாரே—வல்லதரு
நாமநிதி மேக நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ சாற்று."

(ப-ரை) "நல்லோர்=மேலோர், எல்லோர் தமக்கும்=யாவ ருக்கும், இனிது உதவல் அன்றி=மகிழ்ச்சியோடு கொடுப்பது அல்லாமல், தமக்கு உதவி=தமக்குப் பிரதி உபகாரத்தை, நாடார் =விரும்பார், வல்ல தரு=(கொடையில்) வல்ல கற்பக விருக்ஷமும், நாமநிதி=பெருமையினை யுடைய சங்கநிதி பதுமநிதிகளும், மேகம் =மேகங்களும், நயந்து உதவல் அன்றி=(தாம் பிறருக்கு) விரும் பிக் கொடுப்பது அல்லாமல், தாம் உதவி நாடுமோ=தாம் (அவர்க ளிடத்துப்) பிரதி உபகாரத்தை விரும்புமோ, சாற்று=நீ சொல்லு வாயாக" என்பதாம்.

(க-ரை) "மேலோர் பிரதி உபகாரத்தை விரும்பாது கொடுப் பர்" என்பதாம்.

இச்செய்யுளில் வரும் "நாடார்" என்பது தொழிலை யுணர்த்தி வந்தமையின் எதிர்மறை வினைமுற்றுத லறிக. இந்த வினைமுற்று னது இரண்டு கேள்விகளை யேற்று, எழுவாய் இன்னதென்றும், செயப்படு பொருள் இன்ன தென்றுங் காட்டி நிற்கும். யார் நாடார்? என வினவின், நல்லோர் நாடார் என வெளிப்படுத்தி, நல்லோரை நாடார் என்னும் பயநிலைக்கு எழுவாய் என விளக் கும். எதை நாடார் என வினவின், உதவியை நாடார் என வெளிப்படுத்தி, உதவி என்னும் பதத்தை செயப்படு பொருள்

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், 1-வது சூத்திரம்.

எனக்குறிக்கும். அப்படிக் குறித்தமையின் நாடார் என்பது செயப்படுபொருள் குன்றுவினை என முடியும். ஆகவே, நாடார் என்ற வினையும், நாடாத கர்த்தாவும், நாடப்படாத உதவியும் பெற்று, எழுவாய் பயனிலை செயப்படு பொருள் ஆகிய இம்மூன்றும் நிரம்பி முடிந்தது.

எழுவாய் என்பது வாக்கியத்தின் முதற்பொருளாகிய கர்த்தாவாம். பயனிலை என்பது எழுவாயின் செயலை முடிவுறக் காட்டுஞ் சொல்லாம். செயப்படு பொருளாவது எழுவாயின் செய்கையால் விளைந்த பயனும். இவற்றுள் எழுவாயும் செயப்படுபொருளும் பெயர்ச் சொற்களாம், பயனிலை என்பது வினைச்சொல்லாம். இவ்வினைச்சொல் அப்பெயர்களின் மத்தியில் நின்று அவைகளின் செயலை புணர்த்துந் தன்மையதே யன்றி, பொருளை உணர்த்துந் தன்மையதன்று. ஆகவே, **நாடான்** என்கிற சொல்லுக்கு **"நாடுடையான்"** என்றும், **"நேருங்கான்"** என்றும் பொருள் உண்மையின், இங்கே வினையை விளக்கலால், **"நேருங்கான்"** என்று பொருள் கொள்ளப்பட்டது.

6 பெயர் வினை பேதம்.

பொருளை விளக்குவது பெயரும், அப்பொருளினது தொழிலை விளக்குவது வினையுமாம்.

"நாடேன்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு" (திருக்குறள்)

(இ-ள்) "தங்கண்வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பாற் றானே யடையுஞ் செல்வத்தை யுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர், ஆதலாற் றேடிவருந்தச் செல்வ மடைவிக்கும் நாடுகள் நாடாகா" என்பர் பரிமேலழகர்.

(ப-ரை) "நாடா=தேடிவருந்தாமல், வளத்தன - செல்வத்தை யுடையவற்றை, நாடேன்ப=நாடேன்று சொல்லுவர்; (ஆதலால்,) நாட=தேடிவருந்த, வளந்தரும்=செல்வத்தையடைவிக்கும், நாடு =நாடுகேள், நாடல்ல=நாடுகளாகா" என்பதாம்.

(க-ரை) "குடிகள் தேடி வருந்தாமல் அவர்களுக்குச் சகல வளங்களையுங் கொடுக்க வல்லதே நாடாகும். ஏனைய நாடுகள் நாடாகா" என்பதாம்.

"நாடா, நாட என்னு மிரண்டிடத்து முள்ள நாடுதற்றொழில் வருத்தம் என்னும் பொருள்மேல் நின்றது. நாடா என்பதற்குத் தேடி வருந்தாம லென்றும், நாட என்பதற்குத் தேடி வருந்த என்றும் பொருள் விளங்குகின்றமை காண்க.

இதில் வரும் "நாடென்ப, நாடல்ல" என்னுஞ் சொற்றொடர்களிலுள்ள "நாடு" என்னுஞ் சொற்கள் பெயராகவும், "நாடாவளத்தன, நாடவளந்தரு" என்னுஞ் சொற்றொடர்களிலுள்ள "நாடு" என்னுஞ் சொற்கள் வினையாகவும் வருவது அறியக் கிடப்பதே. அது "ஓடு" என்பது வீடு வேயு மோட்டையும், விரைந்து செல்லுதலையும் விளக்குவதைப்போல்; "நாடு" என்பதும் 'ஊர்' என்னும் பெயர்ப் பொருளையும், தேடு என்னும் வினைப்பொருளையுந் தந்து நிற்குமென விளங்கியது. ஆகவே, பெயர்ப்பொருளைக் குறிக்கும் நாடும், வினைப்பொருளைக் குறிக்கும் நாடும் ஒன்றெனப்படாது. ஒன்றுகாமையை விளக்கவே திவாகர நிகண்டார்களும், "நாடு" என்பதைப் பெயர்ச் சொல்லாக மதித்து, இடப்பெயர்த் தொகுதியின் கீழ் அமைத்து, அதற்கு "இராச்சியம், ஊர்" என்னும் பெயர்ப் பொருள்களைத் தந்தும்; அதனையே வினைச் சொல்லாக மதித்து *செயல்பற்றிய பெயர்த் தொகுதியின் கீழ் அமைத்து, அதற்கு "தேடு, விரும்பு" என்னும் வினைப் பொருள்களைத் தந்தும், இடபேதப் படுத்தினமை எமது கூற்றை வலியுறுத்துகின்ற தென்க. அன்றியும் இந் "நாடு" என்னும் பெயரடியி னின்று பிறந்த "நாடான்" என்பது "நாடுடையான், அரசன்" என்னும் பொருள்களை ஏற்றும், வினையடியினின்று பிறந்த 'நாடான்' என்பது "விரும்பான், தேடான்" என்னும் பொருள்களைப் பயந்தும் வருமென்று, மேற்காட்டிய உதாரணங்களால் தெரியவரும். இவைகளை யோராது †"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும், மருளானா மாணாப் பிறப்பு" என்னுங் குறளடியைப் பின்பற்றியவர்கள் வினைப்பொருளைக் குறிக்கும் "நாடான்" என்னுஞ் சொல்லையும், பெயர்ப் பொருளைக் குறிக்கும் "நாடான்" என்னுஞ்

---

* செயல் என்றால் வினையை அல்லது தொழிலைக் குறிக்கும். "கருமமுஞ் செயலுந் தருமமுந் தொழிலும், வினையு மொரு பொருள் விதியுமாகும்" (திவாகரம்.)

† திருக்குறள், அறத்துப்பால், மெய்யுணர்தல், 1-வது குறள்.

சொல்லையும் ஒன்றெனக் கொள்ளுவர். அத்தகையோரை அறிவிலிகள் அல்லது நடுவு நிலைமை நீத்தவர்கள் என்றே கொள்ளல் வேண்டும்.

இலக்கணக் கொத்து, பாயிரம், 8-வது சூத்திரம்.

"சூத்திரஞ் சிலசில நோக்குதற் கரிதெனின்
முன்பின் பார்த்துப் பின்பே நோக்குக"

என இலக்கணக்கொத்துரையார் கூறியிருத்தலோடு; "ஒரே வார்த்தை பல பொருள்களைத் தருமாதலால், குறித்த பொருள் இன்னதென்பது முன்பின்வரும் வார்த்தைகளால் அறியவேண்டும்" எனத் தமிழ் இலக்கணத்தெளிவு நூலாருங் கூறிமுடித்தனர்.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல்,
9-வது சூத்திரம்.

"பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் பெயர்ச்சொல்காலத்தை விளக்கா தென்றும்;

இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், பொதுவியல்,
44-வது சூத்திரம்.

"வினையின் றொகுதி காலத் தியலும்"

என்னுஞ் சூத்திரத்தில் வினைச்சொல் காலத்தை விளக்குமென்றுங் கூறியிருத்தலோடு, நன்னூலாரும் *பெயர்ச்சொல் ஒரு பொருளைக் குறிக்கு மென்றும், †வினைச்சொல் அப்பொருளின் செயலைக் குறிக்கு மென்றுங் கூறியிருக்கின்றனர். அன்றியும்,

"மக்க ணரகரே வானோரெனும் பொருள்கள்
தொக்க வுயர்திணையாந் தூய்மொழியாய்—மிக்க
உயிருள் ளனவு முயிரில் லனவுஞ்
செயிரி லஃறிணை யாஞ் சென்று."

என்று நேமிநாதத்தார் கூறி, ஆண் பெண் பலரைக் குறிக்கும் பெயர்களே உயர்திணைப் பெயர்ச்சொற்கள் என்றும், அவ்

* A Noun is the name of a person, place or thing. (English Grammar.)

† A Verb is a word used for saying something about some person or thing (English Grammar.)

வுயர்திணையும் "மக்கள் தேவர் நரகரையே" குறிக்கு மென்றும் அறுதியிட்டிருக்கின்றார். இம்முடிவை அனுசரித்து "நாடான்" என்பது ஒரு சாதிக்குரிய பெயரா யிருத்தலால், அதுவும் பெயர்ச் சொல்லாகவே நின்று உயர்திணையைக் குறிக்குமே யன்றி, வினைச் சொல்லாகாது. நன்னூலாரும் "கிளைப்பெயரும், குழுவுப்பெயரும், சாதிப்பெயரும், குடிப்பெயரும்" உயர்திணைப் பெயர்ச்சொற்களாகு மென மதித்து "பெயரியல்" என்னுந் தலையலங்காரத்தின் கீழ் அமைத்திருக்கின்றார். உலகில் ஒவ்வொரு சாதிக்கும் வழங்கி வரும் சாதிப்பெயரும், குலப்பெயரும், குடிப்பெயரும், பட்டப்பெயரும் பெயர்ச்சொல்லே அன்றி, வினைச்சொல் அல்ல. வினைச்சொல் ஒரு சாதிப்பெயரையாவது, ஒரு குலப்பெயரையாவது, ஒரு குலப் பட்டப்பெயரை யாவது குறிக்கமாட்டாது. திவாகர நிகண் டுகராதிகளிலும், சங்க நூற்களிலும் பிரமாணங்களில்லை. "அவரை விதைத்தால் துவரை முளைக்காது" என்னும் உலக வழக்கை அனுசரித்து வினையிலிருந்து பிறந்தது வினையையே தெரிவிக்கும். "நடந்தான்" என்னும் வினைச்சொல் ஆண்பாலை யடுத்து வந்தமையால் ஆண்பால் விகுதியைப் பெற்றது. அப்படிப் பெற்றும் அதைப் பெயரென மதித்து ஆண்பால் உயர்திணைப் பெயரெனக் கொள்ளார். "நாடான் நடந்தான்" என்னும் வாக்கியத்துள் "நாடான்" பெயராயும், "நடந்தான்" அப்பெயரின் செயலாயும் முடிந்தன. "நாடான்" என்பது இடமடியாகப் பிறந்த சாதிப்பெயர் உயர்திணை ஆண்பால் படர்க்கை இரண்டாம் வேற்றுமைத்தொகை நடந்தான் என்னும் வினையைக்கொண்டு முடிந்தது. "நடந்தான்" என்பது பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரத்தான் முடிந்த உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கை இறந்தகாலங் காட்டும் உடன்பாட்டுத் தெரிநிலைவினைமுற்று, நாடான் என்பதற்குப் பயனிலையாக நின்றது. அதாவது ஒருவனுடைய நடத்தலாகிய தொழிலைக் காட்டுகின்றது. இதையே,

தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம்,

11-வது சூத்திரம்.

"வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியு
மயங்கல் கூடா தம்மர பினவே"

எனத் தொல்காப்பியரும் விளக்கி யுள்ளார். இதனால் பெயர்ச் சொல்லோடு ஆண்பால் விகுதி சேரின் அப் பெயர்ப்பொருளை யுடையவனைக் குறிக்கு மெனவும், வினைச்சொல்லோடு ஆண்பால் விகுதி சேரின், அவ்வினையை அல்லது தொழிலை யுடையவனைக் குறிக்கு மெனவும்விளங்கின. அதாவது பெயர்ச்சொல்லில் பகுதி பொருளையும், விகுதி அதை யுடையவனையுங் காட்டும், வினைச் சொல்லில் பகுதி செயலையும், இடைநிலை முதலியன காலத்தையும், விகுதி செய்பவனையுங் காட்டும். ஒவ்வொரு வாக்கியத்துள்ளும் உயிரும் உடலும்போல் எழுவாயும் பயனிலையும் ஒத்துவாழும். எப் பொழுதும் எழுவாயாய் நிற்பது பெயர்ச்சொல்லே யன்றி, வினைச் சொல் அல்ல. இவைகளால் பெயருக்கும் *வினைக்கும் உள்ள வித்தி யாசம் விளக்கமாக வறிதலோடு, சாதிப்பெயர்க ளெல்லாம் பெயர்ச் சொற்களாகவே நிற்குமென விளங்கின.

7. எதிர்மறை வினையாலணையும் பெயராகா.

தமிழ்ப்பாஷையுள் வழங்கி வரும் "பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல்" என்னும் நான்கு விதமான சொற்களுள், வேற்றுமை யுருபை யேற்பது பெயர்ச்சொல்லே யன்றி, சிலசமயம் வினைச்சொல்லி லிருந்து பிறந்து வந்த பெயர்ச் சொல்லும், பெயர் மாறுதல் பெற்று, வினையாலணையும் பெயர் (Nouns denoting the agent of an action) எனப்பட்டு, வேற் றுமை உருபுகளை ஏற்றுவரும். அப்படி பெயர்த் தன்மைப் பெற்று வரினும் வினையாலணையும் பெயர்கள் சாதிப் பெயர்களாக வழங்கி வருதல் வழக்கென திவாகர நிகண்டாதி நூற்களால் தெளியா திருத்தலோடு, வினையாலணையும் பெயர்கள் முக்காலத்தையும் மூன்றிடத்தையும் விளக்கி, வினைச்சொல் லடியாகப் பிறக்கு மென விதியிருத்தலால்; சாதிப்பெயர்களும் அங்ஙனமின்றி காலத் தையும் இடத்தையும் மறுத்து, தொழிற்பெய ரடியாகவும், பொருட் பெய ரடியாகவும், இடப்பெய ரடியாகவும் பிறக்கின்றமையின், இவ்வகையிற் பிறந்து வரும் சாதிப்பெயரை வினையாலணையும் பெயர் எனின் எங்ஙனே பொருந்தும்? வினையாலணையும் பெயர் என்பது வினைப் பகுதியுடன்,

---

* வினையுருவ விளக்கம் என்னும் நூலில் வினையின் தன்மையை விபர மாய்க் காணலாம்.

நன்னூல், சொல்லதிகாரம், வினையியல், 21-வது சூத்திரம்.

"செய்த செய்கின்ற செய்புமென் பாட்டில்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே*"

என நன்னூலுடையாரும்; "இறந்தகாலம், நிகழ்காலங்களில் 'அ' என்னும் பெயரெச்ச விகுதியையும், எதிர்காலத்தில் 'உம்' என்னும் பெயரெச்ச விகுதியையும் ஏற்று, பெயரை முடிக்குஞ் சொற்களாக வரும் குறை சொற்களே பெயரெச்ச மாம்" என நச்சினார்க்கினியரும்; †"பெயரெச்ச விகுதிகளாகிய 'அ, உம்' என்னும் விகுதிகளைப் பெற்று பெயரெச்சமாகி வேற்றுமை யுருபுகளோடு ஐம்பால் விகுதிகளாகிய 'அன், அள், அர், அர்கள், து, வை, வைகள்' என்னும் விகுதிகளை யேற்று, காலத்தையும் இடத்தையுங் காட்டி, தொழிலை யுணர்த்தாமல், தொழிலை நடப்பித்த மனுஷனை யாவது, பொருள் முதலியவற்றை யாவது உணர்த்தி, பெயர்த்தன்மை யடைந்து வருஞ் சொல்லாம்" எனத் தமிழ் இலக்கணத்தெளிவு நூலாரும், பிறருங் கூறுவர்.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல்
19-வது சூத்திரம்.

"வினையின் றொகுதி காலத் தியலும்"

என்பதால் காலத்தை யுணர்த்துவது வினையின் தன்மையும்;

முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல்,
48-வது சூத்திரம்.

"எல்லாப் பெயரும் வேற்றுமை யேற்கும்"

என்பதால் வேற்றுமை உருபை யேற்பது பெயரின் தன்மையுமாகையால், ஆகிய இவ்விரண்டு தன்மையையும் ஒரு சொல்லே

---

* முத்துவீரியம், சொல்லதிகாரம், வினையியல், 34-வதுசூத்திரம்; இலக்கண விளக்கம், சொல்லதிகாரம், வினையியல், 17-வது சூத்திரம்.

† தமிழ் இலக்கணத் தெளிவு, வினையியல், 170-வது சூத்திரம்; இலக்கண சிந்தாமணி, பக், 41; வாசுதேவ முதலியார் இலக்கணச் சுருக்கம், பதவியல், 41, 42-வது சூத்திரங்கள்; வினையியல், 32-வது சூத்திரம்; மோசூர்-வெங்கடசாமி ஐயர் இரண்டாம் இலக்கணம், வினைச்சொல், 42-வது சூத்திரம்.

ஏற்று நின்றமையின், பிறப்புநோக்கி *வினையாலணையும் பெயர் எனப்படும்.

†"எதிர்மறை (Negative)" என்பது ஒரு செயலின் நிகழாமையை அல்லது இல்லை என்று மறுத்துக் கூறுவதை விளக்குவதாம். இவ்விரண்டு விதிகளையும் ஒன்றுபடக்கொண்டு நிற்பதையே "எதிர்மறை வினையாலணையும் பெயர்" எனப்படும்.

எதிர்மறை வினையாலணையும் பெயர்.

வினைப் பகுதி.	பெயரெச்சம்	காலம்	உடன்பாடு	எதிர்மறை
ஆய்	ஆய்ந்த	இறந்த	ஆய்ந்தவன்	ஆயாதவன்
ஓடு	ஓடின		ஓடினவன்	ஓடாதவன்
கூவு	கூவின		கூவினவன்	கூவாதவன்
கேள்	கேட்கிற	நிகழ்	கேட்கிறவன்	கேளாதவன்
நட	நடக்கிற		நடக்கிறவன்	நடவாதவன்
படி	படிக்கிற		படிக்கிறவன்	படியாதவன்
பார்	பார்க்கும்	எதிர்	பார்க்குமவன்	பாராதவன்
வா	வருகும்		வருகுமவன்	வாராதவன்
விடு	விடுகும்		விடுகுமவன்	விடாதவன்

என வருவனபோல் "நாடான்" என்னும் வினைப் பகுபதத்தின் மூலபதமாகிய "நாடு" என்பதிலிருந்து பிறந்து வரும் வினையாலணையும் பெயரையும் விளக்கிக் காட்டுவாம்.

---

* மோசூர் வெங்கடசாமி ஐயர் இரண்டாம் இலக்கணம், பெயர்ச்சொல், 16-வது பக்கம்.

† உடன்பாடு (Positive) என்பது ஒரு செயலின் நிகழ்ச்சியை அல்லது உண்டென்று கூறுவதை விளக்குவதாம்.

நாடு

என்பது "நடவா மடிசீ விடுகூ வேவை" என்னும் வினைப் பகுதிகளின் சூத்திரத்திலுள்ள "செய்" என்னும் வாய்ப்பாட்டில் அடங்கி நிற்றலால் வினைச்சொல் எனப்படும்.

நாடின

என்பது "நாடு+இன்+அ" என்னும் பகுதி விகுதி இடைநிலையால் முடிந்த பகுபத மாகும். "நாடு" என்பது வினைப்பகுதியும், "இன்" என்பது இறந்தகால இடைநிலையும், "அ" என்பது பெயரெச்ச விகுதியுமாம். "நாடின" என்பது தொழிலின் நிகழ்ச்சியை விளக்குவதால் "உடன்பாடு" எனவும்; †"பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தை யனுசரித்து "நாடின மனிதன்" எனப் பெயரைக் கொண்டு முடிவதால் பெயரெச்சம் எனவுங் கூறப்படும். ஆகவே "நாடின" என்பது "உடன்பாடு இறந்தகாலப் பெயரெச்சம்" எனப்படும்.

நாடுகின்ற

என்பது "நாடு+கின்று+அ" எனப்பிரியும். இதன் இடையிலுள்ள "கின்று" என்பது நிகழ்கால இடைநிலை யாயினமையின் "நாடுகின்ற" என்பது "உடன்பாடு நிகழ்காலப் பெயரெச்சம்" எனப்படும்.

நாடும்

என்பது "நாடு+உம்" எனப்பிரியும். இவற்றில் வரும் "உம்" என்னும் பெயரெச்ச விகுதி, இடைநிலையைக் கொள்ளாமல் தானே எதிர் காலத்தையுங் காட்டி வரும். அதனால் "நாடும்" என்பதை "உடன்பாடு எதிர்காலப் பெயரெச்சம்" எனப்படும்.

நாடாத

"எதிர்மறை எச்சத் தேற்கும் விகுதி
ஆமல் ஆது ஆமை ஆவென லாமே."

என இலக்கணத்திரட்டு நூலார் கூறியவாறு "நாடாத" என்பதை "நாடு+ஆ+த்+அ" எனப்பிரித்து, இவற்றிலுள்ள ஆகா

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், 37-வது சூத்திரம்; தொன்னூல் விளக்கம், வினைச்சொல்வியல், ஈரெச்சம், 1-வது சூத்திரம்.

ரம் எதிர்மறையைக் காட்டும் இடைநிலையும், த் எழுத்துப்பேறும் "அ" பெயரெச்ச விகுதியுமாம். *"நாடு+ஆது+அ" எனவும் பிரிக்கலாம். அப்பொழுது "ஆது" எதிர்மறை விகுதியாம். தொழிலின் நிகழாமையை விளக்கலால் எதிர்மறை எனப்படும். ஆகவே 'நாடாத' என்பது "எதிர்மறை பெயரெச்சம்" எனப் படும்.

நாடினவன்

"காலமும் வினையுந் தோற்றிப் பாலொடு திணையுணர்த்தாது
பெயர்கொள் ளும்மது பெயரெச் சம்மே."

என பேரகத்தியநூலார் "பெயரெச்சம்" தொழிலையும் காலத்தையும் விளக்கி, திணையையும் பாலையும் விளக்காதெனக் கூறுவர். அப்படி விளக்காத திணையையும் பாலையும் விளக்கக்கூடிய ஐம்பால் விகுதிகளைச் சேர்ப்பின், அப்பெயரெச்சமே "வினையாலணையும் பெயர்" என மறுபெயர் கொள்ளும். மேற்கூறிய "நாடினவன்" என்பது "நாடு+இன்+அ+வ்+அன்" எனப்பிரியும். இவற்றி லுள்ள "இன்" இறந்தகால இடைநிலை, "அ" பெயரெச்ச விகுதி, "இ ஈ ஐவழி யவ்வும்" என்னுஞ் சூத்திரத்தால் "வ்" சந்தி, "அன்" ஆண்பால் விகுதியுமாம். இவைகளாலாகிய "நாடினவன்" என்பது "உடன்பாடு இறந்தகால வினையாலணையும் பெயர்" எனப்படும்.

நாடுகின்றவன்

என்பது "நாடு + கின்று + அ+வ்+அன்" எனப்பிரியும். இவற்றில் வரும் "கின்று" என்பது நிகழ்கால இடைநிலை யாயின மையின் "நாடுகின்றவன்" என்பது நிகழ்கால வினையாலணையும் பெயர்" எனப்படும்.

நாடுமவன்

என்பது "நாடு+உம்+அ+வ்+அன்" எனப்பிரியும். இவற் றில் வரும் "உம்" என்னும் பெயரேச்ச விகுதி, தானே எதிர் காலத்தையுங் காட்டிநின்றது. "அ" கரஞ் சாரியை யாயும், "வ" கரம் சந்தியாயும் முடிந்தது. ஆகவே "நாடுமவன்" என்பது 'உடன் பாடு எதிர்கால வினையாலணையும் பெயர்' எனப்படும்.

---

* தொன்னூல் விளக்கம், வினைச்சொல்லியல், முக்கால முற்றுவினை 8-வது சூத்திரம்.

நாடாதவன்

என்பது "நாடு+ஆ+த்+அ+வ்+அன்" எனப்பிரியும். இவற்றில் வரும் "ஆ" காரம் எதிர்மறையைக் காட்டும் இடைநிலை, 'த்' எழுத்துப்பேறு, "அ" பெயரெச்சவிகுதி, "வ்" சந்தி, ஆகிய இவைகளால் முடிந்த "நாடாதவன்" என்பது "எதிர்மறை வினையாலணையும் பெயர்" எனப்படும்.

இப்பெயர்களுள் "நாடான்" என்பது யாதொன்றிலுங் கலவாமல் இருத்தலால் எதிர்மறை வினையாலணையும் பெயர் எனப்படாது. இலக்கிய வகையால் பெரியோர்கள் புதைத்து வைத்த அரும் பயனாகிய பொருள்களைக் கண்டறிந் தெடுப்பதற்கு இலக்கண நூல்களே விளக்குகளாம். அவ்வித விளக்குகள் வினையாலணையும் பெயர்கள் உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் பெயரெச்சத்தோடு ஐம்பால் விகுதிகளையுஞ் சேர்த்து முடிக்க வேண்டுமென்று சாட்சி பகர்கின்றன. இவைகளோடு அவர்கள் எடுத்தாண்ட மேற்கோள்களையுங் கவனிக்கவும். வினையாலணையும் பெயர்கள் உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் பெயரெச்ச விகுதியோடு விளங்க வேண்டுமென்று நியதி யிருப்பதால், 'நாடான்' என்பதில் விளங்கும் பெயரெச்ச விகுதியாவது யாது? வினை சம்பந்தமும், பெயர் சம்பந்தமும் பெற்றதையே வினையாலணையும் பெயர் எனப்படுமே யன்றி, பெயர் சம்பந்த மில்லாததை எங்ஙனே வினையாலணையும் பெயர் எனக் கூறுதல்? எப்பொழுது பெயர் சம்பந்தம் ஒழிந்ததோ, அப்பொழுதே அதனை வினைமுற்றெனக் கொண்டு, ஒரு எழுவாயின் செயலை புணர்த்தி வருஞ் சொல்லென விண்டு, தன்னறி யாமையைக் கண்டு நாணுதலே யழகு. *ஈறு கெட்ட பெயரெச்சம் எனக் கேட்கப்பட்டதே யன்றி, இடை கெட்ட எதிர்மறை வினையாலணையும் பெயர் எனவுங் கேட்கப் பட்டாம் இல்லை. ஆகவே,

ஆயாதவன் வந்தான்
ஓடாதவன் வந்தான்
கூவாதவன் வந்தான்
கேளாதவன் வந்தான்
நாடாதவன் வந்தான்

---

* அதுவுஞ் சில பெயரெச்சந்தான் ஈறுகெடு மென்பர், கோபாலாச்சாரியார், (முதற்பயிற்சி இலக்கணம், 71-வது சூத்திரம்.)

என்பனவாகிய வாக்கியங்களில் வரும் முதற் பகுதிகள் பெயரெச்ச விகுதியோடு, எதிர்மறை விகுதியையும் ஆண்பால் விகுதியையும் ஏற்று, ஒன்றுபடப் புணர்ந்து, பொருட் பொலிவும், வாசக லட்சணமும் பெற்று, வேற்றுமை யுருபை ஏற்கக்கூடியதாய் நின்று, உலக வழக்கத்தோடு ஒத்து வருகின்றமையின் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் எனப்படும். இவைகளைப்போல்,

ஆயான் வந்தான்
ஓடான் வந்தான்
கூவான் வந்தான்
கேளான் வந்தான்
நாடான் வந்தான்

என்பனவாகிய வாக்கியங்களுள் விளங்கும் "ஆயான்" முதலிய பெயர்களுக்கு பொருட் பொலிவில்லாமல், வேற்றுமை உருபுகளை ஏற்கச் சக்தியற்று, வாக்கிய லட்சணமும் பெற்றிலாமையால், அவைகளை எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் எனக் கூறமுடியுமா? இவைகளை உலக வழக்காவது, இலக்கிய இலக்கணங்களாவது கொள்ளுகின்றதா? அப்படிக் கொள்ளப்படாமையால் எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் அல்ல வெனவும், எதிர்மறை வினைமுற்றே ஆகுமெனவுங் கொள்ளலே சால்புடைமை.

"எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் வினைப்பகுதிகளுடன் 'ஆத' என்பதை இடையில் ஏற்று, ஐம்பால் விகுதிகளையும் பெற்றுவரும்" என்பர் ஆறுமுக நாவலர், ஜெகராவ் முதலியார், போப்பையர், விசாகப்பெருமாள் ஐயர், வாசுதேவ முதலியார் முதலியோர். அவ்விதம் "நாடான்" என்பதும் "ஆத" என்னும் எதிர்மறை விகுதியை ஏற்று விளங்காததால் எதிர்மறை வினையாலணையும் பெயர் எனப்படாது.

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்."

எனப் பேரகத்தியச் சூத்திரத்தில் "உலக வழக்கி லில்லாதது செய்யுள் வழக்கி லில்லை, செய்யுள் வழக்கி லில்லாதது இலக்கணத்துக் குட்படாது" எனக் கூறியிருத்தலுக் கிணங்க, "ஆயாதவன்,

கூவாதவன், நாடாதவன்" எனக்கூற உலக வழக்கோடு, நூல்வழக்கும் மலிந்திருத்தலைப்போல், "ஆயான், கூவான், நாடான்" என்பவைகளையும் வினையாலணையும் பெயர்கள் எனக்கூற உலக வழக்கமும், இலக்கிய இலக்கண சம்பந்தங்களுங் கிடையாது.

"பெயரே அன்றிப் பிறஉரு பேலா"

எனப் பேரகத்திய நூலார் கூறி, வேற்றுமை யுருபை யேற்பது பெயர்ச்சொல்லே யன்றி, பிறசொற்கள் ஏலா வென்பதால், அவ்வித பெயர் சம்பந்தம், அல்லது அதவா பெயரெச்ச விகுதியை யாவது ஏற்காத "ஆயான்" முதலிய வினைச்சொற்கள் வேற்றுமை உருபை ஏற்று ஒரு சாதிப் பெயரா யிருப்பது எங்ஙனம்?

தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல்,

1-வது சூத்திரம்.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது."*

எனத் தொல்காப்பியர் துலக்கி யிருப்பதால், மேற்கூறிய வினைப்பெயர்கள் வேற்றுமை யுருபை ஏற்று, வினையாலணையும் பெயர்களாவ தெங்ஙனம்?

†"வினையாலணையும் பெயர்கள் உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் 'அன் அள் அர்' என்னும் விகுதிகளையே பெறும்" என்பர் தமிழ் இலக்கணத்தெளிவு நூலார். அதாவது, "உண்டு" என்னும் வினையெச்சம் "ஆன்" என்னும் ஆண்பால் விகுதியையே பெற்று, உகரங்கெட்டு, உயிரேறி, "உண்டான்" என வினைமுற்றாகியும்; "உண்ட" என்னும் பெயரெச்சம் "அன்" என்னும் ஆண்பால் விகுதியையே பெற்று, அகரத்திற்கு முன் வகர உடன்படுமெய் தோன்றி, தோன்றிய வகரத்தின்மேல் உயிரேறி "உண்டவன்" என வினையாலணையும் பெயராகியும் முடியும். அதாவது வினையாலணையும் பெயர் "ஆன்" என்னும் விகுதியைப் பெறாதென்பது முடிவு. இந்த "அன், அள், அர்" என்னும் விகுதிகளையே வினையாலணையும் பெயர் எதிர்மறையிலும் ஏற்கும். இவ்வகைகளை நோக்க 'நாடான் என்பது "ஆன்" விகுதியைப் பெற்ற சொல்லா யினமையின் எதிர்மறை வினையாலணையும் பெயராகாது.

---

* நன்னூல், சொல்லதிகாரம், வினையியல், 1-வது சூத்திரம்.

† தமிழ் இலக்கணத்தெளிவு, வினையியல் 170 வது சூத்திரம்.

நன்னூல், எழுத்ததிகாரம், உயிரீற்றுப் புணரியல்,
5-வது சூத்திரம்.

"வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி"

என்னும் நன்னூற் சூத்திரத்தை யனுசரித்து செய்யுளில் அசை குறைந்த விடத்து நீண்டும், நீண்ட விடத்து குறைந்தும் வரும்.

உதாரணமாக "சேய் அலைக்கும் நாடா"*

எனப் புகழேந்திப்புலவர் கூறிய தொடரில் வருஞ் "சேய்" என்பது வயலைக்குறிக்குமா? அவ்விடத்தில் அசை குறைந்தமையின் "செய்" என்பதையே "சேய்" என நீட்டிக் கூறினார். இதனால் அதை விதியெனக் கொண்டு, "சேய்" என்பதும் வயலைக் குறிக்குமெனக் கூறி வெளிப்படும் புலவனும் உண்டா? இவ்விதஞ் செய்யுளில் முதல் இடை கடைகளில் குறைந்தும் நீண்டும் வரும். அது பிரமாண மாகாது. அதை பிரமாணமாகக் கொள்ளின் மூல மொழியின் பொருளைப் பயவாது. இவ்வித எடுப்பும் செய்யுள் வழக்கிலேயே யன்றி, உலகவழக்கில் அல்ல. நாடான் என்பது உலக வழக்கச்சொல்லே! இது குறைந்து வழங்கவேண்டிய காரண மென்னை? இதனாலும் நாடான் என்பது எதிர்மறை வினையாலணை யும் பெயராகாது.

எதிர்மறை வினையாலணையும் பெயர்கள் ஐம்பால் விகுதிகளைப் பெற்று முடியவேண்டு மென்பது இலக்கண நூலுடையார் துணிபு. அவற்றுள் †"பெண்பால் பெயர்கள் சாதாரணமாய் ளகர இறுதியைப் பெறும். அதாவது ஆண்பால் ஈற்று 'அன்' விகுதிகெட்டு, 'அள்' ஆக மாறும்" எனக் கூறுவர் தமிழ் இலக்கணத்தெளிவு நூலாரும், பிறரும். உதாரணமாக,

உடன்பாடு.

ஆண் - நாடினவன், பலர் - நாடினவர்,
பெண் - நாடினவள், ஒன்றன் - நாடினது,
பலவின் - நாடினவை.

---

* பெருந்தேவனார் பாரத வெண்பா, உத்தியோகப்பருவம்.

† தமிழ் இலக்கணத்தெளிவு, பெயர்ச்சொல், 69-வது சூத்திரம்.

எதிர்மறை.

ஆண் - நாடாதவன், பலர் - நாடாதவர்,
பெண் - நாடாதவள், ஒன்றன் - நாடாதது,
பலவின் - நாடாதவை.

என வருவனவேயாம். நாடான் என்பதும் எதிர்மறை வினையாலணையும் பெயராயின் மேற்கூறியவாறு, அதன் பெண்பால் பெயர்கள் ளகர இறுதியைப் பெற்று 'நாடாள்' என வாகவேண்டும். அப்படி யாகாமல் சாதிப் பெயரைப் போல் 'த்தி' என்னுஞ் சாதிப் பெண்பால் விகுதியைப் பெற்று, 'நாடாத்தி' என ஒரு சாதி பெண்பாலை நாளதும் உணர்த்தி வருதலால், பெயர்ச்சொல் அல்லாமல், எதிர்மறை வினையாலணையும் பெயர் எனல் எங்ஙனம்?

"*விசேஷமாய் சாதிப்பெயரும், குடிப்பெயரும் ஆண்பால் ஈற்று 'அன் ஆன்' கெட இகர ஈறுபெற்றுப் பெண்பாலாகும்" எனத் தமிழ் இலக்கணத்தெளிவு நூலாரும்,

முத்துவீரியம், சொல்லதிகாரம், வினையியல்,
24-வது சூத்திரம்.
"இகர விறுதியு மவற்ற்ரு ரற்றே"

என முத்துவீரியருங் கூறுகின்றனரே யன்றி, வினையாலணையும் பெயரும், இக்ர விகுதியைப் பெறும் எனக் கூறினார்களில்லை. அப்படிக் கூறாமையால் 'நாடார்' என்பதை எதிர்மறை வினையாலணையும் பெயர் எனப்படாது.

சாதிப்பெயர்கள் 'பார்ப்பான், பிராமணன்' எனஆண்பாலினும், 'பார்ப்பார், பிராமணர்' எனப் பலர்பாலினும், 'பார்ப்பாத்தி, பிராமணத்தி' எனப் பெண்பாலினும் வழங்கி, ஒன்றன்பால் விகுதியாகிய 'து' (பார்ப்பாது) வையும், பலவின்பால் விகுதியாகிய 'வை' (பார்ப்பாவை) யையுங் கொண்டு, சாதிப்பெயர்கள் உயர்திணையே யன்றி, அஃறிணையினும் வழங்காது இருத்தலைப்போல்; 'நாடார்' என்பதும் உயர்திணைப் பெயராயினமையின் 'நாடான்' என ஆண்பாலினும், 'நாடார்' எனப் பலர்பாலினும், †'நாடாத்தி' எனச்சாதிப் பெண்பாலினும் வழங்கி, ‡'ஆண் பெண் பலரென முப்பாற் றுயர்

---

* தமிழ் இலக்கணத்தெளிவு, பெயர்ச்சொல், 70-வது சூத்திரம்.

† இரண்டாம் இலக்கணம், பெயர்ச்சொல், பால், 3-வது சூத்திரம்.

‡ நன்னூல், பெயரியல் 5-வது சூத்திரம்; முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல் 10-வது சூத்திரம்.

திணை' என்னும் நன்னூற் சூத்திரத்திற் குட்பட்டு, உயர்திணையே யன்றி அஃறிணைப்பாலாகிய ஒன்றன் (நாடாது) பாலினும், பல வின் (நாடாவை) பாலினும் வழங்காது இருத்தலால், 'நாடார்' என்பதை உயர்திணைச்சாதிப்பெயர் அல்லாமல் வேறென் கூறுவது?

நன்னூல், சொல்லதிகாரம், பெயரியல்,

4-வது சூத்திரம்;

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை"*

என நன்னூலார் கூறி 'மக்கள் தேவர் நரகர்' பெயர்களையே உயர்திணைப் பெயர்க ளென்பதால், அவற்றுள் 'நாடார்' என்பதும் மக்களாகிய உயர்ந்த சாதியின் பெயராயினமையின் உயர்திணை யில் வழங்கி, அஃறிணையில் வழங்காது ஒதுங்கினது. ஆகவே நாடார் என்பது எவ்வகையினும் எதிர்மறை வினையாலணையும் பெயர் ஆகாதெனத் துணியப்படும்.

ஒரு சொல் பல பொருளைத் தருமாயின் அது இன்ன பொ ருள் என்பது வினை சம்பந்தம் முதலியவற்றால் தெரியவரும். அச் சம்பந்தங்களை நோக்கி 'நாடார்' என்பதை சாதிப்பெயர் என விண்டு, பெயர்ச்சொல் லெனக்கொண்டு, 'நாட்டை யுடையவர், அரசர்' என் னும் பொருள்களைத் தந்து விளக்காது, வினையிலிருந்து பிறந்த வினையாலணையும் பெயர் என்பதற்கு ஏற்படுஞ் சம்பந்தம் யாது? வழக்கிலாததை வழக்கெனக் கொண்டு வாதாடுவதைவிட, வழ க்கை வழக்கெனக்கொண்டு வாதாடுதலே வளமையாகும். 'நாடார்' என்பதின் பிரத்தியக்ஷ வழக்கு சாதிப்பெயராக வழங்கி வருதலே யாம். இதுவே உலக வழக்கும், நூல் வழக்குமாம். இம்முறையை விட்டு, வீண் வார்த்தையைத் தொட்டு, தாம் படிப்பாளி அல்ல வெனக் காட்டி வெளிப்படுவானேன். ஆகவே நாடார் என்பதைப் பெயர்ச்சோல் எனக் கூற உலக வழக்கும் நூல் வழக்கும் மலிந் திருத்தலைப்போல், எதிர்மறை வினையாலணையும் பெயர் எனக்கூற உலக வழக்கோடு எந்நூலினும் எடுத்துக்காட்ட சாட்சியுங் கிடை யாது. இருப்பின் அவர்கள் கொண்ட கருத்தை ஏற்பதற்கேற்ற

* முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல், 9-வது சூத்திரம், தொல் காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், 1-வது சூத்திரம். தொன்னூல் விளக்கம், சொல்லதிகாரம், சொற்பொதுவியல் 10-வது சூத்திரம்,

நியாயங்களை *"நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக்காட்டி" அவர்கள் வாதத்தை நிலைநிறுத்து வாராக. அப்படி யாதாமொரு உலக வழக்கையும், நூல் வழக்கையும் எண்பிக்காமலே 'நாடார்'- என்பதற்கு இலக்கணஞ் சொல்லப் புகுவது அறியாமை என்க.

8. சாதிப்பெயர்

எதிர்மறைப் பொருளைக் கொள்ளா.

எதிர்மறைப் பொருளைக் கொள்ளக்கூடிய சாதி ஒன்றிருந்ததாக மநுவாதி ஸ்மிருதிகளாலும், அமரம் முதலிய கிரந்த நிகண்டுகளாலும், திவாகர நிகண்டாதிகளாலும், மற்றெவ்வித நூற்களாலும் விளங்கவில்லை. ஒவ்வொரு சாதிக்கும் சாதிப்பெயர் ஏற்பட்டிருப்பது அவரவர் அடைந்து வந்த சாதிப் பொருளையும், வசித்த ஊரையும், செய்யுந் தொழிலையுங் கொண்டு உடைமைப் பொருளால் சாதிப்பெயர்கள் ஏற்பட்டிருப்பனவே யன்றி, பொருள் இன்மையையும், தொழில் இன்மையையுங் கொண்ட எதிர் மறைப் பொருளால் எவர்களுக்கும் சாதிப்பெயர்கள் ஏற்படவில்லை. இதை விளக்கவே,

தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமை மயங்கியல், 24-வது சூத்திரம்;

"எதிர்மறுத்து மொழியினுந் தத்த மரபிற்
பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே"†

எனக் கூறினர் தொல்காப்பியர். அதாவது "எதிர்மறுத்து மொழியினும்=விதி முகத்தாற் கூறாது எதிர் மறுத்துக் கூறினும், தத்தம் மரபிற் பொருணிலை திரியா=தத்தம் இலக்கணத்தான் வரும் பொருள் நிலை திரியாத, வேற்றுமைச் சொல்லே=வேற்றுமை உருபுகளை பெற்ற சொற்களே" என்பதாம். "வேற்றுமை உருபுகளை ஏற்ற சொற்களை விதிமுகத்தாற் கூறாது எதிர் மறுத்துக் கூறினும் அதனது இயற்கையான பொருள் திரியாது என்பதால்' எதிர்மறை உடன்பாடு வினைச்சொற்களுக் கன்றி, பெயர்ச் சொற்களுக்கும், சாதிப் பெயர்களுக்கும் வழங்குதலின்மையை

---

* நன்னூல், பொதுப்பாயிரம், 15-வது சூத்திரம்.

† இலக்கண விளக்கம், சொல்லதிகாரம், பொதுவியல்; 33-வது சூத்திரம்; முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல் 85-வது சூத்திரம்.

விளக்கினர். எதிர்மறைப் பொருளைக் கொள்ளா திருப்பினும், எதிர்மறைச் சொல்லைப் போன்ற சாதிப்பெயர்களும் சிலவுண்டு. இருப்பினும் அவைகளும் எதிர்மறைப் பொருளைக் கொள்ளாது.

இங்கு உதாரணமாகத் "தட்டான்" என்னுஞ் சாதிப் பெயரைக் கவனிப்பாம். 'தட்டான்' என்பதை வினைச்சொல்லாகக் கொள்ளின் எதிர்மறை வினைமுற்றாகி, 'அடியான்' அல்லது 'தட்டமாட்டான்" என்னும் பொருள்களையும்; சாதிப்பெயராகக் கொள்ளின் 'தட்டுந் தொழிலினன்' என்னுந் தொழிலுடைமையையும் விளக்கும். இது தொழிற் பெயரடியாகப் பிறந்த சாதிப் பெயராம். தட்டுந் தொழிலினனே தட்டான். தட்டாதவன் அல்ல. எதிர்மறைப் பொருளைக் கொள்ளின் அவனது தொழில் விளங்காது. சாதிப்பெயரு மாகாது. சாதியைக் குறிக்கும் பெயர்களெல்லாம் பெயர்ச்சொற்களா யிருப்பதோடு, உடைமைப் பொருளில் வழங்குவதன்றி எதிர்மறை இன்மைப் பொருளில் வழங்குத லில்லை. ¶கரையான் என்பது ஓர் சாதியாரைக் குறிக்கும். அவர்கள் கடற் கரையில் வசிப்பவர்க ளாதலால் அப்பெயர் வாய்க்கப் பெற்றனர். இக்கரையான் என்பதற்கு 'கரையமாட்டான்' என எதிர்மறை வினைப்பொருளைக் கொள்ளின் பொருந்துமோ? சாதிப்பெய ராயினமையின் 'கரையில் வசிப்பவன்' என உடைமைப் பொருளிற் கூறின் அவர்கள் வசிப்பை நன்கு விளக்கும். இது இடப்பெயரடியாகப் பிறந்த சாதிப் பெயராகும். 'துறையார்' என்பதும் அங்ஙனமன்றோ. துறையை யுடையவர் எனப் பொருள் கொள்ளும். பொன்னிக்கரையான், வையைத் துறையான் என்பவைகள் பொன்னியாற்றின் கரையை யுடையவனையும், வையையாற்றின் துறையை யுடையவனையும் விளக்குவதன்றி, வேறு பொருள் கொள்ளாது. கொள்ளுமெனின் அஃது அறிவுடையோர் கூற்றன்று. இவ்வகையால் 'நாடான்' என்பதையும் வினைமுற்றாகக் கொள்ளின் 'நெருங்கான்' என்னும் பொருளையும், சாதிப்பெயராகக் கொள்ளின் 'நாடுடையான்' என்னும் இடமுடைமையையும் விளக்கும். இவைகளை அறியாது சாதிப்பெயராகிய 'நாடார்' என்பதை எதிர்மறை வினையாலணையும் பெயர் என கற்பித்தல் அறியாமை என்க.

¶ "Karaiyan.—A name for Tamil sea-fishermen, who live on the coast [Karai]" Vide, Edgar Thurston's Castes and Tribes of Southern India Vol. III, p. 250.

9. தொழிற்பெய ரடியாகப்பிறந்த சாதிப்பெய ராகா.

"வினைப்பெய ரனைத்தும் தொழிலெனப் படுமே"

எனக் குவலயா நந்தத்தார் கூறியவாறு;

"பறத்தற் றொழிலால் பறவை எனப்படும்"
"இமைக்குந் தொழிலால் இமையெனப் படுமே"

எனப் பேரகத்திய நூலார் தொழிற்பெயரின் தன்மையைக் கூறி விளக்கினர். தொழிற்பெயர் (Verbal Noun) என்பது வினையடியாகப் பிறந்து, 'தல் அல்' முதலிய தொழிற்பெயர் விகுதிகளில் ஒன்றை யேற்று, படர்க்கை இடத்தையே காட்டி, செய்கையை உணர்த்தி வருஞ் சொல்லாம்.

"பார்த்தற் றொழிலால் பார்ப்பார்" எனவும்,
"பொருதற் றொழிலால் பொருநர்" எனவும்,
"உழுதற் றொழிலால் உழவர்" எனவும்;
"தட்டுந் தொழிலால் தட்டார்" எனவும்,

வருவன போன்றவைகளே தொழிற்பெய ரடியாகப் பிறந்த சாதிப்பெயர்களாம்.

"பகுதியே நின்றும் பகுதி முதல் நீண்டும்
தொழிற் பெயர் வருத லியற்கை யாமே"

என்னுஞ் சூத்திரத்தால் மேற்கூறிய பெயர்கள் பகுதியே நின்று விளக்கிய பெயர்களாகும். இப்பெயர்களைப்போல் "நாடான்" என்பதும் 'நாடுவினை' விளக்காதோ வெனின், விளக்காது. 'பார்ப்பார்' என்பது "முப்புரி நூலோர் முனிவ ரென்றிவை, தப்பில் பார்ப்பார் தம்பெய ராகும்" என்னுந் திவாகரத்தால் பிராமணருக்குரிய சாதிப்பெயரென விளங்கினது. 'பொருநர்' என்பது 'பொருநர் மன்னர் பூபாலர் நிருபர்' என்னும் பிங்கல நிகண்டால் க்ஷத்திரியருக்குரிய சாதிப்பெயரென விளங்கினது. உழவர் என்பது 'உழவர் மேழியர் வேளாளர்' என்னுஞ் சூடாமணி நிகண்டால் சூத்திரருக்குரிய சாதிப்பெயரென விளங்கினது. 'தட்டார்' என்பது 'செங்கொல்லர் தட்டார் பொன்வினை செய்வோர்' என்னுந் திவாகரத்தால் கம்மாளருக்குரிய சாதிப் பெயர்களில் ஒன்றென விளங்கினது. இவைகளைப்போல் நாடார் என்பதும் நாடுந் தொழிலால்

ஏற்பட்ட சாதிப்பெயர் எனக் கூறுதற்கு நூற்பிரமாண மில்லாமை யாலும், நாடுந் தொழில் இன்னதென ஏற்படாமையாலும், நாடுந் தொழிலையுடைய சாதி ஒன்று உண்டென விளக்க உலக வழக்கும், நூல் வழக்கும் இல்லாமையாலும் **நாடார்** என்பதை தொழிலடியாகப் பிறந்த சாதிப்பெயர் எனக்கூறுதற்கும் இடமில்லை என விளங்கினது.

10. சாதிப்பெயர் விகுதி மாற்றம் பெறு.

சாதிப்பெயர்களில், சிலது 'அன் அர்' விகுதிகளைப் பெற்று 'அந்தணன் அந்தணர், அரசன் அரசர்' எனவும்; சிலது 'ஆன் ஆர்' விகுதிகளைப்பெற்று 'பார்ப்பான் பார்ப்பார், தட்டான் தட்டார்' எனவும்; சிலது 'அன் ஆன், அர் ஆர்' விகுதிகளைப்பெற்று 'நாடன் நாடான், நாடர் நாடார், கன்னுவன் கன்னுன், கன்னுவர் கன்னுர்' எனவும்; சிலது 'அன் ஓன், அர் ஓர்' விகுதிகளைப்பெற்று 'மறையவன் மறையோன் மறையவர் மறையோர், உழவன் உழவோன் உழவர் உழவோர்' எனவும்; சிலது ஒருமையையே பெற்று 'பெருமான்' எனவும்; பன்மையையே பெற்று 'ஐயர் செட்டியார்' எனவுஞ் சாதிப்பெயர்கள் வழங்கி வருதல் வழக்கு.

நன்னூல், சொல்லதிகாரம், வினையியல்,

6-வது சூத்திரம்.

'அன் ஆன் இறுமொழி யாண்பாற் படர்க்கை'

என்னும் நன்னூற் சூத்திர விதியால் ஆண்பாற் பெயர்கள் 'அன் ஆன்' என்னும் விகுதிகளைப் பெற்று வருமென்று விளங்குகின்றது. இவ்விதியை 'பார்ப்பான்' என்னுஞ் சாதிப்பெயரின் பேரில் ஏற்றின் 'பார்ப்பன்' எனப்படும். 'பார்ப்பன்' என்றால் 'பார்க்கலாம்' எனப் பொருள்படுமன்றி, பிராமணனைத் தெரிவிக்காது. இதைப்போல் "ஐயர், அந்தணன், பிராமணன்" என்னும் பெயர்களும் பார்ப்பாரைத் தெரிவித்து 'ஐயார், அந்தணுன், பிராமணுன்' என்பனவும் விகுதி மாற்றத்தால் பார்ப்பானைத் தெரிவிக்காது போயின.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், பெயரியல்,

41-வது சூத்திரம்.

"ஆவோ வாகும் பெயருமா ருளவே"

என்னுந் தொல்காப்பிய விதியால் "ஆன்" விகுதியைப் பெற்ற பெயர்கள் "ஓன்" விகுதியையும் பெறும் என்பர். இவ்விதியை "பார்ப்பான்" என்னுஞ் சாதிப்பெயரின்பேரி லேற்றின் 'பார்ப்போன்' எனப்படும். பிராமணன் அதுவுந் தன் பெயரெனக் கூறி முந்தான். 'வண்ணான்' என்பதைத் திரித்து 'வண்ணோன்' எனக்கூறின், அப் பெயருந் தனக்குண்டென வண்ணான் முந்தான். அப்படித் தன்னிலையைவிட்டு விகுதி மாற்றம் பெறுமைக்குக் காரணம் சாதிப்பெயர் அல்லாது பிறிதில்லை. இவைகளால் சாதிப்பெயர்கள் எந்தெந்த வகையில் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகின்றனவோ அந்தந்த வகையிலேயே வழங்கப்படல் வேண்டுமென விளங்கின. இதை விளக்கவே 'பிற்காலத்து நூல் செய்வார் நூல் இலக்கணம் பிறழாமல் செய்யினும் முற்காலத்து நூலோடு பொருண் மாறுபட்ச் செய்யின் அது மரபன்று' எனக்கூறினர் நச்சினார்க் கினியரும். இவைகளை யறியாது 'நாடான்' என்னுஞ் சாதிப்பெயரைத் திரித்து முறுக்கி ஒன்றரை முழம் நிகளம் இழுத்து 'நாடாதவன்' எனப் பொருள் கொள்ளின் பொருந்துமோ? மாணிக்க மணியினுக்குச் செவ்வண்ணம் முதலாயின சில இலக்கணங்கூறி பலநூல் கிடப்ப, கருவண்ண முதலாயினவும் அதற்கு இலக்கணமாமென இன்றெழுந்த ஒருவன் கூறுமாப்போல் கூறின் ஒப்புவதெங்ஙனம்? அப்படி செய்தல் தவறென விளங்குதற்கே,

தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்,

91-வது சூத்திரம்,

'மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்'

எனத் தொல்காப்பியருந் துணிந்து கூறினர். இதற்கு நச்சினார்க்கினியர் 'மரபினை நிலைத்திரித்துச் சொல்லின் உலகத்துச் சொல்லெல்லாம் பொருளிழந்து பிறிது பிறிதாகும்' எனப் பொருள் கூறியிருக்கின்றார். அப்படித் திரிக்காமல்,

நன்னூல், பொதுப்பாயிரம்

9-வது சூத்திரம்.

"முன்னோர் மொழிபொருளே யன்றி யவர் மொழியும்
பொன்னே போற் போற்றி"க்கொள்ளுதல்

அறிவுடையோர்க்கழகு. சாதிப்பெயர்கள் முன்னோர்களால் இடப்பட்ட பெயர்களாயினமையின் அது எதிர்மறை முகத்தானும்,

விகுதி மாற்றத்தானும், மற்றெவ்வகை விதியானும் மாறி வழங்காதெனத் துணியப்படும்.

நன்னூல், சொல்லதிகாரம், பொதுவியல்,
37-வது சூத்திரம்.

"எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே"

என்பது நன்னூலுடையார் துணிபு. அஃதாவது 'பெரியோர்கள் எந்தப்பொருளை எந்தச்சொல்லால் எந்த வகையில் தொன்று தொட்டு வழங்கி வந்தனர்களோ, அந்தப்பொருளை அந்தச் சொல்லால் அந்த வகையிலேயே நாமும் வழங்குதல் மரபு' என்பதாம். இவ்விதியை அனுசரித்து இந்த "**நாடான்**" என்னும் பெயரையும், "**நாடன்**" என்னும் பெயரையுந் தொன்று தொட்டு பெரியோர்கள் எந்தவகையில் வழங்கினர்கள்? "**நாட்டை யுடையவன்**" என்னும் பொருளிலா? "**நெருங்கான்**" என்னும் பொருளிலா? எனப் பெரியோர்கள் வழக்குகளை பரிசீலனை செய்யும்பட்சத்தில், சாதிப் பெயராக நின்று, 'நெருங்கான்' என்னும் பொருளைக் காண்பிக்கக்கூடிய பாடல் ஒன்று அகப்படுதல் முயற் கொம்பிற்குச் சமம். அஃதாவது இல்லை என்பதே முடிபு. ஆயின் "**நாட்டை யுடையவன்**" அல்லது "**அரசன்**" என்னும் பொருளை பரிஷ்காரமாய்த் தெரிவிக்கும் பாசுரங்கள் பத்து ஆயிரத்திற்கு அதிகமாகப் பார்க்கக் காணலாம். மழவை-மகாலிங்க ஐயரும், பிறரும் **நாடன்** என்பதற்கும், **நாடான்** என்பதற்கும் "**நாட்டை யுடையவன்**" எனவே பொருள் எழுதியிருக்கின்றார்கள். அவைகளை நோக்க வேறு பொருள் கொள்ளுவது எங்ஙனம்? திவாகர நிகண்டார்களும் "**சேரனை குடநாடன்**" எனவும், "**சோழனை புனனாடன்**" எனவும், "**பாண்டியனை தமிழ்நாடன்**" எனவுங் கூறியிருக்கின்றனர். இவைகளும் "**குடநாட்டை யுடையவன், புனல் நாட்டை யுடையவன், தமிழ்நாட்டை யுடையவன்**" என்னும் உடைமைப் பொருளையே விளக்குகின்றன.

தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல்,
23-வது சூத்திரம்.

"உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்
வழக்குவழிப் படுத்தல் செய்யுட்குக் கடனே"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் பெரியோர்களது வழக்கு உலக வழக்கோடு ஒத்து வருமென்பதால், அதை நூலாசிரியர்கள் செய்யுட் கண்ணே விளக்கி யிருக்கின்றார்கள். அதை,

தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்,
90-வது சூத்திரம்.

"மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான"

எனப் பின்னும் வற்புறுத்தி யிருக்கின்றார் தொல்காப்பியர். "ஒன்றன்வழியே யன்றியுந் தாந்தா மறிந்த வாற்றானே நூல் செய்யப் பெறாரோ வெனின், அஃது மரபன் றென்பது நோக்கி யன்றே ஆசிரியர்,

"மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்"*

என்னுந் தொல்காப்பியச் சூத்திரவிதி நூலிற்கு மெய்து வித்து நூலின் மரபு கூறப்புகுந்தா ரென்க. தொல்லாசிரியர் வழக்கே வழக்குப் பிற்காலத்து வேறுபட வழங்கப்படுமாயின் அவ்வழக்கு இலக்கணத்தோடு பொருந்தாதென விலக்குதற் கன்றே,

"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான"§

என்றாராகலின் அமையாதென்க" என சிவஞான சுவாமி களும் தொல்காப்பியச் சூத்திரவிருத்தி 9-வது பக்கத்தில் கூறி யுள்ளார். அதனால்,

இலக்கணக் கொத்து, பாயிரம்,
8-வது சூத்திரம்.

"சொற்பயில் விப்பவ னெப்படிச் சொற்றன
னப்படி யொழுகி யரும்பொருள் பெறுக."¶

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், 91-வது சூத்திரம்.

§ தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், 92-வது சூத்திரம்; இலக்கணவிளக்கம், பொருளதிகாரம், பாட்டியல், 149 வது சூத்திரம்.

¶ இலக்கண விளக்கம், சொல்லதிகாரம், பொதுவியல், 17-வது சூத்திரம்; தொன்னூல் விளக்கம், சொல்லதிகாரம், வேற்றுமையியல், 30-வது சூத்திரம்.

என இலக்கணக்கொத்து நூலாரும் பெரியோர் வழக்கைப் பின்பற்ற வேண்டுமெனப் பின்னும் இடித்துக் கூறியிருக்கின்றார். முன்னோர்கள் யானை மேய்ப்பானைப் பாகனென்றும், ஆடு மேய்ப் பானை இடையன் என்றுங் கூறினர். இவ்வழக்கை விட்டு யானை மேய்ப்பானை இடையன் என்றும், ஆடு மேய்ப்பானை பாகன் என் றுங் கூறின், பெரியோர் மரபுக்கு மாறுபாடாதலின் அது பொருந் தாதென்க. பசுங்கன்று, யானைக்கன்று என அதன் குழவிகளைக் கன்று என்னும் பெயரால் விளக்கியும்; குதிரைக்குட்டி, புலிக் குட்டி என அதன் குழவிகளைக் குட்டி என்னும் பெயரால் விளக்கி யும் இருக்கின்றனர். இவ்வழக்கை மாறுபடுத்திக் கூறுவாரை பல நூல் படித்த பண்டிதர் என்பரோ? பெரியோர் வழக்க மல்லாது தம்மனம் போனவாறு கூறப்படாதென வரையறுத்தற்கே நன்னூ லுடையாராகிய பவணந்தி முனிவரும்,

நன்னூல், எழுத்ததிகாரம், பதவியல்,

14-வது சூத்திரம்.

"இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பல்"*

என்றார். அதாவது "இலக்கியம்=(அறிவுடையோரால் ஏற் படுத்திய) இலக்கியத்தை, கண்டு=(அதன் வழக்க பழக்கத்தைப்) பார்த்து, அதற்கு=அவ் விலக்கியத்திற்கு, இலக்கணம்=இலக் கணத்தை, இயம்பல்=சொல்லல்வேண்டும்" என்றார். இப்பகுதியிற் கூறியவாறு "நாடார்" என்பதை நோக்க, இலக்கியங்க ளெல்லாம் அதற்கு "நாட்டை யுடையவர்" எனவே பொருள் தருதலோடு, இலக்கணமும் இரண்டாம் வேற்றுமைத்தொகை என முடிக்கின்ற மையின், அரசரை விளக்குமெனக் கோடலே சால்புடைமை.

ஆகவே, "நாடார்" என்னுங் குலப்பட்டப் பெயரின் பொருளை ஐயந்திர உணர்ந்து பலநூற்களின் போக்கையுங் கவனித்து, ஆழ்ந்து மனத்தில் ஆவாகனம் பண்ணினால் "தேசம்" என அருத்தங் கொள்ளுகிற "நாடு" என்னும் பெயர்ப்பதம் மூலபதமாக விளங் கும். இந்த நாடு என்கிற மூலபதத்தினின்று "நாடார்" என்னும் பெயர்ப் பகுபதம் பிறந்து, "நாட்டை யுடையவர்" என விளக் கும். அரசருக்கு நாட்டுப் பெயர்களாலேயே சாதிப் பெயர்கள் ஏற்பட்டிருத்தலால் இவர்களும் நாடு சம்பந்தப்பட்ட நாடார் என்னும் பெயரைப் பெற்றிருத்தலால் அரச சந்ததியார் எனப்படுவர்.

* இலக்கணவிளக்கம், எழுத்ததிகாரம், பதவியல், 14-வது சூத்திரம்.

11. சாதிப்பெயர்கள் ஆர் விகுதியைப் பெற்றே உலகில் வழங்கும்.

"அர் ஆர் ஓர்" என்னும் பலர்பால் விகுதிகளைப் பெறும் சாதிப்பெயர்களெல்லாம் "ஆர்" விகுதியைப் பெற்றே உலக வழக்கில் மிகுத்தும் வழங்கிவரும்.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல்,
14-வது சூத்திரம்.

"பாலறி மரபி னம்மூ வீற்று
மாவோ வாகுஞ் செய்யு ளுள்ளே"

நன்னூல், சொல்லதிகாரம், பொதுவியல்,
2-வது சூத்திரம்.

"பெயர்வினை யிடத்து னளரய வீற்றய
லாவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே"

என்னுஞ் சூத்திரங்களில் "ஓர்" விகுதியைக் கொண்ட பெயர்களே செய்யுளில் வழங்குமென்பதால், "ஆர்" விகுதியைப் பெற்ற பெயர்களெல்லாம் உலகில் வழங்கிவருமெனத் தாமே விளக்கும். இவ்விதியை அனுசரித்தே "ஆர்" விகுதியைப்பெற்ற "நாடார்" என்பது உலக வழக்கிலும், "அர்" விகுதியைப் பெற்ற "நாடர்" என்பது செய்யுள் வழக்கிலும் மிகுத்து வழங்கி வருகின்றன. உதாரணம்:—

அகமுடையார்	தேவமார்
ஆச்சாரியார்	நாய்க்கமார்
கரையார்	பிள்ளைமார்
கிராமணியார்	மறவமார்
சாஸ்திரியார்	கன்னார்
செட்டியார்	கோனார்
முதலியார்	வண்ணார்
வாண்டையார்	ஐயமார்
சான்றார்	கம்மார்
தட்டார்	குருக்கள்மார்
பார்ப்பார்	கௌண்டமார்
நாயுடுகார்	பிராமணாள்
ஐயங்கார்	வன்னியாள்

என்னுஞ் சாதிப்பெயர்க ளெல்லாம் "ஆர்,, விகுதியைப் பெற்றே உலக வழக்கில் வழங்கி வருகின்றன. அதைப்போல் "நாடார்" என்பதும் வழங்கி வருகின்றது.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம்,
27-வது சூத்திரம்.

"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியு
மொன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் ஒருமைப்பால் பன்மையாதல் உயர்வு சிறப்பெனக் கூறியிருத்தலால், நாடார் என்பதும் பன்மை முடிபா யிருத்தற்குக் காரணம் அதுவேயாம். அஃது உயர்வு சிறப்பெனப் படும்.

12. சாதிப்பெயர்கள் அவரவர்களுக்குரிய குலப்பொருளாலும், தொழிலாலும், இடத்தாலும் ஏற்பட்டவை.

பன்னிருபாட்டியல், சொல்லியல், பெயர்ப்பொருத்தம்,
2-வது சூத்திரம்.

"பார்ப்பா ரரசர் வணிகர்வே ளாளரெனப்
பாற்படு நாற்பெயர் குலப்பெய ராகும்"*

எனப் பன்னிரு பாட்டியல் நூலார் கூறிய நான்கு சாதிகளாகிய "பார்ப்பார், அரசர், செட்டி, வேளாளர்" முதலிய சாதியார்களுக்கும் அவரவர்களது குலப்பொருள்களையும், அதையடுத்த தொழில்களையும் முன்னிட்டே சாதிப்பெயர்கள் ஏற்பட்டனவென விளக்குவாம்.

(a) பார்ப்பார்களது குலத்தொழில்கள்.
சேந்தன் திவாகரம்.

"ஓத லோதுவித்தல் வேட்டல் வேட்பித்த
லீத லேற்ற லென்றிரு மூவகை
யாதிக் காலத் தந்தண ராறுதொழில்"

* ருக்குவேதம், புருஷசூக்தம், 13-வது சுலோகம்.

பதிற்றுப்பத்து, மூன்றும் பத்து,
24-வது அகவல்.

"ஓதல் வேட்ட லவைபிறர்ச் செய்த
லீத லேற்றலென் றாறுபுரிந் தொழுகு
மறம்புரி யந்தணர் வழிமொழிந் தொழுகி"

க. வேதம் ஓதல். ச. வேதம் ஓதுவித்தல்.
உ. யாகஞ் செய்தல். ரு. யாகஞ் செய்வித்தல்.
ங. தாநங் கொடுத்தல். சு. தாநம் வாங்குதல்.†

இவ்வாறு தொழில்களும் பார்ப்பாருக்குரிய குலத்தொழில்களாம். இவற்றுள் பார்ப்பாருக்கே உரிய சீவனோபாயங்களான குலத் தொழில்கள் மூன்று என‡மநு கூறுகின்றார்.

க. வேதம் ஓது வித்தல்.
உ. யாகஞ் செய்வித்தல்.
ங. தாநம் வாங்குதல்.

இம்மூத் தொழில்களில் வேதத்தை முன்னிட்டு 'அந்தணர், ஆய்ந்தோர், நூலோர், பார்ப்பார், பிராமணர், மறையோர், வேத பாரகர்' என்னுங் குலப்பெயர்களும்; யாகத்தை முன்னிட்டு 'செந்தீவளர்ப்போர், வேதியர், வேள்வியாளர்" என்னுங் குலப் பெயர்களும்; தாநத்தை முன்னிட்டு "ஐயர், விப்பிரர்" என்னுங் குலப் பெயர்களும் பார்ப்பாருக்குரிய தென ஸ்மிருதி யாதிகளாலும், திவாகர நிகண்டாதி நூல்களாலுந் தெளியப்படும்.

பிராமணர்:—பிராமணம்=வேதம். அதனையுடையவர் பிராமணர். பிரமத்தியானத்தால் பிராமணர் எனவுங் கூறப்படுவர்.
மறையவர்:—மறை=வேதம். அதனை யுடையவர் மறையவர்.
வேதியர்:—வேதிகை=யாககுண்டம். அதனை யுடையவர் வேதியர்.
வேள்வியாளர்:—வேள்வி = யாகம். ஆளர் = ஆளுபவர். வேள்வியாளர்.

---

† மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 75-வது சுலோகம்; பராசரஸ்மிருதி ஆசாரகாண்டம், 1-வது அத்தியாயம். 38-வது சுலோகம்; ஆரீத ஸ்மிருதி, 1-வது அத்தியாயம், 17-வது சுலோகம்; Orm's History of the Hindustan, Vol. I, Ch. I, p. 3.

‡ மநுஸ்மிருதி, 10வது அத்தியாயம், 76-வது சுலோகம்; புதஸ்மிருதி, 20-வது சுலோகம்.

ஐயர்:—ஐயம்=பிச்சை. அதனை வாங்குபவர் ஐயர்.
விப்பிரர்:—விப்பிரம்=பிச்சை. அதனை வாங்குபவர் விப்பிரர் எனவுங் கூறப்படுவர். பிறவுமன்ன.

ஆகவே, பார்ப்பாரனது குலப்பெயர்களாகிய 'பிராமணர், மறையோர், வேதியர், வேள்வியாளர், ஐயர், விப்பிரர்' முதலிய பெயர்கள் அவர்களது, 'மறை, யாகம், தானம்' என்னுங் குலப் பொருள்களை நோக்கி ஏற்பட்டப் பெயர்கள் என விளங்கின. ஆகிய இம் முத்தொழில்களுள் *வேதம் ஓதலே பார்ப்பாருக்கு உயர்ந்த தருமம் எனவும், அப்படி யோதிய வேதத்தின் அருத்தத்தை அறியும்படியான †ஞானமே தவம் என மநுவும், வேதாப்பியாசம் முதலியவைகளைச் செய்யவேண்டும் என்று தக்ஷரும், சகல பிரயத்தனத்தாலும் வேதத்தை ஆசிரயிக்கக் கடவர் என்று வியாசரும், வேதமே மோக்ஷத்தைத் தரவல்லதென்று யாக்கியவல்கியரும்; வேள்விகட்கும், தவத்திற்கும், ஏனைய நல்ல கருமங்கட்கும், சுவர்க்க வீடு பேற்றிற்கும் வேதமொன்றே சிறந்த கருவியாமெனப் பராசரும், வேத முணராதவனுடைய எல்லாத் தொழில்களும் பயனற்றதாகின்றன வென மநுவுஞ் சொன்னார்கள். இவைகளால் பார்ப்பாரது முக்கிய குலத்தொழில் "வேதம் ஓதல்" என வெளிப்பட்டது. இதனானே "வேதியர்க்கழகு வேதமு மொழுக்கமும்" என்றார் வெற்றிவேற்கையில் அதிவீரராமபாண்டியர்.

(b) அரசர்களுக்கும் அறுதொழில்கள் கூறப்பட்டுள்ளன. அத் தொழில்களை முன்னிட்டே அவர்களுக்கும் சாதிப்பெயர்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றை அடுத்த எண்ணில் விளக்குவாம்.

(c) வணிகரது குலத்தொழில்கள்.

சேந்தன் திவாகரம்.

"வணிக ரறுதொழி லோதல் வேட்டல்
யீதலுழவு பசுக்காவல் வாணிகம்."

க. வேதம் ஓதல்§	ச. ஏருழுதல்
உ. யாகஞ் செய்தல்	ரு. பசுக்காத்தல்
௩. தானங் கொடுத்தல்	சா. வர்த்தகஞ் செய்தல்

---

* மநுஸ்மிருதி, 4-வது அத்தியாயம், 147: வது சுலோகம்

† மநுஸ்மிருதி, 11-வது அத்தியாயம், 235-வது சுலோகம்; பகவத்கீதை, 4-வது அத்தியாயம், 28-வது சுலோகம்.

§ "ஓதற்றொழி லுரித் துயர்ந்தோர் மூவர்க்கும்" இலக்கண விளக்கம்.

என்னும் *அறுதொழில்களும் வைசியருக்கு விதிக்கப்பட்ட குலத்தொழில்களாம். இவற்றுள் "ஏருழுதல், பசுக்காத்தல், வர்த்தகஞ் செய்தல்" என்னும் முத்தொழில்களே முதன்மை பெறுமென $புதஸ்மிருதி கூறுகின்றது. இம் முத்தொழில்களுள் †"வைசியர்க் கழகு வளர்பொரு ளீட்டல்" என அதிவீரராமபாண்டியரும்; ¶"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை" எனத் தொல்காப்பியரும் துலக்கியிருப்பதால் "வர்த்தகஞ் செய்தலே" முந்தி நிற்கும்.

இப்பர்:—இப்பி=சங்கு, முத்து இவைகளை வியாபாரஞ் செய்பவர்.
கவிப்பர்:—கவிப்பு=உடுப்பு, வஸ்திரம், அதை விற்பவர் கவிப்பர்.
செட்டி:—செட்டு=வர்த்தகம், அதையுடையவர் செட்டி.
வணிகர்:—வணிகம்=வர்த்தகம், அதையுடையவர் வணிகர்.
வைசியர்:—வைசியம்=வர்த்தகம், அதையுடையவர் வைசியர்.

ஆகவே, வைசியர்களது குலப்பெயர்களாகிய "இப்பர், கவிப்பர், செட்டி, வணிகர், வைசியர்" என்னும் பெயர்கள் அவர்களது "வர்த்தகம்" என்னுங் குலத்தொழிலை நோக்கி ஏற்பட்டப் பெயர்கள் எனவே விளங்கின.

(d) வேளாளரது குலத்தொழில்கள்.

சேந்தன் திவாகரம்.

"வேளாள ரறுதொழி லுழவு பசுக்காவல்
தெள்ளிதின் வாணிபங் குயிலுவங் காருகவினை
யொள்ளிய விருபிறப் பாளர்க் கேவல் செயல்."

க. ஏருழுதல்	ச. குயிலுவத் தொழில் செய்தல்
உ. பசுக்காத்தல்	ரு. காருக வினைகளாக்கல்
௩. பொருளீட்டல்	௬. அடிமை பூண்டொழுதல்§

---

* மநுஸ்மிருதி, 1-வது அத்தியாயம், 90-வது சுலோகம்; ஆரீதஸ்மிருதி, 2-வது அத்தியாயம், 6-வது சுலோகம், ஞானப்பிரகாச சுவாமிகள் சாதிநூல், 4-வது செய்யுள்; பகவத்கீதை 18-வது அத்தியாயம், 44-வது சுலோகம்.

$ புதஸ்மிருதி, 26-வது சுலோகம். † வெற்றிவேற்கை.

¶ தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், 77-வது சூத்திரம்; இலக்கண விளக்கம், பொருளதிகாரம், பாட்டியல், 166-வது சூத்திரம்.

§ மநுஸ்மிருதி, 1-வது அத்தியாயம்; 91-வது சுலோகம், பராசாஸ்மிருதி, ஆசாரகாண்டம், 1-வது அத்தியாயம், 64-வது சுலோகம்; புதஸ்மிருதி, 27-வது சுலோகம்;

இவ்வாறு தொழில்களுள் †"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல, தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" எனத் தொல்காப்பியரும், "உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்" என வெற்றி வேற்கையில் அதிவீரராமபாண்டியரும் அறைந்திருத்தலால் "ஏருழுதலே" சிரேஷ்டமெனப்படும்.

உழவர்:—உழவு=படைச்சால், அதையுடையவர் உழவர்.
காராளர்:—கார்=ஏர்நுதி, அதையுடையவர் காராளர்.
சூத்திரர்:—சூத்திரத்தைப்போல் தொழில் செய்பவர் சூத்திரர்.
மேழியர்:—மேழி=கலப்பை, அதனையுடையவர் மேழியர்.
வினைஞர்:—வினை=தொழில், அதையுடையவர் வினைஞர்.
வேளாளர்:—வேளாண்மை=பயிர், அதைச்செய்பவர் வேளாளர்
எனவுங் கூறுவன. பிறவுமன்ன.

ஆகவே, சூத்திரர்களது குலப்பெயர்களாகிய "உழவர், காராளர், சூத்திரர், மேழியர், வினைஞர், வேளாளர்" என்னும் பெயர்கள் அவர்களது "பயிர், ஏர்" என்னுங் குலப்பொருள்களை நோக்கி ஏற்பட்ட பெயர்கள் என விளங்கின. இவைகளால் "பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்" என்னும் நான்கு சாதிகளுக்குங் கூறிய அவ்வாறு தொழில்களுள் ஒவ்வொன்றே சிறந்தது.

க. பார்ப்பாருக்கு வேதம் ஓதலும்,
உ. அரசருக்கு உலகம் ஓம்பலும்
ந. வணிகருக்கு வர்த்தகம் புரிதலும்,
ச. வேளாளருக்கு ஏருழுதலுஞ் சிறந்தவை.

இவைகளை விளக்க;

மறை=வேதம், அதனையுடையவர் மறையோர் எனவும்;
நாடு=ஊர், அதனையுடையவர் நாடார் எனவும்;
வணிகம்=வர்த்தகம், அதனையுடையவர் வணிகர் எனவும்;
வேளாண்மை=பயிர், அதனையுடையவர் வேளாளர் எனவும்
வழங்கி வருகின்றன. அஃதாவது;

கல்லாடம், 11-வது அகவல்,

"மூன்றழ லொன்மறை முனிவர் தோய்ந்து
மறைநீ ருகுத்தலின் மறையோ ளாகியும்."

† தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், 80-வது சூத்திரம்; இலக்கணவிளக்கம், பொருளதிகாரம், பாட்டியல், 167-வது சூத்திரம்.

என்னுங் கல்லாடத்தால் மறையோன் மறைக் கதிகாரி யாவன்.

பதிற்றுப்பத்து, மூன்றும்பத்து,
24-வது அகவல்.

"நாடேன் விளங்கு நாடா நல்விசைத்
திருந்திய வியன்மொழித் திருந்திழை கணவ"

என்னும் பதிற்றுப்பத்தால் அரசன் அல்லது நாடான் நாட்டுக் கதிகாரி யாவன்.

கல்லாடம், 11-வது அகவல்.

"நவமணி யெடுத்து நற்புலங் காட்டலின்
வளர்குறி மயங்கா வணிக னாகியும்"

என்னுங் கல்லாடத்தால் வணிகன் வர்த்தகத்திற் கதிகாரி யாவன்.

கல்லாடம், 11-வது அகவல்.

"விழைதரு முழவும் வித்து நாறுந்
தழைதலின் வேளாண் டலைவ னாகியும்"

என்னுங் கல்லாடத்தால் வேளாளன் வேளாண்மைக் கதிகாரி யாவன். இவைகளையே "மறையோர், நாடார், வணிகர், வேளாளர்" என்னுஞ் சாதிப்பெயர்கள் விளக்குகின்றன. இவர்களுக்கு மாத்திரமல்ல, மற்ற சாதியார்களுக்கும் "அளந்தன போக மவரவ ராற்றல்" என்னுந் துணிபால், அவரவர்களுக்குரிய சாதிப்பொருள்களோடு அதையடுத்த தொழில்களையும் முன்னிட்டு சாதிப்பெயர்கள் ஏற்பட்டு வழங்கி வருகின்றன. வருமாறு:—

(1) குயவருக்கும் அவரது "தண்டம், சக்கரம், குடம்" முதலிய சாதிப் பொருள்களை நோக்கியே சாதிப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"கும்பகாரர் குலாலர் வேட்கோவ ரென்
றிங்கிவை குயவர் மட்பகைஞ ரென்ப"

கும்பகாரர்:—கும்பம்=குடம், அதனைச் செய்பவர் கும்பகாரர்.

குலாலர்:—குலாலம்=தண்டசக்கரம், அதனையுடையவர் குலாலர்.

வேட்கோவர்:—வேட்கு+ஓவர் எனப்பிரிந்து புணரும். வேள் என்பது ஓவர் என்னுஞ் சொல்லோடு புணருங்கால் இடையில் கு சாரியைப் பெற்று, வேள்கு+ஓவர் என நின்று, "லளவேற் றுமையிற் றடவும்" என்னும் நன்னூற் சூத்திரத்தால் வேட்கு+ஓவர் என வாகி, "உயிர் வரின்

உருக்றண் மெய்விட் டோடும்'' என்னுஞ் சூத்திரத்தால் வேட்கோவர் என நின்றது. வேள்=மண், ஓவர்=சித்திரிப்பவர். மண்ணை சித்திரிப்பவர்.

குயவர்:—குயம்=மட்பாண்டம், அதனைச்செய்ப்பவர் குயவர். 'கு' என்றால் 'மண்' எனவும்: குயக்கடை என்றால் மட்பாண்டக் கடை எனவும், குயக்கலம் என்றால் மட்கலம் எனவும் பொருள் விரிதலால், குயவர் என்பதற்கு மட்கலமுடையார் எனப்படுவர். குயவரின் திரிபே குசவர் எனப்படும்.

(2) கள்விலைஞருக்கும் அவரது "கள்". என்னுஞ் சாதிப்பொருளை நோக்கியே சாதிப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"பழையர் துவசர் படுவர் கள்விலைஞர்''

சூடாமணி நிகண்டு.

"தொக்ககள் விற்போர் நாமஞ் சௌண்டிகர் துவசரோடு
தக்கதோர் பிழியர் மற்றும் படுவருஞ் சாற்று மன்றே.''

பழையர்:—பழை=கள், அதனையுடையவர் பழையர்.

துவசர்:—துவசம்=கொடி, அதைநாட்டி விற்பவர் துவசர்,

படுவர்:—படு=கள், அதனை யுடையவர் படுவர்.

சௌண்டிகர்:—சுண்டி=கள், அதையுடையவர் சௌண்டிகர்.

பிழியர்:—பிழி=கள், அதையுடையவர் பிழியர் எனவுங் கூறப்பட்டன. பிறவுமன்ன. இப்பெயர்கள் கள்விலைஞருக்குரிய சாதிப்பெயர்களே. இவைகள் அவர்களது சாதித்தொழிலையும், அதற்குரிய பொருளையும் விளக்குகின்றன.

(3) இடையருக்கும் அவரது "பசு, பால்'' முதலிய சாதிப்பொருள்களை நோக்கியே சாதிப்பெயர்கள் ஏற்பட்டன. கிடையரின் திரிபே இடையர் எனப்படும். கிடை=மந்தை. மருதநிலத்திற்கும், குறிஞ்சி நிலத்திற்கும் இடையிலுள்ள முல்லை நிலத்தில் வசித்தலால் இடையர் எனப்படுவர் எனினும் பொருந்தும்.

திவாகரம்.

"குடவர் பாலர் தொறுவர் கோவிந்தர்
அண்டர் கோபால ராய ரமுதர்''

குடவர்:—குடம்=பசு, அதையுடையவர் குடவர்.
பாலர்:—பால்=அமுது, அதனையுடையவர் பாலர்.
தொறுவர்:—தொறு=பசுக்கூட்டம், அதனையுடையவர் தொறுவர்.
கோபாலர்:— கோ=பசு, அதனை பரிபாலிப்பவர் கோபாலர்.
கோவிந்தர்:—கோ=பசு, விந்தம்=கூட்டம். பசுக்கூட்டத்தை யுடையவர் கோவிந்தர்.
அமுதர்;—அமுது=பால், அதனை யுடையவர் அமுதர்.
ஆயர்.:—ஆ=பசு, அதனையுடையவர் ஆயர். பிறவுமன்ன.

(4) கம்மாளர்:—கம்மம்=விசித்திர வேலை. அதை செய்பவர் கம்மாளர். இது "கர்மம்" என்னும் வடசொல்லின் விகாரம். *"கம்மப் பல்கலம்" என்றார் சீவக சிந்தாமணியாரும். இவர்கள் "தச்சர், தட்டார், கன்னார், கொல்லர், கண்ணாளர்" என ஐவகையாகப் பிரிவர். அவர்களுள் தச்சருக்கு அவரது "மரமிணைத்தல், சிற்பம்" முதலிய சாதித்தொழில்களை நோக்கியே அவருக்கும் சாதிப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"தபதியர் மரவினையர் தச்ச ராகும்."

தபதியர்:—தபதி=சிற்பம், அதனைச் செய்பவர் தபதியர்.
மரவினையர்:—மரவினை=மரத்தொழில், அதனைச்செய்பவர் மரவினையர்.
தச்சர்:—தச்சு=ஒன்றோடொன்று இணைத்தல், அதனை இணைப்பவர் தச்சர் எனவுங் கூறப்பட்டன. பிறவுமன்ன.

(5) தட்டாருக்கும் அவரது "பொன், தட்டுதல்" முதலிய சாதித் தொழிலைநோக்கியே அவருக்கும் குலப்பெயர்கள் ஏற்பட்டன. அஃது,

திவாகரம்.

"செங்கொல்லர் தட்டார் பொன்வினை செய்வோர்."

செங்கொல்லர்:—செங்கொல்=செம்பொன், அவ்வேலை செய்பவர்.
தட்டார்=தட்டுந்தொழிலர். இது சாதிப்பெய ராயினமையின் எதிர்மறைப் பொருளைக் கொள்ளாது, தட்டுந் தொழிலர் என உடன்பாட்டில் நின்றது.

* சீவகசிந்தாமணி, குணமாலையாரிலம்பகம், 141-வது செய்யுள்; மதுரைக் கலம்பகம், 23-வது செய்யுள்.

(6) கன்னருக்கும் அவரது "வெண்கலம், தராசு" முதலிய சாதிப்பொருள்களை நோக்கியே அவருக்கும் சாதிப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"கன்னுவர் கஞ்ச காரர் கன்னர்."

கஞ்சகாரர்:—கஞ்சம்=வெண்கலம், அவ்வேலை செய்பவர் கஞ்சகாரர்.

கன்னர்:—கன்னம்=தராசு, அதையுடையவர் கன்னர். பிறவுமன்ன.

(7) கைக்கோளருக்கும் அவரது நெசவுத்தொழிலை நோக்கியே அவருக்குஞ் சாதிப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"தந்து வாயர் காருகர் கைக்கோளர்."

தந்துவாயர்:—தந்து=நூல், அதனைக்கொண்டு நெய்பவர் தந்துவாயர்.

காருகர்:—காருகம்=நெசவு, அதனைச் செய்பவர் காருகர்.

கைக்கோளர்:—கையை ஆயுதமாகக் கொள்பவர் கைக்கோளர் எனவுங் கூறப்படுவன. பிறவுமன்ன.

(8) செக்காருக்கும் அவரது சாதிப்பொருள்களாகிய "செக்கு, எருது" முதலியவைகளை நோக்கியே அவருக்கும் சாதிப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"சக்கிரி நந்திகள் செக்கா ராகும்."

சக்கிரி:—சக்கரம்=செக்கு, அதனையுடையவர் சக்கிரி.

செக்கார்:—செக்கு எண்ணெய் பிழிபுங்கருவி, அதனையுடையவர்.

நந்திகள்:—நந்தி=எருது, அதனையுடையவர் நந்திகள். பிறவுமன்ன.

(9) வண்ணாருக்கும் அவரது "அழுக்குப்போக்கல், வெண்மை செய்தல்" முதலிய சாதிச் செய்கைகளை நோக்கியே அவருக்குஞ் சாதிப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"ஏகாலியர் தூசு ரீரங் கோலியர்.
காழியர் வண்ணா ராகக் கருதுவர்."

ஏகாலியர்:—ஏகாலி=சவுக்காரம், அதனைப்போட்டு அழுக்கெடுப்பவர்.
தூசர்:—தூசு=புழுதி, அதை நீக்குபவர் தூசர்.
காழியர்:—காழ்=குற்றம், அதைப் போக்குபவர் காழியர்.
வண்ணார்:—வெண்மை=வெள்ளை, அப்படி செய்பவர் வண்ணார் எனவுங் கூறப்படுவன. பிறவுமன்ன.

(10) பரதவருக்கும் அவரது குலதருமமாகிய "சமுத்திரம், வலை" ஆகிய குலப்பொருள்களை நோக்கியே அவருக்கும் குலப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"பரதவர் நுளையர் கடலர் வலையர்
சலவர் திமிலர் நெய்தனில மக்கள்."

பரதவர்:—பரதம்=கடல், அதில் வசிப்பவர் பரதவர்.
பரவர்:—பரவை=சமுத்திரம், அதில் வசிப்பவர் பரவர்.
கடலர்:—கடல்=சமுத்திரம், அதில் வசிப்பவர் கடலர்.
வலையர்:—வலை=மீன்கன்னி, அதனையுடையவர் வலையர்.
திமிலர்:—திமில்=மரக்கலம், அல்லது மீன், அதனையுடையவர் திமிலர். பிறவுமன்ன.

(11) வேளிருக்கும் அவரது இருப்பிடமாகிய பாலைநிலத்தை நோக்கியே அவருக்கும் குலப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"வேளிரும் புரோசருங் குறுநில வேந்தர்,
அரட்டருங் குறும்பரு மாகுமென்ப."

வேளிர்:—வேள்=மணல், அம்மணல் பூமியில் வசிப்பவர் வேளிர்.
புரோசர்:—புரோசம்=பாலைநிலம், அதில் வசிப்பவர் புரோசர்.
குறுநிலவேந்தர்:—குறும்புநிலம்=பாலைநிலம், வேந்தர்=அதற்குத் தலைவர்.

* "வேதம்" என்னும் பெயருக்கு அருகதையல்லாத நூற்களுக்கு உபசாரமாக "வேதம்" என்னும் பெயரைத்தந்து "ஆயுர்வேதம், தநுர் வேதம்" எனக் கூறுவதைப்போல்; வேந்தர் என்னும் பெயருக்கு அருகதையல்லாத வேடர் முதலியோர்களுக்கு உபசாரமாக "வேந்தன், மன்னன்" என்னும் பெயர்களைத் தந்து "குறுநில வேந்தர், குறுநில மன்னர்" எனக் கூறப்பட்டதென வறியவும்.

அரட்டர்:—அரட்டம்=பாலைநிலம், அதையுடையவர் அரட்டர்.
குறும்பர்:—குறும்பு=பாலைநிலம், அதில் வசிப்பவர் குறும்பர்.

(12) மறவருக்கும் அவரது குலத்தொழில்களாகிய "கொலை செய்தல், பறவைகளைப் பிடித்தல்" முதலியவைகளை நோக்கியே அவருக்கும் குலப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"மறவர் எயினர் பாலைநில் மக்கள்"

மறவர்:—மறம்=கொலை, அத்தொழிலை யுடையவர் மறவர்.
எயினர்:—எயினம்=வேடரூர், அதில் வசிப்பவர் எயினர்.

(13) குறவருக்கும் அவரது இருப்பிடமாகிய "மலை, வனம்" முதலியவைகளைநோக்கியே அவருக்கும்குலப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"குறவர் கானவர் குன்றவர் புனவர்
இறவுளர் குறிஞ்சிநில மக்கட் பெயரே"

குறவர்:—குறிஞ்சி=மலைச்சார்பு, அதில் வசிப்பவர் குறவர்.
கானவர்:—கானம்=வனம், அதில் வசிப்பவர் கானவர்.
குன்றவர்:—குன்று=மலை, அதில் வசிப்பவர் குன்றவர்.
புனவர்:—புனம்=காடு, அதில் வசிப்பவர் புனவர்.
இறவுளர்:—இறவுள்=குறிஞ்சி நிலம், அதில் வசிப்பவர் இறவுளர் எனவுங் கூறப்படுவன. பிறவுமன்ன.

(14) உப்பமைப்போருக்கும் அவரது குலப் பொருள்களாகிய "உப்பு, அளம்" இவைகளை முன்னிட்டே சாதிப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"உமண ரளவ ருப்பமைப் போரே"

உமணர்:—உமண்=உப்பு, அதை உண்டாக்குபவர் உமணர்.
அளவர்:—அளம்=உப்பளம், அதை யுடையவர் அளவர்.
உப்பர்:—உப்பு=லவணம், அதனை உண்டாக்குபவர் உப்பர் எனவுங் கூறப்படுவன. பிறவுமன்ன.

(15) ஊன் விலைஞருக்கும் அவரது தொழிற் பொருளாகிய ஊனை நோக்கியே அவருக்கும் குலப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"சூந ரூன் விலைஞர்"

சூனர்:—சூன்=மாமிசம், அதை விற்பவர் சூனர்.
ஊனர்:—ஊன்=மாமிசம், அதை விற்பவர் ஊனர். பிறவுமன்ன.

(16) புலைஞருக்கும் அவரது தொழிலின் பொருள்களை நோக்கியே அவர்களுக்கும் குலப்பெயர்கள் ஏற்பட்டன.

திவாகரம்.

"குணுங்கர் வங்கர் கவுண்டர் கநகத
ரிழிஞர் கொலைஞர் புலைஞ ரென்றுங்
கிசையும் பெயர்சண் டாளர்க் கெய்தும்."

குணுங்கர்:—குணுங்கு=பிசாசு, அதை ஆராதிப்பவர் குணுங்கர்.
கௌண்டர்:—குண்டர்=அடிமை, அதையுடையவர் கௌண்டர்.
கநகதர்:—கனகதம்=ஓர் தம்பட்டை, அதையடிப்பவர் கநகதர்.
இழிஞர்:—இழிவு=தாழ்வு, அதையுடையவர் இழிஞர்.
கொலைஞர்:—கொலை=இம்சித்தல், அதை செய்பவர் கொலைஞர்.
புலைஞர்:—புலை=ஊன், அதை யுண்பவர் புலைஞர்.
சண்டாளர்:—சண்டாளம்=துரோகம், அதையுடையவர் சண்டாளர்.

இன்னும் மற்ற சாதியார்களுக்கும் மேற்கூறியவைகளைப் போலவே "வசித்த இடத்தாலும், செய்யுந் தொழிலாலும், அடைந்த பொருளாலும்" சாதிப்பெயர்கள் ஏற்பட்டிருப்பனவே யன்றி, எதிர்மறையால் எவர்களுக்கும் சாதிப்பெயர்கள் ஏற்படவில்லை எனத் துணியப்படும். "நாடார்" என்பதும் சாதிப்பெயர் ஆயினமையின் "நெருங்கார்" என்னும் பொருளைக்கொண்டு எதிர்மறை இன்மைப்பொருளில் வழங்காது. "சாதி" என்பது தொழிலுடைமை நோக்கி ஏற்பட்டதாகலின் "நாடார்" என்னுஞ் சாதிப்பெயருக்கும் "நாட்டை யுடையவர்" எனவே உடைமைப் பொருளைக் கொள்ளல்வேண்டும்.

ஆகவே, நம்முன்னோர்கள் சில பொருள்களைக் குறிப்பித்து அப்பொருள்களுக்கு உயர்வு தாழ்வுகள் ஏற்படுத்தி, அப்பொருளை யுடைத்தா யிருப்பவர்களை, அப்பொருள் மருவிய பெயர்களையே அவர்களுக்குச் சாதிப்பெயர்களாகத் தந்து, வரம்பு ஏற்படுத்தினர். அவ்வரம்பை யனுசரித்தே ஒவ்வொரு சாதியும் நடந்து வந்தன,

வருகின்றன. இவைகளைப்போல் அரசர்களுக்கும் அவர்கள் பொருளாக அடைந்து வந்த நாட்டை முன்னிட்டே சாதிப்பெயர்கள் ஏற்பட்டன.

13. அரசர் பெயர்கள் நாடடியாகப் பிறந்தவை.

அரசர் பெயர்கள்.

அமரம்.

"மூர்தா பிஷிக்தோ ராஜன்யோ
பாகூஜ: க்ஷத்ரியோ விராட்"

சேந்தன் திவாகரம்.

"புரவலன் கொற்றவன் பெருமான் காவலன்
அரைய னேந்தல் கோவே குரிசில்
தலைவன் மன்னவன் வேந்தன் முதல்வன்
நிருபன் பூபால னரபதி பார்த்திவன்
இறைவ னண்ண லெனப்பதி னெட்டும்
அரசன் றொல்பெய ராகு மென்ப."

பிங்கலன் நிகண்டு.

"பார்த்திப ரிறைவர் காவலர் பதிகள்
கோக்கள் வேந்தர் கொற்றவர் புரவலர்
பொருநர் மன்னர் பூபாலர் நிருபர்
முதல்வ ரேந்தல் குரிசின் மகிபாலர்
தலைவ ரரசர் தம்பெய ராகும்."

சூடாமணி நிகண்டு.

"புரவலன் பெருமா னேந்தல் பூபாலன் வேந்தன் மன்னன்
நரபதி பொருநன் சக்கிரி நகைமுடி நிருப ளேடு
குரிசில் பார்த்திவனே கோவே கொற்றவ னிறைவ னண்ணல்
அரசன்பே ரிவையீ ரெட்டாந் தலைவன் காவலனு மாமே."

என்னும் நிகண்டுகளில் கூறிய "க்ஷத்திரியன், அண்ணல், அரசன், இராஜன், இறைவன், ஏந்தல், காவலன், குரிசில், கொற்றவன், கோன், சக்கிரி, தலைவன், நரபதி, நிருபன், பதி, பார்த்திவன், பாகூஜன், புரவலன், பூபாலன், பெருமான், பொருநன், மகி

பாலன், மன்னன், முதல்வன், விராட், வேந்தன்" முதலிய இருபத்தாறு பெயர்களும் அரசர்களுக்கு உரிய சாதிப் பெயர்களும், சிறப்புப் பெயர்களுமா இப்பெயர்கள்:—

இலக்கண விளக்கம், பொருளதிகாரம், அகத்திணையியல்,
222-வது சூத்திரம்.

"நிலப்பெயர் வினைப்பெயர் பண்புப் பெயரொடு
குலப்பெய ரியற்பெயர்* கூறுப வவர்க்கே"

என்னுஞ் சூத்திரத்தில் அரசர்களுக்கு உரியதெனக் கூறிய "நிலப்பெயர், தொழிற்பெயர், பண்புப்பெயர், குலப்பெயர், இயற்பெயர்" ஆகிய ஐந்து வகைப்பெயர்களில், மேற்கூறிய அரசர் பெயர்கள் "நிலப்பெயர், தொழிற்பெயர், பண்புப்பெயர்" ஆகிய மூன்று வகையால் ஏற்பட்ட சாதிப்பெயர்களை விளக்குவனவாம். திவாகர நிகண்டகராதிகள் கற்பிக்கும் அரசர்களுக்குரிய நாமரூபங்கள் ஒவ்வொன்றும் அவர்கள் பிரபாவத்தையும், குலத்தொழிலையும், நாடுடைமையையும் விளக்கி உண்மையைக் காட்டுவனவாம்.

க. பண்புப்பெயர்.†

அரசர்களுக்குப் பெருமையால்
ஏற்பட்ட பெயர்கள்.

1. அண்ணல்=பெருமை, அப்பெருமையை யுடைய அரசனை அண்ணல் எனத் தெரிவித்தது. "கோவேள் விடலை குரிசி றோன்றல்" என்னும் முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல், 20-வது சூத்திரத்தால் "அண்ணல், வந்தல், குரிசில், தோன்றல்" என்னும் பெயர்கள் ஆண்பால் விகுதிகளைப் பெறுமலே உயர்திணை ஆண்பாலைக் குறிக்கும் லகார வீற்றுப் பெயர்ச் சொற்கள் என விளங்கும். 'அல்' விகுதியையே அநுபவத்தில் கர்த்தாப் பொருளைக் காட்டுவதெனக் கொள்வதும் நேர்.

---

* குலப்பெயர் என்றால் சூரியகுலம், சந்திரகுலம் என்பனவும், குடிப்பெயர் என்றால் சேரன்குடி, சோழன்குடி, பாண்டியன்குடி என்பனவும்; இயற்பெயர் என்றால் குலசேகரன், சந்திரசேகரன் என்பனவுமாகிய பெயர்களை விளக்குவனவாம்.

† பண்புப்பெயர் என்பது அரசர்களுக்குப் பெருமையால் ஏற்பட்ட பெயர். அஃது அவர்களுக்கு சாதிப்பெயர்களாக நிற்கமாட்டாது.

2. குரிசில்=பெருமை, அதனையுடையவன் குரிசில். குரிசில் என்பதற்கு "வாலீப வயதுள்ள அரசன்" என்பர் தமிழ் இலக்கணத்தெளிவு நூலார்.

3. பெருமான்:—பெருமை=மாட்சிமை, அதனை யுடையவன் பெருமான். பெருமை—பகுதி, ஆன்—விகுதி, ஐகாரங் கெட்டு பெருமான் எனப் புணர்ந்தது.

4. விராட் என்னும் வடமொழி 'பிரபு' என்றும், "பிரான்" என்றும் தமிழில் சிதைந்து வரும். இந்த நான்கு பெயர்களும் அரசர்களுக்குப் பெருமையால் வந்த பெயர்களாம்.

உ. தொழிற் பெயர்.

அரசர்களுக்கு குலத்தொழிலால்
ஏற்பட்ட பெயர்கள்.

5. இறைவன்:—இறை=தீர்வை. அதனை வாங்குபவன் இறைவன். இப்பெயர் சிவபிரானையுங் குறிக்கின்றமையின், இறுத்தல் (=தங்குதல்) என்னும் அடியாகப் பிறந்ததாகக் கொண்டு "எப்பொருளினுந் தங்குகிறவன்" என்னும் பொருளை விரிப்பர் சிலப்பதிகாரத்துள் அடியார்க்கு நல்லார்.

6. ஏந்தல்:—ஏந்து=தாங்கு. பூமிபாரத்தைத் தாங்குதல், இது ஆகு பெயராய் அதைத்தாங்கும் அரசனுக்காயிற்று.

7. காவலன்:—காவல்+அன் எனப்பிரித்து, காக்கும் அதிகாரத்தையுடையவன் எனவும்; கா+வலன் எனப் பிரித்து காத்தலில் வல்லவன் எனவுங் கொள்ளலாம்.

8. கொற்றவன்:—கொற்றம்=அரசியல். அதனையுடையவன் கொற்றவன். கொல்லுதல் எனவும் பொருள் கொள்ளும். "கொற்றமே வன்மை வெற்றி கோவரசியன் முப்பேரே" என்னும் நிகண்டால் அதன் காரியமாகிய ஜெயத்தையுணர்த்தியது. கொல் - பகுதி, அம் - தொழிற்பெயர் விகுதி, ற்-சாரியை, பகுதி லகரம் றகரமானதும், றகர மெய்யின்மேல் விகுதி அகர உயிரேறினதுஞ் சந்தி. ஜெயம் என்பது பொருள்

9. சக்கிரி:—சக்கரம்=ஆணைச்சக்கரம். அதனையுடையவன் சக்கிரி.

10. தலைவன்:—தலைமை=அதிகாரம். அதனையுடையவன் தலைவன்.

11. நரபதி:—நரர்=மானிடர், பதி=தலைமை. மானிடர்களுக்குத் தலைமை பூண்டவன் நரபதி.

12. நிருபன்:—நிருபம்=கட்டளை, அதனை யுடையவன் நிருபன்.

13. பாகுஜன் என்றால் தோளில் உதித்தவன், அல்லது அதன் பலத்தால் ஆள்பவன் என்பது பொருள். இது "வாகு சன்" எனத் தமிழில் சிதைந்துவரும்.

14. பொருநன்:—போர் = யுத்தம். அதனை யுடையவன் பொருநன். அவனுவான் அரசன். 'பொரும் போர்த் தலைவர் பொருநரெனப் படுப' என்னுந் திவாகரச் சூத்திரத்தால் போரில் வல்லவன் எனப்படுவன். யுத்த: என்னும் வடமொழி போர் என்று தமிழில் சிதைந்து வந்தது. "பறத்தற் றொழிலாற் பறவை எனப்படும்" என அகத்தியநூலார் கூறியிருத்தலைப் போல், அரசர் பொருதற் றொழிலால் பொருநர் எனப்பட்டனர். பொரு—பகுதி, ந்-பெயரிடைநிலை, அன்-ஆண்பால் விகுதியாம்.

15. மன்னன்:—நிலைபெறுதலைச் செய்பவன். மன்=பெருமை, அதனை யுடையவன் மன்னன். எனினும் பொருந்தும். மன்னவன் என இடையில் வகரந்தோன்றியும் அரசனை விளக்கும்.

16. முதல்வன்:—முதன்மை=அதிகாரம், அதனை யுடையவன் முதல்வன்.

17. வேந்தன்:—வேந்து=இறை, அதனை வாங்குபவன் வேந்தன். வேந்தன் தன்மை வேந்து எனப்படும். இந்தப் பதின் மூன்று பெயர்களும் அரசர்களுக்குக் குலத்தொழில்களால் வந்த பெயர்களாம்.

௩. இடப்பெயர்.

அரசர்களுக்கு நாடுடைமையால்
ஏற்பட்ட பெயர்கள்.

18. க்ஷத்திரியன்:—வடமொழியில் அரசகுலத்தவர்களுக்கு "க்ஷத்திரியன்" என்று பெயர். இதற்கு மூலபதம் "க்ஷேத்திரம்" எனப்படும். க்ஷேத்திரம் என்னும் வடமொழி பதத்திற்கு "நாடு, பூமி" என்பன பொருள்கள். "குருக்ஷேத்திரம்"

என்பதற்கு "குருநாடு" எனவும், "க்ஷேத்திரக்கணிதம்" என்பதற்கு "பூமிக்கணிதம்" எனவும் பொருள்களாம். ஆகவே, "க்ஷத்திரியன்" என்னும் பெயர் "க்ஷேத்திரம்" என்னும் மூலபதத்தினின்று உற்பத்தியானபடியால் "க்ஷேத்திரத்தையுடையவன், பூமியையுடையவன்" எனப் பொருள்கள்கொள்ளும். க்ஷேத்திரம்=பூமி, நாடு. அதனை யுடையவன் க்ஷத்திரியன். "க்ஷதாத்=ஆபத்தினின்று, திரியா=நீக்குபவன். அல்லது இரட்சிப்பவன். பிரஜைகளை ஆபத்தினின்று காப்பவன்" எனவும் பொருள் கொள்ளலாம். அரசர் மனவன்மங் கொண்டு, பகையை சாதித்தலின், வீரம் வல்லமை என்னும் பொருள்களைத் தரும் "க்ஷாத்திரம்" என்னும் மூலபதத்தினின்று பிறந்ததாகவுங் கூறலாம்.

19. அரசன்:—அரசு=நாடு, இராச்சியம். அதனையுடையவன் அரசன்.
20. இராஜன்:—இராச்சியம்=அரசாளும் இடம், அதனையுடையவன் இராஜன்.
21. கோன்:—கோ=பூமி. அதனையுடையவன் கோன்.
22. பதி:—பதி=இடம், ஊர். அதனையுடையவன் பதி.
23. பார்த்திவன்:—பார்த்திவம்=பூமி, தேசம். அதனையுடையவன் பார்த்திவன்.
24. புரவலன்:—புரம்=இராஜதானி, ஊர், நகரம். அதனையுடையவன் புரவலன்.
25. பூபாலன்:—பூ=பூமி, தேசம், அதனையுடையவன் பூபாலன்.
26. மகிபாலன்:—மகி=பூமி, அதனையுடையவன் மகிபாலன். பிறவுமன்ன.

மேற்கூறிய "க்ஷத்திரியன்" முதல் "மகிபாலன்" வரைக்கும் ஏற்படும் ஒன்பது பெயர்களும் அரசர்களுக்கு நாடுடைமையால் வந்த பரியாயப் பெயர்களாம். "கருதியது கிளவா தப்பொருடோன்றப், பிறிதொன்று கிளப்பது பரியா யம்மே." என தண்டியலங்கார நூலாசிரியர் பரியாய மென்றால் ஒரு சொல்லின் பொருள் தோன்ற இன்னொரு சொல்லால் கூறுவது என்பார். இப் பரியாயப் பெயர்கள் நாட்டுப் பெயர்களுடன் "அன் ஆ னிறுமொழி யாண்பாற் படர்க்கை" என்னும் நன்னூற் சூத்திரத்துள் வரும் "அன் ஆன்" என்னும் ஆண்பால் விகுதிகளுஞ் சேர்ந்து பகுதி

விகுதிகளாகிய இரண்டும் ஒன்றாய் ஒலித்து அரசரைக் குறித்தன. இவைகளைப்போல் "நாடன், நாடான்" என்னும் பெயர்களும், ஒரு பொருட் கொண்டதும், நாடடியாகப் பிறந்து அரசர்களைக் குறிக்கும் பெயர்களுமாம்.

14. நாடார் என்பதும் நாடடியாகப் பிறந்தது.

1. **நாடன்** என்பது "நாடான்" என்பதின் குறுக்கல் விகாரம். **"நாடு=நாட்டை, அன்=உடையவன்"** எனப் பொருள் கொள்ளும். ஆகவே, நாடு என்பது ஆண்பாலை விளக்கிக் காட்டுகின்ற 'அன்' விகுதியைப் புணர்ந்து, நாட்டை யுடையவனை **"நாடன்"** என்றாக்கி, **அரசனை** விளக்கினது. இந்நாடன் என்பது **நாட** என விளித்தும் நிற்கும். "அண்மைக் கிளவிக் ககர மாகும்"* என்னும் இலக்கணவிளக்கச் சூத்திரத்தால் 'அண்மைவிளி' எனப் படும். அண்மை=சமீபம். அது நாட்டையுடையவனே! அரசனே! என்று பொருள் கொள்ளும். அன்றியும் "கானக **நாடனை** நீயோ"†என்னும் புறநானூற்றின் பகுதியில் வெளிப்படும் **நாடனை** என்பது முன்னிலை ஒருமைப் பொருளை விளக்கும். அது 'நாடு+அன்+ஐ' எனப் பிரிந்துப் புணரும். ஐகாரம் முன்னிலையை விளக்கும். நாட்டையுடையாய்! என்னும் பொருளைக் கொள்ளும். இந்த **நாடன் நாடான்** என்னும் பெயர்களில் **நாடன்** என்பது நூல் வழக்கிலும், **நாடான்** என்பது உலக வழக்கிலும் மிகுத்து வரும். 'பாலறி மரபி னம்மூவீற்றும், மாவோ வாகுஞ் செய்யு ளுள்ளே'§ என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் நூல் வழக்கில் ஆகாரம்

* இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், பெயரியல், 57-வது சூத்திரம். முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல், 111-வது சூத்திரம்.

† எட்டுத்தொகையு ளொன்றாகிய புறநானூறு, 5-வது அகவல்.

§ தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், 14-வது சூத்திரம், பெயரியல், 41-வது சூத்திரம்; நன்னூல், பொதுவியல், 2-வது சூத்திரம்; முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல், 47-வது சூத்திரம்.

ஓகாரம் ஆகும் என்பதால், ஆகாரம் ஈற்றிலுடைய சொற்கள் உலக வழக்கில் வழங்கி வரும் எனத் தாமே விளங்கும். இதனுலே நாடன் என்பது நூல் வழக்கில் மிகுத்தும் வழங்கி வருகின்றது. அப்படி வழங்கி வரினும் இரண்டுக்கும் பொருள் ஒன்றெனமுடியும்.

2. நாடன்மார் என்பது நாடு+அன்+மார் எனப்பிரிந்து புணரும். நாடன் என்னும் ஒருமைப் பெயரோடு, மார் என்னும் பலர்பால் விகுதி சேர்ந்து, உயர்வை விளக்கினது. இந்த நாடன்மார் என்கிற பல்லோர் படர்க்கைப் பெயர் *"ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ வீற்றயல்" என்னும் நன்னூல் சூத்திர விதியால் ஈற்றயல் ஆகாரம் ஈகார மாகத்திரிந்து "நாடன்மீர்" எனவும் நின்று விளியை விளக்கும். நாட்டையுடையீர் என்பதுபொருள்.

3. நாடவர் என்றது "நாடு+அ+வ்+அர்" எனப் பிரிந்து, அகரச்சாரியையும், †வகரவுடன்படு மெய்யையும் ஏற்று நாடவர் எனப் புணர்ந்து, நாட்டையுடைய அரசரை விளக்கும். ¶திருவிளையாடற் புராணம், தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம், 87-வது செய்யுள்:-"ஐய யாவையு மறிதியே கொலோ, வைகை நாடவன் மனக் கருத் துணர்ந், துய்ய வோர்கவி யுரைத்தெனக் கருள், செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினுன்" என்றும்; பாண்டியன் சுரந்தீர்த்த படலம், 66-வது செய்யுள்:— "ஐய விச்சுர மாற்றரி தாற்றரி தென்னு, வைகை நாடவன் வல்லமண் மாசுதீர்த் தடியே, னுய்ய வேண்டுமே லதனையு மடிகளே யொழித்தல், செய்ய வேண்டுமென் றிரந்தனன் சிரபுரக் கோனை" என்றுங் கூறிய செய்யுள்களில் வரும் 'நாடவன்' என்பது அரசனை அல்லது நாட்டையுடையவனை விளக்கினமை காண்க.

4. நாடான்:—"நாடு=நாட்டை, ஆன்=உடையவன்" அதாவது "நாட்டையுடையவன்" எனப் பொருள் கொள்ளும். ஆகவே, "நாடு" என்னும் இடுகுறிப் பொதுப்பெயரின்

* நன்னூல், பெயரியல், 52-வது சூத்திரம்.

† நன்னூல், உயிரீற்றுப் புணரியல்,21 -வது சூத்திரம்.

¶ திருவிளையாடற்புராணம், இசைவாதுவென்ற படலம், 19-வது கவி.

இறுதி உகரங்கெட்டு, 'ஆன்' என்னும் உயர்திணை ஆண் பால் படர்க்கை ஒருமை விகுதி புணர்ந்து, நாட்டை யுடையவனை "நாடான்" என்றாக்கி, அரசனை விளக்கி னது. இந்த நாடான் என்பது நாடா என விளித்தும் நிற்கும். 'னரலள வென்னு மந்நான் கென்ப, புள்ளி யிறுதி விளிகொள் பெயரே'* என்னுந் தொல்காப்பியத்தில் 'னகர ரகர' வீற்றுப் பெயர்களே விளியை யேற்கு மென்பதால், நாடான் என்பதும் னகர ரகர வீற்றுப் பெயராயினமையின் விளியை யேற்றது. அதுவும் "ஆனெ னிறுதி யியற்கை யாகும்"† என்னுந் தொல் காப்பியச் சூத்திரத்தால் இயற்கையாக விளிக்கும். "அண்மைச் சொல்லிற் ககர மாகும்"§ என்னுந் தொல் காப்பியச் சூத்திரத்தில் அகர விகுதியைப் பெற்றவை சமீபத்தி லுள்ளதை விளக்குமென்பதால், ஆகார விகுதி யைப் பெற்றவை தூரத்தி லுள்ளதை விளக்குமெனத் தாமே விளங்கும். அதனால் நாடா என்பது ஈறுகெட்ட சேய்மை விளிப்பெயராகும். நாடானே! அரசனே! நாட்டை யுடையவனே! என்று பொருள்.

5. **நாடான்மார்** என்பது நாடு + ஆன் + மார் = நாடான்மார் எனப் பிரிந்துப் புணரும். இம்மொழியின் ஈற்றிலுள்ள மார் என்பது பலர்பால் விகுதியாயினும், அது 'ஆன்' என் னும் ஆண்பால் விகுதியைச் சேர்ந்து வருகின்றமையின், உயர்வினால் ஒருமைப்பெயர் பன்மை விகுதியைப் பெற்ற தெனப்படும். இது உயர்வு சிறப்பு.

6. **நாடான்மார்கள்** என்னும் பெயர் நாடான் என்னும் ஒரு மைப் பெயரோடு, மார் கள் என்னும் பலர்பால் விகுதி கள் சேரவின் உயர்வு சிறப்பெனப்படும்.

7. **நாடார்:—நாடு = ஊர்** (திவாகர நிகண்டகராதிகள்) "The country, as distinguished from the town, or metropolis; 2. a kingdom, a province, a district"

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், விளிமரபு. 11-வது சூத்திரம்.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், விளிமரபு, 15-வது சூத்திரம்; முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல், 112-வது சூத்திரம்.

§ தொல்காப்பியம், சொல்லதிகாரம், விளிமரபு, 14-வது சூத்திரம்.

(Rottler's Tamil and English Dictionary;) "1. country, kingdom, state, realm, இராச்சியம்; 2. ruarl or agricultvral country as distinguished from city, மருதநிலம்; 3. populated country, or district, தேசம், 4. earth, land, பூமி; 5. The world, உலகம்" (Winslow's Tamil and English Dictionary.) "Nadu, commonly, Nad, corruptly, Naad, Naud. Karnata, Telugu, నాడు a province, a district, a division of a country, a country, a kingdom. The word occurs also in Tamil and Malayalam, written: with the ceberal t, though pronounced vernacularly Nad. and Nadu: in their derivatives." (H. H. Wilson's glossary of Judicial and Revenue Terms, p. 361;) "Nadu=a division of a district" (Vide, Nilagiri district Manual, ch. 1, p. 1, in footnote;) அதனையுடையவர் 'நாடார்' எனப் படுவர். ஆதலால் 'நாடு' என்பது பலர்பாலை விளக்கிக் காட்டுகின்ற 'ஆர்' விகுதியைப் புணர்ந்து, நாட்டையுடையவரை "நாடார்" என்றாக்கி அரசரை விளக்கினது. இது 'நாடு-நாட்டை, ஆர்-பொருந்தியவர் அல்லது உடையவர்' எனப்படும். அஃறிணைப் பெயர்களோடு ஆண்பால், பலர்பால் விகுதிகள் சேரின் அப்பெயர்ப் பொருளை உடையவரை விளக்கலால், "ஆர்" என்னும் பலர்பால் விகுதியும் "உடையவர்" எனப் பொருள் கொண்டது. அதாவது "நாடார்" என்பது "நாட்டையுடையவர்" எனப் பொருள் கொள்ளும். நாட்டையுடையவர், அரசர் என்பது பொருட் குறிப்பால் விளங்கும். அதனால் "நாடார் அரசர்" எனப்படுவர்.

8. நாடார்மார்:—"நாடு+ஆர்+மார்" நாடார்மார் எனப் பிரிந்து புணரும். இம்மொழியின் ஈற்றிலுள்ள 'ஆர், மார்' என்பன 'ரஃகா னொற்றும் பகர விறுதியு, மாரைக் கிளவி யுளப்பட மூன்று, நேரத் தோன்றும் பலரறி சொல்லே'*

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், 7-வது சூத்திரம், முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல், 23-வது சூத்திரம்.

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் பலர்பால் விகுதிகளாகும். ஆர் என்னும் பலர்பால் விகுதியின்மேல்* மார் என்னும் பலர்பால் விகுதியையும் ஏற்று **நாடார்மார்** என நின்று, **நாட்டையுடையவர்** என்னும் பொருளைக் கொண்ட விகுதிமேல் விகுதி யீற்றுப் பெயர்.

9. **நாடார்மார்கள்:—நாடு + ஆர் + மார் + கள் = நாடார்மார்கள்** எனப் பிரிந்து புணரும். †"ஆர், மார், கள்" என்பன பலர்பால் விகுதிகள். உயர்வினால் பன்மைப்பால் பல பன்மை விகுதிகளைப் பெற்று வருதலும் உண்டு. இது **"நாட்டை யுடையவர்கள்"** என்னும் பொருளைக் கொண்ட விகுதிமேல் விகுதியீற்றுப் பெயர். விகுதிகளை ஒன்றன்மேல் ஒன்றாய் அடுக்கி வரினும் வழக்கெனக் கொள்வர் இலக்கண நூலுடையார்.

10. **நாடார்கள்:—"நாடு + ஆர் + கள்"** எனப் பிரிந்து "பலர்பால் ரவ்வுங் கள்ளு மீறுமே"‡ என்னுந் தொன்னூல் விளக்கச் சூத்திரத்தால் 'ஆர்' என்னும் விகுதிக்குமேல் 'கள்' என்னும் விகுதியும் பெற்று, **"நாடார்கள்"** என நின்று **"நாட்டை யுடையவர்கள்"** என்னும் பொருளைக் கொண்ட விகுதிமேல் விகுதி யீற்றுப்பெயர்.

11. **நாடார்கள்மார்:—"நாடு + ஆர் + கள் + மார் = நாடார்கள்மார்"** எனப் பிரிந்தும் புணரும். இம்மொழியின் ஈற்றிலுள்ள 'மார்' என்பது "மாரைக் கிளவியு மவற்றோ ரற்றே"§

---

* "In modern Tamil, 'Mar' is suffixed to nouns signifying parents, priests, kings &c; as a plural of honour, but it may be suffixed, if necessary, to any class of nouns denoting rational beings" Vide, A Comparative Grammar of the Dravidian languages, p. 240.

† ஞானமணி இலக்கண சிந்தாமணி, பதவியல், 37-வது சூத்திரம்.

‡ தொன்னூல் விளக்கம், சொல்லதிகாரம், வேற்றுமையியல், பெயர். 27-வது சூத்திரம், நன்னூல், பெயரியல், 21-வது சூத்திரம்.

§ முத்துவீரியம், சொல்லதிகாரம், வினையியல், 12-வது சூத்திரம், 'பலர்பால் பெயர்கள் ரகரவொற்றையும், கள், ர்கள், மார், மார்கள், என்ற ஈறுகளையுமுடையதாம்' என்பர் தமிழ் இலக்கணத்தெளிவு நூலார் (76-வது சூத்திரம்.)

என்னும் முத்துவீரியச் சூத்திரத்தால் பலர்பால் விகுதிகளில் ஒன்றெனக் கொள்ளப்படும். இப்பலர்பால் விகுதிகளாகிய "ஆர், கள், மார்" என்பன "நாடு" என்னும் பெயருடன், விகுதிமேல் விகுதியாகப் புணர்ந்து "நாடார்கள்மார்" எனநின்று, "நாட்டையுடையவர்கள்" என்னும் பொருளைக்கொண்ட விகுதிமேல் விகுதியீற்றுப் பெயர்.

12. நாடாக்கள்:—"நாடு" என்னும் சொல்லடியாக "நாடாக்கள்" என்பது தோன்றி, நாட்டையுடையவரைத் தெரிவிக்கும். "நாடு+ஆக்கம்+கள்" எனப் பிரிந்துப் புணரும். "நாடு=நாட்டை, *ஆக்கம்=பொருளாக அல்லது செல்வமாக, கள்=பெற்றவர்கள்"எனப்படும், "நாடு+ஆக்கம்= நாடாக்கம்" எனப் புணர்ந்து, "ஒருமொழி மூவழிக் குறைதலும் வரையார்"† என்னும் முத்து வீரியச் சூத்திரத்தால், ஈற் றம்முச் சாரியைக் கெட்டு; 'கள்' விகுதியைப் பெற்று, "நாடாக்கள்" என நின்றது. ஆகவே, "நாடாக்கள்" என்பது "நாட்டைச் செல்வமாகப் பெற்றவர்கள்" அதாவது "நாட்டை யுடையவர்கள்" அல்லது "அரசர்கள்" எனப் பொருள் கொள்ளும்.

13. நாடாக்கள்மார்:—"நாடு + ஆக்கம் +கள்+மார் = நாடாக்கள்மார்" எனப் பிரிந்துப் புணரும். இம்மொழியின் ஈற்றிலுள்ள 'மார்' என்பது "மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை"§ என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் பலர்பால் விகுதியாம். 'கள்' என்னும் பலர்பால் விகுதியின்மேல், 'மார்' என்னும் பலர்பால் விகுதியு மேற்று, விகுதிக்குமேல் விகுதியாகி "நாடாக்கள்மார்" என நின்று, "நாட்டை யாக்கமாகப் பெற்றவர்கள்" அல்லது "நாட்டை யுடையவர்கள்" என்னும் பொருள்களைக் கொண்ட விகுதிமேல் விகுதியீற்றுப் பெயர்.

---

* ஆக்கம்—செல்வம்(சதுரகராதி) 'ஆக்கஞ் செல்வமுந் திருமகளுமாகும்'. (பிங்கல நிகண்டு) 'ஆக்கம் பூமகள் செல்வப் பெயர்' சூடாமணி நிகண்டு.

† முத்து வீரியம், சொல்லதிகாரம், ஒழிபியல், 118-வது சூத்திரம்.

§ தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், 10-வது சூத்திரம்

14. நாடாக்கமார்:—"நாடாக்கள்மார்" என்பதே ளகரங்கெட்டு, இடைக்குறையாகி "நாடாக்கமார்" என நின்றது. அல்லது "நாடு+ஆக்கம்+ஆர்=நாடாக்கமார்" எனப்புணருமெனக் கூறினும் பொருந்தும். அப்பொழுது நிலைமொழியீற்றுகரங்கெட்டு, வருமொழி ஆகார உயிரேறி 'நாடாக்கம்' என நின்று, ஈற்று மகர மெய்யின்மேல் ஆகார உயிரேறி "நாடாக்கமார்" எனப் புணரும். "நாடாக்கமார்" என்பதற்கு 'நாட்டைச் செல்வமாக வுடையவர்' அல்லது "அரசர்" எனப் பொருள் கொள்ளும்.

15. நாடாவி:—"நாடு=நாட்டிற்கு, அவி=தலைவன்" அதாவது "நாட்டிற்குத் தலைவன்" அல்லது "நாட்டிற்கு அரசன்" என்று பொருள் கொள்ளும். 'நாடு+அவி' என்பது "உஊ விறுதி முன் அஆ வரினே, யிருமையுங் கெடவா வேற்கு மென்ப" என்னும் முத்துவீரியச் சூத்திரத்தால் நிலைமொழியின் ஈற்றுகரத்தின் முன் அகர உயிர் வந்தமையின் இரண்டுங் கெட்டு, ஆகாரம் பெற்று, நாடாவி என நீண்டொலித்தது. நாடாவி என்பது "நரபதி, கிராமணி, பதி, சக்கிரி, செட்டி" என்னும் ஆண்பால் பெயர்களைப்போல், இகர விகுதியைப்பெற்ற ஆண்பால் பெயராகும்.

16. நாடாளர்:—"நாடு+ஆளர்=நாடாளர்" எனப் பிரிந்து புணரும். "நாடு=நாட்டை, ஆளர்=ஆளுபவர்" எனப் பொருள் கொள்ளும். அதாவது நாட்டை யாளுபவரை விளக்கும். "ஆளுவார்" என்பதின் குறுக்கல் விகாரமே 'ஆளர்' எனப்படும். "குறைந்தன வாயினு நிறைந்தன வாகும்" என்னும் முத்துவீரியச் சூத்திரத்தால் அது இடைக் குறையைப் பெறினும் நிறைந்த பொருளையே தரும் என்பர் இலக்கண நூலார். அதனால் "நாடாள்வார்" என்பது விளக்கம். "நாட்டை யாளுதலை யுடையவர்" என்பது பொருள்.

17. நாடாள்வார்:—"நாடு=ஊர்" அதனை ஆளுபவர் "நாடாள்வார்" எனப்படும். அதாவது "நாட்டை யாளுபவர், ஊராளுந் தன்மையர்" அல்லது அரசர் எனப் பொருள் கொள்ளும்.

18. நாடாத்தி:—சாதியை ஒட்டி வந்த பெயர்களில் ஆண்பாலில் 'ஆன்' என்று முடிகின்றவை, பெண்பாலில் "ஆத்தி"* என்று முடியும். அது "பார்ப்பான் பார்ப்பாத்தி, இராஜா இராஜாத்தி, தட்டான் தட்டாத்தி, கண்ணன் கண்ணாத்தி, கரையான் கரையாத்தி, வண்ணான் வண்ணாத்தி" என்பனபோல், நாடான் என்னும் ஆண்பால் பெயரின் ஈற்று ஆன் கெட்டு, ஆத்தி என்னும் பெண்பால் விகுதியைப் பெற்று, நாடாத்தி† எனவாகி, நாட்டை யுடையவள் அல்லது அரசி என்னும் பொருளைப் பயக்கும்.

19. நாடாச்சி:—மேற்கூறியவாறு ஆண்பாலில் "ஆன்" விகுதியைப்பெற்ற சாதிப்பெயர்கள் பெண்பாலில் "ஆத்தி" என முடிவதோடு, சில சமயம் "அன்" விகுதிக்குரிய "ச்சி" என்னும் பெண்பால் விகுதியையும் பெறும். "குறும்பன் குறும்பச்சி, கணக்கன் கணக்கச்சி, இடையன் இடைச்சி, வன்னியன் வன்னிச்சி, சேணியன் சேணிச்சி" என்பனபோல், நாடான் என்னும் ஆண்பால் பெயரின் ஈற்று ஆன்கெட்டு, ஆச்சி என்னும் பெண்பால் விகுதியையும் பெற்று, நாடாச்சி எனவாகி நாட்டையுடையவள் அல்லது அரசி என்னும் பொருளைப் பயக்கும்.

20. நாடாச்சிமார் என்னும் பெயரின் ஈற்றில் வரும் மார் என்பது பன்மை விகுதியாயினும், உயர்வை விளக்கலால், இங்கு உயர்வு சிறப்பு எனப்படும். நாட்டையுடையவள் அல்லது அரசி எனப் பொருள் கொள்ளும்.

ஆகவே, நாடார், முதல் நாடாச்சி ஈறாக வுடைய பெயர்கள், மேற்கூறிய நாடுடன் சம்பந்தப்பட்ட பெயர்களாகிய க்ஷத்திரியன் முதல் மகிபாலன் ஈறாகக் கூறிய அரசர் பெயர்களோடு ஒத்திருத்தலால், இந்த நாடார் முதலிய பெயர்களும் அரசர்களுக்குரிய பெயர்கள் எனவும், அரசர் என்னும் பொருளில் நிற்கும் எனவுந் துணிந்து கூறப்படும்.

* இரண்டாம் இலக்கணம், பெயர்ச்சொல், 25-வது சூத்திரம்;

† இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், பெயரியல், 20-வது சூத்திரம்.

15. நாடு ஆளல் அரசர்க் குடைமை.

பிரகஸ்பதி ஸ்மிருதி.

ఇజ్యాధ్యయనదానేచ ప్రజానాం పరిపాలనం ।
శస్త్రాస్త్రధారణంసేవా కర్మాణి క్షత్రియస్యతు ॥

"இஜ்யாத் யயநதா நேசா ப்ரஜாநாம் பரிபாலனம்
சஸ்த்ராஸ்த்ர தாரணம் சேவா கர்மாணி க்ஷத்ரியஸ்யது."

(இ-ள்.) "க்ஷத்திரியர் வேதம் ஓதல், யாகஞ் செய்தல், தாநங் கொடுத்தல், உலகோம்பல், போர்செய்தல், வாள் வேல் வில் வித்தைகளைப் பயிற்றல் முதலிய அறு தொழில்களைப் பெறுவர்" என்பதாம்.

மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம்,
79-வது சுலோகம்.

𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌭𑍃𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 க்ஷ𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌣𑌿𑌕𑍍𑌪𑌶𑍁𑌕𑍃𑌷𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑌃 ।
ஆஜீவ𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌤𑍁 𑌦𑌾𑌨𑌮𑌧𑍍𑌯𑌯𑌨𑌂 𑌯𑌜𑌿𑌃 ॥

ஸஸ்த்ராஸ்த்ர ப்ருத்க்வம் க்ஷத்ரஸ்ய வணிக்பஸு க்ருஷிர்விஸ,
ஆஜீவ நார்தம் தர்மஸ்து தாநமத் யயநம் ய்ஜி:

(இ-ள்.) "க்ஷத்திரியனுக்கு வாள் பாணம் முதலிய ஆயுதந் தரித்து உலகாள்வதும், வைசியனுக்கு வர்த்தகம் பசுக்காவல் பயிர் செய்தலும் ஜீவனோபாயமாம்; யாகஞ் செய்தல் தாநங் கொடுத்தல் வேதமோதல் இவை தர்மோபாயமாம்" என்பதாம்.

பராசர ஸ்மிருதி,
ஆசாரகாண்டம், 1-வது அத்தியாயம்,
61-வது சுலோகம்.

క్షత్రియోహి ప్రజారంజన్ శస్త్రపాణిః ప్రదండవాన్ ।
నిర్జిత్య పరసైన్యాని క్షితిం ధర్మేణ పాలయేత్ ॥

க்ஷத்ரியோஹி ப்ராஜாரஞ்சன் சஸ்த்ரபாணி ப்ரதண்டவான்
நிர்ஜித்ய பரசைந்யாநி க்ஷிதிம் தர்மேண பாலயெத்

(இ-ள்.) "க்ஷத்திரியன் ஆயுதங்களைக் கையில் ஏந்தித் துஷ்டரைச் சிக்ஷித்து, சத்துருக்களை ஜெயித்து, பிரஜைகளை தன்னிடத்தில் அன்புள்ளவராகச் செய்து, பூமியைத் தர்மத்தால் பரிபாலனஞ் செய்யக் கடவன்" என்பதாம்.

பகவத்கீதை, 18-வது அத்தியாயம்,

43-வது சுலோகம்.

𑌶𑍌𑌰𑍍𑌯𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌧𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌚𑌾𑌪𑍍𑌯𑌪𑌲𑌾𑌯𑌨𑌮𑍍 ।
𑌦𑌾𑌨𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ॥

ஶௌர்யந்தே ஜோத்ரு திர்தாக்ஷயம் யுத்தேசாப்ய பலாயநம்
தாநமீஸ்வர பாவஸ்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபா வஜம்.

(இ-ள்.) "க்ஷத்திரியருக்கு வீரத்தன்மையும், கீர்த்தியும், தைரியமும், சாமர்த்தியமும், யுத்தத்தில் புறங்கொடாமையும், கொடையும், உலகாளுஞ் சக்தியும் சுவபாவத்தினுலுண்டான கருமங்களா யிருக்கின்றன" என்பதாம்.

ஞானப்பிரகாச சுவாமிகள்

சாதி நூல்.

"உரைசெய்மா மறைக ளோத லுத்தம வேள்வி காத்தல்
வரையறக் கொடுத்தல் தங்கள் மரபியல் வழாது செய்தல்
தரைதனை முறையிற் காத்தல் சதுர்வேதந் தனை யியற்றல்
அரசர்தங் குலத்துக் கேற்ற வறுதொழி லாகு மன்றே."

(இ-ள்.) "மறைக ளோதலும், வேள்வி யியற்றலும், தானங் கொடுத்தலும், போர்செய்தலும், உலகாளலும், படைபயிற்றலும் ஆகிய அறுதொழில்களும் அரச குலத்தவருக்கு உரியனவாம்" என்பதாம்.

சேந்தன் திவாகரம்.

12-வது பல்பொருட் கூட்டத் தொருபெயர்த் தொகுதி.

"அரச ரறுதொழி லோதல் வேட்டல்
புரைதீரப் பெரும்பார்ப் புரத்த லீதல்
கரையறு படைக்கலங் கற்றல் விசயம்"

பிங்கல நிகண்டு,

ஐந்தாவது, ஆடவர் வகை,

767-வது சூத்திரம்.

"ஓதல் பொருதல் உலகு புரத்தல்
ஈதல் வேட்டல் படைபயிற லறுதொழில்"

சூடாமணி நிகண்டு,
12-வது பல்பெயர்க் கூட்டத் தொருபெயர்த் தொகுதி,
52-வது செய்யுள்.

"ஓதலே வேட்ட லீத லுலகோம்பல் படை பயிற்றல்
மேதகு போர்செய் தீட்டல் வேந்தர்செய் தொழில்க ளாறே."

"ஓதல், பொருதல், வேட்டல், உலகு புரத்தல்
ஈதல், படைபயிற்றல்" (சதுரகராதி, பேரகராதி)*

"அரசன் தன்னிஷ்டப்படி பிராமணனுக்குத் தானங் கொடுக்கவும், யாகங்கள் செய்யவும், வேதசாஸ்திரங்களை யோதவும் அதிகாரமுள்ளவனுயிருக்கிறுன். அவனுக்கு ஆயுதமெடுத்துச் சேவிப்பதும், பூமியைக் காப்பதும் ஜீவனம்"† என விஷ்ணு புராணமுங் கூறுகின்றது.

"The Occupations of kings are six, namely; 1. ஓதல்-Reading and learning the Vadas; 2 வேட்டல்-Offering Sacrifices; 3. ஈதல்-Distributing alms; 4. உலகோம்பல்-Preserving the world; 5. படைக்கலம் பயிற்றல்-Practising the use of arms; 6. பொருதல்-Making war" (Rottler's and Winslow's Tamil and English Dictionaries.)

"The man of the warrior tribe (Kshatriya) should cheer-fully give presents to the Brahmans, perform various Sacrifices, and study the Scriptures. His especial sources of maintenance are arms, and the protection of the earth." A Mission to the Mysore by William Arthur. A. M. Ch. VIII, p 323.

"பிராமணனுக்குத் தானங் கொடுத்தலும், யாகங்கள் செய்தலும், வேதாதி கலைகளை யோதலும் க்ஷத்திரியனுக்குரிய தொழில்களாம். அவனுக்கு முக்கியதொழில்கள் ஊராளலும், படைபயிற்றலுமாம்" என்றுர் உல்லியம் ஆர்த்தர்துரை அவர்கள். இவைகளால்,

க. வேதம் ஓதல்,	ச. உலகு ஓம்பல்,
உ. யாகஞ் செய்தல்,	ரு. போர் செய்தல்,
௩. தானங்கொடுத்தல்,	சா. படைக்கலம் பயிற்றல்,

* திருக்காளத்திப் புராணம், வருணச்சிரம தருமமுறைத்த வத்தியாயம், 8-வது செய்யுள்.

† விஷ்ணு புராணம், மூன்றுமம்ஸம், எட்டாமத்தியாயங்காண்க.

ஆகிய வறுதொழில்களும் அரசருக்குரிய குலத்தொழில்களாம். அவற்றுள் "வேதம் ஓதலால் ருஷிகளின் கடனையும், யாகஞ் செய்தலால் தேவர்களின் கடனையும், தானங் கொடுத்தலால் வேதியர் கடனையும், உலகோம்பலால் உயிர்களைக் காத்தலின் கடனையும், போர்செய்தலால் பகைவரை யடக்குதலின் கடனையும், படைபயிற்றலால்குலதர்மத்தின்கடனை" செய்பவராவர். இவ்வறு தொழில்களும் "பொதுத்தொழில், சிறப்புத்தொழில்" என இருவகைப் படும். அவற்றுள் 'ஓதல், வேட்டல், ஈதல்' பொதுத்தொழிலும்; "உலகோம்பல், போர்செய்தல், படைபயிற்றல்" சிறப்புத் தொழிலுமாம். இச் சிறப்புத்தொழிலேயே அரசருக்குரிய குலத்தொழில் என் மநு † கூறியிருக்கின்றார்.

"The additional occupations of the Kshatriya, were governing and fighting and making conquests, to learn the management of chariots and the use of the bow, and to stand firm in battle and not to turn back." (Gautama, X, 15 and 16) vide, Romesh chunder Dntt's Ancient India. Vol II, Book, III, ch V, p. 77.

"க்ஷத்திரியரது தொழில்கள் ஊரை ஆளலும், சண்டை செய்தலும், ஊரைப்பிடித்தலும், ஆயுதங்களைப் பயிற்றலுமாம்" என இராமசந்திர தத்துங்கூறி யிருக்கின்றார். ஆகவே,

க. உலகோம்பல்.
உ. படைக்கலம் பயிற்றல்,
ரு. போர்செய்தல்.

ஆகிய இம்மூன்று சிறப்புத் தொழில்களும் அரசருக்குரிய சாதித்தொழில்களாம். இவற்றுள் "உலகோம்பலை" நாடு சம்பந்தப்பட்ட பெயர்களாகிய மேற்கூறிய "க்ஷத்திரியன், அரசன், கோன், நாடான், பதி, பார்த்திவன், புரவலன், பூபாலன், மகிபாலன், ராஜன்" முதலிய பத்துப்பெயர்களும்; போர் செய்தலையும், படைபயிற்றலையும் 'பொருநர்' என்னும் பெயரும் விளக்குகின்றன.

† மநுஸ்மிருதி 10-வது அத்தியாயம், 77-வது சுலோகம்; அபிதான கோசம், பக், 100.

முத்து வீரியம்,

பொருளதிகாரம், அகவொழுக்க வியல்,

46-வது சூத்திரம்.

"காவ லறப்புறங் காவனு நாடு
காவலு மெனவிரு வகைப்படு மெனலே"

(இ-ள்) "காவல் என்பது அறப்புறங் காவல், நாடு காவல் என்று இரண்டு வகைப்படும்" என்பதாம்.

"அவற்றுள்,
அறப்புறங் காவ லனைவர்க்கு முரித்தே"

(இ-ள்) "முற்கூறியவற்றுள் அறப்புறங் காவல் அந்தணர் முதலிய நான்கு சாதிகளுக்கும் உரியவாம்" என்பதாம்.

"ஏனைய காவ லிறைவர்க் குரிய"

(இ-ள்) "அது ஒழிந்த நாடு காவல் அரசருக்கே உரியவாம்" என்பதாம்.

இலக்கண விளக்கம்,

பொருளதிகாரம், அகத்திணையியல்,

68-வது சூத்திரம்.

"அறப்புறங் காவ னாடுகாவ லெனச்
சிறப்புறு காவற் றிறமிரு வகைத்தே"

69-வது சூத்திரம்.

"அவற்றுள், அறப்புறங் காவ லனைவர்க்கு முரித்தே"

70-வது சூத்திரம்,

"மற்றைக் காவல் கொற்றவர்க் குரித்தே"

என இலக்கண விளக்க நூலாசிரியரும், நாடு காவல் அரசருக்கே உரியதெனக் கூறி வற்புறுத்துகின்றார்.

தொன்னூல் விளக்கம்,

பொருளதிகாரம், சாதித் தொழிலுரிமை, 3-வது சூத்திரம்.

"அறப்புறங் காவ லனைவர்க்கு முரித்தாய்
மற்றைக் காவல் கொற்றவர்க் குரித்தே"

(இ-ள்) "அறப்புறங் காவல் என்றும், நாடு காவல் என்றும் காவலிருவகைப்படும். இவற்றுள் அறப்புறங் காவலே நால்வர்க்கும்

பொதுமைத்தாகி, நாடு காவல் அரசர்க் குரித்தெனக் கொள்க" என்பதாம். என்பதால் அரசருக்கு 'நாடு காவல்' உரியதெனப் பட்டது.

"மயங்குமர் மாறட்டு மண்வெளவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேற் றகைகாண விடுவதோ"

எனப் புறநானூற்றில் மண்கோடல் அரசர்க்கே உரித்தாகக் கூறியதால், அவரை "நாடார்" எனப்பட்டது.

பதிற்றுப் பத்து, ஆறும் பத்து,
59-வது அகவல்.

"நாடுபுறந் தருத னினக்கு மார்கடனே"

என்றார் பதிற்றுப்பத்து நூலார். அதாவது "அரசனே முன் னிலைச் சுட்டாக நோக்கி நாட்டைக் காப்பாற்றுதல் உனக்கே கடன்" என்பதால், மற்ற ஜாதியாருக்கு நாடு புறத்தல் கடன் அல்லவென விளங்கினது. இதனுனே அரசரை காவலர் என்பது. காவல் புரிதலால் காவலர் எனப்படுவர். இதைப்போல் நாடு ஆளு தலால் நாடார் எனப்பட்டனர். நாடு ஆளுதலும், நாடு காவல் புரி தலும் ஒரு பொருளையே கொள்ளும்.

"The Rajputs, (Sanskrit, raja-putra, son of a king) have been defined as 'the warrior and land-owning race of Northern India." Vide. Edgar Thurston's Castes and Tribes of Southern India. Vol, VI, p. 240.

"The Rajputs, once the leading land-owning tribe, still possess many small estates" vide, W. W. Hunter's Imperial Gazetteer of India, Vol. I, p. 218.

"இராஜ புத்திரர்களே யுத்தரங்கத் தவராகவும், நாடுடைய வம்ஸத்தவ ராகவுங் கொள்ளப்படும்" என தர்ஸ்டன் துரையும், அண்டர் துரையுங் கூறி முடித்திருக்கின்றார்கள். இப்பகுதிகளில் அரசரை நாடுடையவரென விளக்க Land-Owning Race என் றார்கள். இவைகளாலும் நாடுடைமை அரசருக் குரியதென விளங்கினது.

சிலப்பதிகாரம், காடுகாண்காதை,
15, 16-வது வரிகள்,

"வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை
யூழிதோ றூழிதோ றுலகங் காக்க"

(இ-ள்) "அரசனே! உமக்கு உலகத்தைக் காத்தல் குலத் தொழிலாதலால், எக்காலமும் நீ நாடுடனே வாழ்க வென்று ஆசிர்வதிக்கின்றார்" இளங்கோவடிகள்.

"இலவந் திகையி னெயிற்புறம் போகி
னுலக மன்னவ னுழையோ ராங்குளர்"

என்றார் மணிமேகலையிலும். உலகத்தை யுடையவர் அரசர் என விளக்க "உலகமன்னவர்" என்றார்.

"உள்வரி யென்ப துணர்த்துங் காலை
மண்டல மாக்கள் பிறிதோ ருருவங்
கொண்டுங் கொள்ளாது மாடுதற் குரித்தே."

எனச் சிலப்பதிகாரம், வேனிற் காதையில் அடியார்க்கு நல்லார் மேற்கோளாக வெடுத்தாண்டிருக்கின்றார். அதில் "மண்டல மாக்களாவார் அரசர்" எனப் பொருள் தருகின்றார். அதாவது மண்டலத்தை யுடைய வம்ஸத்தவர் என்பது பொருளாம். இத ஞனே ஆயுதந் தரித்து உலகாள்வது அரசருக்குரிய சிவஞேபாயம் என மறு கூறியிருக்கின்றார். "மன்னர்க்கழகு செங்கோன் முறைமை" என வெற்றிவேற்கையில் அதிவீரராம பாண்டியர் கூறுவதும் இக்கருத்தை யொட்டியே யென்க. ஆகவே, இவைக ளால் அரசரது பெயர்களாகிய "க்ஷத்திரியன், நாடான்" முதலிய பெயர்கள் அவரது 'நாடு' என்னுங் குலதனத்தை ஆளுதல் நோக் கியே ஏற்பட்ட பெயர்கள் என விளங்குகின்றன.

16. நாடு உடைமையால் அரசர் நாடார் எனப்படுவர்.

புறநானூறு 49-வது அகவல்.

"நாட னென்கோ வூர னென்கோ,
யாங்கன மொழிகோ வோங்குவாட் கோதையை."

எனப் புறநானூற்றில் பொய்கையார் சேரமான் கோக்கோதை மார்பனை முன்னிலைச்சுட்டார்கவைத்து "நீர் நாட்டை உடைத்தா யிருத்தலால் நாடான் என்று சொல்லுவேனே, அல்லது நீர் ஊரை உடைத்தாயிருத்தலால் ஊரன் என்று சொல்லுவேனே? மற்று யாதெனக் கூறுகேன்" என்றார். இதை முன்னிட்டே,

பதிற்றுப் பத்து, மூன்றும் பத்து,
24-வது அகவலில்,

"ஞால நின்வழி யொழுகப் பாடல் சான்று
நாடேன் விளங்கு நாடா நல்லிசைத்
திருந்திய வியன்மொழித் திருந்திழை கணவ"

எனச் சங்க நூலாரும் "அரசர் நாடேன் விளங்குவதால் நாடார் எனப்படுவேர்" என முடித்தனர். அதாவது அரசர் நாடு புறந்து வாழ்தலால் "நாடேன் விளங்கு நாடா" என்றார். அந் நாடாரை சிலப்பதிகாரரும் "நாடேனே வாழ்க" வென்றார். இதனால் 'நாடு' என்பது இடத்தை யுணர்த்தி, அவ்விடப் பெயரடியாக 'நாடார்' என்பது தோன்றி, அரசரை விளக்கினது. இவ் வழக்கை அங்கிலேயரும் விளக்கி யிருக்கின்றனர்.

"Nadan is a ruler of a Nadu or District" Vide, Census of India, 1891. Madras Report. Vol XIII, p. 297.

"நாட்டேக்கரசனை நாடான் எனப்படும்" என இந்திய ஜெனக் கணித புத்தகத்தில் கூறியுள்ளது. இதில் வரும் நாடார் என்பது நாடுடைமையால் அரசருக்கு ஏற்பட்டப் பெயர் என விளங்கினது.

"The machinery for the Collection of the Government share and general revenue administration was very simple. There was first the Viceroy, styled in Chola days Arasu, Raja, or Perumal, while the Nadu was managed by an officer Called Nadan, a name derived from that of his charge." Vide, The Chingleput District Manual, ch. V, p. 204

"வரிவாங்கும் முறை வெகு சுலபமா யிருந்தது. சோழ ராஜன் காலத்தில் பிரதிநிதிகளை அரசன், ராஜன், பெருமாள் என்னும் பட்டப் பெயர்களைச் சூட்டி அழைத்தனர். நாட்டை யாண்ட பிரதிநிதியை நாடான் என்று அழைத்தனர். நாடான் என்னும் பெயர் அவர்களிடம் ஒப்புவித்த நாடுவி லிருந்து பிறந் தது" என செங்கல்பட்டு மானியூலில் கூறியுள்ளது. இப்பகுதி யில் வரும் "அரசன், ராஜன், பெருமாள், நாடான்" என்பவைகள்:—

அரசை யுடையவனை அரசன் எனவும்,
ராஜ்யத்தை யுடையவனை ராஜன் என்வும்,
பெருமையை யுடையவனை பெருமாள் எனவுங் கூறி
வருவனபோல்;

நாட்டையுடைய அரசனையும் நாடான் எனப்பட்டது. ஆதலால், 'நாடு' என்பது ஆண்பாலை விளக்கிக் காட்டுகின்ற 'ஆன்' விகுதியைப் புணர்ந்து நாட்டையுடையவனை 'நாடான்' என்றாக்கி "அரசனை" விளக்கினது. தமிழ் அரசர்களாகிய "சேரன், சோழன், பாண்டியன்" ஆகிய அரசர் ஆண்டு வந்த காலத்தில் ஆளும் அரசனை அன்றி, அவனுக்குக் கீழ்பட்ட மற்ற சிற்றரசரும், பிரதிநிதிகளும், "அரசன், ராஜன், பெருமாள், நாடான்" என்னும் பட்டப் பெயர்களை வைத்து வழங்கி வந்தார் என விளக்க Viceroy Styled Arasen, Rajan, Perumal, Nadan எனக் கூறி, அப்படிக் கூறிய பெயர்கள் வழங்கியது தமிழ் அரசர் காலத்தில் எனத் தெரிவிக்க "In Chola days" எனவுங் கூறி விளக்கி யிருக்கின்றார். பூர்வம் முடிமன்னர்:—

"வதுரங்கராம சேரன்
வீரசேகர சோழன்
சந்திரசேகர பாண்டியன்"

என "சேரன், சோழன், பாண்டியன்" என்னும் பட்டப் பெயர்களைப் பெற்றும், அவருக்குட்பட்ட சிற்றரசர் அதாவது பிரதிநிதிகள்:—

"வதுரங்கராம வரசன்
விஜயராஜரத்தின ராஜா
சந்திரசேகர பெருமாள்
மாணிக்கவாசக நாடான்"

என "அரசன், ராஜன், பெருமாள், நாடான்" என்னும் பட்டப்பெயர்களைப் பெற்றும் வழங்கி வந்ததாக விளங்குகின்றது. இவற்றுள் "நாடான்" என்னும் பட்டப்பெயர் அவ்வரசர் ஆண்டு வந்த நாடுவிலிருந்து பிறந்ததெனை விளக்க "The Nadu was managed by an officer called Nadan, a name derived from that of his charge" என்றார். அப்படிக் கூறி யிருப்பதால், இந்த சந்திரகுல நாடார் பூர்வம் பாண்டிய நாட்டையாண்ட அரச வம்சத்தில் வந்தவர் என நன்கு மதிக்கப்படுவர்.

Government:—"The Government was of a patriarchal character. The Raja was Raja by divine right, and his power was absolute. The country was divided into districts, over which Governors were placed, and those Governors were entrusted with absolute power by the Raja. Under those Governors were subordinate Governors in a regular chain. The highest Governor was lord over a thousand towns, the next over one hundred, the next over twenty, the next over ten, and the lowest ruled over one town." Vide, David Sinclair's History of India, ch. III, p. 10.

ஆளுகை:—(இந்தியாவின்) "ஆளுகை கோத்திரத் தலைவனுக்குரிய லட்சணங்களாயிருந்தது. இராஜன் தெய்வீகமான அதிகாரத்தைக் கொண்டிருந்தான். அவனுடைய அதிகாரம் ஏகதேசமானது. தேசத்தை நாடுகளாகப் பிரித்து அந்த நாடுகளுக்கு பிரதிநிதிகளை ஏற்படுத்தப்பட்டது. இராஜாவினால் அந்தப் பிரதிநிதிகளுக்கு ஏகதேசமான அதிகாரங் கொடுக்கப்பட்டது. உயர்ந்த பிரதிநிதி ஆயிரம் பட்டணங்களுக்கு அதிகாரியாவான். அடுத்தவன் நூறுக்கதிகாரி, அதற்கடுத்தவன் இருபதிற் கதிகாரி, அதற்கடுத்தவன் பத்திற்கதிகாரி, கடைசியானவன் ஒன்றுக்கதிகாரியாவன். இவ்விதம் ஒவ்வொரு பிரதி நிதிகளுக்குக் கீழ்த்தரமான பிரதிநிதிகளும் ஏற்படுத்தப்பட்டு, சங்கிலிக்கு ஒப்பந்தமாக படிப்படியாய்த் தாழ்த்தப்பட்டன" என இந்துதேச சரித்திரத்தில் கூறியுள்ளது.

"Below the suzerain power of Malabar were a number of chieftains or princes of Nads (Country), including along them the well known familes of Venad (Travancore), Eranad (Zomorin), Vallaivnad, and Nedumpuraiyanad (Palghat). The Nad was the terrestrial organization of the ruling Nayars. It was divided into a number of Dasams or Villages. Each Village and Nad had its hereditary chief, who was subject to the King of the country" Vide, The Travancore State Manual. Vol. I, ch. V, p. 249.

"மலையாளம் தன் சுயவரசு காலத்தில் நாடுகளை ஆண்டு வந்த அநேக அரசர் அல்லது அதிகாரிகளினுடைய அதிகாரத்திற்குட்பட்டிருந்தது. அந்த நாடுகளோடு லோகப்பிரசித்தியான "வயநாடு, ஏரநாடு, வளவநாடு, நெடும்பொறையநாடு" ஆகிய இவைகளினுடைய குடும்பங்களும் சேர்ந்தவைகளாகும். அவைகள் அநேக தேசங்கள் அல்லது கிராமங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கிராமமும், நாடும் அதனுடைய பரம்பரை அதிகாரியை உடைத்தாயிருந்தது. அவர்கள் தேசத்தினுடைய அரசனுக்கு உட்பட்டிருந்தார்கள்" என திருவாங்கூர் மானியூலில் கூறியுள்ளது.

"The country of Tondeimandalam was, in Chola times, divided into 24 Kottams or divisions, which were sub-divided into 75 nadus or districts containing 1900 townships." Vide, The Chingleput District Manual. ch. II, p. 31.

"தொண்டமண்டலம் சோழராஜன் காலத்தில் 24 கோட்டம் அல்லது தேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகள் 75 நாடுகள் அல்லது ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு, 1900 பட்டணங்களை உடைத்தாயிருந்தன" என செங்கல்பட்டு மானியூலில் கூறியுள்ளது.

இவைகளால் "இங்கிலாந்தின் (Counties) கவுண்டிகள்" மாதிரியில் தேசங்கள் நாடு நாடுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நாட்டையும் நாடார்களாகிய அரசர்களால் ஆளப்பட்டு வந்ததென விளங்குகின்றன. பிரதிநிதிகள் சிற்றரசரே யாவர் என "Number of chieftains or princes of Nads" என திருவாங்கூர் மானியூலில் விளங்கக் கூறியிருக்கின்றது.

"Viceroys, often near relations of the reigning house, were entrusted with the administration, sometimes of one and sometimes of several, Kottams, with the titles of Rajan or Arasan, both signifying King, or Perumal, lord. ... ... The Nadu again was administered by a local officer called a Nadan" Vide, The Chingleput District Manual. ch. IV, p. 138.

"பிரதிநிதிகள் ஆளும் அரசனுக்குச் சொந்த பந்துக்கள். இவர்கள் ஒரு கோட்டம் அல்லது பல கோட்டங்களுக்குப் பொருப்பேற்று பெருமாள் அல்லது அரசன் என்னும் பொருள்களைக் கொண்ட இராஜன் அல்லது அரசன் என்னும் பட்டத்தைப் பெற்று ஆண்டுவந்தார்கள். நாட்டை ஆண்ட பிரதிநிதி நாடான் என்று அழைக்கப்பட்டனன்" என செங்கல்பட்டு மானியூலில் கூறியிருக்கின்றது.

இப்பகுதியில் பிரதிநிதிகள் அல்லது சிற்றரசர் எப்பொழுதும் ஆளும் அரசனுக்குச் சொந்த பந்துவென விளக்க "often near relations" எனவும்; அவ்வித பந்துவாயிருப்பதும் ஆளும் அரசனுக்கே என விளக்க "The reigning house" எனவும், இந்த அரச பந்துக்கள் சில சமயம் ஒரு கோட்டத்திற்கும், சில சமயம் பல கோட்டங்களுக்கும் (நாடுகளுக்கும்) அரசராயிருப்பார் என விளக்க "Sometimes of one and sometimes of several Kottams" எனவும், அப்படிக் கோட்டத்தை ஆண்டதால் "ராஜன், அரசன்" என்னும் பெயர்களைப் பெற்றார் என விளக்க "With the titles of Rajan or Arasen" எனவும், இதைப்போல் நாட்டை ஆண்ட பிரதிநிதி 'நாடான்' என்னும் பெயரைப் பெற்றான் என விளக்க "The Nadu was administered by a Nadan" எனவும் விளக்கியிருப்பதால், "நாடான் அரசன்" எனவே விளங்குவன். பூர்வம் பாண்டிய தேசமும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

"In times of remote antiquity this province (Tirunelveli) formed part of the great Pondian dynasty, the capital of which was Madura; and was divided into principalities and states, denominated Naads, and Governed by a noble race of chettrie princes" Vide, Thomas Turnbull's Geog and Statis, Memoir of Tirunelvely, p. I, in 1823.

"ஆதிகாலத்தில் திருநெல்வேலிப் பிரதேசம் பெரிய பாண்டிய ராஜ்யத்தின் ஓர் பாகமாயிருந்தது. அந்த ராஜ்யத்திற்கு பிரதான நகரம் மதுரை எனப்படும். அது நாடுகள் என்று சொல்லப்படும் பல சிறு ராஜ்யங்களாகப் பிரிந்து, அரச குலத்தவர்

களால் (நாடார்களால்) ஆண்டுவந்தன. அவர்கள் அரசாட்சி தன்னிஷ்ட ஏகாதிபத்தியமாயிருந்தன. அவர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் உட்படாமல் பிரத்தியேகமான சுவாதீன அரசராய் இருந்ததுமன்றி, புத்திர பவுத்திர பாரம்பரையாய் பட்டம் அடைந்தும் வந்தனர்" என்றும் தாமஸ் டர்ன்புல் (Thomas Turnbull) துரையும், கிறிஸ்தாண்டு 1823-ம் வருஷத்தில் விளக்கி எழுதியிருக்கின்றார். "ஜர்மன் கேய்ஸர் சக்கரவர்த்தி தம் தேசத்தை பல நாடுகளாகப் பிரித்து, அவைகளுக்குத் தங் குலத்தவரை அரசராக்கி, அவர்களுக்குமேல் தாம் ஏகாதிபத்திய சக்கரவர்த்தியாயிருந்து, அரசாண்டு வந்ததைப்போலவும்; *இட்டாலி தேசம் பல சிறிய இராஜ்ஜியங்களாகப் பிரிந்திருந்து, அவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஐக்கிய பாவத்தை நாட்டவேண்டுமென்று கருதி ரோமாபுரியைத் தலைமை நகராக்கிக் கொண்டு அரசு புரிந்து வருவதைப்போலவும்; பாண்டிய ராஜனும் தம் மரசை பலநாடுகளாகப் பிரித்து அவைகளுக்குத் தங்குலத்தவரைச் சிற்றரசராக்கி, தாம் தலைமையாக நின்று அரசாண்டு வந்ததாக விளங்குகின்றது. அப்படிப்பிரித்த நாடுகளை ஆண்டுவந்த பாண்டிய அரசரையும், அவருடைய வம்ஸத்தவரையும், 'நாடார்' என்று அழைக்கப்பட்டு வந்ததெனவும், மேலே எண்பித்திருத்தலால், நாளதும் "நாடார்" என்னும் பெயரை உடையவர் பூர்வம் நாடாண்ட "பாண்டியகுல நாடாள்வார் வம்ஸத்தவர்" என்பதற்குச் சந்தேகமில்லை. அவ்வம்ஸத்தவர் என விளக்கவே அந்த 'நாடார்' என்னும் பட்டப்பெயரை நாளதும் சாதிப்பெயராகவும், குலப்பெயராகவும் வைத்து பாரம்பரையாக வழங்கி வருகின்றனர்.

"The Caniatchi of Malabar is the Bhumia of Rajasthan" Vide, Tod's Annals and Antiquities of Rajasthan, Vol. 1, p. 496; and Hallam, Vol. 1, p. 524.

"மலையாள அரசர் காணியாட்சி என்னும் பட்டப்பெயரையும், இராஜபுதானத்தரசர் பூமியார் என்னும் பட்டப்பெயரையும் வைத்து வழங்கி வருகின்றார்" என டாட்துரை இராஜஸ்தான் சரித்திரத்தில் கூறியிருக்கின்றார்.

* மிஸ்ஸஸ் அன்னிபெஸ்ஸண்டின் உபந்நியாசம், (23-8-1915) சுதேசமித்திரன் பத்திரிகை.

இவைகளால் மேல்நாட்டு அரசர் அதாவது மலையாளநாட்டு அரசர் "காணியாட்சி (=காணியை யுடையவர்)" என்கிற பட்டப் பெயரையும், வடநாட்டு அரசர் அதாவது இராஜபுதானத்தரசர் "பூமியார்* (=பூமியை யுடையவர்") என்கிற பட்டப்பெயரையும் பரம்பரையாக மேற்கொண்டு வழங்கி வருவனபோல்; தென்னாட்டு அரசர் அதாவது பாண்டியநாட்டு அரசரும் "நாடார் (=நாட்டை யுடையவர்") என்கிற பட்டப்பெயரையும் தொன்று தொட்டு இடையறாது மேற்கொண்டு வழங்கி வருகின்றனர். ஆதலால், இந்த மூன்று பட்டப்பெயர்களும் மேலே கூறிவந்த "க்ஷத்திரியன், அரசன், இராஜன், கோன், பதி, பார்த்திவன், புரவலன், பூபாலன், மகிபாலன்" முதலிய ஒன்பது நாடு சம்பந்த முடைய பெயர்களோடு சேர்ந்தவைகளேயாம். நாடு சம்பந்தம் அரசருக்குரியது. ஆகவே, நாடாரை பூர்வம் நாட்டை யாண்ட வம்ஸத்தில் வந்தவர் என நன்கு மதித்தலோடு, நாடுரிமையால் அரசருக்கு நாடார் என்னும் பெயரும் வழங்கி வருமென வறிக.

தாயாதிகளாகிய பராக்கிரம பாண்டியனுக்கும், குலசேகர பாண்டியனுக்கும் மதுரை திருநெல்வேலியில் 11-ம் நூற்றாண்டில் நடந்த சண்டையில் இருவர் பக்கமுஞ் சேர்ந்து சண்டை செய்த "சேர சோழ பாண்டியகுல சிற்றரசரும் நாடாள்வார்" என்னும் பட்டப்பெயரை வைத்து வழங்கி வந்தனர் என விளங்குகின்றது. அஃது வருமாறு:—

"And when the five chieftains, namely, Vadavalat-tirukkadi Nadalar, Kudaya-muttu Rayar, Villava Rayar, Ancukotta Nadalvar, and Narasiha Deva, proceeded to

---

* Another mode of tenure known as Bhum, and confined to Rajaputs, consists essentially in the possession of a hereditary inalienable title to the soil, free of revenue to the state. And the Bhumias have been permitted to certain cases to commute their responsibility, though still remaining liable to be called out as an armed militia' Vide, W. W. Hunter's Imperial Gazetteer of India Vol. 1, p. 127. 'These Bhoomias, sections of the earliest princes are to be met with in various parts of Mewar.—some of these yet possess entire villages, which are subject to the payment of a small quit-rent; they also constitute a local militia' Vide Hallam, Vol. I, p. 144.

give battle, he fought with them and slew many Tamils. ......And in the tenth battle he fought with these six chieftains namely, Silamegha, Naratunga Brahmaha Rayar, Ilankiya Rayar, Ancukotta Rayar, Paludiya Rayar, Panasiva Rayar, and with the five that are mentioned above, who came with a great army." Vide, The Mahavansa, part. 11, ch. LXXVI, p. 234.

"அப்பொழுது குலசேகரபாண்டியன் தனது ஐந்து சிற்றரசர் அதாவது வடவல-திருக்கடை நாடாள்வார், குடையமுத்து ராயர், வில்லவராயர், அங்குட்ட நாடாள்வார், நரசிங்க தேவர் முதலியவர் சண்டை செய்யப்போனதும், இவர்களோடு பராக்கிரம பாண்டியனுக்கு உதவி புரிய வந்த இலங்கை பராக்கிரமபாகு என்பவன் சண்டை செய்து அநேகரைக் கொன்றான். பத்தாவது சண்டையில் பராக்கிரம பாகு என்பவன் சில்லமேகன், நரதுங்கபிரமராயர், இலங்கையராயர், அங்குட்டராயர், பாலுடையராயர், பனசிவராயர் ஆகிய ஐவரோடு மேற்கூறிய அறுவரையுஞ் சேர்த்து ஆக பதினொன்று சிற்றரசரிடமுஞ் சண்டை செய்தான்" எனவும்;

"And he took with him Malava Cakkravatti and Malava Rayar, Parittikkudaya Rayar, and Tondama Rayar, Tuvarathipa Velar, and Virapperiya Rayar, Senkundiya Rayar and Nigaladha Rayar, Kurummalatta Rayar and Nakula Rayar, Punkunda Nadaluvar and Karamba Rayar and the Nadalvars, by name Kandiyuru and Thalanduru, Kangayar and Viraganga; Vemuva Rayar and Alatturu Nadalvar and the three Mannaya Rayars and Kalavandiya Nadalvar, and Keralasiha, these and other chieftains did he take with him and the others afore mentioned." Vide, Mahavansa, Pt. 11, ch. LXXVI, p. 237.

"மாளவ சக்கரவர்த்தி, மாளவராயர், பரித்திக்குடையராயர், தொண்டமராயர், துவரதீப வேலார், வீரப்பெரியராயர், செங்குண்டைய ராயர், நிகலடராயர், குறும்மலத்தராயர், நகுல ராயர், புங்குண்ட நாடாள்வார், கேரம்பராயர், கெண்டியூர், தலண்டூர், கெங்கையாறு, வீரகெங்கா ஆகிய ஊர்களின் நாடாள்வார், விமுவ ராயர், அளத்தூர் நாடாள்வார், மூன்று மன்னராயர், கலவண்

டைய நாடாள்வார் கேரலசிங்கா முதலிய சிற்றரசரையும், இன்னும் மற்ற அதிபதிகளையும் மேற்கூறிய சிற்றரசரோடு சேர்த்துக் கொண்டு சண்டைக்குச் சென்றான்'' எனவும்;

"And the three chieftains Pandimanda Nadalvar, Viramanga Rayar, and Kanga-kondappa Rayar, and all the inhabitants of kamandakotta, to submit themselves to him" vide, Mahavansa, Pt. 11, ch. LXXVI, P. 239.

"பாண்டிமண்ட நாடாள்வார், வீரமங்கராயர், கெங்க கொண்டப்பராயர், ஆகிய மூன்று சிற்றரசரும், கமண்டகுட்ட ஊரிலுள்ள குடிகளும் அவனுக்குத் தாழ்ந்துபோனார்கள்.'' எனவும்;

"And made war with the two Alatturu Nadalvars, and Kalinga Rayar, and Kalikala Rayar, the chieftains who dwelt at Manavira Madhura." vide, L. C. Wijesinha's Mahavansa pt. 11, ch. LXXVI, p. 241.

"மானவீர மதுரையில் வசிக்கும் இரண்டு அளத்தூரு நாடாள்வார்கள், கலிங்கராயர், கலிகாலராயர் முதலிய சிற்றரசரோடு சண்டை செய்தான்'' எனவுங் கூறியிருக்கின்றன. இவைகள் பௌத்தமதஸ்தரின் முக்கிய மதசம்பந்தமான நூற்களில் ஒன்றாகிய "மஹாவம்ஸம்'' என்னும் இலங்கை பாலிபாஷை புத்தகத்தில் கூறியுள்ளன. அப்படிக் கூறியுள்ள நூலை ஜார்ஜ் டர்னர் துரையாலும், விஜேஸிங்கராலும், அங்கிலேய பாஷையில் மொழிபெயர்த்திருக்கின்றது.

மேற்கூறிய ஆறு பகுதிகளிலும் வரும் "அரையன், இராயர், சக்கரவர்த்தி, தேவர், வேலார், நாடாள்வார்'' முதலிய பட்டப் பெயர்களை அக்காலத்தில் பாண்டியதேசத்தை அரசாண்டு வந்த பாண்டிய அரசருக்கும், அவருக்குட்பட்டு அரசுபுரிந்த சிற்றரசருக்கும் உரியதாகக் கூறியிருக்கின்றன. அப் பட்டப்பெயர்களும் அரசருக்கே உரியதென விளக்குவாம்.

க. 'அரையன்' என்னும் பெயர் 'அரசன்' என்னும் பொருளைத் தரும் என சதுரகராதி, பேரகராதி முதலிய அகராதிகளிலும்; 'அரைய னேந்தல் கோவே குரிசில்' எனத் திவாகரத்திலுங் கூறியிருத்தலால் அரசனையே குறிக்கும்.

உ. 'இராயர்' என்னும் பட்டப்பெயர் 'அரசர்' என்னும் பொருளைத் தருமென மேற்படி அகராதிகளில் குறித்திருப்பதோடு, பூர்

வம் விஜயநகரத்தை யாண்ட கிருஷ்ணராயர் சூரியகுல க்ஷத்திரியர் என நூற்களால் விளங்குவதாலும்; "Rayar, denote the office and rank, and are identical with the office of Zemindar of the present, and Polygar of former times." Vide The Mahavansa, pt. II, ch. LXXVI. p. 234. in footnote. என்னும் பகுதியாலும்; இராயர் என்னும் பெயர் அரசப்பட்டப் பெயரென விளங்கும்.

௩. 'சக்கரவர்த்தி' என்னும் பட்டப்பெயர் 'மற்றொருவரைப் பணியாது தனியாளுவோன், கிரீடாதிபதி, இராஜாதிபதி, 'Emperor, Monarch' என்னும் பொருள்களைத் தருமென மேற்படி தமிழ் இங்கிலீஷ் அகராதிகளிலும் கூறியிருக்கின்றன. இதோடு பூர்வம் தேசத்தையாண்ட "நளச் சக்கரவர்த்தி, புரூரவச் சக்கரவர்த்தி, தசரதச் சக்கரவர்த்தி" என்போரும் அப் பட்டப்பெயரை அடைந்திருத்தலால் 'சக்கரவர்த்தி' என்னும் பெயரும் அரசரையே குறிக்குமென விளங்கும்.

௪. 'தேவன்'* என்னும் பட்டப்பெயர் ஏகதேசத்தில் அரசனைக் குறிக்குமென நிகண்டகராதிகளில் கூறியிருத்தலோடு, திருவிளையாடற் புராணத்தில் பாண்டியனை 'வரகுணதேவன்' எனவும், சீவக சிந்தாமணி பாடிய சோழனை, திருத்தக்க தேவன் எனவுங் கூறியிருத்தலால், தேவன் என்னும் பெயர் அரசனைக் குறித்தமை காண்க.

௫. 'வேலான்' என்பது வேலையுடையவனைக் குறிக்கும். அரசன் வேலைத்தான் ஏந்தி நிற்றலின் வேலான் எனப்பட்டனன். 'வேற்றானை வாட்டானை விற்றானை' என்னுந் திவாகரச் சூத்திரத்

---

* "சில சாதியார்கள் தேவர் என்கின்றனர்." கொலைஞரெயினர் வநசரர் சவரர்" என்னுந் திவாகரத்தால் கொலைத்தொழிலையுடையவர் தெவ்வர் எனப்பட்டனர். தெவ்—பகை. தெவ்வர்—ஜீவராசிகளுக்குப் பகைவர் எனினும்; திராவிடர் ஆரியருக்கு விரோதி. விரோதிகளை தெவ்வர் எனல் ஆரியவழக்கு. இவ்வகையால் வந்ததெனினும் பொருந்தும். பிற்காலத்தில் தெவ்வர் என்பது சிதைந்து தேவர் எனவும் வழங்கிவரலாம். அன்றியும் பிடாரிக்கு அர்ச்சனை செய்து தேவதையை வணங்கும் ஓச்சரும் தேவர் என்கின்றனர். அவர்கள் தேவதைகளை வணங்கலால் அப்பெயர் பெற்றனர் போலும்.

தால் 'வேல்' அரசருக்குரிய பலவகை ஆயுதங்களில் ஒன்றென விளங்கலால், அவ்வாயுதத்தை உடையவனையும் அரசன் எனவே முடிக்கப்படும். சிலர் 'நாடார்' என்பது 'கோலார், வேலார்' என்பவைகளைப் போன்றபதம் என்பர். கோலார் என்றால் செங்கோலையுடையவர் (செங்கோலன்) எனவும், வேலார் என்றால் வேலாயுதத்தை யுடையவர் எனவும் பொருள் கொள்ளும். இதைப்போல் 'நாடார்' என்றாலும் 'நாட்டையுடையவர்' எனப்படும். கோலும், வேலும் அரசருக் குரிய படைகளைக் குறிக்கும். நாடும் அரசருக் குரிய உலகோம்பலைக் குறிக்கும். இச் சொற்களின் அடியாகப் பிறந்த 'கோலார்' வேலார், நாடார்' என்பவைகளும் மேற்கூறிய பொருள்களை யுடைய அரசரைக் குறிக்கும்.

சு. "நாடாள்வான்" அல்லது "நாடாளன்" என்னும் பட்டப் பெயர் "நாட்டை யாளுதலுடையவன், நாட்டை யுடையவன், அரசன்" என்னும் பொருள்களைத் தரும்.

"I believe Nadalar or Nadalvar, from the Tamil Nadu, a country; and aluvar, a ruler." vide, The Mahavansa, pt. II, ch, LXXVI, p. 234, in footnote.

"நாடாளர் அல்லது நாடாள்வார் என்பது தமிழ் நாடுவிலிருந்து பிறந்தது. ஊர், தேசம் என்னும் பொருள்களையும், ஆளுவார் ஆளப்பட்டவர் என்னும் பொருளையும் விளக்கும்." என மகாவம்ஸம் என்னும் நூலில் கூறியிருக்கின்றது. ஆகவே "அரையன், இராயர், சக்கரவர்த்தி, தேவர், வேலார், நாடாள்வார்" என்னும் பெயர்கள் அரசரைக் குறித்தமையால், அந்தப்பெயர்களை யுடையவரையும் அரச வம்ஸத்தவர் எனவே துணியப்படும். இப் பெயர்களில் ஒன்றாகிய 'நாடாள்வார்' என்னும் பட்டப்பெயர் அரச வம்ஸத்தவருக்கு பன்னெடுங்காலமாக வழங்கி வருகின்றது. பாண்டிய ராஜாக்களாகிய மேற்கூறிய அங்குட்ட நாடாள்வார், அளத்தூரு நாடாள்வார், கலவண்டைய நாடாள்வார், கெங்கையாறு நாடாள்வார், கெண்டியூர் நாடாள்வார், தலண்டூர் நாடாள்வார், திருக்கடை நாடாள்வார், பாண்டிமண்ட நாடாள்வார், புங்குண்ட நாடாள்வார், வீரகெங்கா நாடாள்வார் முதலியோரும் இப் பாண்டியகுல நாடார் வம்ஸத்து முதியோ ரென்க. இப்பாண்டியர் நாடாண்டமையால் 'நாடார்' எனப்பட்டனர். ஆகவே, இவர்கள் பாண்டிய

குல நாடார் வம்ஸத்தி லுதித்து, நாடார்* என்னும் பட்டப் பெயரையும், நாடுரிமையையும் காளதும் அடைந்து வருகின்ற மையின் பாண்டிய வம்ஸத்தவர் எனப்படுவர்.

17. நாடார் என்பதிலுள்ள அரச சப்தம்.

"பொன்னி நாடான்" என்பதற்கு அங்கிலேயரும் The Ruler of the Ponnee என்றும், The Prince of the River என்றும் மொழிபெயர்த் திருக்கின்றார். இதில் வரும் நாடார் என்னும் பதத்திற்குப் பதிலாய் Ruler, Prince என்னும் பதங்களை வைத்து எழுதி யிருக்கின்றார். Ruler, Prince என்னும் பதத்திற்கு அங்கிலேய அகராதிகள் அரசர் எனப் பொருள் கூறியிருக்கின்றன. இவைகள் மாத்திர மன்று, மற்ற தமிழ் நூற்களும் 'சோழ நாடன்' என்பதற்கு சோழநாட்டரசன்§ எனவும், பாண்டிய நாடான் என்பதற்கு பாண்டிய நாட்டரசன் எனவும், 'சேர நாடன்' என்பதற்கு 'சேரநாட்டரசன்' எனவும், 'கலிங்கநாடான்' என்பதற்கு 'கலிங்க நாட்டரசன்' எனவும் பொருள் கூறியிருக்கின்றன. பிறவுமன்ன. அந்நூலாசிரியர் எழுதிய சேரநாட்டரசன், சோழநாட்டரசன், பாண்டிய நாட்டரசன், கலிங்க நாட்டரசன் முதலிய தொடர் மொழிகளின் கடைசியில் வரும் 'அரசன்' என்னும் பதத்திற்கு இருப்பிடம் யாது? 'நாடன்' அல்லது 'நாடான்' என்பதுதானே! 'நாடான்' என்பதற்குப் பதிலாய் ஐயர், செட்டி, முதலி, பிள்ளை என்பன இருப்பின் வையைநாட்டையர், வையை நாட்டுச் செட்டி, வையை நாட்டு முதலி, வையை நாட்டுப்பிள்ளை எனப் பொருள் படுவன வன்றி, அவைகளிலிருந்து அரசசப்தம் வெளிப்படுமோ? இவைகளாலும் 'நாடன்' அல்லது 'நாடான்' என்பதில் 'அரசன்' என்னுஞ்

---

* இத் தென்தேசத்தில் நாலுகோடிஜனங்கள் முன்னூறுசாதியார்களாகப் பிரிந்து வாழ்பவரில் "நாடார்" என்னும் பட்டப்பெயரை யுடையவர் இவர்களே யாவர். (Edgar Thurston's Castes and Tribes of Southern India, Vol. 1, Introduction, p. xiii, and Vol V, p. 134; and The Census of India, 1891, Madras Report Vol. xiii, p. 297.

§ "எழுநான்கு மொற்றிடை மிகுமென்ப" (முத்துவீரியம், எழுத்ததிகாரம், புணரியல் 8-வது சூத்திரம்.) என்பதால் நாட்டரசன் என்பது நான்காம் வேற்றுமைத் தொகையாகும். நாட்டுக்கு அரசன் என விரியும்.

சப்தம் அடங்கியிருக்கின்றதென விளங்கவில்லையா? வித்தினிடத்தில் மரம் அடங்கியிருத்தலைப்போல், 'நாடான்' என்னுஞ் சொல்லினிடத்தில் அரச சப்தம் இயற்கையாகவே அடங்கி யிருக்கின்றது. இதனாலேயே அரசரை 'நாடன், நாடான்' என நூற்கள் தோறும் அழைத்துவருவது பண்டைய வழக்கமாகும். 'நாடு' என்பது ஊரைக் குறிக்கும். 'நாடான்' என்பது அவ்வூரையுடைய சாதியாரைக் குறிக்கும். அதாவது அரசரை விளக்கும்.

ஊரைக்குறிக்கும் 'கம்பம்' என்னும் அஃறிணைப் பெயரோடு நாடான் என்னும் அரசப்பட்டப்பெயர் சேர்ந்துவரின் 'கம்பம்+நாடான்=கம்பநாடான்' எனப்படும். 'கம்பநாடான்' என்றால் 'கம்ப நாட்டரசன்' என்பது பொருளாம். ஒரு அரசனது இயற்பெயரை அல்லது இடுகுறிப்பெயரைக் குறிக்கும், 'கம்பன்' என்னும் உயர்திணைப் பெயரோடு நாடான் என்னும் அவனது சிறப்புப் பட்டப் பெயர் அல்லது அரசபட்டப்பெயர் சேர்ந்துவரின் கம்பன்+நாடான்=கம்பநாடான் என அவனை சாதியோடு குறிப்பாகக் குறிக்கும் பெயர்ச்சொல் எனப்படும். 'கம்பநாடான்' என்றால் 'கம்பராஜன்' எனப் பொருள் கொள்ளும். ஆகவே, நாடன், நாடான் என்பன உயர்திணை இடுகுறிப் பெயர்களோடு சேர்ந்து இராஜன் என்னும் பொருளையும், அஃறிணைப் பெயர்களோடு சேர்ந்து அவைகளை யுடையவரசன் என்னும் பொருளையும் விளக்குமென வறியலாம். எவ்வகையினும் நாடன் அல்லது நாடான் என்பது அரசன் என்னும் பொருளைக் கொள்ளு மென்பதே தீர்ப்பு.

நாட்டை யுடையவனாகிய ஓர் வேதியன் நான் அரசன் என்று வெளிவருவானா? அவ்வேதியனைப் புகழ விரும்பினோர் இவ் வேதியன் அரசப்பிரபு என்று பிரஸ்தாபித்தல் கூடுமோ? கூடாதென விளக்கவே, *'அந்த ணாளர்க் கரசுவரை வின்றே' என தொல்காப்பியர் வேதியருக்கு அரசு அல்லது நாடாளல் கிடையாது எனத் துலக்கி யிருக்கின்றார். அரசு (நாடு) டைமையாலேயே வேதியருக்கு அடுத்தவர் அரசர் அல்லது நாடார் எனப்பட்டனர். அச் சொல்லுக்கு அரசப்பரிசம் உண்டாய் விட்டமையா லன்றோ, அது அரசருக்கு மாத்திரமே பயன்பட்டு, அவர் மாத்திரமே

§ தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல். 82-வது சூத்திரம்; இலக்கணவிளக்கம், பொருளதிகாரம், பாட்டியல், 168-வது சூத்திரம்.

நாடார் ஆகி, ஏனைய குலத்து நாடுடையோர் 'நாடார்' ஆகாது ஒதுங்கினர். நாடன் அல்லது நாடான் என்னும் பதம் இராஜன் என்பதைப் போன்ற க்ஷத்திரியனைக் குறிக்கும் பதம். இராஜாதிபதிக்கு இராஜன் என்றும், க்ஷேத்திராதிபதிக்கு க்ஷத்திரியன் என்றும் பெயர்களானது போல; நாடாதிபதிக்கு 'நாடன்' அல்லது 'நாடான்' என்னும் பெயராகும். ராஜ்யம்=ஊர், அதனையுடையவன் ராஜன் என்பதைப்போல; நாடு=ஊர், அதனை யுடையவன் 'நாடான்' எனப்படுவன். "சந்திரகுலத்தவருக்குள் நாடான்" என்பதும், சூரியகுலத்தவருக்குள் கிராமணி என்பதும், ராஜபுத்திருக்குள் 'பூமியான்' என்பதும் ஒன்று. இம் முப்பதங்களுக்கும் "பூமிக்குடையோன்" என்பதே திரண்ட பொருள். ஆகவே, "நாடன், நாடான்" என்னும் இரண்டு பெயர்களும் "அரசன்" என்னும் பொருளில் நின்றும், அரச சப்தத்தை வெளிப்படுத்தியும் நிற்குமென பசுமரத்தாணியைப்போல் அறையப்படும். அப்பட்டப் பெயரை நாளதும் உடையவரை "அரச வம்சத்தவர்" எனவே நிலை நாட்டப்படும்.

18. நாடார் என்பதை திவாகர நிகண்டுகளில் அரசர் பெயர்களில் ஒன்றெனக் கூறுததற்குக் காரணம்

"நாடார்" என்பதை அரசர் பெயர்களில் ஒன்றெனச் சேர்த்து "சேந்தன் திவாகரரும், பிங்கல நிகண்டாரும், சூடாமணி நிகண்டாரும், உரிச்சொல் நிகண்டாரும்" விளக்காதிருப்பினும்;

தொல்காப்பியம், சொல்லதிகாரம், இடைச்சொல்லியல்,
48-வது சூத்திரம்.

"கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே"*

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், நாடடியாகப் பிறந்த பெயர்களாகிய "க்ஷத்திரியன், அரசன், இராஜன், கோன், பதி, பார்த்திவன், பூபாலன், மகிபாலன்" முதலிய பெயர்களோடு "நாடான்" என்பதும் ஒன்றென விளங்கும்.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமை மயங்கியல், 35-வது சூத்திரம்; இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், இடையியல், 29-வது சூத்திரம்.

நன்னூல், உருபு புணரியல், 18-வது சூத்திரம்.

"இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்
விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே"†

எனவும்;

நன்னூல், உரிச்சொல்லியல், 20-வது சூத்திரம்.

"சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து
முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவுந்
தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே"‡

எனவும்;

இலக்கணவிளக்கம், பொருளதிகாரம், அகத்திணையியல்,
226-வது சூத்திரம்.

"கூறிய வல்ல வேறுபிற தோன்றினுங்
கூறிய வற்றொடு கூட்டி மெய்கொளக்
கூறி யுணர்த்தல் குணத்தோர்க் கியல்பே"

எனவும்;

தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்,
110-வது சூத்திரம்.

"மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்
மொழியா ததனை முட்டின்று முடித்தல்"

எனவும்;

தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம்,
61-வது சூத்திரம்.

"எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே"§

எனவுங் கூறிய சூத்திரங்களின் விதிகளையும், "விதிக்கத் தகுவனவற்றை எல்லாந் தனித்தனி வரையறுத்து விதிக்கப்புகின், அதற்கோர் வரையறை யின்மையின் வகுத்து விதித்தனவற்றின்

† இலக்கணவிளக்கம், எழுத்ததிகாரம், உருபு புணரியல், 11-வது சூத்திரம்.

‡ இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், பொதுவியல், 78-வது சூத்திரம்.

§ முத்துவீரியம், சொல்லதிகாரம், ஒழிபியல், 91-வது சூத்திரம்

இலக்கணங்களை ஏதுவாகக்கொண்டு, வகுத்து விதியுரையாதனவற்றையும் ஒப்புமைக் கருதி வகுத்து இதுவும் அதுவென விதியுரைத்துக் கொள்க" என்னும் விதியையும் அனுசரித்து "நாடான்' என்பதையும் அரசர் பெயர்களில் ஒன்றெனத் துணியப்படும்.

இலக்கணக்கொத்து, பாயிரம், 8-வது சூத்திரம்.

"விதிகளிற் சிலசில வெளிப்படா தாயி
னுபலக் கணத்தினை யோர்ந்தே யுணர்க"

என இலக்கணக் கொத்துரையார் கூறியவாறு, சொல்லப்படாத பெயர்களை சொல்லப்பட்டவற்றினோடு உபலக்கணவிதியால் கொள்ளப்படும். உபலக்கணம் என்றால் "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே"* என்னும் நன்னூல் சூத்திரத்தால் "ஒன்றற்குக் கூறிய விதியைக்கொண்டு அதனோடு இயைபு உடைத்தாய்க் கூறாது ஒழிந்துள்ள பிறவற்றினையும் எடுத்தாளுதல்" என்பதாம். தொல்காப்பியரும், மரபியலுள் "பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" என முற்றுங் கூறுதற்கு வரையறை யிலவாகலின் அங்ஙனங் கூறி யொதுக்கினர். இவ்விதம் தொல்காப்பியர், நன்னூலார், இலக்கண விளக்கத்தார், முத்துவீரியர் முதலிய இலக்கணநூலார்கள் மாத்திரங் கூறியதல்ல; திவாகர நூலாசிரியராகிய சேந்தனும் தாமியற்றிய திவாகரம், முதலாவது தெய்வப் பெயர்த்தொகுதி, முதலாவது சூத்திரத்தின் கடையில் தமக்கு எட்டாதப் பெயர்களும், தம்நூலில் குறித்திடப்படாத பெயர்களும் இன்னும் அநேகம் என விளக்க "எண்ணிய நாமம் இன்னவும் பலவே" எனக் கடையலங்காரம் இட்டு "வந்தது கொண்டு வாராத துணர்த்தன்"¶ என்னுந் தொல்காப்பியச் சூத்திர முடிபை நன்கு விளக்கி யிருக்கின்றார். இவைகளுக் கேற்பவே சிவன் பெயர்கள் அறுபத்து நாலென சேந்தன் திவாகரத்திலும், அறுபத்தாறென சூடாமணி நிகண்டிலும், தொண்ணூற்றைந்தென பிங்கல நிகண்டிலுங் கண்டிருக்கின்றன. இப்பெயர்கள் அல்லாமல் இன்னுந் தொள்ளாயிரம் பெயர்கள் சிவபிரானுக்கு உண்டென சிவசகஸ்திர நாமத்தால் வெளிப்படுகின்றன. அப்படி வெளிப்படும் பெயர்களை திவா

* நன்னூல், பொதுவியல், 7-வது சூத்திரம்; முத்துவீரியம், சொல்லதிகாரம், ஒழிபியல் 113-வது சூத்திரம்.

¶ தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், 110-வது சூத்திரம்.

கர நிகண்டார்கள் தேடித் தீட்டாததால், அவைகள் சிவபிரானைக் குறிக்கா தெனக் கூற முடியுமோ? அப்பெயர்களுஞ் சிவபிரானது குண குணங்களையே விளக்குகின்றன. அதனால் அவைகளையுஞ் சிவபிரானுக்குரிய பெயர்கள் எனவே கொள்ளல் வேண்டும். இவைகளைப்போல் திவாகர நிகண்டுகளிற் கூறிய அரசர் பெயர்களில் ஒன்றென வெளிப்படுத்தப்படாத "நாடான்" என்பதும் மற்ற அரசர் பெயர்களோடு "ஒப்பின் முடிதலால்" * அரசனையே குறிக்குமெனத் துணியப்படும். "எருதும் வண்டியும் ஒத்தால், மேடும் பள்ளமும் ஏறும்" என்பதைப்போல் "இலக்கியமும், இலக்கணமும்" ஒத்து வரும்போது அரசரைக் குறிக்காதெனல் கூடுமோ? அதனால் "நாடான்" என்பதும் அரசனைக் குறிக்குமெனவே முடித்துரைக்கப்படும்.

19. திவாகர நிகண்டுகளில் குறித்திடப்படாத நாடு சம்பந்தப்படும் அரசர் பெயர்கள்.

1. செங்கோலன்:—செங்கோல்=ஆணை நடத்துங்கோல், அதனையுடையவன் செங்கோலன். அதாவது செவ்விய கோல் பெறலின் செங்கோலன் எனப்பட்டது. இது உவமையாகு பெயர்.

2. தோன்றல்:—விளங்கல் அல்லது விளங்கவைப்பவன். தொழிற் பெயர். தோன்று-பகுதி, அல்-விகுதி, உகரக்கேடு சந்தி. ஆகு பெயராய் அரசனைக் காட்டியது.

3. நராதிபன்:—நரர்=மானிடர். அவர்கட்குத் தலைமை பூண்டொழுகுபவன் நராதிபன்.

4. நரேசன்:—நரர்=மானிடர். அவர்கட்குத் தலைமை பூண்டவன் நரேசன்.

5. வாகுசன்:—வாகு=தோள். அதில் உதித்தவன் வாகுசன்.

6. அதிபதி:—அதிதி=பூமி. அதனையுடையவன் அதிபதி அல்லது அதிபன்.

---

* நன்னூல், பொதுப்பாயிரம், 14-வது சூத்திரம்.

7. அவனிபன்:—அவனி=பூமி. அதை யுடையவன் அவனிபன் அல்லது அவனிபாலன்.

8. ஆதிபன்:—ஆதி=இடம். அதனை யுடையவன் ஆதிபன்.

9. உலோகபாலன்:-உலகம்=பூமி. அதனையுடையவன்உலோகபாலன்

10. காணியாட்சி:—காணி=பூமி. அதனையுடையவன் காணியாட்சி.

11. கிராமணி:—என்பது "அடைவுள கிராம முற்றோன் கிராமணி யாகு மென்றே" என்னுஞ் சூடாமணி நிகண்டால் "கிராமத்தை யுடைய வரசனே கிராமணி யாவன்" எனப்படும். "Gramonies are original land holders=கிராமணிகள் பூர்வம் நிலபாத்தியதை யுடையவர்" (Vide, Madras Government Museum Bulletin, Vol. III. No. I. P. 35.) ஆகவே, கிராமணி=கிராமத்தை யுடையவன் என விளங்குவன். அதாவது அரசன் எனப்படுவன்.

12. கோபதி:—கோ=பூமி. அதனை யுடையவன் கோபதி.

13. சகதிபதி:—சகதி=பூமி. அதனை யுடையவன் சகதிபதி அல்லது சகதிபாலன்.

14. தரணிபன்:—தரணி=பூமி. அதனை யுடையவன் தரணிபன்.

15. தராதிபன்:—தராதிபம்=பூமி. அதனை யுடையவன் தராதிபன் அல்லது தராபதி.

16. தேசாதிபதி:—தேசம்=நாடு. அதனை யுடையவன் தேசாதிபதி *

17. நேமிவலவன்:—நேமிவலயம்=பூமண்டலம். அதனை யுடையவன் நேமிவலவன்.

18. புரபதி:—புரம்=நகரம். அதனை யுடையவன் புரபதி.

19. புவிமணி:—புவி=பூமிக்கு, மணி=இரத்தினம். அதாவது பூமிக்கு இரத்தினம். அல்லது அரசன் எனப்படுவன்.

20. பூச்சக்கரன்:—பூச்சக்கரம்=பூமி. அதனை யுடையவன் பூச்சக்கரன்.

21. பூபதி:—பூ=பூமி. அதனை யுடையவன் பூபதி அல்லது பூபன்.

---

* தேசாதி, தேசாயி—கவரை சாதித்தலைவன். (Vide, Thurston's Castes and Tribes of Southern India, Vol. II p. 123)

22. பூமிபாலன்:—பூமி=தேசம். அதனை யுடையவன் பூமிபாலன் அல்லது பூமியான்.

23. மகிபதி:-மகி=பூமி. அதனையுடையவன் மகிபதி அல்லதுமகிபன்.

24. மண்டலாதிபன்:—மண்டலம்=தேசம். அதனை யுடையவன் மண்டலாதிபன் அல்லது மண்டலேசன்.

25. வசுதாதிபன்:—வசுதை=பூமி. அதனை யுடையவன் வசுதாதிபன். இன்னமும் பலவே.

இந்த இருபத்தைந்து பெயர்களும் அரசர்களைக் குறிக்கும். அவற்றுள் ஐந்து பெயர்கள் அரசர்களுக்குரிய "செங்கோல்" முதலிய அங்கங்களைக் குறிக்கும். மற்ற இருபது பெயர்களும் அரசர்களுக்கு நாடுடைமையால் ஏற்பட்ட பெயர்கள் ஆகும். இப்பெயர்களை "சேந்தனார், பிங்கலர், மண்டல புருடர்" முதலிய நிகண்டாசிரியர்கள் அரசர் பெயர்களின் அளவு ஆராயின் வரம்பின்றி ஓடுமெனக் கருதி "நாடார்" என்னும் பெயரை அரசர் பெயர்களில் ஒன்றெனச் சேர்த்து எண்ணாது விட்டமை போல்; மேற்கூறிய இருபத்தைந்து பெயர்களையும் சேர்த்தெண்ணாது விட்டனர்கள். அப்படி விட்டமையால் அப்பெயர்களை யுடையவர்கள் அரசர்களாகாரோ? அல்லது அப்பெயர்கள் அரசரைக் குறிக்காவோ? குறிக்குமேல், அவைகளோடு ஒரு பொருட்கொண்டு வரும் "நாடான்" என்பதும் அரசனைக் குறிக்குமெனத் துணிதற்கு ஐய மென்னை? வடநாட் டரசர்களுக்கு உரியதென வழங்கி வரும் "பூமியான்" * என்னும் பெயரை அந்த வடமொழி நிகண்டாகிய அமரத்தில் கூறப்பட்டில்லை. அப்படியில்லாமையால் அந்த பட்டப்பெயரை நாளதும் வைத்திருப்பவர்கள் அரசர்கள் ஆகாரோ? அதனாலேயே திவாகர நூலாசிரியராகிய சேந்தனார் "இன்னமும் பலவே" எனக் கூறிப் போந்தனர். அப்படிக் கூறியதால்;

"வருவவுள வெனினும் வந்தவற் றியலான்
திரிவின்றி முடித்தல் றெள்ளியோர் கடனே"

என்னுஞ் சூத்திர முடிபால், "நாடார்" என்பதும் அரசர் பெயரெனவும், பிறவும் வருவன உளவாயினுங் கொள்ளப்படுமென்பதும் அவர் துணிபென்க. ஆனால் திவாகர நிகண்டார்கள்

* Tod's Annals and Antiquities of Rajasthan, Vol. 1, P. 495.

"நாடான்" அல்லது "நாடன்" என்னும் பெயரை அரசர் பெயர்களில் ஒன்றெனச் சேர்த்தெண்ணாது விடினும், அதே திவாகர நிகண்டுகளில் இன்னோர் பக்கத்தில் பிரஸ்தாபித்து அரசரைக் குறிக்கு மெனவே விளக்கி யிருக்கின்றார். அதைப் பின்னால் விளக்குவாம். ஆகிய இத்தியாதி பிரமாணங்களைக் கொண்டே நூலாசிரியர்கள்;

தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல்,
171-வது சூத்திரம்.

"நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தையும், உலக வழக்கையும், நூல் வழக்கையுந் தழுவி "நாடார்" என்னும் பெயரை அரசர் பெயர்களில் ஒன்றென மதித்து, சங்கச் செய்யுள்கள் முதலிய நூற்களில் "நேரிதி னுணர்ந்தோர் நெறிபடுத் தினர்கள்" எனவும், "எழுதுகிறது பெரியதல்ல, இனம் அறிந்து சேர்க்கிறதே பெரியதென்பர்" எனவும் கூறுவர் பெரியார். ஆகவே,

"நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறு"

என்னுந் துணிபால் ஊரையடுத்தப் பெயர்களே அரசரைக் குறிக்குமென விளங்கலால் "நாடான்" என்பதும் ஊரையடுத்தப் பெயராயினமையின் "செல்வழி யறிதல் வழக்கத் தான" என்னுஞ் சூத்திரத்தால் அதுவும் அரசரைக் குறிக்குமெனப் பசுமரத் தாணியைப்போல் நாட்டப்படும். நாடு நானிலத்திற்கும் பொதுப் பெயர் என சீவகசிந்தாமணியில் நச்சினார்க்கினியரும், நாடு சம்பந்தம் அரசருக்குரியது என மனுஸ்மிருதியுங் கூறியதால், "நாடார் அரசர்" எனப்படுவர்.

20. நாடார் என்பது நாடு, நகர், நதி, மலைப் பெயர்க ளோடுஞ் சேர்ந்து வரும்.

"நாடன், நாடான்" என்னும் பெயர்களை நாட்டுப் பெயர்களோடும், நகரூர்ப் பெயர்களோடும், ஆற்றுப் பெயர்களோடும், மலைப்பெயர்களோடும் சேர்த்து உரைப்பது நூல்வழக்கும் உலக வழக்குமாம்.

தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்,
74-வது சூத்திரம்.

"ஊரும் பெயரு முடைத்தொழிற் கருவியும்
யாருஞ் சார்த்தி யவையவை பெறுமே."

நச்சினார்க்கினியருரை.

இது மேற்கூறிய அந்தணர்க்கும், அரசர்க்கும் உரியனவற்றோடு ஒழிந்த சாதியோர்க்கும் ஒப்பன உடன் கூறுகின்றது. (இ-ள்.) "நான்கு சாதியாரும் பிறந்த ஊரும் அவர்தம் பெயரும் அவர் சாதிக்கு உரித்தென்றற்கேற்ற கருவியும் யாருஞ் சார்த்தப் பட்டவை அவை பெறுப. எ-று. இம் மூன்றும் வரையறுத்துச் சொல்லப்படா எல்லாச் சாதியார்க்கும் ஒப்பச் செல்லுமென்பது கருத்து. எற்றுக்கு? இவை சாதிபற்றி வேறுபடாப் பொருளாகலின், ஊரும் பெயருமென்பன. உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகன், கடியலூரு ருத்திரங் கண்ணன் என்பன அந்தணர்க்குரியன; உறையூர்ச்சோழன் மதுரைப் பாண்டியன் என்பன அரசர்க்குரியன; காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணன், மதுரை அறுவைவாணிகன், இளவேட்டன் என்பன வணிகர்க்குரியன; அம்பர்கிழான் நாகன், வல்லங் கிழான் மாறன் என்பன வேளாளர்க்குரியன. இனி உடைத்தொழிற் கருவியென்பன, அந்தணாளர்க்குச் சுருவையுஞ் சமிதை குறைக்குங் கருவியும் முதலாயின; அரசர்க்குக் குடியுங் கூழும் அமைச்சும் நட்பும் முதலாயின; வணிகர்க்கு நாவாயும் மணியும் மருந்தும் முதலாயின; வேளாளர்க்கு நாஞ்சிலுஞ் சகடமும் முதலாயின. பிறவும் அன்ன. அவையெல்லாம் அவரவர் செய்யுட் குரிய வென்பது." என்பதாம்.

உறையூர்ச்சோழன்
மதுரைப்பாண்டியன்

இச்சூத்திரத்தில் அரசர்க்கு ஊர்ப்பெயராகிய உறையூர், மதுரை என்பன முன்னும், சாதிப்பெயராகிய சோழன், பாண்டியன் என்பவைகளைப் பின்னுங் கூறப்பட்டதைப்போல்; நாடன், நாடான் என்னும் அரசருக்குரிய சாதிப்பெயர்களையும் நாடு, நகர், மலை முதலியவைகளுக்குப் பின்சேர்த்து அவைகளை யுடையவன் என்னுங் கருத்தில் எண்ணப்பட்டன.

குரு நாடன்
குரு நாடான்
காந்தார நாடன்
காந்தார நாடான் என்பன நாட்டுப் பெயர்களோடு சேர்ந்து, குருநாட்டிற்குஅரசன் என்னுங் கருத்தில் நிற்கின்றன.

விருதுநகர் நாடன்
விருதுநகர் நாடான்
சிவகாசி நாடன்
சிவகாசி நாடான் என்பன நகரூர்ப் பெயர்களோடு சேர்ந்து, விருதுநகருக்கு அரசன் என்னுங் கருத்தில் நிற்கின்றன.

பொன்னி நாடன்
பொன்னி நாடான்
பொருநை நாடன்
பொருநை நாடான் என்பன ஆற்றுப் பெயர்களோடு சேர்ந்து, பொன்னி நதிக்கு அரசன் என்னுங் கருத்தில் நிற்கின்றன.

கொல்லி நாடன்
கொல்லி நாடான்
பொதியை நாடன்
பொதியை நாடான் என்பன மலைப் பெயர்களோடு சேர்ந்து, கொல்லி மலைக்கு அரசன் என்னுங் கருத்தில் நிற்கின்றன.*

இவைகளோடு குஜராத்து ராஜா, மைசூர் ராஜா, மலையாள அரசன், கொச்சி அரசன் என்னும் பகுதிகளிலும் அரசரது இயற்பெயர் அல்லது இடுகுறிப்பெயர்களை நீக்கி, அவர்கள் ஆண்டு வரும் ஊர்ப்பெயர்களோடு, பட்டப்பெயரையுஞ் சேர்த்து நாளதுங் கூறி வழங்கி வருவனபோல்; மேற்கூறிய பாண்டிய நாட்டு சிற்றரசரும் அவர்கள் ஆண்ட ஊர்ப்பெயர்களோடு, பட்டப்பெயரை

---

* இலக்கணவிளக்கம், பொருளதிகாரம், அகத்திணையியல், 222-வது சூத்திரம்; தமிழ் இலக்கணத்தெளிவு, பொதுவியல், 274-வது சூத்திரம்.

யுஞ் சேர்த்து, கெண்டியூர் நாடாள்வார், தலண்டூர் நாடாள்வார், கெங்கையாறு நாடாள்வார், வீரகெங்கா நாடாள்வார் எனவுங் கூறி வந்தனர்.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம்,
20-வது சூத்திரம்.

"செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்"*

என்னுஞ் சூத்திரத்தை யனுசரித்து நாட்டினது செயற்கையால் **அரசன் நாடான்** எனப்பட்டனன். இந்த "நாடான்" என்பது அதற்குரிய ஆக்கமாகிய "நாடோடும், மலையோடும், ஆற்றோடும்" சேர்ந்து வரும். இவ்வகையை முன்னிட்டே "**தலண்டூர் நாடாள் வார்**" முதலாயின வந்தன வென்க. இவ்வழக்கை,

தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம்,
41-வது சூத்திரம்.

"சிறப்பி னாகிய பெயர் நிலைக் கிளவிக்கு
மியற் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்"

எனத் தொல்காப்பியரும்;

"இயற் பெயர்க் கிளவித் தலைவர் கிசையார்"

என இலக்கணவிளக்கத்தாருங் கூறி அது வழக்கென ஒப்புகின்றனர்.

"It is the Dravidian custom to call rulers by their title and not by any personal name." Vide, The Manual of the Administration of the Madras Presidency, Vol. I ch. I, P. 120.

"திராவிட தேச வழக்கப்பிரகாரம் அரசரை பட்டப்பெயரால் கூப்பிடுதலே யன்றி, இயற்பெயரால் கூப்பிடுகிறதில்லை." என அட்மினிஸ்டிரேஷன் புத்தகத்தில் கூறியுள்ளது. இவ்வழக்கை யனுசரித்தே சந்திரகுல நாடார்கள் நாளதும் பட்டப்பெயரையே குலப் பெயராகவும், சாதிப்பெயராகவும், பூர்வமுதல் தொன்றுதொட்டு வைத்து வழங்கி வருகின்றனர். இதை இன்றும் உலகவழக்கில் கண்டுதெளிக.

---

* இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், பொதுவியல், 19-வது சூத்திரம்.

திராவிடதேச அரசருக்குரிய "சேரன், சோழன், பாண்டியன்" என்னும் பெயர்களை "சேரகுலம், பாண்டியகுலம், சோழகுலம்" எனக் குலப்பெயராகவும்; வஞ்சிபலராம சேரன், வீரசேகர சோழன், சந்திரசேகர பாண்டியன்" எனப் பட்டப்பெயர்களாகவும் வைத்து ஆண்டுவந்ததைப் போலவும்; "ராஜா" என்னும் பெயரை "ராஜகுலம், ராஜஜாதி" எனக் குலப்பெயராகவும், "ஏகாம்பர ராஜா" எனப் பட்டப்பெயராகவும், 'ராஜா, ராஜாத்தி' என ஆண் பெண்களையுஞ் சுட்டும் சாதிப்பெயராகவும் வைத்து வழங்கி வருவதைப்போலவும்; "செட்டி" என்னும் பெயரை "செட்டிகுலம், செட்டிஜாதி" எனக் குலப்பெயராகவும், "இராமசாமி செட்டி" எனப் பட்டப்பெயராகவும், "செட்டி, செட்டிச்சி" என ஆண் பெண்களையுஞ் சுட்டுஞ் சாதிப்பெயராகவும் வைத்து ஆண்டு வருவதைப் போலவும்; சந்திரகுல பாண்டிய வம்ஸத்திற்குரிய பெயராகிய "நாடார்" என்பதையும் நாடார்குலம், நாடார்சாதி எனக் குலப்பெயராகவும், ராவ்பஹதூர் - இரத்தினசாமி நாடார் எனப் பட்டப்பெயராகவும், "நாடார், நாடாத்தி" என ஆண் பெண்களையுஞ் சுட்டுஞ் சாதிப்பெயராகவும், நாளதும் வைத்து வழங்கி வருகின்றனர். அன்றியும்,

"ஐயர்" என்பது பிராமணருக்குரிய பட்டப்பெயர் என உலக வழக்கானும், நூல்வழக்கானும் விளங்கும். அப்படி விளங்கினும் அப்பெயர் இடுகுறிப்பெயர்களோடு சேர்ந்து, வதிஷ்ட ஐயர், கௌதம ஐயர், திருஞானசம்பந்த ஐயர் என நூல்வழக்கில் வழங்கி வருதல் வழக்கின்றாம். "இராமப்புரவலன், தசரதக்கொற்றவன், சுந்தர மன்னவன்" என்னும் இடுகுறிப் பெயர்களோடு பட்டப்பெயர்களுஞ் சேர்ந்து நூல்வழக்கில் வழங்கி வராததைப் போல்; "இராம நாடான், தசரத நாடான், சுந்தர நாடான்" என்பவைபோன்ற பிரயோகங்களும் நூல்வழக்கில் வழங்கிவராது, உலக வழக்கில் மாத்திரம் வழங்கிவர நேர்ந்ததென வறிக.

அரசருக்குரிய தசாங்கங்கள் நாடு, நகர், மலை, ஆறு, யானை, குதிரை, தேர், மாலை, கொடி, முரசு" என்னும் பத்தாகும். இவற்றுள் முற்கூறிய நாடு என்பதிலேயே நகர், மலை, ஆறு முதலியவைகள் உள்ளடங்கி நிற்கும். (நெய்தநிலத்தில் நகரும், முலலை நிலத்தில் ஆறும், குறிஞ்சி நிலத்தில் மலையும் உட்படும்.) அப்படி உட்

கொண்ட நெய்தல், முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை என்னும் இந்நிலங்கள் ஐந்தையும் ஒவ்வொரு புராணத்திலும் பெரியோர்கள் நாட்டுப்படலத்திலேயே அடக்கி ஆண்டிருத்தலைக் காணலாம். நாடு என்பது நானிலத்திற்கும் பொதுப்பெயர் என சீவகசிந்தாமணியில் நச்சினார்க்கினியருங் கூறுவர். இவற்றால் நாடே மற்றவைகளை உள்ளடக்கி தலைமை யெய்தியதெனவு மறியலாம். அவைகளை யாளும் அரசர்கள் அத்தசாங்க வுருப்புகளை யெல்லாம் ஒருங்கே அடங்கி நிற்கும் நாடடியாகப் பிறந்த பெயராகிய நாடார் என்பதாலேயே அழைக்கப்பட்டு வந்தனர். அரசர்கள் நகரைமாத்திரம் உரியவர்களல்லர். நகரைமாத்திரம் உரியவர்களாயிருப்பின் நகரார் எனப்படுவர். அப்படி நகரைமாத்திரம் அவர்கள் தனித் தாளாமையாலேயே நகரார் என்றழைக்கப் படாமைக்குக் காரணமு மதுவேயாம்.

21. நாடன் என்பது அரசரைக் குறிக்கும்.

சேரன் பெயர்.

சேந்தன் திவாகரம்.

பூழிய னுதியன் கொங்கன் பொறையன்
வானவன் குட்டுவன் வான வரம்பன்
வில்லவன் குடநாடன் வஞ்சி வேந்தன்
கொல்லிச் சிலம்பன் கோதை கேரளன்
போந்தின் கண்ணிக்கோன் பொருநைத் துறைவன்
சேரலன் மலையமான் கோச்சேரன் பெயரே.

பிங்கல நிகண்டு.

பூழிய னுதியன் கொங்கன் பொறையன்
வானவன் குட்டுவன் வான வரம்பன்
வில்லவன் குடநாடன் வஞ்சி வேந்தன்
கொல்லிச் சிலம்பன் கோதை கேரளன்
பொருநைத் துறைவன் போந்தின் கண்ணியன்
மலையன் மலையமான் சேரன் பேரே.

சூடாமணி நிகண்டு.

வில்லவன் கொங்கன் வஞ்சி வேந்தனே போந்தின் றாரோன்
தொல்லி வெற்பன் குடக்கோக் குட்டுவன் குடகன் கோதை
மல்லல்சே ருதியன் வான வரம்பனே மலய மானே
செல்லறீர் பொருநை யாற்றுறன் சேரலன் சேரன் பேயரே.

இப்பிரயோகங்கள் சேரனுக்குரிய பெயர்களைக் கூறுகின்றன. அவற்றில்:—

சேரனுக்கு, திவாகரம், பிங்கலந்தைகளில் "குடநாடன்" எனவும்,
,, சூடாமணி நிகண்டில் "குடக்கோ" எனவும்,
,, சதுரகராதி, பேரகராதிகளில் "குடநாடன்" எனவும்,
,, ,, ,, "குடக்கோ" எனவும்,
,, இரட்லர், வின்ஸ்லோ அகராதிகளில் "குடநாடன்" எனவும்,
,, ,, ,, "குடக்கோ" எனவும்,
,, ,, ,, "குடக்கோன்" எனவும்
பெயர்கள் கண்டிருக்கின்றன.

இத்தொடர் மொழிகளாகிய "குடநாடன், குடக்கோ, குடக்கோன்" என்னும் பெயர்களில் வரும் "குடகு" என்னும் நாட்டுப் பெயரைப் பிரித்து எடுப்பின், "நாடன், கோ, கோன்" என்னும் பெயர்களே மிச்சமாகும். இம்மூன்று பெயர்களும் ஒருபொருளையே குறித்து, "நாடாளுகை" அல்லது "நாடுடைமை" என்னும் பொருளை விளக்கும். நாடாளுகையும், நாடுடைமையும் அரசகுலத்தவருக்கு உரிய அமைப்புகள். "கோன், கோ" என்னும் இரண்டு பெயர்களும் அரசர்க்குரிய பெயர்களென திவாகர நிகண்டுகளால் விளங்குவதால், அவற்றுடன் ஒருபொருட் கொண்டுவந்த 'நாடன்' என்னும் பெயரும், அரசருக்குரிய பெயரெனவே விளங்கும். ஆகவே "நாடன், கோன், கோ" என்னும் அரச குலப்பெயர்கள் மூன்றும் ஒரு பொருளிலேயே நிற்குமென விளங்கின. ஆனதால்,

நாடன்=கோன்.
=கோ.
=அரசன் எனப்படும்.

நாடன்=சோழன் (சதுரகராதி, பேரகராதி)=An epithet of the Chola kings=சோழ ராஜர்களது பட்டப் பெயர் (Rottler's and Winslow's Tamil and English Dictionaries.)

=An epithet of Pandiyan Kings=பாண்டிய ராஜர்களது பட்டப்பெயர். (Tarangambadi Tamil and English Dictionary, P. 436.)

=This is also a title of Chola Kings (G. U. Pope's Naladiyar, P. 9.)
=நாட்டரசன், The Lord of the Land (Naladiyar, P. 376 by G. U. Pope, M. A., D. D.)
=a ruler, owner of the Land. (G. U. Pope's Lexicon and concordance to Tiruvasagam, P. 50, 188.)

கோன், கோ=அரசன் (சதுரகராதி, பேரகராதி)=A King=அரசன் (Rottler's and Winslow's Dictionaries.)

"கோன், கோ" என்னும் பெயர்களை "அரசர்" பெயர்கள் எனக் கூறியிருத்தலோடு "நாடன்" என்னும் பெயரையும் "சோழ ராஜாக்களுக்கும், பாண்டிய ராஜாக்களுக்கும்" உரிய பட்டப் பெயரெனவுங் கூறியிருத்தலால், மேற்படி மூன்று பெயர்களும் அரசன் என்னும் பொருளிலேயே நிற்கும் என விளங்கின.

"சந்திர குலச்சேரனை குடநாடன்"* என்று அழைத்திருத்தலோடு "வஞ்சி வேந்தன்" எனவும், மேற்படி நூற்களிலேயே கூறப்பட்டிருக்கின்றன. வஞ்சியும், குடகும் சேரனது நாடுகள்.

வஞ்சி=கருவூர் (சதுரகராதி, பேரகராதி.)
=A town of the Chera country=சேரனூர் (Rottler and Winslow.)

குடகு=மேனாடு (சதுரகராதி, பேரகராதி.)
=A country on the Malabar coast=குடகு தேசம் (Rottler and Winslow.)

இவற்றால் "வஞ்சியும், குடகும்" சேரனது நாடுகள் என விளங்கின. அந்நாட்டோடு சேர்ந்துவரும் "வேந்தன், நாடன்" என்னும் பெயர்களும், அந்த நாட்டையுடைய அரசனைக் குறிக்கும். அதாவது சேரனைக் குறிக்கும். "வேந்தன்" என்னும் பதத்திற்கு "அரசன்" என்னும் பொருளே ஏற்றதெனத் திவாகர நிகண்டகராதிகள் கூறுகின்றன. இவ்வேந்தனோடு ஒரு பொருட்கொண்டு வந்த "நாடன்" என்னும் பதமும் "அரசன்" என்னும் பொருளிலேயே நிற்கும். இது "ஒப்பின் முடித்தல்" என்னும்

* குடநாடன்—A King named சேரன். who reigned on the west. [Rottler and Winslow.]

உத்தி. மேலே 'நாடன்' என்னும் பெயரைச் சோழ பாண்டிய ராஜாக்களுக்குரிய பட்டப்பெயர்களின் ஒன்றெனவுங் கூறியிருத்தலால், அந்நாடன் என்னும் பெயரும் அரசன் என்னும் பொருளிலேயே நிற்கும் எனத் துணியப்படும். அதனாலேயே "சேரனை குடநாடன்" என்றனர். ஆனதால்,

நாடன் = வேந்தன்.

= அரசன் எனப்படும். இவற்றாலும் நாடன் என்பது அரசனைக் குறித்தமை காண்க.

சேரன் சந்திர குலத்தவன்.

அரசர்கள் "சூரிய குலம், சந்திர குலம்"* என இரு குலத்தில் அடங்குவர்.

பன்னிரு பாட்டியல், எழுத்தியல், வருணம்,
அரசர்.

"இந்திரன் வெங்கதிர் சந்திரன் படைத்தன
துன்னருஞ் சிறப்பின் மன்னவர் சாதி."

இலக்கணநூல் பாட்டியல், வருணப் பொருத்தம்,
12-வது செய்யுள்.

காலமன் சந்திர னிந்திரன் கண்டன் காவலற்கு
மாலயன் சேயரன் கண்டன மாமறை யோற்குநிதி
காலவ னந்தகன் கண்ட னவற்கு வணிகருக்கு
வேலயன் கண்டன வேளாள ருக்கும் விலைக்கிலையே

என்னும் பாட்டியல்களுள் கூறிய "இந்திரன், சந்திரன், சூரியன்" ஆகிய மூவர்களுள் இந்திரன் தேவர்களுக் கரசனாயினமையின் அவன் ஒழிந்த மற்ற இருவர்களாகிய "சூரியன், சந்திரன்" ஆகிய இவர்கள் வகையிலேயே அரசர்கள் உதித்ததாகக் கூறியிருக்கின்றது. இதோடு, "வேந்தனே யரசன் திங்கள் வியாழமிந்திர னுதித்தன்" என நிகண்டாரும் சூரிய சந்திர குலத்திலுதித்தவர்களுக்கே 'அரசர்' என்னும் பெயர் உரியதெனவுங் கூறியிருத்தலால், சேரன் அவ்விரு குலத்திலேயே அடங்குவன்.

"மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மணவடுத் தீத்துக்."

---

* வியாசபாரதம், சபாபர்வம், பதினன்காவது அத்தியாயம்.

என பதிற்றுப்பத்து, மூன்றும்பத்து, கடைப்பதிகத்தில் சேர குலத்தவனான இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனார் 'சந்திர குலத்தன்' என விளக்க "மதி யுறழ் மரபு" என்றமையின், "சேரன் சந்திர குலத்தவன்" என விளங்குவன். இதோடு யாம் எழுதியுள்ள "க்ஷத்திரியகுல விளக்கம்" 232-வது பக்கம் முதல், 240-வது பக்கம் வரை விரிவாகக் காண்க.

சோழன் பெயர்.

சேந்தன் திவாகரம்.

"சென்னி வளவன் கிள்ளி செம்பியன்
பொன்னித் துறைவன் புலிக்கொடிப் புரவலன்
நேரிய னார்த்தார்க்கோ னேரிறை யபயன்
நேரி வெற்பன் கோழி வேந்தன்
சூரியன் புனனாடன் கோச்சோழன் பெயரே."

பிங்கல நிகண்டு.

"சென்னி வளவன் செம்பியன் கிள்ளி
பொன்னித் துறைவன் புலிக்கொடி யோன்மால்
கோழி வேந்த னேரி வெற்பன்
ஆரின் கண்ணிய னேரிய னபயன்
சூரியன் புனனாடன் சோழன் பெயரே."

சூடாமணி நிகண்டு.

நேரியன் சென்னி பொன்னிந் துறைவனே நேரி வெற்பன்
ஆரின்மா லயனே கிள்ளி யபயனே கோழி வேந்தன்
சீரிய வளவன் மிக்க செம்பியன் புலி யுயர்த்தோன்
சூரியன் புனனாடன் கோச் சோழன்மா லென்றுஞ் சொல்லும்.

இப் பிரயோகங்கள் சோழனுக்குரிய பெயர்களைக் கூறுகின்றன. அவற்றில்:—

சோழனுக்கு, திவாகரத்தில் "புனனாடன்"* எனவும்.
,, ,, "கோழிவேந்தன்" எனவும்.
,, ,, "ஆர்த்தார்க்கோன்" எனவும்.

* புனனாடன்—A King of the solar race. as lord of புனனாடு சோழன் [Winslow.]

சோழனுக்கு திவாகரத்தில் "நேரிறை" எனவும்.
,, ,, 'புலிக்கொடிப் புரவலன்' எனவும்.
,, பிங்கலந்தை, சூடாமணிகளில் "புனனாடன்" எனவும்.
,, ,, 'கோழிவேந்தன்' எனவும்.
சதுரகராதி, பெயரகராதிகளில் "புனனாடன்" எனவும்,
,, ,, "நேரிறை" எனவும்,
,, ,, "கோழிவேந்தன்" எனவும்,
,, இரட்லர் வின்ஸ்லோ அகராதிகளில் "புனனாடன்"
,, ,, 'புலிக்கொடிப்புரவலன்' எனவும்,
,, ,, "நேரிறை" எனவும்,
,, ,, "கோழிவேந்தன்" எனவும்
பெயர்கள் கண்டிருக்கின்றன.

இந்நூற்களில் வரும் "புனனாடன்' புலிக்கொடிப் புரவலன், ஆர்த்தார்க்கோன், நேரிறை, கோழிவேந்தன்" என்னும் பெயர்கள் சோழனுக்குரிய குலப்பெயர்களெனக் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள் முதற்பகுதிகளாகிய "புனல், புலிக்கொடி, ஆத்தி, நேரி, கோழி" என்பவை சோழனது பொருள்கள். புலிக்கொடி அவனது கொடியையும், ஆத்தி அவனது மாலையையும், நேரி அவனதுமலையையும், கோழி அவனது இராஜதானியாகிய உறையூரையும், புனல் அவனது காவேரியாற்றையுங் குறிக்கின்றன. இவற்றிற்கரசன் சோழராஜனாதலால், அவனை விளக்குதற் பொருட்டே "நாடன், புரவலன், கோன், இறை, வேந்தன்" என்னும் அரசப்பட்டப் பெயர்களை அவற்றோடு சேர்த்து, "புனல் + நாடன் = புனனாடன்" எனவும், "புலிக்கோடி + புரவலன் = புலிக்கொடி புரவலன்" எனவும், "ஆத்தி + தார் + கோன் = ஆர்த்தார்க்கோன்" எனவும், நேரி + இறை = நேரிறை, எனவும், "கோழி + வேந்தன் = கோழி வேந்தன்" எனவுந் தொகுக்கப்பட்டிருக்கின்றன. "புரவலன், கோன், இறை, வேந்தன்" என்னும் பெயர்கள் அரசர் பெயர்கள் என மேலே எண்பித்திருத்தலால், அவற்றோடு ஒரு பொருட்கொண்டு வந்த பெயராகிய "நாடன்" என்பதும் அரசர் பெயரெனவே விளங்கும். ஆனதால்,

நாடன் = அரசன்,
= இறை,
= கோன்,
= புரவலன்,

=வேந்தன் எனப்படும். இவற்றாலும் "நாடான்" என்பது அரசனைக் குறித்தமை காண்க.

பாண்டியன் பெயர்.

சேந்தன் திவாகரம்.

"செழியன் றமிழ்நாடன் கூடற்கோ தென்னவன்
வழுதி மீனவன் பஞ்சவன் மாறன்
கௌரியன் வேம்பின் கண்ணிக்கோ கைதவன்
பொதியப் பொருப்பன் புனல்வைகைத் துறைவன்
குமரிச் சேர்ப்பன் கோப் பாண்டியனே.

இதில் பாண்டியனுக்குரிய பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில்:—

பாண்டியனுக்கு திவாகரத்தில் 'தமிழ் நாடன்' * எனவும்,
" " 'கூடற்கோ' எனவும்,
" " 'வேம்பின்கண்ணிக்கோ' எனவும்
" சதுரகராதி பேரகராதிகளில் 'கூடற்கோமான்' எனவும்,
" " " 'தமிழ் நாடன்' எனவும்,
" இரட்லர், வின்சிலோ அகராதிகளில் 'தமிழ்நாடன்' எனவும்
" " " 'கூடற்கோமான்' எனவும்,
" " " 'வேம்பின்கண்ணிக்கோ' எனவும்
பெயர்கள் கண்டிருக்கின்றன.

இவற்றில் பாண்டியனைத் "தமிழ் நாடன், கூடற்கோமான், கூடற்கோ, வேம்பின் கண்ணிக்கோ" என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றில் முதற் பகுதிகளாகிய "தமிழ், கூடல், வேம்பின் கண்ணி" என்பன பாண்டியனது பொருள்களாம். தமிழ் அவனால் வளர்க்கப்பட்ட பாஷையையும், கூடல் அவனால் ஆளப்பட்ட மதுரையையும், வேம்பின்கண்ணி அவனால் அணியப்பட்ட மாலையையுங் குறிப்பன. இவற்றிற் காரசன் பாண்டியனுதலால், அவனை விளக்கும்பொருட்டே " நாடன், கோ, கோமான் " என்னும் அரசப்பட்டப் பெயர்களை அவற்றோடு சேர்த்து, " தமிழ் நாடன், கூடற்கோமான், வேம்பின் கண்ணிக்கோ " எனவும் விளக்கினர். " கோ, கோமான் " என்னும் பெயர்கள் அரசர் பெயர்கள் என மேலே எண்பித்திருத்தலால், அவற்றோடு ஒரு பொருட்

* தமிழ் நாடன்—Any king of the Pandyan race (Winslow.)

கொண்ட பெயராகிய நாடன் என்பதும் அரசன் பெயரெனவே விளங்கும்.

வில்லிபாரதம், சிறப்புப்பாயிரம், 1-வது செய்யுள்.

பொருப்பிலே பிறந்து * தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்.

சிலப்பதிகாரம், புறஞ்சேரி யிறுத்தகாதை,

25, 26-வது வரிகள்.

"மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றலொடு."

என்னுஞ் செய்யுள்களில் கூறியவாறு அகஸ்தியரால் தமிழ் விளங்கியதால், அவரைத் தமிழ்முனி எனவும், சங்கத்தவரால் வளர்க்கப்பட்டமையால், அச்சங்கத்தையும், சங்கப்புலவர்களையும் 'தமிழ்ச்சங்கம், தமிழ்ப் புலவர்" எனவும், இத்தமிழ் ஊற்பவித்து விளங்கியவிடம் பாண்டிய தேசம் ஆனமையால், அப்பாண்டிய நாட்டை தமிழ் நாடு எனவும் விளக்கப்பட்டமைபோல்; பாண்டியன் தமிழையும், அந்நாட்டையும் பாதுகாக்கப்பட்டமையால் தமிழ் நாடன் எனவுங் கூறப்பட்டனன். அகஸ்தியரால் தமிழ் தோன்றியதைப்போல், பாண்டியனால் தமிழ் விர்த்தியடைந்தது. தமிழ்முனி என்றால் தமிழ் ருஷி எனப்படும். இதைப்போல் தமிழ் நாடன் என்றால் தமிழ் அரசன் அல்லது தமிழ் ராஜன் எனப்படும். இதனாலும் நாடன் அரசன் எனப் பொருள் படுதல் காண்க.

கார்த்திகையின் பெயர்.

சேந்தன் திவாகரம்.

"அங்கியா ரலளக்க ராள கிறால்
பொங்கிய நாட ளுவிதன் வாணன்
தங்கொளி யறுமீன் றழனாள் கார்த்திகை."

நாடன்=கார்த்திகை நாள் (சதுரகராதி, போகராதி.)

---

* அகஸ்தியரால் தமிழ் பிறந்தமையின் "பொருப்பிலே பிறந்து" எனவும்; "அகஸ்தியன் பயந்த செஞ்சொல்" எனவுங்கூறி வற்புறுத்தினர் வில்லிபுத்தூரார்.

= The third Lunar asterism = கார்த்திகை நாள் (Winslow's Tamil and English Dictionary, P. 660.)

= The same as கார்த்திகை நாள், Critica, the third Lunar manson of the Hindus (Rottler's Tamil and English Dictionary, Vol. II, Pt. III, P. 190.)

என்னும் பிரமாணங்களால் 'நாடன்' என்பது கிருத்திகை நட்சத்திரத்திற்குப் பெயரென விளங்குகின்றது. கிருத்திகை நட்சத்திரம், நட்சத்திரங்களில் மேம்பட்ட இராஜ நட்சத்திரமாதலால் அதை 'நாடன் நாள்' எனப்பட்டது. 'நாடன் நாள்' என்றால் 'அரசன் நாள்' என்பது பொருள். அந்த அரசனாகிய கிருத்திகை நட்சத்திரத்தில் சந்திரன் பிறந்திருத்தலால் அச்சந்திரனை 'கிருத்திகைபவா' என்று அழைக்கப்பட்டது.

சந்திரன்:—"Krittake Bhava in Nagari. A name of Chandra or the Moon, Krittaka = The constellation*, and Bhava = who is born" (Vide, Wilson's Sanskrit and English Dictionary, P. 213, 214.)

தேவநாகரி பாஷையில் சந்திரனை "கிருத்திகை பவா" எனக் கூறியிருக்கின்றது. 'கிருத்திகை = கிருத்திகை நட்சத்திரத்தில், பாவ = பிறந்தவன்' என்பது பொருள் என வில்ஸன் துரை தாமியற்றிய சமஸ்கிருத இங்கிலீஷ் அகராதியில் குறித்திருக்கின்றார். சந்திரன் இவ்வரசனுளில் பிறந்ததால் அரசன் எனப்பட்டனன்.

அமரம், பிரதமகாண்டம், திக்வர்க்கம், 87-வது சுலோகம்.

ద్విజరాజశ్శశధరో నక్షత్రేశః క్షపాకరః ॥

த்விஜராஜ ஸ்ஸஸ தரோ நக்ஷத்ரேஸ: க்ஷபாகர:

என்னுஞ் சுலோகத்தில் சந்திரனை 'நட்சத்ரேசா' எனக் கூறியிருக்கின்றது. சந்திரன் அரசநட்சத்திரத்தில் பிறந்ததால் நட்சத்திரங்களுக்குத் தலைவன் என விளங்கினன். திவாகரரும் சந்திரனை 'உடுபதி' எனக்கூறி, 'உடு = நட்சத்திரங்களுக்கு, பதி = அரசன்,'

* 'Constellation = a group of fixed stars to which a definite name has been given" Vide, Collins' Graphic English Dictionary.

அதாவது 'நட்சத்திரங்களுக்கு அரசன்' எனவும் பொருள் விரித்தனர். நிகண்டாரும் 'வேந்தனே யரசன் திங்கள் வியாழ மிந்திரனுதித்தன்' என்னுஞ் சூத்திரத்தில் அரசன் என்னும் பெயரை அளித்தனர். அந்நட்சத்திர பலனுக்குரிமையாக சந்திரன் இந்தியாவை யாண்ட இருவகுப்பு அரசர்களுள் ஒரு வகுப்பினர்களுக்கு மூல புருடனாகவுமிருந்துவந்தனன். அதனால் அவ்வகுப்பினர்களை நாளதும் சந்திரகுலத்து அரசர்கள் * என கூறிவருகின்றனர். இச்சந்திர குலத்திலேயே பாண்டியன் உதித்தனன்.

நைடதம், போர்புரி படலம், 6-வது செய்யுள்.

"என்றலுங் கடவுட் டிங்க ளிருங்குல மிழித்துக் கூற
நன்று நன்றென்ன நக்கு நாமவேல் வழுதி சீறி
உன்றலை துணிப்ப னென்று வொளிருவா ளுறையி னீக்கிக்
குன்றெறி வைர வொள்வாள் குரிசின்மேற் கனன்று சென்றான்."

கல்லாடம், 11-வது அகவல்.

"மீனுங் கொடியும் விரிதிரை யைந்துந்
தேனுறை தமிழுந் திருவுறை கூடலு
மணத்தலின் மதிக்குல மன்னவ னாகியும்."

இவற்றில் வரும் 'திங்கள்குலம்' என்பதும், மதிக்குலம்' என்பதும் சந்திரனை விளக்கி, அவன் குலத்திலுதித்த பாண்டியனைத் தெரிவிக்கும். பாண்டியன் சந்திரகுலத்தவனா யிருந்தமையினாலேயே நளமகாராஜனது குலமாகிய சந்திரகுலத்தை இழிவாகக்கூறிய தேவேந்திரன்மேல் பாண்டியன் சீறி யெழுந்தனன். இதனால் பாண்டியன் சந்திரகுலத்தவனே யாவன்.

"The Pandiya kings of the Lunar race, are commonly believed to be of the kshatriya, not of the vallala or any other agricultural castes" Vide, J. H. Nelson's Madura Manual, Pt. III, Ch. II, P. 44.

---

* "Chandravansa, as the race of the moon, The Lunar race of Kings or the second great line of Kshatriyas or Royal Dynasties in India. The proginiter of the Lunar race of Kings, who reigned at Delhi or Hastinapura was Soma the moon, the child of the Atri and father of Budha." Vide, Professor Monier William's Sanskrit and English Dictionary. Oxford, 1872, P. 315.

"சந்திரகுலத்திலுதித்த பாண்டிய அரசர்கள் க்ஷத்திரியர் என பொதுவாக நம்பப்படுகிறது" என நெல்ஸன்துரைகூறியிருக்கின்றார். நாடார்கள் இச்சந்திரகுல பாண்டிய வம்ஸத்தில் உதித்தவர்களே! அதை விளக்கவே சந்திரன் பிறந்த நட்சத்திரத்திற்கு உரித்தாகிய "நாடன்" என்னும் பெயரை தங்கள் குலப்பெயரெனவும், அச்சந்ததியார்கள் தாங்கள் தான் எனவும், அறிவிப்பான் போன்று, அந்த 'நாடன்' என்னுங் குலப்பட்டப் பெயரை பூர்வமுதல் நாளது பரியந்தம் தொன்றுதொட்டு இடையறாது அடைந்து வருகின்றனர். ஆகவே "நாடார்" என்பது அரசர் பெயர் எனவும், அப்பட்டப் பெயரைப்பெற்று வருபவர்கள் "சந்திரகுலப் பாண்டிய அரச வம்ஸத்தவர்கள்" எனவும், புடத்திலிட்ட பொன்போலவும், சாணையிற் றீட்டிய மணிபோலவும் தெற்றென விளக்கமடைந்தமை காண்க.

ஈழநாடன்.

திருவாதவூரார் புராணம், புத்தரைவாதில்வென்ற சருக்கம்,

2-வது செய்யுள்.

"நண்ணு மாதி மாதவ னலங்கோ வீழ நாடனு
மண்ணரு விருந்தவூ ரடைந்துசே ரிடந் தொறு
மெண் ணிலாத காலம்வாழி தில்லை மன்று மென்றுகூ
றுண் ணிலாவு மன்பினு லுரைக்கவே தொடங் கினன்."

(இ-ள்.) "அப்படிப்போன தபசியானவர் எல்லா வளங்களும் வாய்க்கப்பெற்ற ஈழராஜன் இருந்த இலங்கையைச் சேர்ந்து உள்ளன்பினல், தான்செல்லும் இடங்கள்தோறும் சிதம்பரம் அளவிலாத காலம் வாழ்க என்று சொல்லத்தொடங்கினர்" என்பதாம்.

3-வது செய்யுள்.

"சென்றுசே ரிடந் தொறுஞ் சிறந்த செம்பொன் னம்பல
மென்று கூறி வைகு நாளி லீழநாடன் முன்புபோய்
நன்றிலாத மூடர்தா நயந் திறைஞ்சி மன்ன கே
ளொன்றி யாமுரைத்து மென்று வந்திவ் வாறு கூறினன்."

(இ-ள்.) "தான்போய் சேருமிடங்கள்தோறுஞ் சிறக்கப்பெற்ற பொன்னம்பலம் வாழ்க! என்று சொல்லிக்கொண்டிருக்கும் நாளில் அங்கே இருக்கும் நன்மையில்லாத மூடராகிய புத்தர் ஈழராஜன் முன்புபோய் நயப்புடன் வணங்கி அரசனே ஒன்றுகேள் நாம் சொல்லுகின்றோம் என்று இந்தப்படி சொன்னர்கள்" என்பதாம்.

இவ்விரண்டுசெய்யுள்களிலும் 'ஈழன்' என்னும் இயற்பெயரை யுடைய அரசனுக்கு 'ஈழநாடன்' எனப்பெயர் வந்திருக்கின்றது. 'ஈழநாடன்' என்றால் 'ஈழராஜன்' எனப் பொருள்படும். சேர சோழ பாண்டியர்களுக்கு 'நாடன்' எனப் பட்டப்பெயர் வந்திருக்கிற பிரகாரம் "ஈழனுக்கும் நாடன்" என்னும் பெயர் வந்தமைகாண்க. ஸ்ரீமத், மாணிக்கவாசக சுவாமிகள் காலத்தில் இலங்கையை "ஈழநாகன்" என்னும் இயற்பெயரைப்பெற்ற அரசன் ஒருவன் ஆண்டு வந்ததாக இலங்கை தேச சரித்திரங்களில் இனிது புலப்படும்.*

ஸ்ரீமத், மாணிக்கவாசக சுவாமிகளும், அரிமர்த்தன பாண்டியனும் இருந்த காலம் A. D. ஐம்பதென "பெரிய புராணம், ஓரின்டல் இஸ்டாரிகல் மான்ஸ்கிரிப்ட், டாக்டர் ஹுல்ஸ் சிலாசாசனம்" முதலியவைகளால் தீர்மானிக்கப்படும்.† அக்காலத்திலேயே 'ஈழன்' என்னும் பெயரையுடைய ஒரு அரசன் இலங்கையை ஆண்டுவந்தான் என 'மகாநமோ, டர்னர், டென்னெட், போர்பீஸ், விஜிஞெய்' முதலிய இலங்கை நூலாசிரியர்களால் கூறப்பட்டிருக்கின்றது.

"By his demise, his younger sister Sivali the daughter of Amanda, reigned for four months, when a nephew of Amanda named Ilanaga deposed her and raised the Canopy of dominion, in the capital." Vide, George Turnour's Mahavanso, Ch. XXXV, P. 138.

"குலாபயன் இறந்த பிறகு அவனுடைய சகோதரியும், அமந்தாவின் புத்திரியுமாகிய சிவேலீ என்பவளால் (இலங்கை) நாலு மாதம் ஆளப்பட்டது. அப்பொழுது அமந்தாவின் சகோதரன் புத்திரனாகிய ஈழநாகன் என்பவன் அவளை அரசை விட்டுத்தள்ளி இராஜ்யத்தைத் தன்வசப்படுத்திக்கொண்டான்" என்றிருக்கிறது.

இந்த ஈழன் இலங்கையைத் தன்வசப் படுத்திக்கொண்டது முதலாம் நூற்றாண்டின் முற்பாதி அதாவது A. D. 38-ம் வருடமென இலங்கை சரித்திரங்கள் கூறியிருக்கின்றன. இவ்வீழனை இரண்டாம்-ஈழன் என்று அழைக்கப்படும். இவன் சோழ தேசத்திலிருந்து படையெடுத்துச் சென்று இலங்கையைக் கைப்பற்றிப்

---

* Turnour's Mahavanso, Table, I, and Tennent's Ceylon, Vol, I, Pt. III, Ch. I, P. 320, 321.

† எம்மாவியற்றிய ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம், 80-முதல் 84-வது பக்கம்வரை காண்க.

பிரக்கியாதியாய் அரசாண்ட முதலாம்—ஈழராஜ * னுக்குப்பின் வந்த இருபதாவது அரசன் எனவும், இலங்கை இராஜ்யத்திற்கு முப்பத்து மூன்றாவது அரசன் எனவும் இலங்கைச் சரித்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன. இவ்வீழன் காலத்திலேயே அதாவது ஏறக்குறைய A. D. ஐம்பதாம் வருடத்திலேயே ஸ்ரீமத், மாணிக்கவாசக சுவாமிகள் இருந்ததாகக்கூறியுள்ளது. அதனால் இரண்டாம்-ஈழனும், ஸ்ரீமத், மாணிக்கவாசக சுவாமிகளும் ஏக காலத்தவர்கள் என முடிக்கப்படும்,

"In a Tamil puranic work, there is mention of the name of a King Illa of Ceylon, who went to Chidambaram, where a religious discussion took place between the Buddhist priests and the Saivite devotee Manickavachakar in the presence of King Illa and Chola, and that finally king Illa was converted to the Saivite faith" Vide, The Cochin Tribes and Castes, by S K. Anantha Krishna Iyer B. A., L. T., Superintendent of Ethnography of Cochin State, Vol, I, P. 279.

"தமிழ் புராணத்தில் இலங்கைக் கரசனாகிய ஈழராஜன் என்பவன் சிதம்பரஞ்சென்று, அங்கே ஈழராஜனும் சோழராஜனும் ஸ்ரீமத். மாணிக்கவாசகருக்கும், புத்த குருக்களுக்கும் நடந்த சமய வாதத்திற்கு முதன்மையாக நின்று, முடிவில் புத்த சமயத்தவனாகிய ஈழராஜன் சைவ சமயத்தவனானான்" எனக் கூறியிருக்கின்றது.

ஸ்ரீமத், மாணிக்கவாசக சுவாமிகள் காலத்திற்றான் இலங்கையிலுள்ள புதத குருக்கள் சிவயோகிபால் வெகுண்டு சிதம்பர ஆலயத்தைப் புத்த ஆலயமாக மாற்றுவதாகச் சபதஞ் செய்துக்கொண்டு புறப்பட்டனர். அவர்களோடு அவர்களுக்கு அரசனாகிய ஈழராஜனும் புறப்பட்டனன். இவ்வீழனையே திருவாதவூரர் புராணத்தில் ஈழராஜன் எனப் பொருள்பட 'ஈழநாடன்' என்று கூறியிருக்கின்றது.

---

* Sir James Emerson Tennent's Ceylon Vol, I, Pt, III, Ch. I, P. 320; Ch. X, P. 395; Turnour's Epitome, P. 17; Rajavali, P. 188; The History of Ceylon, Ch, II, P. 11; Davy's Ceylon, Account of the Interior and its Inhabitents. P. 164; Forbies; Eleven years in Ceylon, Vol, I Ch. IV, P. 80; Rev. G. U. Pope's Tiruvasagam, Preface, P. XXXI; Edger Thurston's Castes and Tribes of Southern India, Vol. VII, P. 38; Turnour's Mahavanso, Ch. XXI P 128; எம்மாலியற்றிய ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம், 54-விருந்து, 91-வது பக்கம் வரைக்குங் காண்க.

திருவாதவூரர் புராணம், புத்தரை வாதில்வென்ற சருக்கம்,

87-வது செய்யுள்.

ஈழ மன்னனு மஞ்செழுத்து மியம்பி நீறு புனைந்தபின்
றாழ னின்றடி மைத்திறந் தவறாத தொண்டின னாயினான்
சோழனும் புலியூரின் மன்னிய தொன்மை யாளரு மம்பலம்
வாழ்க வென்று துதித்து நின்றெழில் வாதவூரரை யேத்தினார்

(இ-ள்.) "ஈழராஜனும் அஞ்செழுத்துஞ் சொல்லி விபூதியைத் தரித்து, தாழநின்று அடிமைத் திறத்திலே தவறில்லாத அடியவனானான். சோழராஜனும், தில்லைமூவாயிர வர்களும் அம்பலம் வாழ்க என்று துதித்து, அழகிய மாணிக்கவாசக சுவாமிகளை எத்தினார்கள்" என்பதாம்.

88-வது செய்யுள்.

தக்க சீர்பயி லீழ மன்னுயர் சைவனாயெதிர் நின்றுநின்
றக்க மாலை புனைந்து நீறு மணிந்து தொண்டின னாகவே
துக்க மாகிய சீவரத்துவ ராடைமூடு முடம்பினார்
மிக்க காதர மூகை தீர்ந்திடல் வேண்டுமென்று வணங்கினார்.

(இ-ள்.) "தகுந்த சிறப்பினை வாய்ந்த ஈழராஜன் ஸ்ரீமத், மாணிக்கவாசக சுவாமிகள் எதிரே நின்று உருத்திராக்ஷமணிந்து, விபூதியைத் தரித்து, அடிமைத் திறம் உடையவனாகவே துக்கத்தைத் தருகின்ற நீலநிறத்தோடு கலந்த சிகப்பு வஸ்திரத்தால் மூடும் உடம்பினையுடைய புத்தர்கள், தங்களுக்குண்டாகிய ஊமைத்தன்மையை நீக்க வேண்டுமென்று வணங்கினார்கள்" என்பதாம்.

இந்த இரண்டு செய்யுள்களிலும் ஈழன் என்னும் இயற்பெயரையுடைய அரசனை ஈழமன்னன் எனக்கூறப்பட்டிருக்கின்றது. மன்னன் என்பது அரசர்களது பெயரென்பதற்கு திவாகர நிகண்டகராதிகளே சான்று, மேலே 'ஈழநாடன்' எனப்பட்டிருக்கின்றது. அதனால் 'மன்னன்' என்பது 'நாடன்' என்பதைப்போன்ற அரசர் பெயர்களில் ஒன்றென விளங்கும். சிலர் 'ஈழநாடன்' என்றால் 'ஈழநாட்டரசன்' எனப் பொருள் கொள்ளுகின்றனர். அன்னோர் 'ஈழமன்னன்' என்றால் 'ஈழராஜன்' எனப் பொருள் கொள்ளாமல் வேறெங் கொள்வர்? ஆகவே, 'மன்னன்' என்னும் பெயரோடு ஒருபொருட்கொண்டுவந்த 'நாடன்' என்பதும் அரசர்களது பெயரில் ஒன்றெனத்துணியப்படும்.

கம்பநாடன்.

தமிழ் இராமாயணம் பாடிய கம்பரை '**கம்பநாடன்**' எனப்பட்டிருக்கின்றது. அதனால் கம்பர் அரசகுலத்தவர் எனப்படுவர். இதையறியார் சிலர் ஓச்சகுலத்தவர் என்பர். "மன்றே புகழுந் திருவழுந்தூர் வள்ளல்" எனச் சடகோபரந்தாதியிலும், "சீரணி சோழ நாட்டுத் திருவழுந் தூரில் வாழ்வோன்" என இராமாயணத் தனியன் ஒன்றிலுங் கூறியவாறு, கம்பர் இளம் பிராயத்தில், தன் தகப்பன் காலத்திற்குப் பிறகு திருவழுந்தூர்ப் பிடாரி கோயிலில் பூசைசெய்யும் ஓச்சனுடைய வீட்டில் குடியேறி வசித்த காரணத்தினால் ஓச்சர் எனப்பட்டனர். ஆயினும் அவர் ஓச்சரல்லர்.

வெண்ணெய் நல்லூர்-சடையப்ப முதலியார் முதலாயினாரும், பூவேந்தரும் கம்பருடனே சம்பந்திபோஜனம் செய்ததாகவும், கம்பருடைய மாணாக்கராகிய ஏகம்பவாண முதலியார் கம்பர் வீட்டில் சிலநாளிருந்து விருந்து உண்டதாகவுங் கூறியிருத்தலால், கம்பரை ஓச்ச சாதியைச் சேர்ந்தவர் எனல் பொருந்தாது.

"உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே" என ஏரெழுபதிலும், "வெண்ணெயூர்ச் சடையப்பன் தங்கள் மாபினோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி" என இராமாயணம், திருவபிடேகப் படலத்திலும், தம்மை வேளாளரோடு சேர்த்து எண்ணாது வேறுபிரித்துக் கூறியிருத்தலால், கம்பரை வேளாளர் அல்லர் எனவுங் கூறப்படும். மற்று அவர் எச்சாதியார் எனின் விளக்குவாம்.

"**கம்பநாடர்**" சரிதத்தை உள்ளபடி கோர்த்து எழுதுவதற்கான அவ்வளவு ஆதாரவுகள் இலதேனும் வழங்கப்பட்டுவரும் சில முக்கிய ஆதாரவுகளால் ஒருவாறு தெளியப்படும். தஞ்சாவூரின் சமீபத்தில் இன்றும் உளதாய கம்பநாடு இவருக்குச் சொந்தம். அது இவர் தகப்பனார் காலத்திலேயே கைசோர்ந்துவிட்டது. அதுகாரணம்பற்றியே இவரைக் 'கம்பர்' எனப்பட்டது. பாண்டிய நாட்டையுடையவன் பாண்டியன் எனவும், சோழ நாட்டையுடையவன் சோழன் எனவுங் கூறப்படுவனபோல்; கம்பநாட்டை யுடையானையும் "கம்பன்" எனப்பட்டு வந்தது. இதோடு கம்பநாடு இவருக்குச் சொந்தம் என விளக்க "கம்பநா டுடைய வள்ளல்" எனவும், "கம்ப நாடாள்வார்" எனவும் வற்புறுத்தியிருக்கின்றன. இவற்றால் கம்பர் அரசரென விளங்கினர். நாடுரிமையால் மாத்திரம் அல்ல, குலத்தாலும் அவர் அரசரெனப்படுவர்,

இராமாயணத்தனியன்.

"தரா தலத்தி னுள்ள தமிழ்க் குற்ற மெல்லாம்
அராவு மர மாயிற் றன்றே—இராவணன்மேல்
அம்பு நாட்டாழ்வா னடிபணியு மாதித்தன்
கம்ப நாட் டாழ்வான் கவி."

இதில் கம்பனை "ஆதித்தன் கம்பநாடன்" எனக்கூறியிருக்கின்றது. 'ஆதித்தன் கம்பநாடன்' என்றால் "ஆதித்தன்=சூரிய குலத்தி லுதித்த, கம்பன்=கம்பன் என்னும் இயற்பெயரையுடைய, நாடன் இராஜன்" என்பதாம். அதாவது 'சூரிய குலத்திலுதித்த கம்பராஜன்' என்பது தேர்ந்தபொருள். 'கம்ப நாடாழ்வான்' என்பது 'கம்ப நாட்டாழ்வான்' என எதுகை நோக்கி இரட்டித்தது.

இராமாயணத்தனியன்.

"இம்பரு மும்பர் தாமு மேத்திடு மிராமன் காதைத்
தம்பமாய் முத்தி சேர்க்குஞ் சத்தியஞ் சத்தி யம்மே
அம்பர மதனின் மேவு மாதித்தன் புதல்வன் ஞானக்
கம்பன் சொல் கமலபாதங் கருத்துற விருத்து வாமே."

இச்செய்யுளிலும் கம்பனை "ஆதித்தன் புதல்வன் கம்பன்" எனக் கூறியிருக்கின்றது. 'ஆதித்தன் புதல்வன் கம்பன்' என்றால் 'ஆதித்தன்=சூரியனது, புதல்வன்=குலத்திலுதித்தவன், கம்பன்= கம்பன்' என்பதாம். 'சூரியகுலத்தி லுதித்த கம்பன்' என்பது பொருள்.

இராமாயணத்தனியன்.

"வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன் வாழ்த்துபெறத்
தாழ்வா ருயரப் புலவோ ரகவிருள் தானகலப்
போழ்வார் கதிரி னுதித்த தெய்வப் புலமைக் கம்பநா
டாழ்வார் பதத்தைச் சிந்திப் பவர்க்கியாது மரிய தன்றே."

இச்செய்யுளில் கம்பனை "கதிரினுதித்த கம்பநாடாழ்வான்" எனக் கூறியிருக்கின்றது. 'நாடாழ்வான்' என்பது 'நாடாள்வான்' என்பதின் விகாரம். எதுகை நோக்கித் திரிந்தது. நாடான் என்னும் பொருள்கொண்டது. 'கதிரினுதித்த கம்பநாடான்' என்றால் 'கதிரின்=சூரிய குலத்தில், உதித்த=பிறந்த, கம்பநாடான்=கம்பராஜன்' என்பதாம். 'சூரிய குலத்திலுதித்த கம்பராஜன்' எனப் பொருள்படும். இம்முச்செய்யுட்களிலும் வரும் 'ஆதித்தன், கதிர்' என்னும் பெயர்கள் 'பகலே பர்க்கன் வெயிலோ னாதித்தன், பகலோன் விண்மணி

பனிப்பகை கதிரவன்' என்னும் பிங்கலந்தை நிகண்டால் சூரியனுக் குரியவை. இப்பெயர்கள் சூரியனைத் தெரிவித்து அவன் குலத்தில் உதித்த **'கம்பரை சூரியகுல அரசர்'** என விளக்கின. இதனாலேயே அவர் அரசப்பட்டப் பெயராகிய **'நாடன்'** என்னும் பட்டப்பெயரைப் பெற்றனர் என்க.

"The imitation, not translation, of the Ramayana, was composed about the eleventh century A. D. by Kamban, the son of a king and not of the priestly tribe. His production, consisting of 12,016 stanzas, in five books, is considered by learned Tamilians as superior to the original" Vide, Winslow's Tamil and English Dictionary, preface. P. VI.

"தமிழ் ராமாயணம் எழுதினவர் கம்பர். இவர் **அரச குமாரர்.** உச்சகுலத்தவர் அல்லர். பதினோராம் நூற்றாண்டில் இருந்தவர். வால்மீகி ராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்க்காமல் அதன் பொருளை தன் மனோரதப்படி விரித்து எழுதியிருக்கின்றார். அதை ஐந்து காண்டங்களாகப்பிரித்து, i2016-பாக்களால் அடக்கியிருக்கின்றார்" என்பதாம். இவ்வங்கிலேயப் பகுதியும் 'கம்பரை அரசர்' எனவே கூறுகின்றது.

இராமாயணத் தனியன்.

"எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன்வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே."

இராமாயணத் தனியன்

"இம்பர் நாட்டிற் செல்வமெல்லா மெய்தி யரசாண்டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா வோங்குநீழ லிருந்தாலும்
செம்பொன் மேரு வனையபுயத் திறல்சேரிராமன் றிருக்கதையிற்
கம்பநாடன் கவிதை யிற்போற் கற்றோர்க் கிதயங் களியாதே."

இவ்விருசெய்யுட்களிலும் கம்பரை **'கம்பநாடன்'** எனப் பட்டிருக்கின்றன. கம்பர் தமிழ் ராமாயணம் பாடியவர். அதை விளக்கவே அந்நூலை கம்பராமாயணம் எனப்பட்டது கம்பர் என்னும் பெயரையுடையவரால் இயற்றிய இராமாயணம் என்பது பொருள். இதைப்போல் 'கம்பநாடன்' என்றும் கம்பன் என்னும் பெயரை

புடைய அரசன் அல்லது 'கம்பராஜன்' என்பதே பொருள். இவருக்கு அந்நூலில் 'நாடன்' என்னும் பட்டப்பெயர் உரியதென உரைத்திருக்கின்றது. இவர் அரச குலத்தவர் ஆனமையினாலேயே 'நாடன்' என்னும் பட்டத்தைப் பெற்றனர். அரசரல்லாதிருப்பின் பெறார். இவரைப்போல் நூற்கள் இயற்றிய மற்ற நூலாசிரியர்களில் எவராவது 'நாடன்' என்னும் பட்டப்பெயரைப்பெற்றனரா? இல்லையே? இதனாலும் அவரை அரசர் எனவும், அப்பட்டப்பெயர் அரசர்களுக்குரிய தெனவும் மற்றையோருக்கு இன்றெனவும் துணியப்படும்.

தொண்ட நாடன்.

ஜாதகசிந்தாமணி, 2168-வது செய்யுள்.

நறைகமழ் கமலப் பொகுட்டில் வீற்றிருக்கு
நான்முகக் கடவுடான் படைத்த
நிறைவுள மாந்தர் வினைப்பய னதனை
னினைபெறு யோகமஞ் சரியாந்
துறையென வழங்கும் வடமொழி யதனைத்
தூயசெந் தமிழினாற் செய்தான்,
றிறைகொடா வழுதிப் புகழ்தொண்ட நாடன்
றில்லைநா யகமகி பதியே.

இதில் சாதக சிந்தாமணி என்னும் நூலை வடமொழியினின்று தமிழில் மொழிபெயர்த்துக் காவியம் ஆக்கினவர் தில்லைநாயகப் பாண்டியர் எனக் கூறியிருக்கின்றது. இப்பாண்டியர் 'தொண்ட நாடன்' எனப்பட்டனர். 'தொண்டநாடன்'*என்றால் 'தொண்டநாட்டிற்கரசன்' எனப்படுவர். இவர் அரசராதலால்' நாடன்' எனப்பட்டனர்.

திருவிளையாடற் புராணம், திருவவதாரப் படலம்,
6-வது செய்யுள்.

"நன்பொருள் விரும்பினை யதற்கிசைய ஞால
மின்புறு மகப்பெறு மகத்தினை யியற்றி
னன்புறு மகப்பெறுதி யென்றமரர் நாடன்
றன்புல மடைந்திடலு நிம்பநகு தாரான்."

(இ-ள்.) "நல்ல பொருளை நீவிரும்பினாய், அதற்கிசைய உலகம் இன்புறும் புத்திரனைப் பெறும்படியான யாகத்தினை இயற்றி புத்திரனைப் பெறுதி எனக்கூறி தேவர்க்கரசன் தன்னுலகஞ் சென்றனன்.

* Gustave Oppert's On the Original Inhabitants of Bharatavarasa or India Ch. XII, P. 226 to 237.

பிறகு வேப்பமாலையைத் தரித்த பாண்டியன்" என்பதாம். இதில் தேவேந்திரனை "அமரர் நாடன்" எனக் கூறியிருக்கின்றது. 'அமரர் நாடன்' என்றால் 'தேவர்களுக் கரசன்' எனப்பொருள் கொள்ளும். இதனாலும் 'நாடன்' என்னும் பெயர் அரசர் பெயர்களில் ஒன்றெனப்படும்.

நாடன் பருத்தி.

நாடன் பருத்தி=ஓர்வகைப் பருத்திச்செடி,

= A cotton shrub, which lives three or four years. (Winslow's and Rottler's Tamil and English Dictionaries.)

என்பதால் 'நாடன் பருத்தி' என்று அழைக்கப்படும் ஒருவித பருத்திச் செடியுமுண்டு, அது 'இலாடன் பருத்தி, உப்பம் பருத்தி, காட்டுப் பருத்தி, குப்பைப் பருத்தி, செம் பருத்தி, தாளிப்பருத்தி, பட்டுப் பருத்தி, பூப்பருத்தி, பேய்ப் பருத்தி, மலைப் பருத்தி, வெண்பருத்தி, முதலிய பலவகைப் பருத்திச் செடிகளுள் ஒன்று. இந்த நாடன் பருத்தித் தவிர மற்றப்பருத்திச் செடிகளில் சில பயிர் செய்யப்பட்ட வருஷத்திலேயே அழிந்து போகக்கூடியதும், சில சிரேஷ்டத் தன்மையை வாய்க்காததுமாகும். நாடன் பருத்திச் செடியோ மற்ற பருத்திச் செடிகளைப்போல் அழிந்து போகாமல் நெடுங்காலம் இருந்தும், சிரேஷ்டபலனையுந், தன்மையையுங்கொடுக்கக்கூடியதுமாகும். அதனால் அச்செடியை 'நாடன் பருத்திச்செடி' எனப்பட்டது. 'நாடன் பருத்தி' என்றால் 'அரசப் பருத்தி' அல்லது 'இராஜப் பருத்தி' எனப்பொருள் கொள்ளும். அது மரங்களில் சிரேஷ்ட மரத்தை இராஜ விருக்ஷம் என்றும், பக்ஷிகளில் சிரேஷ்ட பக்ஷியை இராஜபட்சி யென்றும், மிருகங்களில் சிரேஷ்டமிருகத்தை இராஜ மிருகம் என்றும், ருஷிகளில் சிரேஷ்டருஷியை இராஜருஷி என்றும் அழைத்தலைப்போல்;*பருத்திச்செடிகளுள் சிரேஷ்டபருத்திச்செடியை 'நாடன் பருத்தி' என்றும் அழைக்கப்பட்டது. ஆகவே

---

*"King-apple = a superior variety of apple; King-bird = The tyrant fly-catcher; King-crab = a kind of crab with a shell of horse-shoe shape" Vide, Collins, Graphic English Dictionary.

நாடன் பருத்தி என்றால் அரசப் பருத்தி எனப்பொருள் கொண்டமை காண்க. இதனாலும் 'நாடன்=அரசன்' என விளங்கினன்.

'நாடன் மூங்கில்' என்பது மலையாளத்தில் காணப்படும் மூங்கில்களில், மஞ்சள் நிற முள்ளதும், அழகும், வலுவும் உள்ளதாகும்.

'நாடன் தேக்கு' என்பது தேக்குமரங்களில் வலுவுள்ளது.

'நாடன் வாழை' என்பது கொயம்புத்தூரில் காணப்படும் வாழைமரங்களில் ஒன்று. அதன் பழம் மற்றப்பழங்களைவிட விலையுயர்ந்தது.

'நாடன் சோளம்' என்பது ஒருவகை உயர்ந்த சோளம், மணி காணக்கூடியது. இவைகளும் மேற்கூறியவாறே அரசத்தன்மையை விளக்கு மெனவறிக.

நைடதம், சுயம்வரப் படலம்.

114-வது செய்யுளில் 'உலக மன்னர்' எனவும்,
120-வது செய்யுளில் 'பூவுலகாளும் வேந்தன்' எனவும்,
131-வது செய்யுளில் 'புட்காரத்தீவின் வேந்தன்' எனவும்,
133-வது செய்யுளில் 'கிரவுஞ்சத்தீவின் வேந்தன்' எனவும்,
143-வது செய்யுளில் 'வாரணவாசி மன்னன்' எனவும்,
144-வது செய்யுளில் 'சிந்து வேந்தன்' எனவும்,
146-வது செய்யுளில் 'மச்சர்கோ' எனவும்,
147-வது செய்யுளில் 'மகத நாடன்' எனவும்,
154-வது செய்யுளில் 'பாஞ்சால வேந்தன்' எனவும்,
158-வது செய்யுளில் 'கோசலத்தரசன்' எனவும்,
167-வது செய்யுளில் 'நிடதவேந்தன்' எனவும் வருவனவேயாம்.

நளவெண்பா, சுயம்வரகாண்டம்.

134-வது செய்யுளில் சோழனை 'நாடன்' எனவும்,
135-வது செய்யுளில் பாண்டியனை 'கோ' எனவும்,
136-வது செய்யுளில் சேரனை 'நாடன்' எனவும்,
138-வது செய்யுளில் குருநாடனை 'மன்' எனவும்,
139-வது செய்யுளில் 'மத்திர நாடனை கோமான்' எனவும்,
140-வது செய்யுளில் 'மச்சநாடனை கோமான்' எனவும்,
142-வது செய்யுளில் 'பாஞ்சால நாடனை மன்' எனவும்,
143-வது செய்யுளில் 'கோசல நாடனை நாடன்' எனவும்,
144-வது செய்யுளில் 'மகத நாடனை வேந்தன்' எனவும்,
145-வது செய்யுளில் 'அங்க நாடனை நாடாளுடையான்' எனவும்,

146-வது செய்யுளில் 'கலிங்க நாடனை கோன்' எனவும்,
147-வது செய்யுளில் 'கேகய நாடனை வேந்தன்' எனவும்,
148-வது செய்யுளில் 'காந்தார நாடனை நாடன்' எனவும்,
149-வது செய்யுளில் 'சிந்து நாடனை மன்' எனவும் வருவனவேயாம்.

அரிச்சந்திர புராணம், விவாக காண்டம்.

218-வது செய்யுளில் 'குடநாடன்' எனவும்,
221-வது செய்யுளில் 'புனனாடன்' எனவும்,
222-வது செய்யுளில் 'குருநாடன்' எனவும்,
231-வது செய்யுளில் 'அவந்தியரசன்' எனவும் வருவனவேயாம்.

இவற்றில் அதிவீரராமபாண்டியரும், புகழேந்திப் புலவரும், நல்லூர்-வீரகவிராயரும், பாண்டிய நாட்டரச குலத்தவருக்குத் தங்கள் காலத்தில் வழங்கி வந்த பட்டப்பெயர்களை நன்குணர்ந்தவர்களானதினாலும் அக்காலத்து வழக்கப்படிக்கு "நாடன்" என்னும் பெயரோடு "அரசன், கோ, கோன், கோமான், மன்னன், வேந்தன்" என்னும் பெயர்களையும், நாட்டுப் பெயர்களோடு சேர்த்தெழுதியிருக்கின்றார். "அரசன், கோ, கோன், கோமான், மன், மன்னன், வேந்தன்" என்னும் பெயர்கள் "அரசன்" என்னுங்கருத்தில் நிற்கும்போது, அவற்றோடு ஒருபொருட் கொண்டுவரும் "நாடன்" என்னும் பெயரும் "அரசன்" என்னும் பொருளிலேயே நிற்கும். இதனாலும் நாடன் அரசன் என விளங்கினன்.

கம்பராமாயணம்.

உத்தரகாண்டம், கந்திருவர் வதைப்படலம். 3-வது செய்யுள்

"கொன்னேர் வைவேற் கோசல மன்னன் குல மாங்காய்
அன்னே யன்னே யத்தனு முன்னே யகல் வுற்றான்
இன்னே நீயு மென்னை நீத்தா யெனின் யானும்
பின்னே வந்தேன் வந்தே னென்றே பேதுற் றான்."

4-வது செய்யுள்.

"கொந்தார் கோலக் கோசல நாடன் குல மங்காய்
சந்தார் மார்பத் தசரத னின்பத் தகை வல்லி
அந்தோ வந்தோ வையனை நாடி யடி யேனும்
வந்தேன் வந்தே னென்று தளர்ந்தே மாழ் குற்றான்."

இவ்விரு பகுதிகளிலும் கோசலதேசத்தரசனையே 'கோசல மன்னன்' எனவும், 'கோசல நாடன்' எனவுங் கூறியிருக்கின்றன.

இவற்றுள் முதற்பகுதியாகிய கோசலம் என்னும் நாட்டுப் பெயரைப் பிரித்தெடுப்பின் 'மன்னன், நாடன்' என்பனவே மிச்சமாகும். மன்னன் என்றால் 'அரசன்' என்னும் பொருளைத்தரும்போது, அதனுடன் ஒரு பொருட்கொண்ட 'நாடன்' என்பதும் 'அரசன்' என்னும் பொருளையேதரும்.

22. நாட என்பது அரசரைக் குறிக்கும்.

நாலடியார், செல்வம் நிலையாமை,

10-வது செய்யுள்.

"உடாஅது முண்ணாதும் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி."

இதில் வரும் நாட என்பது அரசனை முன்னிலைச் சுட்டாக வைத்து அழைக்கப்படும் வார்த்தைகளில் ஒன்று. 'மலைநாட்டரசே! எனப் பொருள்கொள்ள 'மலைநாட' எனக் கூறியிருக்கின்றது. 'நாட' என்னும் பதம் செய்யுளில் ஈறு கெட்டவிளிப் பெயராகும் * "அண்மைச் சொல்லிற் ககர மாகும்.' † என்னுஞ் சூத்திரத்தால் 'அண்மை விளி' எனப்படும். அண்மை=சமீபம்; இது 'நாடா' என்பதின் குறுக்கல் விகாரம். இதற்கு அங்கிலேயர் 'The King of the Mountain' என மொழிபெயர்த்திருக்கின்றார். King என்பதற்கு அரசன் என்பது பொருள். இதனாலும் நாடன் அரசன் என விளங்கினன்.

பாரத வெண்பா, உத்தியோக பருவம்,

46-வது செய்யுள்.

"மூதாதை தன்னை முகநோக்கித் தான்முனிந்து
போதாருஞ் சோலைப் புனனாட—னீதானும்
வாயறியாய் மன்னர் வலியறியாய் வன்செருவிற்
போயறியா யென்றே புகன்று."

---

* நன்னூல், பெயரியல், 31-வது சூத்திரம்.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், விளிமரபு, 14-வது சூத்திரம்; முத்துவீரியம், சொல்லதிகாரம், பெயரியல், 111-வது சூத்திரம்; இலக்கணவிளக்கம், சொல்லதிகாரம், பெயரியல், 57, வது சூத்திரம்.

இதில் கர்ணனைப் பார்த்து 'புனல் நாட' எனப்பட்டிருக்கின்றது. 'நீர்வளமான நாட்டரசனே' என்பது பொருள். இதனால் 'நாட என்பதிலும், அரச சப்தம் அடங்கியிருக்கின்றதென விளங்கினது.'

23. நாடா என்பது அரசரைக் குறிக்கும்.

ஔவையார் வாக்கு.

"கானேந் தேனேந்தேன் கடுகிவழி நடந்தேன்
யான்வந்த தூரமெளிதன்று—கூனன்
கருந்தேனுக் கண்ணுந்த காவிரிசூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே யிடம்"

இச்செய்யுளில் வரும் 'நாடா' என்பது 'நாடான்' என்னும் பதத்தின் விளிப்பெயராகும். 'அரசன்' என்னும் பொருள் கொண்டது.

தனிப்பாடற்றிரட்டு.

"தென்னவா மீனவா சிவிலிமாறு மதுரை
மன்னவா பாண்டி வளநாடா—முன்னஞ்
சுரும்புக்குத் தாரளித்த தூய்ய தமிழ்நாடா
கரும்புக்கு வேம்பிலே கண்."

இதிற் பாண்டியனை முன்னிலைச்சுட்டாகவைத்து 'பாண்டிவள நாடா! தமிழ் நாடா! எனவிளித்துக் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு 'பாண்டியநாட்டிற்கரசே! தமிழ் நாட்டரசே! எனப் பொருள் கொள்ளப்படுவன.

கம்பராமாயணம், பாலகாண்டம், கோலங்காண் படலம்,

41-வது செய்யுள்.

"வாளையுக ளக்கயல்கள் வாவுமதின் மேதி
மூளைமுது கைக்கிழிய மூரிய வரான்மீன்
பாளைவிரி யக்குதிகொள் பண்ணை வளநாடா
நாளையென வுற்றபக னற்றவ னுரைத்தான்"

இதில் வசிஷ்டர் அரசனைப் பார்த்து 'பண்ணைவள நாடா! நாளையதினம் விவாகத்திற்கு ஏற்றநாள்' என்றார். நாடா என்பதற்கு நாடானே! என்பது பொருள்

கம்பராமாயணம், ஆரணிய காண்டம், சூர்ப்பனகைப் படலம்,

122-வது செய்யுள்.

"ஏற்றவளை வரிசிலையோ னியம்பாமு னிகலாக்கி
சேற்றவளை தன்கணவ னருகிருப்பச் சினந்திருகிச்
சூற்றவளை நீருழக்குந் துறைகெழுநீர் வளநாடா
மாற்றவளைக் கண்டக்கா லழலாதோ மனமென்றாள்."

இதில் சூர்ப்பனகை ஸ்ரீராமரைப் பார்த்து 'துறைகெழுநீர் வளநாடா!' என்றாள். நாடா என்பதற்கு அரசனே! என்று உரையாசிரியர் தாற்பரியங் கூறியிருக்கின்றார். ஆனதால் நாடான் அரசன் எனவே விளங்குவன்.

பெருந்தேவனார் பாரத வெண்பா,

உத்தியோகப் பருவம்.

"அழித்தழித் தென்கண்முகப்பே யர்ச்சுனன்றன் றண்மைக்
கிழித்தவரை நல்லாட்க ளென்றான்—சுழித்தாங்கம்
சிந்தியோடும் பழனச் சேணாடா பாண்டவர்க்காய்
வந்தியோ கங்கை மகன்."

இச்செய்யுளில்வரும் 'நாடா' என்பது துரியோதனனை விளித்துக்கூறியதாக்கும். அரசன் என்னும் பொருள் கொண்டது.

"In Naladiyar, the King is addressed, as Nada, Lord of the Land." vide, The sacred Kural of Tiruvalluva Nayanar, P. 284, 285. by Rev, G. U. Pope, M. A., D. D., M. R. A. S, London, 1886.

"நாலடியாரில் அரசனை பூமிக்கரசனே என்னும் பொருளைத் தரும் நாடா! என்னும் பெயரால் அழைத்திருக்கின்றது" எனப் போப்பு துரை அவர்கள் கூறியிருக்கின்றார்.

ஆகவே மேற்கூறிய பகுதிகளில் வரும் 'நாடா' என்பது நாடானே! நாட்டையுடையவனே! அரசனே! என்னும் பொருள்களைக் கொண்ட ஈறுகெட்ட விளிப்பெயராகும். 'நாடா' என்னும்பெயர் அரசனையன்றி, பிறகுலத்தவர்களைச் சுட்டிக்குறிக்கா. அதாவது, நாட்டையுடைய அரசனையே 'நாடா' என்னும் பதம் குறிப்பதன்றி

வேதத்தையுடைய வேதியனையாவது, வர்த்தகத்தையுடைய வைசியனையாவது, வேளாண்மையையுடைய வேளாளனையாவது, இன்னும் மற்ற குலத்தவர்களையாவது சுட்டிக்காண்பிக்க ஏலா? நூல் வழக்கும் இன்றும். அப்படி இல்லாமையால் அரசனே "நாடா, அல்லது நாடான்" எனத் துணியப்படுவன். "நாடான்" என்பது நாடு சம்பந்தப்பட்டப் பெயர் என விளங்கலாலும், அந்த நாடும் அரசன் ஒருவனுக்கே உரிமை என அறுதியிடுவதாலும், அப்பெயர் அவன் ஒருவனுக்கே குலப்பெயர் ஆகி, அவன் ஒருவனையே "நாடா அல்லது நாடான்" என்று அழைக்கப்படும். அதை விளக்கவே நாடானை Lord of the Land என்றார் போப்பு துரை அவர்கள். இதனாலும் 'நாடா, நாடான்' என்னும் பெயர்கள் அரசருக்கன்றி பிறருக்கின்றென விளங்கின.

24. நாடான் என்பது அரசரைக் குறிக்கும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம்,

திருநாட்டியத்தான்குடி,

10-வது பாசுரம்.

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி
நம்பியை நாளு மறவாச்
சேடார் பூங்குழற் சிங்கடி யப்பன்
திருவா ரூரா னுரைத்த
பாட ராகிலும் பாடுமின் றொண்டீர்
பாடநும் பாவம் பற்றறுமே.

(ப-ரை.) கூடா = சேராத, மன்னரை = அரசரை, கூட்டத்து வென்ற = கூட்டத்தோடு வென்ற, கொடிறன் = வலியனாகிய, கோட்புலி = கோட் புலிநாயனாரால் (வாழப்பெற்றதும்,) சென்னி நாடார் சோழராஜர்களது, தொல்புகழ் = பழமையான புகழில் தங்கியதும் (ஆகிய,) நாட்டியத்தான்குடி = திருநாட்டியத்தான் குடியில் (எழுந்தருளிய,) நம்பியை = சிவபிரானை, நாளும் மறவா = தினமும் மறவாதவரும், சேடு ஆர் = பெருமை பொருந்திய, பூம்குழல் = பூங்கூந்தலையுடைய, சிங்கடியப்பன் = சிங்கடியம்மையின் தகப்பனும் (ஆகிய,)

திருவாரூரன் உரைத்த=ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த, பாடலாகிலும்=பாடல்களையாகிலும், பாடுமின்=பாடுங்கள், தொண்டீர்=தொண்டர்களே!, பாட=(அப்படிப்) பாட, நும்பாவம்=உங்கள் பாவங்கள், பற்றறும்=பற்றற்றுப்போகும்' என்பதாம். ஏகாரம் ஈற்றசை.

(பொ-ரை.) "பகை அரசரை கூட்டத்தோடு வென்ற வலியனாகிய கோட்புலி நாயனாரால் வாழப்பெற்றதும், சோழராஜாக்களது புகழில் தங்கியதும் ஆகிய திருநாட்டியத்தான் குடியில்எழுந்தருளிய சிவபிரானை தினமும் மறவாதவரும், பெருமை பொருந்திய பூங்கூந்தலை யுடைய சிங்கடியம்மையின் தகப்பனுமாகிய ஸ்ரீமத்-சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த பாடல்களையாகிலும் தொண்டர்களே! பாடுங்கள். அப்படிப்பாட உங்கள் பாவங்கள் பற்றற்றுப் போகும்" என்பதாம்.

இப்பாசுரம் ஸ்ரீமத்-சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கான் திருவாய் மலர்ந்தருளியதாகும். அப்பாசுரத்தில் வரும் 'சென்னி என்பது சோழனை குறிக்கும். அது 'சென்னி வளவன் கிள்ளிசெம்பியன், சூரியன் புனனாடன் கோச்சோழன் பெயரே' என்னுந் திவாகரச் சூத்திரத்தால் விளங்கும். 'சோழராஜனை, புன்னாடன்' எனவும் அழைத்தனர் திவாகரர். 'புனல் நாடன்' என்பதில் விளங்கும். 'நாடன்' என்பது 'அன்' விகுதியைப் பெற்ற குறுக்கல் விகாரம். 'சென்னி நாடான்' என்பதில் விளங்கும் 'நாடான்' என்பது 'ஆன் விகுதியைப்பெற்ற நீட்டல் விகாரம். 'அன்னா னிருமொழியாண்பாற் படற்கை' என்னும் நன்னூற் சூத்திரத்தால் அன்னும் ஆனும் ஆண்பால் விகுதிகள் எனப்பட்டமையின், பொருள் ஒன்றென விளங்கி, நாட்டையுடையவனாகிய சோழராஜனைத் தெரிவித்தன. அப்படி சோழராஜர்களைத் தெரிவிக்கவே ஸ்ரீமத்-சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருவாக்கான் 'சென்னி நாடார்' என்று பன்மையில் விளக்கினர். இதனால் 'நாடார்' என்பது அரசர் என்னும் பொருளைத் தந்து முடிந்தது.

நளவெண்பா, கலிதொடர் காண்டம்,

26-வது செய்யுள்.

வான்றோய நீடுயர்ந்த மாடக்கொடி நுடங்கத்
தான்றோன்று மற்றித் தடம்பதிதான்—வான்றோன்றி

வில்விளக்கே பூக்கும் **விதர்ப்பநா டானுடைய**
நல்விளக்கே யெங்க ணகர்.

(ப-ரை.) 'வான்றோன்றி=வானத்தில் காணப்படும், வில்விள க்கே பூக்கும்=இரத்தின காந்திகளாகிய விளக்குகளே பூத்திருக்கப் பெற்ற, **விதர்ப்ப நாடான் உடைய=விதர்ப்பராஜனுடைய**, நல்விளக் கே=நல்ல விளக்குபோன்ற பெண்ணே! வான்றோய=வானத்திற் படியும் படி, நீடு=நீட்சியாகிய, உயர்ந்த=மேலோங்கியிருக்கிற, மாடக்கொடி=மாளிகைகளின் கொடிச்சீலைகள், நுடங்க=அசைந் தாடும்படி, தோன்றும்=காணப்படுகின்ற, இத்தடம் பதிதான்=இந் தப்பெரிய பட்டணந்தான், எங்கள் நகர்=எங்களுடைய பட்டணம் என்பதாம்.

இச்செய்யுளில் வரும் **'நாடான்'** என்பதன் பொருள் **'நாட்டை யுடையவன்'** எனப்படும். **'விதர்ப்ப நாடான்'** என்பதற்கு **'விதர்ப்ப ராஜன்'** எனப் பொருள் கொண்டமைக்குக் காரணம், நாடுடைமை அரசர்க்குடைமையின அவ்வரசனை 'நாடான்' எனப்படும். பார்த்தி பன் எனவழங்கும் வழக்கும் இந்த 'நாடான்' என்பதன் பொருட்ட டியாகவே வந்தது. பார்த்திபம்=பூமி, அதனையுடையவன் பார்த்தி பன் எனப்படுவன. இவ்வழக்கை மேற்கொண்டே புகழேந்திப் புலவர் அரசனை நாடான் என்றனர்.

சென்னையை யடுத்த திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் ஆலயத் தில் முதல் பிரகாரத்தின் தென்மேற்கு தெற்கு மதில்களில் வரைந் திருக்கும் சாசனமாவது:—

" * * * * குலமணி மகுடம் முறைமையில் சூடித் தன்கழல் தராதிபர் சூடச்செங்கோல் நாவலம் புவிதோறும் நடாத் திய கோவிராஜ வர்மரான ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு இரண் டாவது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் புழற்கோட்டத்துப் புயல்நாட்டுத் திருவொற்றியூர் உடையார் கோயிலில் காரணைவிடங்க தேவர் திருச்சாந்தாடவேண்டும் நிவந்தங்களுக்கு சேனாதிபதியன் சோழமண்டலத்து உய்யக்கொண்டார் வளநாட்டு திரைமூர் நாட்டு நாடார் ராஜாராஜன் பரநிருப ராக்ஷஸ நாராயண வீரசோழ இளங் கோ வேளார் இத்தேவர் பண்டாரத்து ஒடுக்கின் அன்றாடு நற்காசு இருநூற்று நாற்பது * * *."

இச்சிலாசாசனத்தில் "வீரசோழ இளங்கோ வாசனை உய்யக் கொண்டார் வளநாட்டு நாடார்" என்று கண்டிருப்பதால், நாடார் என்பது அரசர் என்னும் பொருளில் நின்றது.

"Nadan is a ruler of a Nadu or District. It is the usual title of the Southern Sandrar." Vide, Census of India 1891, Vol. XIII, P. 297.

"நாட்டுக்கரசனை நாடான் எனப்படும். நாடான் என்பது சான்றார் குலத்தவர்களுக்குள் வழக்கமான பட்டப்பெயர்" என இந்திய ஜனக்கணித புத்தகத்தில் கூறியுள்ளது. இதிலும் 'நாடான்' என்பது ஒரு வகுப்பைக் குறித்து அரசரைத் தெரிவித்தமை காண்க.

"Nadan means the ruler of a country" Vide, Edgar Thurston's Ethnographic Survey of South India. Vol. IV, P. 368.

"நாடான் என்பதற்கு நாட்டுக்கரசன் எனப் பொருள்படும்" என்றார் தர்ஸ்டன் துரை அவர்கள்.

"Nadan meaning ruler of a country or village." Vide, Edgar Thurston's Castes and Tribes of Southern India Vol. V, P. 134.

"நாடான் என்பதற்கு நாட்டுக்கரசன் எனப் பொருள்படும்" எனவும் தர்ஸ்டன் துரை கூறியிருக்கின்றார்.

இம்முப்பகுதிகளிலும் வரும் 'நாடான்' என்பது சான்றார் குலத்தவர்களுக்கு வழக்கமான பட்டப்பெயர் என விளக்க "The Nadan is the usual title of Sandrar" எனக்கூறி, அப்படிக் கூறிய பிரயோகத்தில் அப்பட்டப் பெயரும் இவர்களுக்கு மத்தியில் ஏற்பட்டதல்ல, பூர்வத்திலிருந்து சாதாரணமாக வழங்கி வந்த பட்டப்பெயர் என விளக்க "usual title" என்னும் பதங்களை வைத்தும்; அத்தகைய நாடான் என்பது நாட்டுக்கு அரசன் என்னும் பொருளைத் தரும் என விளக்க, "Nadan means the ruler of a country" எனக்கூறி, கூறிய பகுதியில் நாடார் அரசர் என விளக்க Ruler* என்னும் பதத்தை வைத்தும் நன்கு விளக்கியிருத்தலால் நாடார் அரசர் எனவே விளங்குவர்.

* Ruler means one that rules, that is king. (Vide, Collins' Graphic English Dictionary.)

"The Nadars otherwise called land-holders." Vide, The Inquiries made by the Lord Bishop of Madras in 1868

"நாடார்களை மற்றொரு விதமாக நிலவுரிமைக்காரர்கள் என்றும் அழைக்கப்படும்" என மதராஸ் லார்டு பிஷப் என்கொயரியில் கூறியுள்ளது.

இப்பகுதியில் நாடார்களை நில உரிமைக்காரர்கள் எனப்பட்டிருக்கின்றது. நிலத்துக்கு உரிமையுடையவர்கள் அரசர்களே! அதை விளக்கவே நாடார்களை "Land-holders" என்றார். Land-holders என்றால் Owner or proprietor of land எனப் பொருள்படும். அதாவது நிலபாத்தியக்காரர்கள் அல்லது நில உரிமைக்காரர்கள் எனப்படும். 'தாயமும் உரிமையுந் தங்குடித் தருமம்' என்பதில் திவாகரர் ஒரு குலத்தவருக்கு உரிய தருமத்தை உரிமை எனப் படும் என்பதாலும், ஊருரிமை அரசர்களுக்கு உரியதருமம் என்பது மநுவாதிகள் சம்மதமாதலாலும், ஊருரிமையையுடைய இந்நாடார்கள் அரசர்கள் என விளங்குவர்.

"Nadan means an owner of lands or a land-lord." Vide, Rev. Canon, A. Margoschis' The Indian church Quarter review, Vol. VI, P. 547.

"நாடான் என்பதற்கு நாட்டுக்கு உடையவன், அல்லது நாட்டுக்கு அரசன் எனப் பொருள்படும்" என்றார் மார்காஷியஸ்துரை அவர்கள்.

இதில் வரும் land-lord என்பதற்கு the lord of a manor எனப் பொருள்படும். அதாவது நிலசுதந்தரீகர் என்பதாம். நில சுதந்தரீகர் அரசரே! இதனாலும் நாடார் அரசர் என விளங்கினர்.

'In Naladiyar, the king is addressed as Nada, Lord of the Land. In the south, a landed proprietor, even of the humblest class, ia a Nadan.' Vide, The sacred Kural of Tiruvalluva Nayanar, with Introduction, Grammar, Translations, Notes, Lexicon and Concordance, P 284, by Rev. G. U. Pope. M. A; D. D; M. R. A. S; London. 1886.

"நாலடியாரில் அரசனை பூமிக்காரசனே! என்னும் பொருளைத் தரும் நாடா! என்னும் பெயரால் அழைத்திருக்கின்றது, தென் தேசத்தில் நாடான் தாழ்ந்த வகுப்பினனாயிருப்பினும், நிலஉரிமைக் காரனாயிருக்கின்றான்" எனப் போப்துரை கூறியிருக்கின்றார். நாடார்

களை பொருமையால் பிறசாதியார் நினைத்தலைப்போல், போப் துரையும் உண்மையை யுணராது தாழ்ந்த சாதியார் எனக் கூறினர். (இதன் உண்மையை முடிவுரையில் விளக்குவாம்.) என்றாலும் அவர்களது நிலைமையை நன்கு விளக்கி யுள்ளார். இப்பகுதியில் இரண்டு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

1. "The king is addressed as Nada, the lord of the land." "அரசனை பூமிக் கரசனே! என்னும் பொருளைத்தரும் நாடா என்னும் பெயரால் அழைத்திருக்கின்றது."

2. "In the south a landed proprietor is a Nadan." 'தென்தேசத்தில் நாடானே நிலவுரிமைக்காரனாயிருக்கின்றான்.'

இதில் வரும் நாடா என்னும் ஈறுகெட்ட விளிப்பெயர், அரசனை யன்றி பிறகுலத்தவர்களைச் சுட்டிக்குறிக்கா. இதில் தென்தேசத்தின் நிலமைக்காரர்கள் அதாவது நில உரிமை யுடையவர்கள் நாடார்களே எனக் கூறியதால், அவர் துணிபும் மற்றவர்கள் பரம்பரை நில உரிமை யுடையவர்கள் அல்ல என்பது வெளிப்படை. மறவர், கள்ளர் முதலியவர்கள் நில உரிமையைப் பெற்று விளங்குகின்றார்களே எனின், அவர்கள் வடுகரசர் காலத்தில் (A. D. 1609) ஏற்பட்டவர்களே யன்றி,* முற்காலத்தவர்கள் அல்லவென தேசசரித்திரங்களால் விளங்குவர். நாடார்களோ வெனின் பாண்டிய வம்ஸத்தவர்க ளாதலால், தங்குலத் தலைவர்களுக்கு உட்பட்டு, தென்தேசக் காட்டுப் பூமிகளைச் சீர்திருத்தி நாடுகளாக்கி, கைவசப் படுத்திக்கொண்டு சிற்றரச பாத்தியதையில் ஆண்டு வந்தமையால் அவர்களுக்குச் சாதனப் பத்திரங்களின்று. அவர்களுடைய சந்ததியார்கள் நாளதுவரையினும் அந்தப் பூமிகளை அனுபோகஞ் செய்துகொண்டு வருகிறார்கள். இது இன்னநாடானுடைய பூமி என்று சொல்லும்போது அதற்குச் சாசனப் பத்திரச் சாக்ஷிகள் வேண்டியதில்லை. அந்த பூமிகளை அவர்களுடைய முன்னவர்கள், கிரயத்திற்கு வாங்காததால், கிரயசாசனப் பத்திரங்களும் அவர்களுக்கு இல்லை.

* Willam Taylor's Oriental Historical Manuscripts, Vol. II, P. 27; க்ஷத்திரிய மித்திரன், வால்யும் 6, இதழ் 7, பக்கம் 170.

தொன்று தொட்டு இடையறாது வந்திருக்கிற கையாட்சி யனுபோகமே அவர்களுக்குச் சாதனப்பட்டயமாம். இவ்வித அனுபோகத்திற்கு கள்ளர் மறவர்கள் அனுபோகம் பிற்பட்டதே யன்றி, முற்பட்டதல்ல. அதை விளக்கவே போப்பு துரை அவர்கள், மற்றவர்களை யெல்லாம் நீக்கிவிட்டு, நாடார்களை மாத்திரஞ் சுட்டி 'In the south a landed proprietor is a Nadan' என்றார். இதனாலும் நாடார்களை பூர்வ பாண்டிய அரச சந்ததியார்கள் எனத்துணியப்படும்.

"Nadan is a title in common use amongst our Christians. It means an owner of lands or a land-lord; and was originally given to the lords of the soil only. In these days a Nadan may be a farmer, a trader" Vide, Rev. Arthur Margoschis' Christianity and Caste, p. 27.

"நாடான் என்பது நம்முடைய கிறிஸ்தவர்களுக்குள் சாதாரண வழக்கத்திலுள்ள பட்டப்பெயரா யிருக்கின்றது. அதற்குப் பொருள் பூமியையுடையவன் அல்லது நிலமைக்காரன் எனப்படும். நாடான் என்னும் பட்டப்பெயரை பூர்வத்தில் நாட்டையுடைய அரசர்களுக்கு மாத்திரங் கொடுக்கப்பட்டது. தற்காலம் அந்த நாடானே விவசாயியாகவும், வர்த்தகனாகவும், இன்னும் பல தொழிலாளியாகவும் இருக்கிறான்" என ஆர்த்தர் - மர்காஷியஸ் துரை அவர்கள் கூறியிருக்கின்றார்.

1. "Nadan is a title in common use amongst our Christians."	"நாடான் என்பது நம்முடைய கிறிஸ்தவர்களுக்குள் சாதாரண வழக்கத்திலுள்ள பட்டப்பெயரா யிருக்கின்றது."

இப்பகுதியில் வரும் நாடான் என்பது பட்டப்பெயர் எனவும், இப்பட்டப் பெயரும் இவர்களுக்கு சாதாரண வழக்கத்திலுள்ளது எனவும் விளங்குவதால்; அது அவர்களுக்கு தொன்றுதொட்டு உள்ள குலப் பட்டப்பெயர் என மதிக்கப்படும்.

2. "Nadan means an owner of land or land-lord."	"நாடான் என்பதற்குப் பொருள் பூமியை யுடையவன் அல்லது நிலமைக்காரன் எனப்படும்."

பூமியையுடையவன் அரசனே. இது மநுவாதிகள் சம்மதம். இவர்களை அரசரென விளக்கவே Owner of land அல்லது land-

lord என்றூர் மர்காஷியாஸ் துரை அவர்கள். இதனுலும் "நாடார் அரசர்" எனத் துணியப்படுவர்.

3. "The title Nadan was originally given to the lord of the soil only." — "நாடான் என்னும் பட்டப்பெயர் பூர்வம் நாட்டையுடைய அரசர்களுக்கு மாத்திரங் கொடுக்கப்பட்டது."

இப்பிரசனையில் வரும் நாடான் என்னும் பட்டப்பெயர் நாட்டையுடைய அரசர்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயரென விளக்க Title Nadan was given to the lords of the soil எனக்கூறி, அப்படிக் கொடுக்கப்பட்ட நாடான் என்னும் பெயரும் அரச குலத்தவர்களுக்கன்றி, பிறகுலத்தவர்களுக்குக் கொடுக்கப் படவில்லை என விளக்க to the lords of the soil only எனக் கூறியும், கூறிய பிரயோகத்தில் 'அரசர் மாத்திரம்' என்னும் பொருளைத் தரும் lords only என்னும் பதத்தை வைத்தும்; அவ்வித அரசர்களும் பூர்வம் நாட்டை யாண்ட அரசர்கள், அதாவது சேர சோழ பாண்டிய அரசர்கள் என விளக்க Original lords of the soil எனக்கூறி, அப்படிக் கூறியதில் 'பூர்வ அரசர்' என்னும் பொருளைத் தரும் Original lords என்னும் பதத்தை வைத்தும் மர்காஷியஸ் துரை நன்கு விளக்கியிருக்கின்றூர். பூர்வம் நாட்டையாண்ட சேரன் சோழன் பாண்டியன் என்னும் இராஜாக்களும் நாடான் என்னும் பட்டத்தைப் பெற்று வந்ததை எண்பிக்கவே இவ்வங்கிலேயப் பகுதி பூர்வ அரசர்களும், அவர்கள் சந்ததியார்களும் மாத்திரம் பெற்று வந்தார்கள், வருகிறூர்கள் எனவுங் கூறி வற்புறுத்துகின்றது. இதனுலும் நாடார் பூர்வ ஆரிய அரச சந்ததியார் எனத் துணியப்படுவர்.

4. "Nadan was originally the lord of the soil. In these days may be a farmer, a trader." — "பூர்வம் நாடான் நாட்டுக்கு அரசனுயிருந்தான். தற்காலம் அவனே விவசாயியாகவும், வர்த்தகனுகவும் இருக்கின்றுன்."

இப்பிரசனையும் மேற்கூறிய பகுதியிலுள்ளது. அதில் நாடான் பூர்வம் ஊரையாண்டவன் என்பதை விளக்க Nadan was originally the lord of the soil எனக் கூறி, அப்படிக் கூறியதில்

பூமியை ஆண்டது 'பூர்வம்' என விளக்க Original என்னும் பதத்தை வைத்தும், அப்படி பூர்வத்தில் ஊரையாண்ட அந்த நாடான் வம்ஸத்தவனே தற்காலம் விவசாயியாகவும், வர்த்தகனாக வும் இருக்கிறான் என்பதை விளக்க In these days a farmer and trader எனக்கூறி, கூறியதில் வர்த்தகனாயிருப்பது 'தற்காலம்' என வற்புறுத்த In these days என்னும் பதத்தை வைத்தும் மர்காஷியஸ் துரை தெளிவாக விளக்கியிருக்கின்றார். இதனால் தற் காலம் விவசாயம், வர்த்தகஞ் செய்யும் நாடார்களே பூர்வ அரச சந்ததியார்கள் என வலியுறுத்தப்படுவர்.

"The Rajaputs of Gaya, like the Babhans, generally follow agricultural pursuits*. They were probably among the earliest Aryan settlers in the district." Vide, Bengal District Gazetteer, Vol. III, Ch. VI, P. 94.

"கயாவிலுள்ள அரச வம்ஸத்தவர்கள் பயிரிடுந் தொழிலைப் பின்பற்றி யிருக்கின்றார்கள். அவர்கள் அச்சில்லாவிற்கு பூர்வ ஆரி யக் குடிகளாவர்" எனவும்.

"Kshatriyas now to be found in Bengal at the present day instead of forming a Warrior class, they are returned in the census as a trading caste." Vide, Statistical Account of Bengal, Vol. IX, P. 286; Vol, IV, P, 48, 222, 225, 329.

"இப்பொழுது பெங்காலில் காணப்படும் க்ஷத்திரியர்கள் குடி மதிப்பில் யுத்த சாதியாக யிருப்பதற்குப் பதிலாக வர்த்தக சாதி யாக மாறியிருக்கின்றார்கள்" எனவுங் கூறியிருக்கின்றது.

இவ்விரு பகுதிகளிலும் வடதேசத் தரச சந்ததியார்கள் தற் காலம் விவசாயம், வர்த்தகம் முதலியவைகளை கையாண்டு வருகின் றார்கள் எனக் கூறியிருக்கின்றன. இதைப்போல் தென்தேசத்தரசர் களாகிய நாடார்களும் தற்காலம் விவசாயம் வர்த்தகம் முதலிய வைகளையே கையாண்டு வருகின்றார்கள் என மேலே மர்காஷியஸ் துரை விளக்கியிருப்பதோடு, நாம் தற்காலம் கண்கூடாகவுங் காண

* The Indian Companion or General Statistics of India. P. 586.

லாம். இதனால் வர்த்தகம் விவசாயம் புரியும் நாடார்கள் அரச வம்ஸத்தவர் என விளங்குவர்.

"Nadakkals, who are generally land-holders and of an influential caste of this place." Vide, In Inquiries made by the Lord Bishop of Madras in 1868.

"நாடாக்கள் என்பவர்கள் சாதாரணமாக பூமியை யுடையவர்கள் அதாவது நிலமைக்காரர்கள், இந்த பாகத்திற்கு (பாண்டிய நாட்டிற்கு) அவர்கள் செல்வாக்குள்ள வம்ஸத்தவர்களாகவும் இருக்கின்றார்கள்" எனக் கூறியிருக்கின்றது.

நாடாக்கள் பூமியை உடைத்தாயிருத்தல் அவர்கள் குலத்தொழிலாதலின், அதைத் தெரிவிக்க "சாதாரணமாக பூமியையுடையவர்கள்" என்னும் பொருளைக்கொண்ட generally land-holders என்னும் பகுதியை வைத்தும், அதுவும் அவர்களுக்கு "சாதாரணம்" என விளக்க generally என்னும் பதத்தை வைத்தும், அப்படி உடைத்தாயிருக்கும் பூமியும் தென்தேசத்தி லுள்ளவை யென விளக்க in this place எனவுங் குறிப்பிட்டு, அந்த நாடார்களை தென்தேசத்திற்கு உரிமையுடைய பாண்டிய வம்ஸத்தவர்கள் என மதராஸ் லார்டு-பிஷப்பு அவர்களும் வற்புறுத்துகின்றார்.

ஆகவே மேற்கூறிய எண்பகுதிகளிலும் நாடான் என்பது பட்டப்பெயர் எனவும், பூர்வம் அரசர்களை நாடான் என்று அழைக்கப்பட்டது எனவும், நாடான் என்பதற்கு "நாட்டுக்குச் சொந்தக்காரன், நாடுடையவன், நாட்டுக்கு அரசன், நிலமைக்காரன்" என்னும் பொருள்களைத் தரும் எனவும் போப்பு துரை, மர்காஷியஸ் துரை, தர்ஸ்டன் துரை, மதராஸ் லார்டு பிஷப்பு முதலியவர்கள் கூறியிருக்கின்றார்கள். இவ்வங்கிலேயர்களது அபிப்பிராயங்கள் நாம் மேலே கூறியுள்ள நாடு* என்னும் பெயர்ச் சொல்லிலிருந்து, நாடான் என்னுஞ் சொல் பிறந்ததால், "நாட்டை யுடையவன், நாட்டுக்கரசன்" என்னும் பொருள்களை விளக்கும் எனக் கூறியிருத்தலுக்கு ஒத்து வருகின்றன. நாடுடன் சம்பந்தப்பட்ட பெயர்களையே அரசர்கள் சாதிபெயர்களாகவும், பட்டப் பெயர்களாகவும் வைத்து

* "Chief of District termed Nadu."

வழங்கி வருவார்கள் எனவும், அத்தகைய பெயர்கள் திவாகர நிகண்டுகளில் கூறியுள்ள அரசர் பெயர்களில் பெரும்பான்மை என வும், இந்நூலில் இனிது விளக்கியிருத்தலால், நாடான் என்னும் பெயர் அரசன் என்னும் பொருளிலேயே நிற்கும் எனத் தெளிக.

"The two words Nadan and Gramony mean the same thing, namely, ruler of a country or of a village, the former being a Tamil and the latter a Sanskrit word" Vide, Edgar Thurston's Castes and Tribes of Southern India Vol. V1, P. 368.

"நாடான், கிராமணி என்னும் இரண்டு வார்த்தைகளுக்கும் அருத்தம் ஒன்றே, அதாவது நாட்டிற்கு அரசன், கிராமத்திற்கு அரசன் எனப் பொருள் கொள்ளும். முன்னது தமிழும், பின் னது சமஸ்கிருத வார்த்தையுமாகும்" என தர்ஸ்டன்துரை "தென் இந்தியாவின் சாதிகளும், குலங்களும்" என்னுஞ் சரித்திரத்தில் கூறியிருக்கின்றார். இப்பகுதியில் தர்ஸ்டன் துரை அவர்கள் நாடான் என்பது நாட்டிற்கு அரசன் எனப் பொருள் தருமென விளக்கவே Nadan mean the ruler of a country என விளக்கி யுள்ளார்.

"The Nadans, a name signifying lord of the soil are Sandrar land-owners, who claim rights of Seigniorage over most of the villages in the south." Vide, Bishop Caldwell's Tinnevelly and the Tinnevelly Mission, 1869; and The Mission of Edeyenkoody, 1845, Ch. II, P. 6.

"நாடார் என்பது பூமிக்கதிகாரி என்னும் பொருள் கொள் ளும். அவர்கள் நாட்டுக்குடையவரா யிருக்கின்றார்கள். தென் தேசத் திலுள்ள அநேக கிராமங்களின் மேலும் ஆதிபத்திய உரிமையைக் கொண்டாடி வருகின்றார்கள்" என்று பிஷப்பு கால்டுவேல்துரை அவர்கள் கூறியிருக்கின்றார்.

1. "The Nadans a name signifying lords of the soil."	"நாடார் என்னும் பெயர் நாட் டை யுடையவர் என்னும் பொருளைத்தரும்."

இதில் நாடான் என்னும் பெயருக்குத் தாற்பரியம் lords of the soil என்னும் பொருளைத் தந்தெழுதி யிருக்கின்றார். lords of

the soil என்பதற்கு "நாட்டுக்கு உரிமை உடைய அரசர்" என்பது பொருளாம். அதாவது "King of district termed Nadu" என்பதாம். என்பதற்கு "நாடு" எனப் பெயர்கொண்ட மாகாணத்திற்கு அரசன் என்பது கருத்தாம். இதனால் நாடான் அரசன் என விளங்கினன்.

2. "The Nadans are land-owners" — "நாடார் பூமியை யுடையவர்களா யிருக்கிறார்கள்."

இதில் "நாட்டை யுடையவரே நாடார் என பிஷப்பு கால்டுவெல் துரை கூறியதால், நாடு அரசருக்கே உரியதன்றி, பிறருக்கின்றெனத் துணியப்படும். இதை நச்சினார்க்கினியரும் "மண்கோடலும், திறைகோடலும் அரசர்க்கே உரியது" என வற்புறுத்துகின்றார், தொல்காப்பிய உரையில். இதனாலும் நாடார் அரசர் எனப்படுவர்.

3. "Nadans claim rights of seigniorage over most of the villages in the south" — "நாடார்கள் தென் தேசத்திலுள்ள அநேக கிராமங்களின் மேல் தங்களது ஆதிபத்திய உரிமையைக்கொண்டாடிவருகின்றார்கள்."

இப்பகுதியில் கூறும் பிரகாரம் நாடார்கள் அவர்களது ஆதிபத்திய உரிமையை அநேக கிராமங்களின்மேல் கொண்டாடி வருதல் அவர்களது சாதியின் இயற்கையேயாம். அதாவது, அரசராயினமையின் அவர்களுக்கு இயற்கையாகவே முடிந்தது. அத்தகைய ஆதிபத்திய உரிமையைக் கொண்டாடுபவர்கள் இவர்களே எனத் தெரிவிக்க Nadans claim rights of seigniorage எனவும்; அவ்வித ஆதிபத்தியமும் அநேக கிராமங்களின் பேரிலும் இப்பொழுதும் நடத்திக்கொண்டு வருகின்றார்கள் என விளக்க ovar most of the villages எனவும், அவ்வித கிராமங்களும் திருநெல்வேலியிலுள்ளவைகள் என விளக்க in the south எனவுங் கூறி விளக்கியிருத்தலால் பாண்டிய வம்ஸத்தவர்கள் இவர்கள் எனவே துணியப்படும். கொற்கையைத் தலைநகராக்கி திருநெல்வேலியை ஆண்டவர்கள் பாண்டியர்களே யாவர். இந்த நாடார்கள் பாண்டியவம்ஸத்தவர்கள் ஆனமையினாலேயே அந்த பாண்டிய நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களின் பேரிலும், பின்னால் கூறப்போகும் அதிகாரங்

களை பரம்பரையாகச் செலுத்திக்கொண்டு வந்தார்கள், வருகிறார்கள். அப்படி அதிகாரங்களைச் செலுத்திய அரசவம்ஸத்தவர்கள் இவர்களாயினமையின் இவர்களுக்கு "நாடார்" என்னும் பட்டப் பெயர் நன்கு அளிக்கபட்டது. நாடார் என்னும் பதம் அரசர் என்னும் பொருளில் நிற்குமென விளக்குதற்கே பெருந்தேவனார்* பாரத வெண்பாவில் துரியோதனன் சபையை "நாடார் சபை" எனக்கூறி, அரசர் சபையை விளக்கி யிருக்கின்றார். இவைகளாலும் **நாடார்கள் அரசவம்ஸத்தவர்கள்** எனச் சொல்லாமலே யமைவர்.

"I had also to deal with another class of claimants;—The Nadans, who had been the original proprietors of all the lands in the neighbourhood, and who still professed as lords of the soil, to have certain rights of seigniorage over even the lands they had sold, especially the right of levying a small rent on all houses, built within their boundaries and a small fee at weddings &c. I had no doubt about its having been customarily submitted to." Vide, Bishop Caldwell's Reminiscence. P. 87.

"இன்னொரு நாடுரிமைக்கார வகுப்பைக் கவனிப்பாம்:—நாடார்கள் (கொற்கைக்கு) அருகாமையிலுள்ள எல்லா நிலங்களுக்கும் சுதந்தரம் உடையவர்களா யிருந்தார்கள். அந்த நாடார்களை இப்பொழுதும் பூமிக்குரிய அரச சந்ததியார்கள் என பகிரங்கப் படுத்த அந்த நாடார்கள் விற்ற நிலத்தின்பேரிலும் சில யுக்தமான ஆதிபத்தியத்தை அதாவது அதிகாரத்தை உடைத்தா யிருக்கின்றார்கள். சாதாரணமாக அவர்களது எல்லைக்குட்பட்ட நிலங்களில் கட்டப்பட்ட எல்லா வீடுகளுக்கும் யுக்தமான சிறிய வரியையும், அந்த எல்லையில் வசிக்குமவர்களின் கலியாணத்தில் சிறிய கட்டணத்தையும் வாங்கி வருகின்றார்கள். மற்றவர்களும் இவ்விதம் கொடுத்து (அவர்களுக்கு) கீழ்ப்படிந்து நடத்தல் பூர்வீக வழக்கை அனுசரித்து நடந்து வருகின்றார்கள் என சந்தேகமில்லாமல் சொல்லலாம்" என கால்டுவெல்துரை அவர்கள் தாமியற்றிய "ரெமினிஸென்ஸ்" என்னும் புத்தகத்தில் கூறியிருக்கின்றார்.

---

* சங்கப் புலவர்களுள் ஒருவர்.

1. "The Nadans, who had been the original proprietors of all the land in the neighbourhood."	"நாடார்கள் (கொற்கைக்கு) அருகாமையிலுள்ள எல்லா நிலங்களுக்கும் பூர்வம் சுதந்தரமுடையவர்களா யிருந்தார்கள்."

இப்பகுதியில் நாடார்கள் எல்லா நிலங்களுக்கும் சுதந்தரம் உடைய அரச வம்ஸத்தவர்கள் என்பதை விளக்க The Nadans are the proprietors of all the land எனக் கூறி, அப்படிக் கூறியதில் எல்லா நிலங்களும் என்பதை விளக்க all the lands என்னும் பகுதியை வைத்தும், அந்த நிலங்களுக்கு சுதந்தரமுடையவர்களா யிருந்தவர்கள் நாடார்களே என விளக்க The Nadans are the proprietors எனவும், அவ்வித சுதந்தரமுடைய நிலங்களும் தலைநகராகிய கொற்கைக்கு அருகிலுள்ளவைகள் என விளக்க in the neighbourhood என்னும் பகுதியை வைத்தும், அப்படி சுதந்தரம் பெற்றிருந்தது பூர்வம் என விளக்க original என்னும் பகுதியை வைத்தும் பிஷப்பு கால்டுவேல் துரை நன்கு விளக்கியிருக்கின்றார். இப்பகுதி நாடார்கள் பூர்வம் பாண்டிய தேசத்திற்கு சுதந்தரமுடையவர்கள் என்பதை விளக்க The Nadans are the original possessors of the Pandiya country என டக்கர் துரைசானி அம்மாள் கூறியதை கியாபகத்திற்கு வருவிக்கின்றது. இவைகளை உத்து யோசிக்கின் பூர்வம் பாண்டியன் ஆளுங்காலத்தில் பாண்டிய தேசம் பல நாடுகளாகப் பிரிந்து, பாண்டியனுக்கு உட்பட்ட அவன் வம்ஸத்தவர்களாகிய சிற்றரசர்கள் அந்த நாடுகளைக் கட்டி யாண்டு நாடார்கள் எனப்பட்டனர் என மேலே விளக்கினமையை பிஷப்பு கால்டுவேல் துரையும் ஒத்து விளக்குகின்றார். இதனால் பாண்டியனுக்குப் பகையரசர்கள் மதுரையையும், அதையடுத்த நாடுகளையுங் கைக்கொண்டனர்களே யன்றி, திருநெல்வேலியின் தெற்கிலுள்ள பூமிகளையுங் கைப்பற்றவில்லை எனவும், அவைகள் அக்காலத்திலிருந்தே பாண்டிய வம்ஸத்தவர்களால் ஆளப்பட்டு வருகின்றன வெனவும், அவர்கள் நாடார்களே எனவும், குட்டம் முதலிய நாடுகளில் பரம்பரை ஆதிபத்தியஞ் செலுத்திவரும் நாடார்கள் சந்திரகுல பாண்டிய வம்ஸத்தவர்களே எனவும் நன்கு பெறப்படுகின்றன.

2. "The Nadans, who still professed as lords of the soil."	"நாடார்களை நாட்டுக் கதிகாரிகள் என்று இப்பொழுதும் அறிக்கையிடப்படும்."

இதில் நாடார்கள் பூர்வத்திலிருந்து நாளது பரியந்தம் தொன்றுதொட்டு பரம்பரையாக நாட்டையாண்டு வருகின்றார்கள் என்பதை விளக்க still professed as lords of the soil எனக் கூறி, அப்படிக் கூறியதில் இன்னும் என்னும் பொருளை விளக்கும் still என்னும் பதத்தை வைத்தும், அப்படி ஆளுதலும் அரசர்களைப்போல் ஆண்டுவருகிறார்கள் என்பதை விளக்க as lords of the soil என்னும் பகுதியை வைத்தும், அப்படி வைத்த பகுதியில் "அரசர்களைப்போல்" என்பதை விளக்கும் as lords என்னும் பகுதியை வைத்தும் விளக்கியிருக்கின்றார். இப்பகுதி தென்தேசத்தில் நாடார்களே நாட்டுக்கு உடையவர்களா யிருக்கிறார்கள் என்பதை விளக்கும் In the south a landed proprietor is a Nadan எனப் போப்பு துரை அவர்கள் கூறிய பகுதியை ஒத்து வருகின்றது. இதனால் நாடார்கள் நாட்டை ஆண்ட பாண்டிய வம்லைத்தவர்கள் என நன்கு விளக்கப்படுவர்.

3. "To have certain rights of seigniorage* over even the lands they have sold, especially the rights of levying a small rent on all houses built within their boundaries and a small fee at wedding. & c."	"நாடார்கள் தாங்கள் விற்ற நிலத்தின் பேரிலும் சில யுக்தமான ஆதிபத்தியத்தை அதாவது அதிகாரத்தை உடைத்தாயிருக்கின்றனர். சாதாரணமாக அவர்கள் எல்லைகளுக்குட்பட்ட நிலங்களில் கட்டப்பட்ட எல்லா வீடுகளுக்கும் யுக்தமான சிறிய வரியையும், அந்த எல்லையில் வசிக்குமவர்களின் கலியாணத்தில் சிறிய கட்டணத்தையும் வாங்கி வருகின்றார்கள்."

* Seigniorage—something claimed or taken by virtue of sovereign prerogative. (Collins' Graphic English Dictionary.) Seigniorage—அதிகாரம், ஆதிபத்தியம்; prerogative—சுதந்தரம், உரிமை, சொந்தம்; (Percival's Dictionary.)

இப்பகுதியில் நாடார்கள் சில யுக்தமான ஆதிபத்தியத்தை அல்லது சுதந்தரத்தை உடைத்தா யிருக்கின்றார்கள் என்பதை விளக்க They have certain rights of seigniorage எனவும், அந்த சுதந்தரமும் வீடுகளுக்கு வரிவிதித்து வாங்குஞ் சாதியார் என்பதை விளக்க levying a small rent on all houses எனவும், இன்னும் கலியாணங்களிலும் வரிவாங்கும் வழக்கையுடையார் என்பதைத் தெரிவிக்க a small fee at wedding எனவும், அப்படி வாங்குதற்கு இந்த நாடார் சாதியார்களுக்கு அதிகாரம் உண்டென விளக்க rights of levying எனவும், அவ்வித அதிகாரமும் தங்கள் நாட்டில் செலுத்தி வருகின்றார்கள் என்பதை விளக்க within their boundaries எனவும், அந்த நாட்டில் அடங்கிய சொந்த நிலத்தில் இருக்கும் வீடுகளுக்கு மாத்திரம் அல்ல, அவர்கள் விற்ற நிலத்தில் இருக்கும் வீடுகளின்பேரிலும் அதிகாரத்தோடு வரியை வசூலிப்பர் என்பதைத் தெரிவிக்க over even the land they have sold எனவுங் கூறி பிஷப்பு கால்டுவேல துரை அவர்கள் விளக்கியிருக்கின்றார். விற்ற நிலத்தின்பேரில் வரி வாங்கும் முறை அரசர்களுக்கன்றி, மற்றவர்களுக்கு இல்லை என்னுந் துணிபை விளக்குதற்கே as lords of the soil எனவுங் கூறி, வரிவாங்கும் நாடார்களை அரசர்கள் எனத் துணிந்தனர்.

4. "I had no doubt about its having been customarily submitted to."	"மற்ற சாதியார்கள் இவ்விதம் வரி கொடுத்து கீழ்ப்படிந்து நடத்தல் பூர்வவழக்கை அனுசரித்து நடந்து வருகின்றார்களென சந்தேக மில்லாமல் சொல்லலாம்."

இப்பகுதியில் நாடார்குலத்தவர்களுக்கு மற்ற சாதியார்கள் கீழ்ப்படிந்து நடந்து வரியைச் செலுத்திக்கொண்டு வருகின்றார்கள் என்பதை விளக்க *submitted to எனவும், அப்படி அவர்கள் நாடார்களுக்கு கீழ்ப்படிந்து நடத்தலும் பூர்வ வழக்கை அனுசரித்தல் என விளக்க having been customarily எனவும், அவர்கள் அரசர்களா யிருந்தமையினாலேயே வழக்கத்தை அனுசரித்து

* Submitted—அடங்குதல், கீழ்ப்படிதல், தாழ்தல் (Percival's English and Tamil Dictionary.)

நடந்து வருகின்றார்கள் எனச் சந்தேகமில்லாமல் சொல்லலாம் என்பதை விளக்க I had no doubt about it எனவுங் கூறி விளக்குவதால் நாடார்களை அரசர்கள் எனத் தீர்மானிக்கப்படும். நாடார்கள் அரசர் அல்லாதிருப்பின் வழக்கம் என்னும் பொருளைத் தரும் customarily§ என்னும் பதத்தை வைத்து முடிக்கார். இவர்கள் அரசவம்ஸத்தவர்கள் ஆனமையினாலேயே பாண்டியனுக்குரிய பட்டப்பெயராகிய தமிழ் நாடான், வையை நாடான் என்பவற்றால் வெளிப்படும் "நாடான்" என்பதை இவர்களும் தங்களுக்குரியதெனத் தாங்கி•:வெளிப்பட்டனர். இவைகளாலும் நாடான் அரசன் என விளங்குவன்.

From all that I can find about them (Nadars) I am much inclined to agree with those who consider them to have been the original possessors of the (Pandiya) country.

One strong argument in favour of this conjecture, is that in the southern part of Tinnevelly, the highest class of Sandrars, called Nadans, are the acknowledged proprietors of the soil; in even when a Nadan has sold a piece of land, he retains the right to a sort of quit-rent.

Indeed the system is very like that of our lords of Manor, with the addition of the remarkable privilege, that in any dispute that is brought into a court of law, with regard to landed property, though all other classes are obliged to establish their claims by written documents it is only necessary for a Nadan to be identified as the Nadan of such a particular spot: and the disputed property is adjusted to him, unless the opponent can prove his purchase of it." Vide, Miss. S. Tucker's (sister of Rev, J. Tucker, M. A.,) South Indian Sketches, Pt. II, Letter. 4, P. 35; and The Travancore State Manual, Vol. II, P. 392, 398.

---

§ Customarily—பழக்கமாய், வழக்கமாய் (Percival's Dictionary.)

"இந்த நாடார் குலத்தவர்கள் பாண்டிய நாட்டிற்கு ஆதிபூர்வ பாத்திய உரிமை யுடையவர்கள் என்று எண்ணுகிறவர்களிலிருந்து நானும் அவர்களைக்குறித்து ஆராய்ந்து அறிந்திருக்கிற விஷயங்கள் எல்லாவற்றிலும் இருந்தும், எனக்கும் அவ்வாறே அபிப்பிராயமாகின்றது.

இவ்வாறு அபிப்பிராயங் கொள்ளுதற்கு ஒரு பலத்த நியாயம் உண்டு. அந்த நியாயம் என்னவென்றால்: — திருநெல்வேலி நாட்டின் தென்பாகத்தில் வசிக்கிற சான்றோர்களுக்கு நாடார் என்னும் பட்டப்பெயர் வழங்கி வருகின்றது. இந்தப் பட்டப்பெயர் பெற்றிருக்கிற நாடார்கள் நிலத்துக்கு உரிமையுடைய நிலமைக்காரர் என எவரும் ஒப்புக்கொண்டு இருக்கின்றனர். ஒரு நாடான் தன் சுதந்தரமான நிலத்தில் ஒரு துண்டு நிலத்தை அயலான் ஒருவனுக்கு கிரயஞ்செய்து கொடுத்திருந்த போதிலும், மேற்படி நிலத்தைக் கிரயத்திற்கு வாங்கினவன், மேற்படி நிலத்திற்கு ஆதிபூர்வ பாத்திய் உரிமையுடைய மேற்படி நாடானுக்கு நிலவரிப்பணம் கொடுத்து வருவது நெடுகிலும் வழக்கம்.

மெய்யாகவே இந்த வழக்கம் நம்முடைய அங்கிலேய நாட்டு அரசர்களுக்குள்ளும் இருக்கிற வழக்கம்போ லிருக்கின்றது. இன்னும் ஒரு நூதனமான வழக்கம் உண்டு. நில வியாஜ்ஜியம் நேரிடுங் காலத்தில் நியாயஸ்தலங்களில் மற்றவர்கள் எல்லோரும் எழுத்துப் பட்டயங்களாகிய சாசனங்களால் தங்களுக்குரிய மேற்படி நில பாத்தியத்தை ருசுப்படுத்த வேண்டியதாயிருக்கின்றது. வியாச்சியக்காரன் மேற்படி நிலத்தைத் தான் கிரயத்திற்கு வாங்கினதை தஸ்தாவேஜுகளால் ருசுப்படுத்தாது போகிற காலத்தில், மேற்படி பூமிக்குரிய நாடான் எவனோ அவனுக்கே உரியதென்று தீர்ப்பாகின்றது" என டக்கர் துரைசானி அம்மாள் கூறியிருக்கின்றனர்.

1. "The Nadars are the original possessors of the Pandiya Country." "நாடார்கள் பாண்டிய நாட்டிற்கு பூர்வ பாத்திய முடையவர்களா யிருக்கின்றார்கள்."

இப்பகுதியில் டக்கர் துரைசாணி அம்மாள் "நாடார்களை பாண்டிய தேசத்திற்கு பூர்வ பாத்திய உரிமையுடைய வம்ஸத்தவர்கள்" என்றனர். என்றால் "நாடார்கள் பாண்டிய நாட்டை

யாண்ட பாண்டிய வம்ஸத்தவர்கள்" என்பது அந்த அம்மாளின் துணிபு. அதை விளக்கவே "The Nadars are the original possessors of the Pandiya country" என்னும் பகுதியை வைத்தனர். அப்படி வைத்த பகுதியும் "Nadan was original lord of the soil" என மர்காஷியஸ் துரை கூறிய பகுதியைத் தாங்கிப் பேசியிருக்கின்றது. ஆகவே, மர்காஷியஸ், டக்கர்துரை சாணி, திருவாங்கூர் ஸ்டேட் மானியுல் நூலார் ஆகிய இம்மூவர் கள் கருத்தும் ஒன்றென முடிந்தது. அதாவது நாடார்கள் பாண் டிய குலத்தவர்க ளானதினால் அக்குலத்தார்க்குரிய நாடு பாத்தி யதையும் உண்டு என விளக்கினர்.

2. "One strong argument in favour of this conjecture, is that in the southern part of Tinnevelly the highest class of Sandrars called Nadars, are the acknowledged proprietors of the soil."

"திருநெல்வேலியின் தென்பாகத்தில் வசிக்கும் சான்றார்களில் உயர்ந்தவர்களே நாடார்கள் என் றழைக்கப்படும். அவர்களை அரசர்கள் எனத் தீர்மானித்தற்கு இது ஒரு பலத்த நியாயமாகும். நாடார்களை நில வுரிமைக்காரர்கள் என எவரும் ஒப்புக்கொண் டிருக்கின்றனர்."

நாட்டை யுடையவர்களே நாடார்கள் என விளக்க Nadan is a ruler of a Nadu or District என சென்செஸ் புத்தகத்தினும், Nadu was managed by an officer called Nadan எனச் செங்கல்பட்டு மானியுலினுங் கூறியிருப்பதோடு, அரசர்களுக்கு நாட்டின் பெயராலேயே குலப்பெயர்கள் ஏற்படுமெனத் திவாகர நிகண்டுகளால் துணியப்படுவதாலும், உலகோம்புந்தொழில் அரசருக்கே உரியதென மநுவாதி ஸ்மிருதிகளால் விளங்கலாலும், இவைகளை யுட்கொண்டே மேற்பகுதியில் இவர்களுக்கு நாடான் என்று வழங்கி வருவதாலேயே நாடுடைய அரசர்கள் எனத் தீர்மானிக்கப்படும் எனவும், அத்தீர்மானமும் ஒரு பலத்த தீர்மானமாகும் எனவும் விளக்குதற்கு One strong argument என்றுங் கூறி விளக்கியிருக்கின்றார். அதனோடு, are acknowledged proprietors of the soil என்னும் பகுதியை வைத்தும்,

மற்ற ஜாதியார்களும் நாடார்களை நிலமைக்காரர்கள் அல்லது அரசர்கள் என ஒப்புக்கொண்டார்கள் என்னுந் துணிபையும் விளக்கியிருக்கின்றார். இதனாலும் **நாடார்களை அரசர்கள்** எனத் தீர்மானிக்கப்படும்.

3. "In even when a Nadan, has sold a piece of land, he retains the right to a sort of quit-rent"

"ஒரு நாடான் தன் காணியாட்சியான நிலத்தில் ஒரு துண்டு நிலத்தை அயலான் ஒருவனுக்கு கிரயஞ்செய்துக் கொடுத்திருந்த போதிலும், மேற்படி நிலத்தைக் கிரயத்திற்கு வாங்கினவனிடத்திலிருந்து, மேற்படி நிலத்திற்குரிய நாடான் நிலவரிப்பணம் வாங்கி வருவான்."

இப்பகுதியில் மேலே கூறியவாறு ஒப்பினமைக்கு விற்ற நிலத்தின்பேரிலும் வரிவாங்குந்துணிபு, இந்த நாடார் குலத்தவர்களுக்கே உண்டாயிருப்பதோடு, மற்ற சாதியார்களும் இந்த நாடார்களுக்குக் கீழ்ப்படிந்து கொடுத்துக்கொண்டு வருதலால், அவர்கள் இந்த நாடார்களை நிலமைக்காரர்கள் அல்லது அரசர்கள் என நன்கு மதிக்குந் திறமையே போதிய முகாந்தரமாகும். இதில் டக்கர் துரைசானி அம்மாள், பிஷப்பு கால்டுவேல் துரை அவர்கள் கூறியதைப்போல், தாங்கண்டதையுங் கூறியிருக்கின்றார். அதனால் இம்மூவர்கள் கருத்தும் **நாடார்களை அரசர்கள்** என்பதே துணிபு.

4. Indeed the system is very like that of our lords of Manor"

"மெய்யாகவே இந்த வழக்கம் நம்முடைய அங்கிலேய நாட்டு அரசர்களுக்குள் இருக்கும் வழக்கம்போ லிருக்கின்றது."

இப்பகுதியில் அங்கிலேய நாட்டு அரசர்களுக்குள் நாடு சுதந்தரத்திலிருக்கும் வழக்கபழக்கம் இந்த நாடார்களுக்குள்ளும் இருக்கிறதென விளக்குதற்கு The system is very like that of our lords of Manor* என்றார். இந்த நாடார்களுக்குள் இருக்கும் வழக்கம் அங்கிலேய நாட்டு அரசர்களுக்குள் இருக்கும் வழக்

* "Manor—The District over which a feudal chief or lord." (Collins' Graphic English Dictionary.)

கத்தோடு ஒத்திருத்தலால் அவ்வங்கிலேய நாட்டு அரசர்களைப் போல், இந்த நாடார்களும் மெய்யாகவே அரசர்கள் என விளக்குதற்கு Indeed என்னும் பதத்தை வைத்தும் வற்புறுத்தி யிருக்கின்றார். இதனாலும் நாடார்கள் அரசர்கள் எனத் துணியப்படுவர்.

5. "With the addition of the remarkable privilege, that in any dispute that is brought into a court of law, with regard to landed property, though all other classes are obliged to establish their claims by written documents, it is onlynecessary for a Nadan to be identified as the Nadan of such a particular spot, and the disputed property is adjusted to him unless the opponent can prove his purchase of it"

"இதோடு நாடார்களுக்கு இன்னொரு அதிசயமான சுதந்தரம் உண்டு. நியாயஸ்தலங்களில் நிலவியாச்சியங்கள் நேரிடுங் காலத்தில் மற்றவர்கள் எல்லோரும் எழுத்துப்பட்டயங்களாகிய சாசனங்களால் தங்களுக்குரிய மேற்படி நிலபாத்தியத்தை ருசுப்படுத்த வேண்டியதா யிருக்கின்றது. வியாச்சியக்காரன் மேற்படி நிலத்தை தான் கிரயத்திற்கு வாங்கினதை தஸ்தாவேஜுகளால் ருசுப்படுத்தாதுபோகிற காலத்தில் மேற்படி பூமிக்குரிய நாடான் எவனோ அவனுக்கே உரியதென்று தீர்ப்பாகின்றது."

இந்தப்பகுதியில் நாடார்களுக்கு உரிய பரம்பரையான நில பாத்தியத்தின் அங்கீகரிப்பை கோர்ட்டாரும் அறிந்து தீர்ப்புச் செய்வதாக டக்கர் துரைசானி அம்மாள் கூறியிருக்கின்றார். நாடார்கள் பாண்டியகுல அரசர்கள் அல்லாவிட்டால் இத்யாதி ஆதரவுகள் இயற்கையாக ஏற்படமாட்டாது. இவ்வகையாலும் நாடார்கள் இயற்கையக்கு ஆதரவுகளைப்பெற்ற சந்திரகுல பாண்டிய வம்ஸத்தவர்கள் எனப் பசுமரத்தாணியைப்போல் அறையப்படும்.

"The Rajputs (Sanskrit, rajaputra, son of a king) have been defined as the warrior and land-owning race

of Northern India, who are also known as Thakur, lord, or Chatri; the modern representative of the ancient Kshatriya.' Vide,Crooke's Tribes and Caste of the North-Western Provinces and Oudh; and Edgar Thurston's Castes and Tribes of Southern India. Vol. VI, P, 240.

"இராஜபுதானத்திலுள்ள அரச புத்திரர்கள் வடதேசத்து யுத்தவீரரும், பூமியையுடைய வம்ஸத்தவருமாவர் என வரையறுக்கப்படும். அவர்களை தாக்கூர் என்றும், தலைவர் என்றும், க்ஷத்திரியர் என்றும் அழைக்கப்படும். இவர்களே பூர்வ அரசர்களின் வம்ஸத்தவர்கள் எனப்படுவர்" என்பதாம்.

இப்பகுதியில் வடதேசத்தரசர்களை பூமியையுடைய வம்ஸத்தவர்கள் எனப் பொருள் கொள்ள land-owning race எனக் கூறியிருத்தலைப்போல், இத்தென்தேச நாடார்களையும் lord of the soil என்றும், proprietor of all the land என்றுங் கூறி பூமியையுடைய வம்ஸத்தவர்கள் என விளக்கியிருத்தலால் **நாடார்களும் தென்தேசத் தரசர்கள்** என விளங்குவர்.

ஆகவே, மேற்கூறிய நான்கு பகுதிகளிலும் நாடார்களை நாட்டிற்குரிய காணியாட்சிக்காரர்கள் அல்லது நிலமைக்காரர்கள் என எவரும் ஒப்புகின்றனர் எனவும், அப்படி மற்றவர்களும் ஒப்புக்கொண்டார்கள் என்பதற்கு நாடார்கள் விற்ற நிலத்திற்கு நிலத்தை வாங்கினவர்கள், விற்ற நாடானுக்கு யுத்தமான வரியை நெடுகிலுங் கொடுத்து வருதலே போதுமான சாட்சியாகும் எனவும், நிலத்தை விலைக்கு வாங்கினவர்கள் நாடார்களுக்குக் கீழ்ப்படிந்து வரியைச் செலுத்தி நடத்தல் பூர்வ வழக்கை அனுசரித்து நடந்து வருகின்றார்கள் எனவும், விற்ற நிலத்தின்பேரில் வரிவாங்கும் வழக்கம் அரசர்கள் அனுசரிக்கவேண்டிய பல முக்கிய வழக்கங்களுள் ஒன்றாகும் எனவும், இந்த வழக்கத்தை அங்கிலேய நாட்டு அரசர்களும் அனுசரித்து வருகின்றார்கள் எனவும், நாடார்களையும் அரசர்கள் என பல முகாந்தரங்களால் மேலே எண்பித்திருத்தலால், அவர்களும் இவ்வழக்கத்தை அனுசரித்து வருதல் தகுதியே யாகும் எனவும், அதனாலேயே நாடார்களும் பூர்வம் முதல் நாளதுபரியந்தம் பரம்பரையாக அந்த வழக்கங்களை இடையறாது அனுசரித்து வருகின்றார்கள் எனவும், "பிஷப்பு-கால்டுவெல் துரை,

டக்கர் துரைசானி, மர்காஷியஸ் துரை, போப்பு துரை" முதலிய துரைமார்கள் கூறியிருக்கின்றார்கள். இந்த அங்கிலேய வித்துவான்கள் தாங்கள் கண்கூடாகக் கண்ட அனுபோக நடவடிக்கைகளையே எடுத்துக் கூறினமையின், இவைகளே நாடார்களை க்ஷத்திரியர்கள் எனக் கூறப் போதுமான பிரத்தியட்சப் பிரமாணங்களாகும்.

இதில் சொல்லுகிற பிரகாரம் தாம்பிரவர்ணி நதியின் முகத்துவாரத்தில் இருந்து கொற்கை நகருக்கு வடக்குத் தெற்குமாக கீழ்க் கடற்கரையை யடுத்த பூமிகளில் நாடார் வம்ஸத்தவர்கள் நாளதுவரையினும் இடையறாது வாசஞ்செய்து மேற்படி திசையிலிருக்கிற கிராமங்களை அனுபோகஞ் செய்துக்கொண்டு வருகின்றார்கள். கொற்கை* நகருக்கு மேற்கில் தாம்பிரவர்ணி நதியின் தென்கரையில் இருக்கிற ஆழ்வார் திருநகரி நாடார் வம்ஸத்தலைவர்கள் அரசுபுரிந்த நகரங்களில் ஒன்றாகும். இதில் குடியிருந்து வருகிற காணியாட்சிக்காரர் அல்லது நிலமைக்காரராகிய நாடாருக்கு அவர்களுடைய அனுபோகத்தில் இருந்து வருகிற நாடு பூமி பாத்திய உரிமைக்கு நிலத்தோடு நிலமாய்த் தொன்றுதொட்டுக் குடியிருந்து, அனுபோகஞ் செய்து வந்திருக்கிற அனுபோக உரிமையே யல்லாது சாசனப் பத்திரங்கள் இல்லை. இவ்வித அனுபோக நிலங்கள் மதுரைப் பட்டணத்திலும் அநேகம் உண்டு. இதனால் ஆந்திரதேசத்தவர்களாகிய வடுக அரசர்களின் படை எழுச்சியால் அலைக்கணுற்ற இந்த அரசகுல நாடார்கள் நாடுகளைவிட்டு, அவர்கள் ஆதிபத்திய உரிமையை அக்காலத்திலிருந்தே பல கிராமங்களின்மேல் செலுத்தி வந்தார்கள்,

* "Tinnevelly had originally no name of its own, but was merely the southern portion of the Pandiyan Kingdom; but there the dynasty of the Pandiyas originated and there on the banks of the Tamraparni, you well find that Korkei, once a famous city, now an insignificant village, where the Pandiyans reigned, before they selected Madura as the chief seat of their power and from which they took the name of Korkeiali, ruler of Korkei." Vide, Dr. R. Caldwell's Lecture on Tinnevelly and the Tinnevelly Mission, P. 2.

வருகிறார்கள் என விளங்குகின்றன. ஆனதால், பூர்வத்தில் கொற்கை நகரிலிருந்து அரசு புரிந்த பாண்டிய குலத்தவர்கள் இவர்கள் தான் என்றுங் கூற விளங்குகின்றனர்.

தமிழ் நாடு பன்னிரெண்டில் குட்டம் நாடு என்பதும் ஒன்று. "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி, பன்றி யருவா வதன் வடக்கு - நன்றாய, சீதமலாடு புனனாடு செந்தமிழ் சேர், ஏதமில் பன்னிரு நாட்டெண்"* என்னுஞ் செய்யுளால் தமிழ் நாடு பன்னிரண்டில் குட்டம் என்பதும் ஒன்றென விளங்கும்.

தமிழ் நாடு பன்னிரண்டாவன.

1. தேன்பாண்டி நாடு:—திருநெல்வேலி.
2. குட்டம் நாடு:—திருவாங்கூரைச் சார்ந்த ஆலம்புழை.
3. குடம் நாடு:—கொச்சி நாடு.
4. கற்கா நாடு:—கொச்சிக்குக் கிழக்கிலுள்ள மலைநாடு, பழனி முதலிய நாடுகள்.
5. வேணாடு:—திருவாங்கூர்.
6. பூழி நாடு:—கள்ளிக்கோடு.
7. பன்றி நாடு:—ராமனாதபுரம், சிவகெங்கை முதலியன.
8. அருவா நாடு:—தென்னார்க்காடு.
9. அருவா வடதலை நாடு:—செங்கற்பட்டு.
10. சீத நாடு:—நீலகிரி, கோயம்புத்தூர்.
11. மலாடு நாடு:—மலைநாடு, சேலம், திருக்கோவலூர்.
12. புனனாடு:—தஞ்சாவூர் முதலியனவாம்.

இவற்றுள் குட்டம் நாடானது தென்பாண்டிய நாட்டின் தென் பாகத்தில் தென் கடற்கரைக்கு அருகிலுள்ளது. அந்தக் குட்டம் நாடு பூர்வகாலமுதல் நாடார்களுடைய பூமியாம். அந்த நாடு நாளதும் நாடார் வம்ஸத்தவர்களது ஆதிபத்திய அனுபோக உரிமையைப் பெற்று வருகின்றது. இதைப்போல் இன்னும் இத்தென் பாண்டி நாட்டில் அநேகம் ஊர்களுள்ளன. அவையாவன;

1. அகரம்	5. ஏரல்
2. அகத்தீஸ்புரம்	6. கச்சினாவிளை
3. இராஜாக்கள் மங்கலம்	7. காயாமொழி
4. உமரிநகர்	8. கானத்தூர்

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், 4 வது சூத்திரம்.

9. குட்டம்
10. குறம்பூர்
11. சிறுத்தொண்ட நல்லூர்
12. திருவழுதி நாடன்விளை
13. படுக்கப்பத்து
14. பரமன்குறிச்சி
15. பள்ளிப்பத்து
16. புதுக்குடி
17. மாவிடுபண்ணை
18. மாறுடுதண்டுப்பத்து
19. மூலபுளி
20. வாணுபன்விளை
21. வாழையடி
22. வாளவல்லான்

இன்னும் பல உள.* இவைகளின் பேரிலும் அவர்கள் ஆதிபத்திய உரிமையை செலுத்தி வருகின்றார்கள் என்பதை விளக்கவே over most of the villages என பிஷப்பு-கால்டுவெல் துரை அவர்கள் கூறியிருக்கின்றார். இவ்விதம் அரசகுலத்தவர்கள் தங்கள் அரசை யிழந்த பிறகும், தங்கள் ஆதிபத்திய உரிமையை பல கிராமங்களின் பேரிலும் செலுத்தி வருதல் நாளதும் வழக்கே.

"These Bhoomias, the sections of the earliest princes, are to be met with in various parts of Mewar. Some of these yet possess entire villages, which are subject to the payment of a small quit-rent." Vide, Hallam, Vol. I, P. 144.

"பூமியர் என்பவர்கள் பூர்வ அரசர்களில் ஒரு வகுப்பினராவர். இவர்கள் மீவார் தேசத்தின் பலபாகங்களில் வசிக்கின்றார்கள். இவர்களில் சிலர் இன்னும் கிராமங்களை உடைத்தாயிருக்கின்றார்கள். அவைகள் சிறிய வரியை உடைத்தாகி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்கின்றன" என்பதாம். வடதேசத்து பூமியை யுடையவர்களை பூமியர் எனக் கூறி வருவதைப்போல், தென்தேச நாட்டை யுடையவர்களையும் நாடார் எனக் கூறி வருகின்றது.

இப்பகுதியில் கூறிய பூமியார் என்னும் அரச வம்சத்தவர்கள் கிராமங்களை இன்னும் உடைத்தாயிருப்பதைப்போல், நாடார்களும் கிராமங்களை இன்னும் உடைத்தாயிருப்பதோடு; அவைகளின்மேலும் அரசர்க்குரிய சுதந்தர ஆதிபத்திய உரிமையையும் நாளதும் பெற்று வருகின்றார்கள். இவ்வகையாலும், நாடார்கள் அரசர்கள் எனத் துணியப்படுவர்.

* சமயம் வாய்த்துழி அவைகளையும் விளக்குவாம்.

"The Nadars are in possession of extensive tracts of land, besides claiming hereditary rights of seigniorage over the lands." Vide, Bishop Caldwell's writing, in 1849.

"நாடார்கள் விசாலமான நாட்டை உடைத்தா யிருக்கின்றார்கள். இதல்லாமலும் அந்த நாட்டின்பேரிலும் அவர்கள் பாரம்பரையான ஆதிபத்திய உரிமையைக் கொண்டாடி வருகின்றார்கள்" எனக் கால்டுவெல் துரை அவர்கள், 1849-ம் வருடத்தில் கூறியிருக்கின்றார்.

1. "The Nadars are in possession of extensive tracts of land."	"நாடார்கள் விசாலமான பூமியை உடைத்தா யிருக்கின்றார்கள்."

அரசிழந்த அரசர்கள் கிராமங்களை உடைத்தாயிருக்கிறார்கள் என மேலே கூறியதற் கிணங்க, இப்பகுதியில் நாடார்களும் பூமியை நாளதும் உடைத்தாயிருக்கின்றார்கள் எனக் கூறியிருக்கின்றது. அப்படி உடைத்தாயிருக்கும் பூமியும் கொஞ்ச நஞ்சமல்ல, பதினாயிரங்கணக்கான காணியை உள்ளடக்கிய கிராமங்களாகும் என விளக்க extensive tracts of land என்றார். அவ்வித பூமியை உடைய நாடார்களும் அரச வம்ஸத்தவர்களே யாவர்.

2. "The Nadars are besides claiming hereditary rights of seigniorage over the lands."	"அதோடு நாடார்கள் அந்த விசாலமான பூமியின்பேரில் பரம்பரையான ஆதிபத்திய அதிகாரத்தைச் செலுத்தி வருகின்றார்கள்."

இப்பகுதியில் நாடார்கள் தங்களது சுதந்தர அதிகாரத்தை கிராமங்களின்பேரில் செலுத்தி வருகின்றார்கள் என விளக்க over the lands என்னும் பகுதியை வைத்தும், அந்த அதிகாரமும் அரசர்களுக்குரிய சுதந்தர அதிகாரத்தைப் போன்றதென விளக்க seigniorage என்னும் பதத்தை வைத்தும், அந்த அரச சுதந்தர அதிகாரமும் இந்த நாடார்களுக்குப் பரம்பரைச் சுதந்தரமென விளக்க hereditary rights என்னும் பகுதியை வைத்தும், நாடார்களை அரசர்கள் என நன்குவிளக்கி யிருக்கின்றார்.

அதாவது மற்ற ஜாதியார்கள் கையாண்டு வராததும், அரசர்கள் கையாண்டு வருவதுமாகிய ஒரு நூதன அதிகாரத்தை இவர்கள் தங்கள் நிலத்தின்பேரில் பாரம்பரையாக கையாண்டு வருகிறதாக பிஷப்பு - கால்டுவெல் துரை அவர்கள் விளக்கியிருக்கின்றார். இந்த நாடார்கள் அரச சந்ததியார்க ளாயினமையின் அந்த அதிகாரம் நூதனமாகவே யிருக்கும். இதனாலும் நாடார்கள் அரசர்கள் எனப் படுவர்.

"From a few stray hints that are found in the Tamil literature and the traditions peculiar to the race. We learn that the Chandrars belong to a wave of warlike adventurers, who migrated towards the South from North India. They appear to have in the earliest times, settled down as rulers in several parts of the country. The fact of their having been a ruling race at one time is borne out not only by such expressions as Nadar and Nadalvar, but also by numerous customs which are peculiar to them and by other circumstances. The expression Nadalvar occurs in some ancient stone inscriptions of Travancore. Their rule was subsequently over-thrown by later waves of Dravidians." Vide, Travancore Government Gazette, supplement, dated, 8th August, 1905. Archæological sheet, No. 8. and The Travancore State Manual, Vol. II, Ch. IX, P. 393. by Mr. V. Nagammiya, B. A., F. R. Hist. S., in 1906.

"தமிழ் நூற்களில் காணப்படுகின்ற சில துணிதலான குறிப்புகளிலிருந்தும், அந்த வம்ஸத்தில வழங்கிவரும் பாரம்பரையான நடவடிக்கைகளி லிருந்தும், நாம் சான்றார்களை யுத்த வம்ஸத்தைச் சேர்ந்தவர்கள் என அறிகின்றோம். அவர்கள் வட இந்தியாவில் இருந்து தென் இந்தியாவிற்குக் குடியேறியவர்களாகும். அவர்கள் பூர்வம் தேசத்தின் பல பாகங்களில் தங்கி அரசாட்சி செய்த சாதியார்களாகக் காணப்படுகிறார்கள். மெய்யாகவே! அவர்கள் ஒரு காலத்தில் அரசுசெய்த வம்ஸத்தவர்களாவர். அவர்கள் நாடார், நாடாள்வார் என்னும் பட்டப்பெயர்களை மாத்திரம் அணிந்தவர்கள்

அல்ல, இன்னும் அநேக சிறப்பான நடைநொடி வழக்கங்களையும் அனுசரித்து வருகின்றார்கள். நாடாள்வார் என்னுஞ் சொல் திருவாங்கூரினுடைய சில பூர்வ சிலாசாசனங்களில் காணப்படுகின்றன. அவர்கள் அரசு அடுத்து வந்த திராவிடப்படை எழுச்சியின்பின் அழிக்கப்பட்டது" எனத் திருவாங்கூர் கெஜட்டிலும், திருவாங்கூர் ஸ்டேட்மானியுலிலும் வெளியிடப்பட் டிருக்கின்றது.

1. "From a few stary hints that are found in the Tamil literature and the traditions peculiar to the race, we learn that the Nadars belong to a wave of warlike adventures."	"தமிழ் நூற்களில் காணப்படுகின்ற சில துணிதலான குறிப்புகளிலிருந்தும், அந்த வம்ஸத்தில் வழங்கி வரும் பரம்பரையான நடவடிக்கைகளிலிருந்தும், நாம் நாடார்களை யுத்த வம்ஸத்தைச் சேர்ந்தவர்கள் என அறிகின்றோம்."

நாடார்களை அரசர்கள் என விளக்கக்கூடிய சில துணிதலான குறிப்புகளும் உண்டென விளக்க "a few stray hints" எனவும், அவைகளுந் தமிழ்ப்பாஷையில் காணப்படுகின்றன வென விளக்க "in the Tamil literature" எனவும், அவ்வித குறிப்புகளும் நாடார் வம்ஸத்திற்கு பாரம் பரியமான சிறப்புகளை விளக்கக்கூடியதெனத் தெரிவிக்க 'The traditions peculiar to the race' எனவுங் கூறி அவர்களை அரசர்கள் எனத் துலக்கியிருக்கின்றார். இப்பகுதியை டக்கர் துரைசானி அம்மாள் One strong argument எனவும், a remarkable privilege எனவும் ஒத்து விளக்கியிருக்கின்றார். அன்றியும் தமிழ் நூற்களில் அவர்கண்ட குறிப்புகளை இன்னதென அவர் விளக்காதிருப்பினும், யாங்கண்ட குறிப்புகளை வெளிப்படுத்தி அவர்களை அரசர்கள் என விளக்கியுள்ளோம். இதோடு 'யுத்தப் பிரியமுள்ள வம்ஸத்தவர்கள்' என்றார். 'யுத்தப் பிரியமுள்ள வம்ஸத்தவர்கள்' அல்லது 'யுத்த வம்ஸத்தவர்கள்' என்பதற்கு அரசர்கள் என்பதே துணிபு.

"The Kshatriyas belong to the second or military class. They are kings and soldiers." Vide, Rev. H. Bower's Essay on Hindu Caste. P. 5.

"க்ஷத்திரியர் படைபயிற்றுங் குலத்தைச் சாருவர். அவர்கள் அரசர்களாகவும், யுத்தத் தொழிலர்களாகவும் இருக்கின்றார்கள்" என்றார் பவர் துரை அவர்கள்.

"The Rajaputs were a race of warriors who formed the ruling class, wherever they settled." Vide, J. Talboys wheeler's History of India, Ch. VII.

"இராஜபுத்திரர்கள் யுத்த வம்ஸத்தவர்களா யிருக்கின்றார்கள். அவர்களே அரசாட்சி செய்யும் வகுப்பினருமாவர்" என்றார் உவீலர் துரை அவர்கள்.

"First, the priests or Brahmans. Second, the Warriors or Fighting companions of the King, called Rajaputs or Kshatriyas, literally, of the Rayal stock" Vide, W. W. Hunter's Brief History of the Indian people, Ch. IV, P. 50.

"முதலாவது ஆசிரியர் அல்லது பிராமணரும், இரண்டாவது யுத்தரங்கத்தவர் அல்லது அரசவம்ஸத்தவரு மாவர்" என்றார் அண்டர் துரை அவர்கள்.

"The Rajaputs are soldiers by birth." Vide, Orme's Histotry of the Hindustan, Vol. I, Book. P. 40.

"இராஜ புத்திரர்கள் பிறப்பால் யுத்தரங்கத்தவரா யிருக்கிறார்கள்" என்றார் ஓர்ம்ஸ் துரை அவர்கள்.

"A soldier of the Kshatriya tribe hath no duty superior fighting." Vide, Wilken's Bhagwat Gita, Ch. II, P. I0.

"க்ஷத்திரியசாதி வீரனுக்கு யுத்தஞ்செய்வதைப் பார்க்கினும் மேலான தொழில் அவனுக்குக்கிடையாது" என வில்கின்ஸ் துரை அவர்களும் கூறியிருப்பதால்; யுத்த வம்ஸத்தவர் எனினும், க்ஷத்திரியர் எனினும் பொருள் ஒன்றென விளங்கின. இதோடு யாமியற்றிய க்ஷத்திரியகுல விளக்கம், 141-வது பக்கம் முதல், 207-வது பக்கம் வரைக்குங் காண்க. யுத்தம் அரசர்களுக்குரிய அறு தொழில்களில் ஒன்று. "ஓதலே வேட்டல் ஈதல் உலகோம்பல்

படைபயிற்றல், மேதகு போர்செய் தீட்டல் வேந்தர்செய் தொழிற்களாறும்"* என்னும் நிகண்டால் விளங்கும்.

பகவத்கீதை, 2-வது அத்தியாயம்,
31-வது சுலோகம்.

స్వధర్మ మపిచావేక్ష్య ।
నవికమ్పితు మర్హాసి ।
ధర్మ్యాద్ధియుద్ధా చ్ఛ్రేయో౽న్యత్ ।
క్షత్రియస్య నవిద్యతే ॥

ஸ்வதர்ம மபிசா வேக்ஷ்ய நவிகம் பிது மர்ஹஸி!
தர்ம்யாத்தி யுத்தாச் ச்ரேயோ ந்யத் க்ஷத்ரியஸ்ய நவித்யதே!!

(இ-ள்.) "(கிருஷ்ணபகவான் அர்சுனனைப்பார்த்து.) உன் வருணத்தாருக்கு விதிக்கப்பட்டிருக்கிற (அதாவது க்ஷத்திரியனுக்கு யுத்தஞ் செய்வது ஸ்வதர்ம மானதா லந்த) தருமத்தைத் தெரிந்து யுத்தஞ் செய்யத் தயங்குவது உனக்குச் சரியல்ல, (ஏனென்றால்) க்ஷத்திரியனுக்குத் தருமத்தோடு கூடின யுத்தத்தைக் காட்டிலும் மேலானது வேரில்லை" என்பதாம். அதாவது "க்ஷத்ரியஸ்ய=க்ஷத்திரியனுக்கு, தர்ம்யாத்=தர்மத்தை யடுத்த, யுத்தாத்=யுத்தத்தைக் காட்டிலும், அந்யத்=வேறு, ஸ்ரேய:=நற்செய்கையானது, நவித்யதே=இல்லை" என்பதாம்.

இதில் "உன் வருணத்தாருக்கு விதிக்கப்பட்டிருக்கிற தொழில்" எனப் பொருள்பட "ஸ்வதர்மம்" என்றார். ஆயுதத்தொழில் அரசர்களுக்குக் குலத்தொழிலாதலால் நீ தயங்கப்படாது, அதற்கு மேலான தருமம் உன் க்ஷத்திரிய குலத்திற்குக் கிடையாது, செய்தே தீரவேண்டும் எனவும், அப்படிச்செய்தால் உனக்கு மோட்சங் கிடைக்கும் என அடுத்தப் பிரயோகத்தில் வற்புறுத்தியு மிருக்கின்றார். இதனால் யுத்தத்தொழில் அரசருக்குடன் பிறப்பென விளங்கினது.

வில்லிபாரதம், வீடுமப்பருவம், பகவத்கீதை யுரைத்த சருக்கம்,
17-வது செய்யுள்.

பொருதுகுலத்துரியவரைப்போக்கி யிந்நிலம்புரக்கும்புகழிற்கானிற்
சருகுநுகர்ந் துயிர்வாழ்தலறமாகு மிக்கதிது தானே யென்னிற்

* சூடாமணி நிகண்டு, பன்னிரெண்டாவது தொகுதி, 52-வது சூத்திரம்.

கருதுடலமிளமைசெல்வநிலையாவென்பவைபடிரோ கண்டுபேய்த்தேர் பருகுபுன லெனவிழையும் பரிசேயிங்யாமுயன்ற பான்மையெல்லாம்.

இப்பாவில் "யுத்தவம்ஸத்தவரைக் கொன்று இவ்வுலகத்தை ஆளுங் கீர்த்தியைப் பார்க்கிலும், காட்டில் உலர்ந்த இலைகளைப் புசித்து உயிர்வாழ்தல் தருமமாகும்" எனக்கூறி யிருக்கின்றது. இதில் அர்ச்சுனன் வம்ஸத்தவரை "பொருது குலத்தவர்" எனக் கூறினர். "பொருது குலத்தவர்" என்றால் "யுத்தவம்ஸத்தவர்" எனப்படும். அதனாலேயே அரசர்களை "போருநர் மன்னர் பூபாலர் நிருபர், தலைவ ரரசர் தம்பெய ராகும்" என்னும் பிங்கல நிகண்டின் சூத்திரத்துள் பொருநர் (போர்=யுத்தம், அதனை யுடையவர் பொருநர்) எனக் கூறியிருக்கின்றது. இந்தப் "பொருநர் வம்சத்தைச் சேர்ந்தவர்களே நாடார்கள்" என விளக்க "The Nadars belong to a warlike adventures" என விளக்கி யிருக்கின்றது. இதனைப் பிறரும் விளக்கியுள்ளார்.

"It is by no means certain that the Nadars were not at one time a warlike tribe." Vide, H. A. Stuart's Census of India 1891, Vol. XIII, P. 297; Rice's Mysore Inscription P. 33; and L. K. Ananthakrishn aIyer's Cochins Tribes and Castes, Ch. XV, P. 279.

"மெய்யாகவே. நாடார்கள் ஒரு காலத்தில் யுத்த வம்ஸத்தவர்களாக விருந்தார்கள்" என ஸ்டூவர்ட் துரை அவர்களும், ரைஸ் துரை அவர்களும், அனந்தகிருஷ்ண ஐயர் அவர்களும் கூறி யிருக்கின்றார்கள்.

ஜெர்மன் அரசர்களும், அவர்களுடைய மக்கள்களும், உறவினர்களும் இராணுவத்தில் சேவகஞ் செய்வதைப் பெருமையாகக் கருதி ராணுவப் பயிற்சி நாளதும் பெற்று வருகிறார்கள். போர் நேர்ந்த காலங்களில் போர்முனைக்குப் போகிறார்கள். 1914ஸு ஆகஸ்டுமீ 4வ தொடங்கிய அங்கிலோ ஜெர்மன் யுத்தத்தால் தெளிக. பிரிடிஷ் அரசர்களும் 1743-ம் வருடத்திற்கு முன் போர் முனைக்குச் செல்லுதல் வழக்கு. 1743-ம் வருடத்தில் டெட்டிஞ்சன் என்ற இடத்தில் நடந்த சண்டைக்கு, இரண்டாவது - ஜியார்ஜ் அரசர் போயிருந்தார். பிறகு போர்முனைக்குப் போதலை நிறுத்தப்பட்டது. இவைகளால் போர் அரசர்க்குரியதென விளங்குகின்றது.

விஷ்ணு புராணத்தில் "அரசனுக்கு ஆயுதமெடுத்து சேவிப்பதும், பூமியைக் காப்பதும் ஜீவனம்" எனக் கூறியிருக்கின்றது. இதில் கூறிய இரண்டு தொழில்களில் மேலே நாடார்கள் நாடு ஆண்டமையையும், ஆளுதலையும் விளக்கி யிருக்கின்றனம். இவைகளால் அவர்கள் "ஆயுதத் தொழிலர்" என்பதையுந் துலக்கினம். ஆகவே, நாடார்கள் அரசர்கள் என விளங்குவர்.

"The Kshatris have taken to trade, and are sometimes classed with the Vaisyas, the third caste of the ancient fourfold division of the Hindus. There exists a tradition to the effect, that the Kshatriyas or Kshatris followed the profession of arms up to the time of Emperor Alamgir, when a large number of them having been slain in the Dakkin wars, the Emperor, out of pity ordered their widows to be remarried. This command the head of the caste disobeyed, so the Emperor dismissed all Kshatriyas from his military service, and ordered them to be shop-keepers and brokers for the future." Vide, A Statistical Account of Bengal, Vol. IV, P. 48.

"க்ஷத்திரியர் வர்த்தகஞ் செய்தலால் சில சமயம் இந்துக்களுடைய பூர்வ நான்கு வகுப்புள் மூன்றாவது வகுப்பாகிய வைசிய வகுப்புள் சேர்கின்றனர். பின்வருமாறு ஒரு சரித்திரம் உண்டு. சக்கரவர்த்தி அலம்கர் காலம்வரைக்கும் க்ஷத்திரியர்கள் யுத்தத் தொழிலைப் பின்பற்றி வந்தார்கள். அக்காலத்தில் நடந்த தக்காணச் சண்டையில் இவர்களில் அநேகர் கொல்லப்பட்டமையால்; சக்கரவர்த்தி இரக்கங்கொண்டு அவர்களுடைய கைம்பெண்களை புனர்விவாகஞ் செய்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு கொடுத்தார். இந்த உத்தரவின்படி சாதித்தலைவர் நடவாமையால், சக்கரவர்த்தி எல்லா அரசர்களையும் யுத்தத் தொழிலி விருந்து நீக்கி, பிற்காலத்தில் வர்த்தகர்களாகவும் தரகர்களாகவும் இருக்க உத்தரவு செய்தார்" எனவுங் கூறியிருக்கின்றது.

இப்பகுதியில் அரசர்களுக்குரிய யுத்தத்தொழிலை நீக்கி, வர்த்தகஞ் செய்தலே தேர்ந்தத்தொழிலென சக்கரவர்த்தியே ஏற்படுத்தினமையால், அவ்வகையை முன்னிட்டும்,வடுக அரசரிடம் தங்குல

அரசொழிந்தமையை முன்னிட்டும், ஆயுதத்தொழில் செய்ய ஏது வில்லாமல் போயினமையின், வர்த்தகமே குலத்தொழிலைப்போல் இந்நாடார்களுக்கும் முன்னின்றது. அவ்வர்த்தகத் தொழிலையே நாடார்கள் நாளது பரியந்தம் பெற்றுவருகின்றார்கள் என்பதை விளக்க "in these days a Nadan may be a former or a tradee." என மர்காஷியஸ்துரை அவர்கள் கூறியிருக்கின்றார். அப்படி வர்த்தகத் தொழிலைப்பெறினும், வைசியருக்குரிய சாதிப் பெயரைப் பெறாமல், நாடார் என்னும் அரசப் பெயரைப் பெற்று வருகின்றமையின் அரசர் எனப்படுவர்.

2. "Who (Nadars) migrated towards the south from North India." "நாடார்கள் வட இந்தியாவிலிருந்து தென் இந்தியாவிற்குக் குடியேறினவர்கள்."

இந்தப் பகுதியில் நாடார்களை வட இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என விளக்க from North India எனவும், அப்படி வந்தவர்கள் நேராக இந்த தென்தேசத்தில் குடியேறினார்கள் என விளக்க "migrated towards the South India" எனவும் விளக்கி யிருத்தலால், இந்த நாடார்கள் பூர்வம் இந்த தென்தேசத்திற்கு வந்து குடியேறி காடுகளை அழித்து, நாடுகளாக்கி ஆண்ட பாண்டிய வம்ஸத்தவர்கள் † என நன்கு விளங்குகின்றது. இதில் கூறப்படும் வட இந்தியா என்பது ஆரிய வர்த்தமாகும். அது ஆரியர்களால் வசிக்கப்பெற்றது. இந்த நாடார்களை ஆரிய வர்த்தத்திலிருந்து வந்தவர்கள்என்பதால் ஆரியர்கள் எனப்படுவர். இதை விளக்கவே (Nadars are descended from the Aryan Kshatriyas) 'நாடார்களை ஆரிய க்ஷத்திரிய வம்ஸத்தவர்கள் என்றார் கார்னிஷ்துரை அவர்களும். துருவசுவை ஆரிய வர்த்தத்திலிருந்து தென்தேசத்திற்கு வந்தவன் எனவும், அவன் சந்திரகுல யயாதி மகாராஜனுடைய

† "He (the prprietor of the soil in Mewar) has nature and Manu in support of his cliam and can quote the text, alike compul sory on prince and peasant, cultivated land is the property of him, who cut away the wood, or who cleared and tilled it an ordenance binding on the whole Hindu race, and which no international wars conquest, could overtnrn." Vide, Tod's Annals and Antiquities of Rajasthan, Vol. I, P. 494.

புத்திரன் எனவும், அவனே இத்தென்தேசத்தை ஆண்டவனும், தென்னவன் என்னும் பெயரைப் பெற்றவனுமாவன் எனவும், அவன் வம்ஸத்தவர்களே பாண்டியர்களெனவும், இப் பாண்டியர் வம்ஸத்தில் உதித்தவர்களே நாடார்கள் எனவும் இந்நூலில் இனிது விளக்கி யிருத்தலால்; நாடார்கள் வடதேசத்திலிருந்து வந்து குடியேறியவர்கள் என்பது துணிந்த முடிபேயாம். இதனாலும் நாடார்களை ஆரிய க்ஷத்திரியர்கள் எனவே துணியப்படும்.

3. "They (Nadars) appear to have in the earliest times settled down as rulers in several parts of the country."	"அவர்கள் (நாடார்கள்) பூர்வம் இந்தியாவினுடைய பல பாகங்களுக்கு அரசர்களாக இருந்தவர்களெனக் காணப்படுகின்றனர்கள்."

இப்பகுதியில் நாடார்கள் இந்தியாவின் பலபாகங்களை ஆண்ட அரச வம்ஸத்தவர்கள் என விளக்க "They are rulers in several parts of the Country" என்றுங் கூறி, அப்படிக்கூறியதில் நாடார்களை இந்தியா முழுமையும் ஆண்ட வம்ஸத்தவர்கள் எனக் கூறாது, பல பாகங்களைமாத்திரம் ஆண்ட வம்ஸத்தவர்கள் என்பதால், இந்தியாவை யாண்ட சூரிய குலம், சந்திர குலம்§ என்னும் இருவகை அரசருள் நாடார்கள் சந்திரகுல அரசர் என வெளிப்படலால், சூரிய குலத்தவர்கள் ஆண்ட பாகங்கள்போக, மிகுதிபாகத்தை ஆண்டவர்கள் என விளக்கவே 'பல பாகத்தை' ஆண்டவர்கள் என்றனர். அப்படி ஆண்டு வந்தது 'பூர்வம்' அதாவது 500-வருடங்களுக்கு முன் என விளக்க 'in the earliest times' என்றும் விளக்கி யிருத்தலால், நாடார்களை அரச வம்ஸத்தவர்கள் எனவுந் துணியப் படும்.

4. "The fact of their having been a ruling race at one time."	"மெய்யாகவே, அவர்கள் ஒரு காலத்தில் அரசு செய்த வம்ஸத் தவர்களாவர்."

இப்பகுதியில் நாடார்கள் அரசவம்சத்தவர்களே யாவர் எனத் தெரிவிக்க 'The ruling race' என்றும், அப்படி இந்தியாவை அவர்கள் அரசாண்டது பூர்வம் என விளக்க at one time என்

§ இவற்றோடு அக்கினிகுலமும் ஒன்றுண்டெனக் கூறுவர். அது அபாசக்கதை. நூற்சம்பிரதாயங் கிடையாது.

றும், அவர்கள் அரசவம்சத்தவர்கள் என்பது உண்மையென விளக்க Fact என்னும் பதத்தை வைத்தும் முடித்திருக்கின்றமையின், நாடார்கள் அரசர்கள் என விளங்குவர்.

5. "borne out not only by such expressions as Nadar and Nadalvar, but also by numerous Customs which are peculiar to them."	"நாடார், நாடாள்வார் என்னும் பட்டப்பெயர்களை அணிந்தவர்கள் மாத்திரம் அல்ல, ஆனால் இன்னும் அநேக சிறப்பான வழக்க பழக்கங்களையும்¶ அடைந்திருக்கின்றார்கள்."

இப்பகுதியில் அவர்கள் அரசர்கள் என்னும் பொருளைத்தரும் "நாடார், நாடாள்வார்" என்னும் பட்டப்பெயர்களை மாத்திரம் பெற்றிருக்கவில்லை என விளக்க "not only the expressions as Nadar and Nadalvar" என்றும், இன்னும் இதோடு அரசருக்குரிய பல வழக்க பழக்கங்களையும் உடைத்தாயிருக்கிறார்கள் என விளக்க "but also by numerous customs" என்றும், அவ்வித வழக்க பழக்கங்களும் அவர்களுக்குச் சிறப்பைத் தருவனவென விளக்க "which are peculiar to them" என்றும் விளக்கி அந்நாடார்களை அரசர்கள் என முடித்தனர்.

6. "The expression Nadar and Nadalvar occurs in some ancient stone inscriptions of Travancore."	"நாடார், நாடாள்வார் என்னுஞ் சொல் திருவாங்கூரினுடைய சில பூர்வ சிலாசாசனங்களில் காணப்படுகின்றன."

இதில் நாடார், நாடாள்வார் என்பவை சில நூறுவருஷங்களுக்கு முன்நாஞ்சி நாட்டில் (திருவாங்கூரில்) வசித்த அரசர்களுக்குப் பட்டப்பெயராக இருந்ததாகத் திருவாங்கூர் கவர்ன்மெண்டார் வெளிப்படுத்தியிருக்கிற சிலாசாசனப் புத்தகங்களால் விங்குகின்றன. திருவாங்கூர் பாண்டிய தேசத்தின் எல்லைக்குட்பட்டதே! அதில் அரசு செய்த பாண்டிய அரசர்களும் நாடார், நாடாள்வார் என்னும் பட்டங்களை பெற்றிருந்தனர்கள் என விளங்குவதால் நாடார்கள் பாண்டிய அரசர்கள் எனத் துணியப்படுவர்.

¶ அவ்வழக்க பழக்கங்களில் சிலது பின்வரும் தந்துரையில் விளக்கியுள்ளன.

7. "Their rule was subsequently over-thrown by later waves of Dravidians." "நாடார்கள் அரசு அடுத்து வந்த திராவிடப் படையெழுச்சியால் அழிக்கப்பட்டது."

இப்பகுதியில் மாட்சிமை பொருந்திய இந்த ஆரிய அரசர்களாகிய நாடார்களுடைய அரசாட்சிக்குப் பிறகே, திராவிடர்கள் அரசு ஆளவெழுந்ததென விளக்க by later waves of Dtavidians என்றும், அப்படி அடுத்து வந்த திராவிடர்களால், இந்த ஆரிய அரசர்களாகிய நாடார்களது ஆதிக்கம் நீங்க நேரிட்டதென விளக்க Their rule was over-thrown by Dravidians என்றும் விளக்கி, அந்த சந்திரகுல நாடார்கள் அரசிழந்து, அனுதரவற்ற நிலைமையை யடைந்ததையுந் துலக்கியிருக்கின்றார். இதனைப் பிறரும் விளக்கினர்.

"Under native rule the Nadars, who claim to be the original lords of the soil, were a down-trodden race." Vide W. R. Cornish, F. R. C. S., Superintendent of Census Operations of the Madras Presidency for 1871.

"பூர்வ அரச வம்ஸத்தவர்கள் என உரிமைக் கொண்டாடும் நாடார்கள், தங்களுக்குப் பிந்தி வந்த வடுக ராஜாங்கத் தாரால், கீழ் தள்ளப்பட்டார்கள்" எனவுங் கார்னிஷ்துரை அவர்கள் கூறியிருக்கின்றார்.

"I doubt not, therefore, that when one dynasty upset a previous one, the latter were forced to flee the conntry, and seek homes eleswhere, and there hide their name and origin and become hewers of woods and drawers of water and undertake such low occupations as were despised by the other sections of the community, who found favour or were tolerated by the new dynasty." Vide, Prof. P. Sundram Pillai, M.A., in The Tamilian Antiquary, No. 2, P. 4, 5, in 1907.

"எனக்குச் சந்தேகமறத் தெரிந்தபடி ஒரு புது இராஜாங்கத்தார் வந்து முந்திய இராஜாங்கத்தாரை தலைகீழாய்த் தாழ்த்தி அவர்களை பூமியாதீனத்தை விட்டோடப் பெலவந்தஞ் செய்வதால்,

அவர்கள் வேறெங்கேயாகிலும் புகலிடந்தேடி அங்கே தங்கள் பேரையும், பூர்வோத்திரத்தையும் மறைத்து, பூர்வ கிபியோனியர் விறகு வெட்டிகளும், தண்ணீர்ச் சுமைக்காரருமானதுபோல; மேற்படி புது ராஜாங்கத்தாரின் தயவைப்பெற்று சிலாக்கிய மடைந்த இதராசாதிகளால் அவமதிக்கப்படுகிற தாழ்ந்ததொழில்களை நடத்திவருவது சகஜந்தான்" எனவுந் திருவனந்தபுரம், கவர்ன்மெண்டு காலேஜ் புரோபெஸராயிருந்த ஸ்ரீமான். பி. சுந்தரம் பிள்ளை எம். ஏ., அவர்களால் எழுதப்பட்டிருக்கின்றது. இப்பகுதிகள் மேற்கூறிய பகுதியை ஆமோதிக்கின்றன. இம்முப்பகுதிகளிலும் நாடார்கள் திராவிடர்களால் அரசிழந்தமையையும், அவர்களால் இடுக்கணுற்று இழிந்த தொழிலைப்புரிந்து இழிவடைந்தமையையும் விளக்கியிருக்கின்றன. இப்பகுதிகளையும், மேலே கூறிப்போந்தப் பகுதிகளையும் ஆண்டு யோசிக்கில் **நாடார்களை அரசவம்ஸத்தவர்கள்** அல்லவெனக் கூற யாரால் முடியும்.

"They (Nadars) do not merely mean that they were the original kings of the soil, but that they are descended from the Aryan Kshatriyas." Vide. W. R. Cornish, F. R. C. S. Census of India, in 1871, Vol. I, P. 118, 163.

"நாடார்கள் பூமியை ஆண்ட புராதன அரச சந்ததியார்கள் என்பது மாத்திரமல்ல, அவர்கள் ஆரிய க்ஷத்திரிய வம்ஸத்தில் உதித்தவர்களாகவுங் கூறுகிறார்கள்" என கார்னிஷ்துரை அவர்கள் கூறியிருக்கின்றார்.

"எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்த, னஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே" † என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில், மண்ணசையால் வேந்தனை வேந்தன் வெல்லுதல் இயற்கை யென்கலால், மண்ணுடைமை அரசர்களுக்கு உரிமைப்பொருள் எனப்படும். அதைவிளக்கவே நாடார்களை Kings of the soil என்றார்கள். அதுவும் பூர்வம் அல்லது பாண்டிய வரச வம்ஸத்தவர்கள் என விளக்க They were the original kings என்றுங் கூறியிருப்பதால், **நாடார்கள் அரசர்கள்** எனவே வெளிப்படுவர். அரசர்கள் ஆரிய க்ஷத்திரியர், திராவிட க்ஷத்திரியர் என இருவகையினராவர். அவ்விருவகையுள் நாடார்களை ஆரிய க்ஷத்திரிய வம்ஸத்தவர்கள் என்

† தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல், 7-வது சூத்திரம்.

கின்றனர். சூரிய சந்திர குலத்தில் உதித்த தசரத ராமர், பாண்டு, தருமர், சேர சோழ பாண்டியர் முதலிய அரச வம்சத்தில் வந்தவர்களேயே ஆரிய க்ஷத்திரியர்கள் எனப்படுவர். இவர்களுள் நாடார்கள் சந்திரகுலப் பாண்டியர் சந்ததியில் உதித்தவர்களானமையாலேயே ஆரியர்களாகிய இந்த நாடார்களை திராவிடரிலிருந்து வேறுபிரித்துக் கூறுதற்கே "ஆரிய க்ஷத்திரியர்" என்னும் பகுதியை இடையில் வைத்தனர்.

"குறும்பர் புரோசர் குறுநில மன்னர்" என்று பிங்கலந்தையில் வெளிப்படும் குறும்பர் முதலிய வனவாசிகளேயே திராவிடர்கள் எனப்படுவர்.†குறும்பர்கள் அரசச் செல்வத்தைப்பெற்று, அரசரைப்போல் ஊரையாண்டமையால் திராவிட அரசர் எனப்பட்டனர். இத்திராவிட அரசர்கள் "வலம் படுதானை மன்ன ரில்வழிப், புலம்பட விறுத்த விருந்தின் மன்னரின்" என்னுஞ் சிலப்பதிகாரத்தால், ஆரிய அரசர் இல்வழி அரசாட்சி செய்ததாக விளங்குகின்றது. நாடார்களை திராவிடருக்கு முற்பட்டவர்கள் எனவும், ஆரியர்கள் எனவும் விளக்கி வற்புறுத்துதற்கே "Original kings" என்று கார்னிஷ் துரையும், "Nadars were overthrown by later waves of Dravidians" என்று திருவாங்கூர் ஸ்டேட்மானியூலிலும் கூறியிருக்கின்றன. ஆகவே குறும்ப அரசர்களாகிய பல்லவர்கள் திராவிட அரசரும், சூரிய சந்திர குலத்தவர்களாகிய சேர சோழ பாண்டியர்கள் ஆரிய அரசரும் ஆவர் என விளக்கி, அவர்களுள் சந்திர குல நாடார்கள் ஆரிய அரசர்கள் என வகுக்கப்பட்டனர்.

† "The earliest important settlers in Dravida, appear to have been the Kurumba. They descended from Carnataca and over powered the Vadars. They are said at first to have had no ruler, but dissensions among themselves led them to choose a chief named Komandu Kurumba Prabhu, the first king of a dynasty known as that of the Pallavas." Vide, The North Arcot District Manual, Vol. I, Ch. II, P. 38, 39, 220; and also refer On the Original Inhabitants of Bharatavarsa or India, Pt. I, Ch. II, P. 42, Ch. XII, P. 191, to 235; Mysore and Coorg, Vol. 1, P. 203; Vol. II, P. 93; The Salem District Manual, Vol. I, Ch. I, P. 1 to 8; and The Madras Journal of Literature and Science in 1848, Vol. XV, No. 34, P. 62, 63.

25. நாடாள்வான் என்பது அரசரைக் குறிக்கும்.

நாடாள்வான் என்பது நாடு+ஆள்வான்=நாடாள்வான் எனப் பிரிந்து புணரும். நாடு=நாட்டை, ஆள்வான்=ஆளப்பட்டவன். அதாவது நாடாளப்பட்டவன், அரசன் என்பது பொருள்.

இராமாயணத்தனியன்.

வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன் வாழ்த்துபெறத்
தாழ்வா ருயரப்புலவோ ரகவிருள் தானகலப்
போழ்வார் கதிரினுதித்த தெய்வப் புலமைக் கம்பநா
டாழ்வார் பதத்தைச் சிந்திப்பவர் கியாதுமரிய தன்றே.

இச்செய்யுளில் வரும் நாடாழ்வார் என்பது நாடாள்வார் என்பதின் விகாரம். அது ஆள்வார் ஆழ்வார் எனவும், சாற்றுளி சாற்றுழி எனவும், தமிள் தமிழ் எனவும், ஈளம் ஈழம் எனவும், வெள்ளாளன் வெள்ளாழன் எனவும் விகாரப்பட்டு வழங்கி வருவன போல், நாடாள்வார் என்பதும் நாடாழ்வார் என எதுகை நோக்கி ளகரம் ழகரமாக மயங்கி விகாரப்பட்டது. இது நாட்டை ஆளப்பட்டவர் என்னும் பொருளிலேயே நிற்கும்.

இராமாயணத் தனியன்.

தராதலத்தி னுள்ள தமிழ்க் குற்ற மெல்லாம்
அரா மரமாயிற் றன்றே—இராவணன்மேல்
அம்புநாட் டாள்வா னடிபணிபு மாதித்தன்
கம்பநாட் டாள்வான் கவி.

இதில் கம்பனை "நாட்டாள்வான்" எனக் கூறியிருக்கின்றது. "நாடாள்வான்" என்பது எதுகை நோக்கி "நாட்டாள்வான்" என இரட்டித்து கம்பராஜனைக் குறித்து நின்றது. அப்படி இரட்டித்தமைக்குக் காரணம்:—"இரண்டாம் எழுத்தொன் றியையவதே எதுகை" என்று யாப்பருங்கல நூலார் கூறியவாறு, "அம்பு நாட்டாள்வான்" என்னும் மூன்றுவது அடியின் தொடரில் வெளிப்படும் "நாட்டாள்வான்" என்னுஞ் சொல்லின் இரண்டாவது எழுத்தை முன்னிட்டு "கம்ப நாட்டாள்வான்" என்னும் பின்னடியின் தொடரில் வரும் "நாட்டாள்வான்" என்னுஞ் சொல்லின் இரண்டாவது எழுத்தும், மேல்வருவதற்கு இயைய, எதுகை நோக்கி இரட்டித்தது.

"மைசூரையாண்ட கதம்ப ராஜாக்களின் சந்ததியார்களும், நாடாள்வார் என்னும் பட்டப்பெயரைத் தரித்து வந்ததாக இந்திய கவர்ன்மெண்டாருடைய விசேஷ ரிகார்டாகிய (Lewis Rice's Epigraphia Carnataca, Vol. V, Pt. 1, P. VII, VIII.) எபிகிராபியா கர்னடகா என்னும் நூலில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் வரும் 'நாடாள்வார்' என்னும் பட்டப்பெயர் இராஜாக்களுக்கு உரிய குலப் பட்டப்பெயர் என்பதால், மேலே கூறிய கருத்துகளுக்கு ஒத்து வருதலோடு, அரசர் பெயர்களில் ஒன்றெனவும் விளங்குகின்றது. நாடாள்வார் என்பது நாடார் என்பதனோடு ஒரு பொருட் கொண்டதாகும். நாட்டை ஆளுதலுடையவர் என்பது கருத்து.

"An inscription on the walls of the fane of திருவானைக்கா runs thus:—ஸ்வஸ்தஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு, 20-வது ரிஷப நாயற்று பூர்வ பட்சத்து துவாதெசியும், திங்கட்கிழமையும் பெற்ற அத்தத்து நாள் பாண்டியகுலமான வளநாட்டு உடயார் திருவானைக்காவுடைய நாயனார் கோயில் ஆதிசண்டிகேஸ்வர தேவர் கன்மிகளுக்குள் வளநாட்டுப் பரம்பிற கூற்றத்து கீழ்பாலாற்றுக்காரி சாத்தனக் குறைக்காணி உடய ஓடவுடையாரில் கூத்தன் குன்றனை கீழாற்றூற் அரயனும் இவன் தம்பி ஆரம்பூண்டானும் இவன் தம்பித் தாழியும், விடங்கரை உடயனை மழநாட்டு விழுப்பரைய நாடாள்வானும், இவன் தம்பி திருவரங்கனும்.........விற்றுக் குடுத்த நிலமும் மனையுமாவது......... இந்நாங்கெல்லை உள்பட்ட நிலத்தால் பங்கு பனிரெண்டில் பொல்லறதான செல்வனை பொன்னிமழை நாடாழ்வானும் உடயாள் நஞ்சுண்டானை நெற்குப்பை அரனும், உள்ளிட்டார்ப் பங்காயி முன்னுளில் இந்த நாயனார் சிவ நாமத்தால் விலைகொண்ட பங்கு நாலும், மணியன் தேவனை நிறைவழி சோழவறையனும் பெரியான் அம்பலவனை பொன்மலை நாடாள்வானும் உள்ளிட்டார் பங்குநாலும், ஆகபங்கு எட்டும் நீக்கி, எங்களுதான பங்குநாலு. இப்பங்கு நாலில் இவ்வூரில் அய்யனாற் குன்றவள நாடார்க் குச்சி கோயிலும், திருமுற்றமும், திரு நந்தவனத்துக்கும்.........அறைமா நீக்கிநின்ற பங்கால் வந்த நிலமும், மனையும் விற்றுக்கொடுத்துக் கொள்வதான எம்மாவிசைந்த விலைப்பொருள் அன்றுடுக்

காசு நாலாயிரம், இந்தக் காசு நாலாயிரமும்...........கொண்டு விற்று........கொடுத்தோம். கூத்தன் குன்றனைக் கிளாத்தூர் அறையனும், இவன் தம்பி ஆரம்பூண்டானும், இவன் தம்பி தாழியும் வடங்கன் உடயானை மழநாட்டு விழுப்பரை நாடாள்வானும், இவன் தம்பி திருவரங்கனும்,........பங்கு நாலால் வந்த நிலத்துக்கும், மனைக்கும், இந்நிலத்துக்கு மேனோக்கின மரமும் கீழ் நோக்கின கிணறும்........ஆருமா நடுப் படுகையும், உப்பட்டுக் காசு நாலாயிரம் விலையாவதாகவும்,........இப்படிக்குச் சம்மதித்து ....கொடுத்தோம். உடயார் திருவானைக்காவுடைய நாயனுற் கோயில் ஆதிசண்டிகேஸ்வர தேவர் கண்மிகளுக்கு கூத்தன் குன்றனை கிளாத்தூர் அறையனும், இவன் தம்பி ஆரம்பூண்டானும், இவன் தாளியும், விடங்கன் உடயானை மளநாட்டு விழுப்பரைய நாடாள்வானும், இவன் தபபி திருவரங்கனும்"

இப்பகுதியில் பாண்டிய குலத்தவர்களுக்கு "நாடாள்வான்" என்றும், "அறையன்" என்றும் பட்டப்பெயர்கள் கூறியிருக்கின்றன. இரண்டும் ஒரு பொருள் குறித்து, அரசர்களது பட்டப்பெயர்களுள் அடங்கும். இந்தப் பட்டப்பெயர்களுக்கு உரியோர் பாண்டிய குலத்தவர்கள் என விளக்கவே "பாண்டிய குலமான" என்னும் பகுதியை வைத்து விளக்கி யிருக்கின்றது. ஆதலால், நாடாள்வார் பாண்டிய குலத்தவர் என விளங்கினர்.

South Indian Inscription by Hultzsch,
Vol. III, Pt. I, P. 35.

கருவூரிலுள்ள பசுபதீஸ்வரர் கோயில் தென்சுவற்றில், 25-வரிகள் அடங்கிய சிலாசாஸனம்.

16. அச்சுதன் இராஜராஜனை தொண்டமானும், ஊரன் உத்தம சோழனை இராஜரா(ஜ)ப்ரஹ்மாதிராயனும் அரையன் இராஜராஜனை விரரா(ஜே)ந்த்ர ஜ(ய)முறி னுடாழ்வா(னும்) வீரராஜேந்த்ர ம(ங்)கலப்பெ(ர)ரை(ய)னும் இவர்களுட(ன்) ஒப்பிட்டுப்.

17. குந்தம(க)ழ்விப்படியே நம் வரியிலிட்(டு)(க்) கொள்க வென்(ன) வீரபத்திரன் தில்லைவிடங்கனை வில்லவ(ர)ாஜராஜன் (எ)ன இவன் எவினபடியே உட (ன்) கூட் (ட) த்து அதிகாரி (க) ள் க்ஷ(த்ரிய) ஸிகாமணி வள (நா)ட் (டு) பனையூர் (ந) ா (ட்) டு ஜயங்கொண்ட சோழன்........................

36-வது பக்கம்.

22. (இப்) படி (க்) கு அ (ற்) சுதன் இராஜ நாராயணன் தொ (ண்) டைமான் எழுத்து ஊர (ன்) உத்மசோ (ழனை) ராஜராஜபிர மா (தி) ராயன் எழுத்து (இ) ப்படிக்கு அரை (யன்) (வீர) ரா (ஜேந்) த்ரஜய(மு) ரி நாடாழ் (வான்) எழுத் (து) (இ) ப் (ப) டி (க்) கு வீரரா ஜேந்த்ர (ம) ங் (க) லப் பொரை (ய) ன் எழுத்து..............

ஷ புத்தகம் 40-பக்கம்.

ஷ சுவர் 15-வரிகள்.

12. ....இராஜராஜனை தொ (த) ண்டை ம(ர) ன் எழுத்து ஊரன் உத்தம சே (ர) ழனை இராஜராஜ.

13. (ப்ர) ஹ்ம.........................அரை (யன்இ) ராசராசனு (ன) (வீ)ர ர) ாஜேந்த்ர ஜெயமு (ரி) நா (ட) ாழ்வா (ன்) நெட்டெ(ழு) த் (து)

உள்கோயில் தென்சுவர் ஷ புத்தகம் 42-வது பக்கம் 11-வரிகள்.

9. ....இவை திருமந்த்ர ஓலைநாயகம் தொ ண்டைமான் எழுத்து உள்ளூர (ர) ன் (உ) த்த (மசே) சாழனை குலோத்துங்க சோ (ழப்ர) ஹ்மராயன் எழுத்து இராஜ.

10. ராஜனை வீரராஜேந்த்ர குலோத் (து) ங்க ஜயமுரி நா(டா)ழ் வான் எழுத்து...................

இராஜகேசரி வர்மனை முதலாவது குலோத்துங்க சோழன் சிம்மாசனமேறிய மூன்றுவது வருஷத்தில் வெங்காலன் நாட்டிலுள்ள பாக்கூர் என்னும் கிராமத்தை ஷ நாட்டிலிருக்கும் கருவூர் பசுப தீஸ்வர ஆலயத்திற்கு மானியமாக விடும்படி ஷ சோழனால் உத்தரவு அளிக்கப்பட்டது. அவ்வுத்தரவை ஷ ஆலயத்தின் தென் னண்டை மதிலில் கி-பி. 1087-வருஷத்தில் வெட்டப்பட்ட சிலா சாசனத்தின் விபரம்.

1. "ஸ்வஸ்திஸ்ரீ திருவார திருள்புயத் திருநில வலையந்தன் மணிப்பூணெனத்தங்கிப் பன்மணிக்கொற்ற வெண்குடை நிழற்கு வலையத்துயிர்களைப் பெற்றதாயினும் பேணமற்றுள்ள வறைகழலரசர் தன்னடியினி லொதுங்கவுறைபிலத்துடைய கலியது வொதுங்க மு றைமையி லரும்பெறல் தமையனை ஆளவந்தானை முன் வந்தானை யிரும்.

2. ....16. அச்சுதன் இராஜ ராஜனுண தொண்டைமா னும் ஊரன் உத்தம சோழனுன இராஜராஜ பிரம்மாதி ராயனும் அரையன் இராஜராஜனுன வீரராஜேந்திர ஜேயமுறி நாடாழ்வானும் வீரராஜேந்திர மங்கலப் பேரரையனும் இவர்களுடன்.

17. ....22. இப்படிக்கு அச்சுதன் இராஜ நாராயணன் தொண்டமான் எழுத்து ஊரன் உத்தம சோழனுன இராஜராஜ பிரம்மாதிராயன் எழுத்து இப்படிக்கு அரையன் வீரராஜேந்திர ஜேய முரி நாடாழ்வான்,

23. எழுத்து இப்படிக்கு வீரராஜேந்திர மங்கலப் பேரரையன் எழுத்து இப்படி அதிகாரி க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு ஜயங்கொண்ட சோழநல்லூருடையன் உதைய திவாகரன் கூத்தாடுவான் வீரராஜேந்திர மழவராயன் எழுத்து.

24. ....20. எழுத்துடை யதிகாரி உய்யக்கொண்டான் எழுத்து பன்மாயேஸ்வர ரக்ஷை இத்தன்மம் நோக்குவான் ஸ்ரீபா தம் என் தலைமேலே,"

என்னுஞ் சிலாசாசனத்தை (E. Hultzsch. Ph. D.) ஹூல்ஸ் துரையவர்களால் வெளியிடப்பட்ட தென்னிந்தியா ஸாஸனப் புத்த கம், 3-வது வால்யம், முதல் பாகம், 20-ரெ, 33-வது பக்கத்தில் காண்க.

திருவானைக்காச் சிவாலயத்தில் கோழுகச் சோழனுற் கட்டப் பட்ட மூன்றுவது மதில் கீழ்கோட்டை வாசல் தென்புற மதிலில் எழுதியிருப்பது. "திரிபுவன சக்கரவர்த்திகள் மதுரையுட பாண்டி யர் தம்முடதலை கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு பத்தொன்பதாவது சீர் உடைய பிள்ளையானவன் அகரங்க நாடாழ்வாருக்குத் தொண்டன்..........."

இன்னும் நாடாள்வான் என்பது அரசருக்குரிய பட்டப்பெயர் களில் ஒன்றென, இத்தென்னிந்திய சிலாசாஸனங்கள் ஒவ்வொன்றி லும் காணப்படுகின்றது.

ஆகவே, இச்சிலாசாசனங்களில் வெளிப்படும் நாடாழ்வான் என்பது நாடாள்வான் என்னும் பொருளில் நின்று, பாண்டிய குலத் தரசர்களை விளக்கினமை காண்க. இதோடு இந்நூல் 79-வது பக்கத் திலிருந்து, 83-வது பக்கம் வரைக்குங் காண்க.

26. ஆகவே நாடார் அரச வம்ஸத்தவராவர்.

"Nadars call themselves also Kshatriyas:—Nadars may have occupied positions of as much respectability as they now claim among the original Tamil people." Vide, Prof. P. Sundram Pillai, M. A., M. R. A. S., in The Tamilian Antiquary, No. 2, P. 4, 5, in 1907.

"நாடார்கள் தங்களை க்ஷத்திரியர் என்று சொல்லுகிறார்கள். நாடார்கள் இப்போது தாங்கள் வழக்கிடுகிறபடியே பூர்வம் தமிழ் நாட்டு ஜனங்களுக்குள் மிகவும் மதிப்பான அந்தஸ்துகளை உடையவர்களாகவே இருந்திருக்கலாம்" என்றார் திருவனந்தபுரம் காலேஜ் புரொபெஸர். பி. சுந்தரம் பிள்ளை அவர்கள்.

"They (Nadars) claim, perhaps with justice, to be the original lords of the soil." Vide, W. W. Hunter's Imperial Gazetteer of India, Vol. XIII, P. 302; and The Manual of the Administration of the Madras Presidency, Vol. II, P. 131.

"பூமியை ஆண்ட புராதன அரசர்களது வமஸத்தவர்கள் என அவர்கள் (நாடார்கள்) பாத்தியதை கொண்டாடுவது, ஒருவேளை நியாயமாகவே இருக்கக்கூடும்" என அண்டர்துரை அவர்கள் கூறியிருக்கின்றார்.

இந்தப் பகுதிகளில் நாடார்கள் பாண்டிய வம்ஸத்தவர்களாயிருத்தலாலும், அதற்குரிய பட்டப்பெயரும், இயற்கையக்கும் பெற்றிருத்தலாலும், 'நாடார்கள் அரசர்கள் எனக்கூறி முந்துகின்றனர் என்றனர். அப்படிக்கூறி முந்துதல் நியாயமாகவே இருக்கும் என விளக்க 'Perhaps with justice' *எனவே அண்டர்துரையுங் கூறியிருக்கின்றார். உலகத்தை ஒரு கண்ணால் பார்த்துஉயர்வுதாழ்வுகளைச் சமரசப்படுத்தி ஒரு சீராக அவைகளை ஆண்டு வருகின்ற கடவுளானவர் உத்தேசம் அறுநூறு வருடகாலமாக எதிரிகளால் படாதபாடுகளெல்லாம் பட்டு, வெகு கஷ்ட நஷ்டங்களை யடைந்து வந்த நாடார் குலத்தவர்களின்மீது கிருபைக்கண் வைத்து எக்குலத்தவர்களையும், ஒரு குலம்போல் பாவித்துச் செங்கோல் செலுத்தி வருகின்ற அங்கிலேய அரசர்கள் சார்பில் அடையச்செய்து, நல்லறிவுகளைப் புகட்டி, அவர்களுடைய பூர்வோத்திரம் இன்னதெனத் துலக்கும்படி செய்*

திருப்பதால், மேற்படி நாடார்கள் அந்த அறிவைப் பெற்று, தங்களுக்குரிய பூர்வகுல வொழுக்கத்தைப் பின்பற்ற நேர்ந்தமையால், அவர்கள் அரசர்கள் என முன்வரத் துணிந்தனர்கள். இதனாலும் நாடார்கள் அரசர்கள் எனக் குறிக்கப்படுவர்.

"The Kshatriyas are suspected to be mostly Nadars, who are fond of arrogating to themselves, titles, which imply a higher place in the social scale than that assigned to them by the general accord of other castes." Vide, A. J. Stuart's Tinnevelly Districts Manual, Ch. II, P. 16.

"நாடார்களே பெரும்பாலும் க்ஷத்திரியர்களா யிருக்கலாமென்று சமுசயப்படுகின்றேன். இவர்கள் தங்களுக்குரிய பட்டப்பெயரால் பெருமை பாராட்டுகிறார்கள். அந்தப் பட்டப்பெயர் உயர்ந்த அர்த்தங்கொண்டு, மற்ற சாதியாரைப் பார்க்கிலும் சிறப்பான அளவில் அவர்களை நியமிக்கின்றது" என்றார் ஸ்டூவர்ட்துரை அவர்கள். இந்தப் பகுதியும் மேலே கூறிவந்த பகுதிகளின் சாராம்ஸத்தையே விளக்குகின்றது. இதில் அவர்களுக்கு வழங்கிவரும் பெயராகிய நாடார் என்பது அவர்களை உயர்ந்த அந்தஸ்தில் வைக்கும் என விளக்க 'title imply a higher place' எனக் கூறி, அந்த உயர்ந்த அந்தஸ்தும் க்ஷத்திரிய அந்தஸ்தே ஆகுமெனவும், அந்த அந்தஸ்திலேயே நாடார்களைப் பெரும்பாலும் வைக்கப்படுமெனவும் விளக்க 'The Kshatriyas are mostly Nadars' எனவும் செவ்வனே விளக்கி யிருக்கின்றார். இதனாலும் நாடார் என்னும் பெயர் உயர்ந்த பொருளைத் தரக்கூடிய பதம் எனவும், சிலர் கூறுவதைப்போல் தாழ்ந்த பொருளைத் தரக்கூடிய பெயரல்ல வெனவும், அதுவும் க்ஷத்திரியர்களையே விளக்கக்கூடிய பெயரெனவுந் துலங்குகின்றது.

"A Kshatriya clan known as the Natas." Vide, Marsden's History of India, Pt. I, P. 108.

"க்ஷத்திரியரில் ஒரு வகுப்பினரை நாடார் என்று அறியப்படும்" என்று மார்ஷடன்துரை அவர்கள் கூறியிருக்கின்றார். மேலே கூறிவந்த வழக்கப் பழக்கங்களை யனுசரித்து, சந்திரகுலத்தவர்களுக்குரிய 'நாடார்' என்னும் பட்டப் பெயரையே குலப்பெயராகக் கொண்டு, க்ஷத்திரிய குலத்துள் நாடார் குலமும் ஒன்றென மார்ஷடன்துரை விளக்கியிருக்கின்றார்.

"க்ஷத்திரியர் என்னுந் தலைப்பின் கீழ் தென்தேசத்தில் நாடார்களே க்ஷத்திரியர் என்பதாகவும், அதற்குரிய பட்டப் பெயரையும் அவர்கள் ஆண்டு வருவதாகவும், இவர்களையன்றி மற்றவர்கள் கூற வில்லை எனவும் (The Pen and Ink Sketches of Native Life in Southern India, in 1880, Pt. I, No. III, under the Kshatriyas, P. 330.) 'பென் அண்டு இங்கி' என்னும் புத்தகத்தில் 'நாடார் குலத்தவர்களே அரச வம்சத்தவர்கள்' எனவே கூறி முடித்திருக்கின்றது.

Mr. Sherring, in his work, on Hindu Tribes and Castes "Enumerates nearly 2000 sub-divisions of Brahmen, and 590-separate tribes of Kshatriyas."

என்பதில் ஷெரிங்துரை அவர்கள் "க்ஷத்திரியர்கள் 590-வகுப்பினர்களாகப் பிரிந்திருக்கின்றார்கள்" என்றனர். அப்படிப் பிரிந்த பல வகுப்புகளுள் "நாடார் குலத்தவர்களும்" ஒரு வகுப்பினர் என விளக்கவே மார்ஷடன்துரை அவர்கள் "Kshatriya clan known as the Natas" என்றனர். இதனாலும் "நாடார்கள் அரசர்கள்" என விளங்கலோடு, இந்த நாடார் குலத்தையும் அரசரில் ஒரு வகுப்பினர், அதாவது பாண்டிய குலத்தவர் எனவுந் துலக்கப்படும். ஆதலால், மநு பராசரம் முதலிய ஸ்மிருதியாதிகளில் நாடாள்பவர்கள் அரசர்கள் என விதித்த இலக்கணம் இந்த நாடார் குலத்தவர்களுக்கே அமைந்திருக்கின்றது. மேலும் தென்னாட்டில் அக்காலத்திலும், இக்காலத்திலும் இந்த நாடார்களே நாடாளுதலை நடத்தி வந்தவர்களும், வருபவர்களுமாக விருத்தலை யாவராலும் 'நிலைமைக்காரர்' (Nadars are the acknowledged proprietors of the soil†) என்றுகூறி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. நிலைமைக்காரர் என்று பாண்டிய தேசத்தில் இந்த நாடார்களையன்றி பிறசாதியாரை அழைத்தல் வழக்கின்றும். தொன்று தொட்டு இவர்களே பாண்டிய நாட்டில் காணிபூமி யுடையவர்களாக விருக்கின்றார்கள். அதனால் இவர்கள் "நிலைமைக்காரர்" எனப்பட்டு வருகின்றனர். "நிலம்+ஐ+காரர்= நிலைமைக்காரர்" எனப்பகுதி விகுதியாகப் பிரிந்து புணரும். ஐ தோன்றல் விகாரமெனினும், வினைமுதற் பொருள் விகுதி எனினும் பொருந்தும். 'நிலத்தை யுடையவர்' என்னும் பொருளில் நிற்கும். நிலத்தை

† Miss. S. Tucker's South Indian Sketches, Pt. II, P. 35,

யுடையவர் அரசரே யாவர். அரசர்போலுஞ் செல்வத்தவராகி இழி குலத்தோர் நாடாண்டாராயினும் அவர்க்கு 'நிலமைக்காரர், நாடார்' என்னும் பெயர்கள் கூறலமையாதென விளக்குதற்கே,

"அன்ன ராயினு மிழிந்தோர்க் கில்லை" †

எனத் தொல்காப்பியர் நூலக்கியிருக்கின்றார். அதனால் 'நில மைக்காரர்' என்னும் பெயரும், 'நாடார்' என்னும் பெயரும் மற்ற சாதியார்களுக்கின்றி, இவர்களுக்கே யேற்பட்டன. ஆகவே, நில மைக்காரர்களாகிய நாடார்கள் பாண்டிய வரச குலத்தவர்கள் என பசுமரத்தாணி யறைந்தாலென நாட்டப்படுவர்.

தென் இந்தியாவில் சைவத் தலைவராகிய லோககுரு சிங்கேரி மடத்து, ஸ்ரீமத் - சங்கராசாரிய சுவாமிகள் நாடார் குலத்தவர்களையுந் தம் மதத்துக்குள் ஆக்கவேண்டி, தம்முடைய சிஷ்யரான மைசூர் சமஸ்தானம், தாராபுரந் தாலுக்கா குளிஞ்சிவாடி தெற்கேசுர அக் கிராமம், ஸ்ரீமடத்திலிருந்த சிவசாமிசாஸ்திரி பௌத்திரர் சிவராம சாமி சாஸ்திரியாரை நியமித்து அவருக்கு சௌமிய வருஷத்தில் (கி-பி. 1789-ல்) கொடுத்த அதிகாரப் பத்திரமாகிய தாம்பிர சாஸனத்தில் நாடார் குல வளமையைப் பற்றி பின் வருமாறு கண் டிருக்கின்றது.

"பாண்டிய குலமாயும் சிவகோத்திர சம்பன்னுளாயும் பாண்டிய தேசத்தில் பிறந்தவர்களாயும் க்ஷத்திரிய வமிஸாளாயுமிருக்கிற நாடார் கள் குலம் ஸமஸ்த்தத்துக்கும் குலகுருவாய் நேமுகஞ்சேய்து.........."

எனப்பட்டிருக்கின்றது. இந்த லோககுரு, ஸ்ரீமத்-சங்கராசாரிய சுவாமிகள்‡ வாக்காலும் நாடார்கள் பாண்டிய வம்ஸத்தவர்கள் என வும், க்ஷத்திரியர்கள் எனவும் விளங்கினர். இவர் திருவனந்த புரத் தில் பிறந்தவராதலால், அந்நாட்டையும் அதற்கடுத்த திருநெல்வேலி மதுரை முதலிய ஊர்களையும் ஆண்ட பாண்டிய அரசர்கள் வம்ஸத் தில் வந்தவர்கள் இந்நாடார்களே என செவ்வெனே யறிந்து 140- வருடத்திற்குமுன் கூறியுள்ளார். இந்த லோககுரு ஸ்ரீமத் - சங்கரா சாரிய சுவாமிகள் வாக்கு மேலேயாம் கூறிவந்தவைகளை எல்லாம்

† தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், 84-வது சூத்திரம்.

‡ Sankaracharya was a native of Travancore, be popularised Saivite and Smarta form of worship throughout India." Vide, The Travancore State Manual. Vol. I, Ch. VI, P.250,

ஒருங்கே திரட்டி ஆமோதித்தலை ஒத்திருக்கின்றது. இத்தியாதிப் பிரமாணங்களால் "நாடார்கள் அரச வம்ஸத்தவர்கள்" எனவே முடிவு கட்டப்படும்.

ஆகவே மேலே கூறிப்போந்த நியாயங்கள் அனைத்தையும் ஒருங்கே திரட்டிப் பார்வையிடும்போது "நாடன், நாடான், நாடாள்வான்" என்னும் பட்டப்பெயர்கள் தமிழ் நாட்டு அரச குலத்தவர்களுக்கு உரிய புராதன பட்டப்பெயர்கள் என்றும், தமிழ் அரசர் குலத்தவர்களாகிய க்ஷத்திரிய குலத்தவர்கள் இவர்களே என்றும், இவர்கள் அரசிழந்த காரணத்தால் தாழ்வடைந்திருக்கிறார்கள் என்றும், இந்த நாடார் குலத்தவர்களுக்குள் காணப்படுகின்ற க்ஷத்திரிய குல லக்ஷணங்களை நன்கு மதிக்கக்கூடிய தென்றுந் தெளிவாகத் துலங்குவதோடு, அந்த நாடன், நாடான், நாடாள்வான் என்னும் பட்டப் பெயர்களை தோன்றுதொட்டு இடையறாது நாளது வரையிலும் எக்குலத்தவர்களுக்குப் பட்டப்பெயர்களாக வழங்கி வருகின்றனவோ, அக்குலத்தவர்களே "புராதன தமிழ்நாட்டு சந்திரகுலப் பாண்டிய வம்ஸத்தவர்கள்" என ஐயமறவிளங்கும். இவ்வியல்பு கல்வி நெறி உணர்ந்தவர் அன்றி, மற்றையோரும் தெள்ளிதின் உணருமாறு, 'மங்கிக்கிடக்கும் மாணிக்கமணியை மாசற்று விளங்கச் சாணையில் திட்டுவதைப்போலும், தூர்ந்துகிடக்குங் கிணற்றைத் தூரெடுத்து அதன் நீரை யுண்ணுதலைப் போலும், அமைந்துக்கிடந்த அப்பாண்டிய குலத்தவர்களது அருங்குணங்கள் அனைத்தும் உலக மடங்கலும் அறிந்துணரும் பொருட்டு, கார்த்திகைத் திங்களின் கார்த்திகைநாளில் ஏற்றிய விளக்கேபோல் "நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி" என்னும் நாமகரணத்தைச் சூட்டித் தீட்டிக் காட்டப்பட்டது.

முற்றிற்று.

நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி.

—:o:—

தந்துரை.

தந்துரை என்றால் நாடார் சாதிக்குரிய அனுபோக
வழக்க பழக்கங்களையும், இதனோடு புணர்த்தி
அவர்களை க்ஷத்திரியர் என விளக்கல்.

1. நாடார்கள் நிலபாத்திய முடைத்தாயிருத்தல்.

நாடார்கள் பாண்டிய அரசவம்ஸத்தவர்களாயினமையின் அதற்குரிய அக்குகளைத் தெரிவிக்கவும், அவ்வரச வம்ஸத்தவர்கள் இவர்களே என விளக்கவும், நாளதும் இந்நாடார்கள், மற்ற பிராமணர், வைசியர், சூத்திரர் முதலிய சாதியார்களுக்கு இல்லாத பல அம்ஸங்களை தங்கள் குலத்திற்கே உண்டென சிறப்பாக அடைந்து வருகின்றார்கள். அவைகளில் முதலாவது அரசர்களைப்போல் நிலவுரிமையை அடைந்து வருவதும் ஒன்று. நிலவுரிமையை யுடைய வம்ஸத்தவர்கள் அரசர்களே யாவர். அதை விளக்கவே அண்டர்துரை (W.W. Hunter) அவர்களும் "வடதேசத் தரசர்களாகிய இராஜபுதானத்து அரசர்கள் பூர்வம் பூமியை யுடையவர்களாக விருந்தார்கள். அவ்வம்ஸத்திலுதித்தவர்கள் தங்களது ஆதிபத்தியம் இழந்தும் நாளதும் அநேக சிறிய பூமிகளை பாரம்பரை ஆதிபத்தியத்தோடு அடைந்து வருகின்றார்கள்" என்பது தோன்ற "The Rajaputs once the leading, and land owning tribes, still possess many small estates†" எனக் கூறியிருக்கின்றார். இதைப்போல் இத்தென்தேசத் தரசர்களாகிய இந்த நாடார்களும் பாண்டிய தேசத்திலுள்ள அநேக கிராமங்களின் மேலும் பாரம்பரையான ஆதிபத்திய உரிமையை நாளதும் உடைத்தாயிருந்து வருகின்றார்கள் என்பது தோன்ற "The Nadan claim rights of Seigniorage over most of the

† W. W. Hunter's Imqerial Gazetteer of India, Vol. I, P. 218; and Hallam, Vol. I, P. 144.

villages in the south§" எனவும்; "The Nadars are still professed as lords of the soil†" எனவும் பிஷப்பு கால்டுவேல்துரை (Bishop Caldwell) அவர்கள் கூறி விளக்கியுள்ளார்.

நாடார்களுக்கு நிலமை பாத்திதையுள்ள ஊர்கள்.

1. மதிபொருந்திய வீரதீரக்குட்டம்
மாநிதிகாயா மொழியாமே
பதிச்சிறுத்தொண்ட நல்லூர் தண்டுபத்துப்
படுக்கப்பத் தைந்துஞ் சிற்றரசே.

2. நாலுமாவடி காணம் புதுக்குடி
நன்றான பணிக்க னுடன் புள்ளி
மூலைப்பொழியோடு வீரமாணிக்கம்
மூலக்கரையேழும் புராதினங்கள்.

3. ஆனைகுடியிருப்பு சுண்டையன் கோட்டை
அப்புவிளையுவரி அச்சம்பாடு
தேன்முது மொத்தன் பொழியுடன்கூடி
தினம் விளையுங் கரைச்சுற்றமே.

4. தச்சன்மொழி யடையல் பள்ளிப்பத்துடனே
தண்டுமங்காடு வகுத்தான்குப்பம்
காச்சினுவிளையு முமுரிக்காடுடனே
காயலுங் கொற்கையுஞ் சீக்காச்சி.

5. செட்டியா பத்துடன் சீருடையாபத்து
சீனன்தோப்புடன் பேய்க்குளமும்
செட்டி குளத்துட னுவார் தோப்பும்
சேர்ந்த பாற்குளம் வாழவல்லான்.

6. பறமன்குறிச்சியும் செம்மரிக்குளமும்
பன்னுடை யிருப்பு வாழையடி
பொறைகுடி யிருப்பு மாவீடுபண்ணையும்
புவிமைக்கண்நாடன் குடியிருப்பும்.

7, ஆறுமுகநேரி மேலஆத்தூருநல்

§Bishop Caldwell's The Mission of Edeyenkoody in The District of Tinnevelly, 1845, Dh. II, P. 6.

† Bishop Caldwell's Reminiscence, P. 87.

லகரங்கூட்டா பொழியூரும்
நேறுவரண்டிவேல் நடுவக்குறிச்சியும்
நிலமைக்காரருக்குப் பிரதானங்கள்.

அதாவது.

1. அச்சம்பாடு
2. அடையல்
3. அப்புவிளை
4. ஆழ்வார்தோப்பு
5. ஆறுமுகநெரி
6. ஆனைகுடியிருப்பு
7. உடப்பிகுடியிருப்பு
8. உவரிகாடு
9. காயல்
10. குலயங்கரிசல்
11. கூட்டாம்பொழி
12. கொற்கை
13. சீக்காச்சி
14. சீருடையாப்பத்து
15. சினங்தோப்பு
16. சுண்டன்குடி
17. செட்டிகுளம்
18. செட்டியாபத்து
19. செம்மரிக்குளம்
20. சேர்வைக்காரமடம்
21. தங்சன்மொழி
22. தண்டுபத்து
23. தண்டுமங்காடு
24. நடுவக்குறிச்சி
25. நாலுமாவடி
26. பணிக்கநாடன்புள்ளி
27. பாற்குளம்
28. பேய்க்குளம்
29. பொறைக்குடியிருப்பு
30. முதுமொத்தன்பொழி
31. மூலக்கரை
32. மேலஆற்றூர்
33. மைக்கண்நாடன் குடியிருப்பு
34. வருத்தான்குப்பம்
35. வரண்டிவேல்
36. வீரமாணிக்கம்

இவ்வூர்களும், இவற்றோடு இப்புத்தகம், 156-வது பக்கத்தில் காட்டிய ஊர்களும் பிரதானமானவைகள். இன்னும் பலஉள. இக் கிராமங்களெல்லாம் மதுரை, திருநெல்வேலியில் சிற்றரசு பாத்திதையில் பூர்வீகத்திலிருந்து நாடார்களுக் குட்பட்டவை, இதோடு "நாட்டையுடையவர்" என்பதை மெய்ப்பிக்கக்கூடிய நாடார் என்னுஞ் சாதிப்பெயரையும் உடைத்தாயிருக்கின்றார்கள். நிலமைக்காரர் என்னும் பெயரையும் பெற்றுள்ளார்கள். "அப்படி உடைத்தாயிருப்பதால் இந்த நாடார்களை நிலத்திற்கு உரிமையையுடைய நிலமைக்காரர்கள் என எவரும் ஒப்புக்கொண்டு இருக்கின்றார்கள்." என்பது தோன்ற 'The Nadars are acknowledged proprietors of the soil' எனவும் டக்கர் துரைசானி அம்மாள் அவர்களும்,

நாகம ஐயர் அவர்களுங்† கூறியுள்ளார்கள். ஆகவே இவற்றால் நாடார்கள் வடநாட்டு அரசர்களைப்போல் நிலவுரிமையை யுடைத்தாயிருப்பதால் இந்த நாடார்களையும் அரசர்கள் எனத் துணியப்படும்.

2. நாடார்களுக்கு இயற்கையாயுள்ள வீரம்.

"They (Nadars) are, as a class, the most turbulent, oppressive, proud and unprincipled to be met with, so for as I know, or have heard of in this province, or in the peninsula. A few in various parts have become Christians, and some of the poorer of them have placed themselves under instruction in my own district; but they seem little, if at all, less obdurate than before. No kindness seems to melt them. No discipline seems to awe them. 1 often think they resemble tamed and trained wild beasts, which, so long as they are not provoked, look submissive, but whose innate ferocity may be aroused by the slightest accident." Vide, Rev R. Caldwell's Mission of Edeyenkoody, in the District of Tinnevelly, Pt. II, P. 6, in 1845.

"எனக்குத் தெரிந்திருக்கிற பிரகாரம், அல்லது நான் கேள்விப்பட்டிருக்கிற பிரகாரம், இந்த நாட்டில் இந்த நாடார்கள் ஏகத்திற்கு ஒன்றுபோல் அதிக அடங்காக் குணமுடையவர்களும், அயலாரை அடக்கி ஒடுக்குகிறவர்களும், பெருமித நடையுடையவர்களும், மனோரதப்படி நடக்கிறவர்களுமா யிருக்கிறார்கள். இந்த நாடார்களுக்குள் கிறிஸ்து மதத்தை யனுசரித்திருப்பவர்கள் அபூருவம். இவர்களுக்குள் அதிகத் தாழ்வடைந்திருக்கிறவர்களிற் சிலர் நாணிருக்கிற திசையில் கிறிஸ்துமதத்தை யனுசரித்திருக்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய அடங்காக்குணம் முன்போலவே இருக்கின்றது. அவர்களுக்கு எவ்வளவு பட்சங் காண்பித்தபோதிலும், அவர்கள் மனம் இளக்க மடைகிறதில்லை. அவர்களுக்கு எவ்வளவு கண்டிப்புக் காண்பித்தபோதிலும், அவர்கள் அஞ்சுகிறது மில்லை. இந்த நாடார்கள் அடக்கி வளர்க்கப்படுகிற காட்டுமிருகங்களுக்கு ஒப்பானவர்கள்

† Miss. S. Tucker's South Indian Sketches, Pt. II, Letter. 4, P. 35. The Travancore State Manual, Vol. II, P. 392, 398.

என்பதாக நான் அடிக்கடி நினைக்கிறேன். அடக்கி வளர்க்கப்பட்ட காட்டுமிருகங்கள் கோபம் மூட்டப்படாதிருக்கிற பரியந்தம் அடங்கி இருப்பவைகள் போல தோன்றின போதிலும், அவைகளுடைய கோபத்தைத் தூண்டுதற்கேற்ற ஒரு அற்பக்காரியம் நேரிட்ட மாத்திரத்தில் அவைகளின் உள்ளத்திற் பதுங்கிக்கொண்டிருக்கிற மூர்க்கம் வெளியாகின்றது. இவைகளைப் போலவே இந்த நாடார்களுமிருக்கிறார்கள்” என்று பிஷப்பு கால்டுவேல்துரை அவர்கள் 1845-ம் ஆண்டில் பேசியிருக்கின்றார்.

இவர் நாடார்களை பூர்வ தமிழரச குலத்தைச்சார்ந்த க்ஷத்திரியகுலத்தவர்களென்றும், அவர்கள் அரசிழந்த காரணத்தையிட்டுத் தாழ்வடைந் திருக்கிறார்களென்றும், உய்த்துணர்ந்திருப்பாரேயாயின், சாம்பல் மூடிய தழலுக் கொப்பந்தம் இந்த நாடார் குலத்தவர்களுக்குள் காணப்படுகின்ற வீரத்தன்மையை க்ஷத்திரிய குல லட்சணங்களில் ஒன்று என நன்குமதித்தே பேசியிருப்பார். இதில் நாடார்களுக்குக் கூறப்படும் வீரம் க்ஷத்திரியர் என்னும் பெயரின் மூலபதமாகிய க்ஷாத்திரம் என்னும் பதத்தின் தன்மையை விளக்குகின்றது. அவ்வீரத்தாலேயே அரசர்கள் க்ஷத்திரியர் என்னும் பெயரைப் பெற்றனர். இத்தன்மை அரசர்களுக்கு இயற்கையாயுள்ளவையே. அரசர்களை ''யுத்தத் தொழிலர்'' என்பது இக்கருத்தை யொட்டியே யென்க.

பகவத்கீதை, 18-வது அத்தியாயம், 43-வது சுலோகம்.

శౌర్యం తేజో ధృతిర్దాక్ష్యం యుద్ధే చాప్యపలాయనమ్ ।
దానమీశ్వర భావశ్చ క్షాత్రం కర్మ స్వభావజమ్ ॥

சௌர்யந் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம் யுத்தே சாப்ய பலாயநம்
தாந மீஸ்வர பாவஸ்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபா வஜம் ||

என பகவத்கீதையில் அரசனுக்கு வீரத்தன்மை, தைரியம், சாமர்த்தியம், யுத்தத்தில் புறங்கொடாமை, ஆளுகிற சக்தி முதலியவைகள் ''க்ஷாத்ரம் கர்ம ஸ்வபா வஜம்=சுபாவத்தினு லுண்டான க்ஷத்திரியருடைய கருமங்கள்'' எனப்பட்டிருக்கின்றது. இந்நாடார்களும் அரசர்களாதலால் இவர்களுக்குள் விளங்கும் 'வீரமுந் தைரியமும்' சுபாவத்தினு லுண்டானவையே!

"If these despised castes (Nadars) should recognize their old high position and should therefore bestir them-

selves and strive to better their position by education &c. I should say they should have all honour and glory." Vide. Prof. P. Sundram Pillai, M. A., M. R. A. S. in The Tamilian Antiquary, No. 2, P. 4, 5, in 1907.

"இப்படி அவமதிக்கப்படுகிற இந்த சாதியார் (நாடார்) தங்களுடைய பூர்வ உயர்ந்த நிலையைக் கண்டுப் பிடித்ததினால் தங்களிலே மன எழுப்பமாகி தங்களின் தற்கால நிலைமையைக் கல்வி முதலியவற்றால் மேன்மைக்குக் கொண்டுவரப் பிரயாசைப்பட்டால் அவர்களுக்கு மற்றவர்கள் சகலகனத்தையும் மகிமையையுங் கொடுக்க வேண்டும்" என புரோபசர், பி. சுந்தரம் பிள்ளை அவர்கள் கூறியிருக்கின்றார். இப்பகுதியில் "நாடார்கள் தங்களது பழைய உயர்ந்த நிலைமையை அறிந்துக் கொண்டார்கள்" என்பது தோன்ற "should recognize their old high position" எனவும், அப்படி அறிந்துக் கொண்டதும் உயர்ந்த நிலைமையை என விளக்க "high position" எனவும், அந்த உயர்ந்த நிலைமையை அறிந்த மாத்திரத்தில் அவர்களுக்குள் மன எழுப்ப முண்டாயிற் றென்பது தோன்ற "should therefore bestir themselves" எனவும், அந்த மன எழுப்பத்தை ஒருவாறு சரிப்படுத்திக்கொள்ள கல்வி முதலியவைகளால் முன்னேறுகிறார்கள் என்பது தோன்ற "strive to better their position by education &c." எனவும் விளக்கி, அந்த நாடார்களின் உண்மை நிலைமையை புரோபெசர், P. சுந்தரம்பிள்ளை அவர்கள் நன்கு உணர்த்தியுள்ளார்.

பஞ்சகாவியங்களில் ஒன்றாகிய சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், 360, 361-வது செய்யுள்களில் அரச குலத்தவனாகிய சீவகன் தன்னுடைய பிறப்பின் றன்மையை அறிந்த மாத்திரத்தில், அவனுக்கு வீரம் மிக்கெழுந்து, அவன் இருக்கும் நிலைமையிலிருந்து முன்னேற யோசித்ததைப்போலும்; யூதகுலத்தவர்கள் தங்களின் பூர்வ குல மேன்மையை யறிந்து, முயர்ச்சித்து முன்னேறி வருவதைப் போலும்; இவ்வரசகுல நாடார்களும் தாங்கள் பாண்டிய தேசத்தை யாண்டுவந்த பாண்டிய குலத்தில் வந்தவர்கள் என வெண்ணுந் தோறும், அவர்கள் மனம் வேறுபட்டு, வீரம் உண்டாகி தாங்கள் முன்னேறும் வழியைக் கல்வியாலும், வர்த்தகத்தாலும் அடைந்து

வருகின்றார்கள். இது அரச குலத்தவர்களுக் குண்டாகிய இயற்கை யே! இதனாலும் நாடார்கள் அரசர்கள் எனத் துணியப்படுவர்.

3. நாடார்களுக்குள் விதவா விவாகம் கிடையாதெனல்.

அரசர்களுக்குள் எண்வகை விவாகம் வழங்கப்பட்டு வந்தனவே யன்றி, விதவா விவாகமும் ஒன்றெனக் கொள்ளப்பட்டதாகக் காணப்படவில்லை.

நளவெண்பா,
கலிநீங்குகாண்டம், 39-வது செய்யுள்.

முன்னை வினையான் முடிந்ததோ மொய் குழலாள்
என்னைத்தான் காண விசைந்ததோ—தன்மரபுக்
கோவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது.

என்னுஞ் செய்யுளில் விதவா விவாகஞ் செய்தல் அரசர் மரபுக்கு ஒவ்வாத காரியம் அதாவது வழக்கமில்லாத செய்கை என விளக்கியுள்ளார் புகழேந்திப்புலவர். இப்புகழேந்திப்புலவர் மதுரையை ஆண்ட வரகுணபாண்டியனது ஆஸ்தான பண்டிதரா வர். இவர் பாண்டிய ராஜாக்களது வழக்கப் பழக்கத்தை யறிந்தவராதலால், அப்பாண்டியவரசர்களது வழக்கத்தையே அவர்களுக்கு முன்னிருந்த அரசர்களுக்கும் உரியதாகக்கொண்டு, அரசர்களுக்கு விதவாவிவாகம் ஒவ்வாத காரியம் என விளக்க "தன்மரபுக் கோவ்வாத வார்த்தை" என்று விளக்கியுள்ளார்.

நைடதம், தேவியைக் கண்ணுற்றப் படலம்,
10-வது செய்யுள்.

மேயவிஞ்சையோர் நளனொடுங் கற்றிலன் விரல்வேன்
சேயனுனினி துறைவ திவ்விட மெனத் தெருளேன்
றூயகற்பினோர் காதலர் துறப்பினு மற்றோர்
நாயகர்பெற நினைவர் கொலோவென நவின்றான்.

என்னுஞ் செய்யுளில் அதிவீரராம பாண்டியரும் தம் அரச குலத்தினருள் பெண்களுக்கு மறுவிவாகம் புரிதல் வழக்கமில்லை யென விளக்க, "காதலர் துறப்பினு மற்றோர் நாயகர் பெற நினைவர் கோலோ" எனக்கூறி விளக்கியுள்ளார். அன்றியும்;

"There exists a tradition to the effect that the Kshatriyas followed the profession of arms up to the time of Emperor Alamgir, when a large number of them having been slain in the Dakhin wars, the Emperor, out of pity, ordered their widows to be remarried. This command the head of the caste disobeyed, so the Emperor dismissed all Kshatriyas from his military service; and ordered them to be shop-keepers and brokers for the future." Vide, W. W. Hunter's Statistical Account of Bengal, Vol. IV, P. 48.

"இதற்கொரு சரித்திரப் பிரமாணம் உண்டு. ஆலம்கிர் சக்ரவர்த்தி காலம் வரைக்கும் ஆயுதத்தொழிலை அரசர்கள் மாத்திரம் கையாண்டு வந்தார்கள். அந்த சக்ரவர்த்தி காலத்தில் நடந்த ஒரு பெரிய தக்காண சண்டையில் அநேக அரசர்கள் கொலையுண்டார்கள். சக்கரவர்த்தி மனம் இரங்கி, இறந்த அரசர்களின் விதவைகளை மறுமணம் புரிந்துக்கொள்ள உத்தரவிட்டான். இந்த உத்தரவை சாதித் தலைவர்கள் புறக்கணித்தார்கள். அதனால் சக்கரவர்த்தி யுத்தத் தொழிலி லிருந்து எல்லா அரசர்களையும் விலக்கி, பிற்காலம் அதாவது வருங்காலதில் அவர்கள் வர்த்தகர்களாகவும், தரகர்களாகவும் இருக்க அவர்களுக்கு உத்தரவிட்டான்" என்பதாம்.

இவ்வங்கிலேயப் பகுதியாலும் விதவாவிவாகம் அரசருக்கில்லையென வறியலாம்.

ஆர். சுப்பிரமணி ஐயர், 1910-ம் ஞூத்தில் இயற்றிய,
ஹிந்துலா, 36-வது சட்டம்.

விதவா விவாகம்.

"மநுஸ்மிருதியில் கர்ப்பாதானத்துக்கு முந்தி வைதவ்யம் அடைந்த பெண்ணுக்கு புனர்விவாகம் செய்யலாமென்றிருந்தாலும், அதற்குப்பின் எழுதப்பட்ட சில ஸ்மிருதிகளில் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் உபயக்கட்சிக் காரர்களுக்கும் ஆதாரங்கள் தர்மசாஸ்திரங்களி லிருக்கின்றன. எப்படியிருந்தாலும் தற்காலத்தில் சில தாழ்ந்த ஜாதிகளில் தவிர, மற்றஜாதிகளில் விதவா விவாகம் அனுஷ்டானத்திலில்லை" என்பதாம். இச்சட்டம் விதவா விவாகத்தை தாழ்ந்த சாதியார்கள் அனுஷ்டிப்பதென்றும், உயர்ந்த

சாதியார்கள் அனுஷ்டிப்ப தில்லை யென்றும் விளக்குகின்றது. இதனு லும் விதவாவிவாகம் அரசர்களுக்குக் கிடையாதெனத் துணியலாம்.

அவ்வரச வம்ஸத்தில் வந்த நாடார்களும் விதவா விவாகம் செய்யாதிருக்கும் வழக்கத்தை யனுசரித்து வந்தார்கள், நாளதும் வருகிறார்கள். இவ்வழக்க பழக்கத்தை அவர்களது குலபுத்தகங்களி லும் விளக்கியுள்ளது.

1871-ம் வருஷம் அச்சிட்ட சான்றோர்மரபு, 41-வது பக்கத் தில் "சான்றோருக்கும், ரசபுத்திரருக்கு முரிய சமரச வழக்க பழக் கம்" என்னுந் தலைப்பின்கீழ்,

"பெண்களுக்குப் புனர்விவாகஞ் செய்யும் வழக்க மில்லை."

என ஐம்பத்தி ஆறு வருடங்களுக்கு முன் எழுதியுள்ளது.

1874-ம் வருஷம், சென்னை பாஸ்டர் பிரஸில் அச்சிட்ட, சான் றோர் குல மரபு காத்தல், 7-வது பிரகரணம், 213-வது பக்கத் தில் "சான்றோர் குலத்து ஆசாரங்கள்" என்னுந் தலைப் பின்கீழ்,

"பிரியர்களை யிழந்த பெண்கள் மறுவிவாகஞ் செய்யக் கூடாது. இது சான்றோர் குலத்தவர்களுக்கு நாளதும் பிரமாணம்."

என ஐம்பத்து மூன்று வருடங்களுக்கு முன் எழுதியுள்ளது. இவ்விரண்டு பிரமாணங்களும் அவர்களது குலபுத்தகங்களில் உள்ள பிரமாணங்களாகும். இனி அவர்களைச் சுட்டி பிறசாதியார்கள் யெழுதியுள்ள பிரமாணங்களையும் அறிவிப்பாம்.

(Bishop Caldwell) பிஷப்பு-கால்டுவெல் துரை அவர்கள், 1857-ம் வருஷத்தில் செய்த (Lectures) உபந்நியாசத்தில்;

"In some respects the position of the Chantrars in the scale of castes is peculiars. Their abstinence from spirituous liquors and from beef, and the circumstance that their widows are not allowed to marry again."

"சில விஷயங்களில் சாதிகளின் உயர்வு தாழ்வு சம்பந்தமான அந்தஸ்தியற்கையில் சான்றாரின் நிலைமை தனிவிசேஷம் பொருந் தியதா யிருக்கிறது. அவர்கள் மத்தியபானங்களையும், மாட்டு மாமி சத்தையும் அருந்தாமல் விலக்குவதும்; தங்கள் சாதி விதவைகளை மறுவிவாகஞ் செய்ய இடங்கொடாதிருப்பது மாகிய நடபடிக்கைகளை யுடையவர்கள்."

என பிஷப்பு-கால்டுவெல்துரை அவர்கள் எழுபது வருஷங்களுக்கு முன் நாடார்களுக்குள் விதவாவிவாகஞ் செய்யும் வழக்கம் இல்லையென வெழுதியுள்ளார்.

(Rev. R. R. Meadows) மெடோஸ் என்னும் மிஷினரி துரை அவர்கள் 1868-ம் வருஷத்தில்;

"The Chantrars castes among whom as heathen, the marriage of widows is not allowed."

"சான்றூர் சாதியார் தங்கள் பழைய இந்து மத இயற்கைப்படி, விதவை விவாகம் செய்ய உடன் படுகிறதேயில்லை."

என ஐம்பத்தொன்பது வருடங்களுக்கு முன் மெடோஸ்துரை அவர்கள் நாடார்களுக்குள் விதவா விவாகங் கிடையாதென வெழுதியுள்ளார்.

திருவாங்கூர் ராஜ்யத்தின் தமிழ்ப்பகுதியான நாஞ்சி நாட்டிலிருந்த (Rev-Samuel Mateer F. L. S.) மாத்தீர் பாதிரியார், 1871-ம் வருஷத்தில், "The land of Charity" என்னும் புத்தகம், 3-ம் அத்தியாயம், 42-வது பக்கத்தில்;

"They (Santrars) are usually faithful in the observance of the marriage bond, and are somewhat more chaste and truthful, more grateful, and less prejudiced, than many other classes of the Hindus."

"சான்றூர்கள் வழக்கமாய் விவாக உடன் பாட்டுப்பிரமாணங்களில் உண்மையுள்ளவர்களா யிருக்கிறூர்கள். மற்றும் அநேக இந்து ஜாதிகளைவிட கற்பு நிலையிலும், உண்மையிலும் மேம்பட்டவர்களும், அதிக நன்றியறிதலுள்ளவர்களும், தப்பெண்ணங்கொள்ளும் துர்க்குணத்தில் குறைந்தவர்களு மானவர்கள்."

என ஐம்பத்தி ஆறு வருடங்களுக்கு முன் மாத்தீர் பாதிரியார் அவர்கள் நாடார்குலப் பெண்களை கற்பு நிறைந்தவர்க ளென்கின்றூர்.

திருவாங்கூர் கவர்ண்மென்றூர், தங்களது திவான் பேஷ்காராகிய வி. நாகம ஐயர் (B. A; F. R. Hist. S.) அவர்களைக் கொண்டு, 1906-ம் வருஷத்தில் பிரசுரித்திருக்கிற, (The Travan-

core State Manual, Vol. II, P. 394.) திருவாங்கூர் ஸ்டேட் மானியுவில்;

"Polyandry is unknown in the caste and widow marriage is not permitted. 'A wife may be divorced for adultery, and the woman so divorced cannot marry again."

"சான்றார் குலத்துள் இரண்டு மூன்று பெண்சாதிகளைக் கட்டும் வழக்கம் கிடையாது கைம்பெண் விவாகம் செய்வதில்லை. சோரத்துவமுடைய பெண்சாதியை நீக்குவார்கள். ஆனால் அப்பெண்களை மறுமணஞ் செய்யார்கள்."

என இருபத்தொரு வருஷங்களுக்கு முன் திருவாங்கூர் ராஜ்யத்தின் திவான் அவர்கள் விதவாவிவாகம் நாடார்களுக்குள் கிடையாதெனக் கூறியுள்ளார்.

"Widow marriage is said to be forbidden, but this is very doubtful." Vide, The North Arcot District Manual, Vol. I, ch. IV, P. 238.

"விதவாவிவாகத்தை நாடார்கள் விலக்கி யிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இது அதிக சந்தேகம்" என காக்ஸ்துரை அவர்கள் கூறியுள்ளார். இவர் உண்மையை யறியாமல் அது விஷயத்தில் சந்தேகங் கொள்ளுவது தவறு, என்றாலும் இல்லை என்பதே அவர் முடிபும்.

மதராஸ் கவர்ன்மெண்ட்டு வியில் வெட்டனரி டிப்டி சூப்பரின்றென்டென்டா யிருந்தவரும், தமிழ் வித்துவானுமாகிய கனம். வி. பி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், 1907-ம் வருஷத்தில்;

"தென் ஜில்லாக்களிலுள்ள மறவர், இடையர் முதலிய சாதிகளின் ஒழுக்கத்துக்கு, அச்சில்லாக்களிலுள்ள சான்றார் ஒழுக்கம் குறைவு பட்டதாகத் தோன்றவில்லை. உயர்ந்த சாதிகளுக்குரிய ஒழுக்கங்களுள் மாமிசம் புசியாமையும் விதவைகள் கலியாணஞ் செய்யாமையும் முக்கியமானவை. அவ்விருவழக்கங்களும் நல்லவையோ தீயவையோ வென்பதைப்பற்றி, நான் இங்கே பேசவில்லை. அவைகளை ஆராய்வதற்கு இது இடமுமன்று. இவ்வழக்கங்கள் தற்காலம்வரை இந்தியாவில் சாதியாசாரங்களுள் மேம்பட்டவைகளாகக் கருதப்படுகின்றன வென்பது, நான் விவரிக்கப் புகுந்த விஷ

யத்துக்கு அவசிய மாதலால், நான் அவ்வழக்கங்களை இங்கெடுத்துக் கூறினேன். கள்ளுண்ணாமை, விதவாவிவாகஞ் செய்யாமை முதலிய உயர்குல வழக்கங்களுடைய சான்றார் பல சிறந்த நல்லொழுக்கங்களுடையவர்கள். ஆச்சரியப் படத்தக்க விடாமுயற்சி யுடையவர்கள்.''

என இருபது வருஷங்களுக்குமுன், கனம் சுப்பிரமணிய முதலியார் அவர்கள் நாடார்குலத்துள் விதவாவிவாகங் கிடையாதென வெழுதியுள்ளார். ஆகவே, இத்யாதிப் பிரமாணங்களை யோசிக்கின் பாண்டிய குலத்திலுதித்த நாடார்களுக்குள் விதவாவிவாகங் கிடையாதேன வறியலாம்.

4. நாடார்குல விதவைகள் வெண்ணுடை யுடுத்தல்.

பூர்வம் அரசகுலப்பெண்கள் புருஷனை இழந்து, விதவையான காலத்திலிருந்து, இறக்கும் பரியந்தம், வெண்ணுடை யுடுத்தலை, அவர்கள் தங்கள் சாதிக்குரிய குலாசாரங்களில் ஒன்றாக மதித்து வந்தனர்.

சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், 324-வது செய்யுள்.

''பிடிக்கை போலுந் திரள் குறங்கி
னணியு நீக்கிப் பிணை யன்னா
ளடிக் கிண் கிணியு மஞ் சிலம்பும்
விரன் மோதிரத்தோ டகற்றிய பின்
கொடிப்பூத் துதிர்ந்த தோற்றம் போற்
கொள்ளத் தோன்றி யணங் கலற
வுடுத்தாள் கற்றோய் நுண் கலிங்க
முரவோன் சிறுவ னுயர் கெனவே''

(இ-ள்) ''பிணையன்னாள், குறங்கிற் செறிந்த அணியையும் நீக்கி, கிண் கிணியையும் சிலம்பையும் காலாழியுடன் அகற்றிய பின்பு, பூத்துதிர்த்த தோற்றம்போற் தோன்றி, கூனி வருந்தச் சிறுவன் உயர்கவென்று வெள்ளாடையை உடுத்தாளேன்க'' என்பதாம். (கலிங்கம்=வெள்ளாடை.)

இச் செய்யுளால் சச்சந்தன் என்னும் சந்திரகுலத் தாசன் மனைவி விஜையை என்பாள் தனது புருஷன் சச்சந்தன் இறந்ததும் வெள்ளாடை யணிந்துக்கொண்டதாக விளங்குகின்றது. இவ்

வெள்ளாடை யுடுத்தலை சோழகுலத்துதித்த திருத்தக்கதேவர் தம் மரசகுல ஆசாரங்களில் ஒன்ருக மதித்து சீவகசிந்தாமணியில் தெரிவித்துள்ளார். இவற்ருல் சூரிய சந்திர குலத்திலுதித்த அரச குல விதவைகள் வெள்ளாடை யுடுத்தல் வழக்கமென வறியக் கிடக்கின்றது. இவ்வழக்கத்தை அவ்வரசகுலத்தி லுதித்த நாடார் களும் தொன்றுதொட்டு அனுசரித்து வந்தார்கள், வருகிருர்கள்.

1874-ம் வருஷம், சென்னை பாஸ்டர் பிரஸில் அச்சிட்ட, சான்ருேர்குல மரபுகாத்தல், 7-வது பிரகாணம், 213-வது பக்கத் தில் "சான்ருேர்குலத்து ஆசாரங்கள்" என்னுந் தலைப்பின்கீழ்;

"விதவைகள் வெண் வஸ்திரந் தரிப்பதே யன்றி, சிகப்பு முதலிய பலவர்ண புடவைகள் கட்டவுங் கூடாது. ஆபரணங்கள் பூணவுங் கூடாது. நாளதுஞ் சான்ருேர் குலத்து விதவைகள் வெண்ணுடை புனைந்து, நிராபரண தாரிகளாயிருந்து வருகிருர் கள்."

என ஐம்பத்து மூன்று வருஷங்களுக்கு முன் அவர்களது குல நூலில் எழுதப்பட்டுள்ளது. இது அவர்களுக்குள் தொன்றுதொட்டு வரும் பாரம்பரை வழக்கம். நாளதும் அவர்கள் விதவைகள் அணி ந்து வருதலையுங் கண்கூடாகவுங் காணலாம். இதனுலும் அவர்கள் அரசர்களாவர்.

5. நாடார்கள் சமயமாறினும் சாதிமாறி மணத்தல் வழக்கின்று.

அரச சாதியார்கள் தங்குலப் பெரியோர்கள் பாரம்பரையாகக் கையாண்டு வந்த சமயத்தைவிட்டு, வேறுசமயத்தில் புகினுஞ் தஞ் சாதியைக் கெடுத்துக்கொள்ளார்கள். புத்த சமயத்திலாயினும்,சமண சமயத்திலாயினும், கிறிஸ்த்துசமயத்திலாயினும், சாதிபேதமில்லை என்பது முக்கியக்கொள்கை. இந்தக் கொள்கையை அரச சாதியார் கள் தவிர, மற்ற சாதியார்களெல்லாம் கையாண்டு வந்தார்கள், வரு கிருர்கள். அதாவது சாதிமாறி கலந்து மணம்புரிந்து வருதலாம். அரச சாதியார்களோ அவ்விதம் சாதிமாறி கலத்தல் கெடுகினுங் கிடை யாது. அவர்கள் சமயம் மாறினும் தங்குல ஸ்திரீகளையே மணந்தார் களென தேச சரித்திரங்களால் அறியலாம். சைவசமயத்தவனுகிய ஈழராஜன் புத்த சமயத்தவனுகியும் அரசகுலப் பெண்ணையே கலி

யாணஞ் செய்துக் கொண்டான். பிறகு மாணிக்கவாசக சுவாமிகளால் சைவனானன். சைவசமயத்தவனாகிய கூன்பாண்டியன் சமண சமயத்தவனாகியும் அரசத் தன்மையையே கையாண்டு வந்தான். பிறகு ஸ்ரீமத் திருஞான சம்பந்த*சுவாமிகளால் சைவனானன். புத்த சமயத்தவனாகிய ஜீவகனும் ஆயர் குலத்தவனாகிய நந்தகோன் தந்தஞ் செய்த கோவிந்தையார் என்னும் பெண்ணை தம்மரச குலத்திற்குச் சரியல்ல வென்றெண்ணி, தன் சிநேகிதனாகிய பதுமுகனுக்கு ஆகுக வென்றேற்றான்.* ஆகவே அரசர்கள் எச்சமயத்திற் புகினும் தம்குலக் கோத்திரங்களைக் கெடுத்துக் கொள்ளார்களென விளங்கலால், நாடார்களும் அவ்வரச வம்ஸத்தில் வந்தவர்களாதலால், கிறிஸ்து சமயத்தில் மாறியும் தம்மரசகுலக் கோத்திரங்களைக் கெடுத்துக் கொள்ளாது, தம் நாடார்குலக் கன்னிகைகளையே மணந்து வருதல் நாளதும் வழக்கம். இச்செய்கையாலும் நாடார்கள் அரசர்கள் என விளங்குவர்.

6. நாடார்களில் பிச்சை எடுத்தல் முற்றும் வழக்கின்றும்.

அரச சாதிக்குள் கொடுத்தற்றொழிலன்றி வாங்குந்தொழில் அதாவது பிச்சை எடுத்தல் முற்றிலுங் கிடையாது. இவ்வழக்கை முன்னிட்டே அரிச்சந்திர மகா ராஜரும் கொடுத்ததை வாங்குதல் தங்கள் அரச சாதிக்குள் வழக்கமல்லவென்று வெறுத்தார். அதை விளக்கவே ஸ்மிருதியாதி நூற்களால் அரசர்களுக் குரியதாகக் கூறிய அறுதொழில்களுள் ஈதற்றொழிலையும் ஒன்றாக விளக்கி, ஏற்றற்றொழிலை முற்றும் விலக்கியுள்ளார்.† 'ஏற்பதிகழ்ச்சி' என்னும் வாக்கியமும் அரசர்பால் இழிவைத்தந்து, பார்ப்பாருக்கு அது ஒரு சிறந்த குலத்தொழிலாதலால்,§ அவர்கள்பால் இழிவிலாது உயர்வையே தந்துநிலைத்தது. அதனாலேயே "க்ஷத்திரியனை உனக்கு யுத்தஞ்செய்து கொல்லுவது சுவதருமமாயும்,பிச்சை யெடுத்துண்பது பரதருமமாயு மிருக்கிறது" என்றார் ஸ்ரீதர சுவாமிகள், கீதார்த்த தீபிகையில். இவ்வழக்கைப் பின்பற்றியே அவ்வரச சந்ததியிலுதித்த நாடார்களில் ஒருவராவது நாளது வரையினும் பிச்சை எடுத்தல் நெடு

---

* சீவகசிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், 81-வது செய்யுள்.

† மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 77-79-வது சுலோகங்கள்.

§ மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 76-வது சுலோகம்,

கிலும் வழக்கின்றும். இவ்வழக்கத்தை அந்த நாடார்களோடு நெருங்கிய வழக்கப் பழக்கத்திலுள்ளார் ஒவ்வொருவரும் அவர்களை பிச்சை எடுக்காத சாதியார்களென செவ்வனே அறிந்துக்கொள்ளலாம்.

"The Nadars are a hard-working, industrious people, and pauperism is almost unknown among them." Vide The North Arcot District Manual, Vol. I, Ch. IV, P. 238.

'நாடார்கள் கஷ்டத்தொழிலாளரும், சுறுசுறுப்புள்ளவர்களுமாவர். அவர்களிடம் தரித்திரம் வெகுசாக தலைகாட்டாதிருக்கிறது.' என்றூர் காக்ஸ்துரை அவர்கள். இப்பகுதி பிச்சை எடுக்காதிருத்தலையறிவிக்கின்றது. ஆகவே, இந்த நாடார்கள் பிச்சை எடுக்கா திருத்தலால், அவர்கள் அரச சாதியார்களெனவும், அச்செய்கை அவர்கள் வம்ஸத்திற்கோர் சிறப்பாகவும் முடியும்.

7. நாடார்களது சுபா சுபங்களில் இரட்டைச் சங்கு ஊதுதல்.

தசரதச் சக்கரவர்த்தி, கைகேயி ரதத்தை நடத்த, சம்பராசுரனிடம் சண்டை செய்து ஜெயித்து, அவனிடமிருந்த இரட்டைச் சங்கை பரிமுதலாகக் கொண்டு,* அதை தங்களது அரச சாதியாருக்கு ஒரு அறிகுறியாகவைத்துக் கொண்டார். அவ்விரட்டைச் சங்கை அவருக்குப் பிறகாலத்தில் அரசர்கள் சுபாசுபங்களில் உபயோகித்தும், இரட்டைச்சங்கு தாலி கட்டியும் வந்தார்கள். அவ்வழக்கை அவர்கள் சந்ததியிலுதித்த நாடார்களும் நாளதும் சுபாசுபங்களில் இரட்டைச் சங்கூதியும், இரட்டைச் சங்குதாலி கட்டியும் வருகின்றூர்கள். இச்செய்கையும் அந்நாடார்களை அரச சாதியாரென விளக்கியும், அவர்கள் குலத்துக்கோர் சிறப்பாகவும் முடியும்.

8. நாடார்கள் கூடைதொட்டு மண்ணெடா திருத்தல்.

பூர்வம் அரசனால் கோயில் முதலிய கட்டடங்கள் கட்டுவதாயிருந்தால், ஒவ்வொரு சாதியிலுள்ள தாழ்ந்த அந்தஸ்தினர்களை, அக்கட்டடத்திற்குரிய குற்றேவல்களைச் செய்யத் தூண்டுவது வழக்கம். அவ்வழக்கத்தை யனுசரித்து, மதுரையை யாண்ட திருமலை நாய்க்கர் மால் மண்டபங்கட்டுங் காலத்தில் மற்ற சாதியார்களோடு,

* கம்பராமாயணம், உயுத்தியகாண்டம், விடைகொடுத்தப்படலம், 17-வது கவி

நாடார்களையும் கூடைதொட்டு மண்சுமக்கத் தூண்டினர். நாடார்கள் அரசர்களாயினமையின் கூடைதொட்டு மண்ணெடுக்கும் வழக்கம் அவர்களுக்கு நெடுகிலுங்கிடையாது. அதனால் நாடார்கள் மண் சுமக்க மறுத்தனர். அப்படி மறுத்த நாடார்களை வடுகரசர் பலவித மாக இம்சித்ததோடு, அவ்வரசரது அதிகாரத்திற்குட்பட்ட நாடுகளி லுள்ள கோயில்களின் பிரவேசத்தைத் தடுத்தும், அந்நாடார்கள் சாதாரணமாகப் போய்க்கொண்டுவந்த மேல்கோபுர வாயில்களையும் அடைத்து தாழ்த்தினர். அவ்வகையால் நாடார்கள் மற்ற சாதியார் களிலிருந்து வேறுபிரிந்து, மேல்நாட்டு யூதசாதியாரைப்போல், இத் தென்தேசத்தில் ஒரு தனித்த சாதியாராகக் காணப்படுகின்றனர். கூடைதொடாத விஷயத்தை சில பிரமாணங்களால் அறிவிப்பாம்:—

சென்னைப் பட்டணம் கல்விச்சங்கத் தமிழ்த்தலைமைப் புலமை

நடாத்திய

இராமச்சந்திர கவிராயர்,

1824-ம் வருஷத்தில் அதாவது 100-வருஷத்திற்கு முன்

சான்றோர்களைச் சுட்டி இயற்றிய பஞ்சரத்தினத்தில்,

"கூடையின் மண்கோண் டெடுத்திடா வம்ஸம் பெரியோர்"

எனக்கூறியுள்ளார்.

1871-ம் வருஷத்தில் அச்சிட்ட சான்றோர்மரபு,

45-வது பக்கத்தில்.

'தஞ்சாவூர் ஜில்லா திருவிடை மருதூர் சான்றோர் மடத்தி லும், திருச்செங்காட்டான் குடிச்சான்றோர் மடத்திலும் செப்புத் தகட்டில் வரையப்பட்டிருக்கின்ற தலையுருளல் முதலிய குறிப்பைக் கொண்டு; சான்றோர் குலத்தவரைக் கூடையெடுத்து மண்சுமக்கச் சொன்னதற்கு மாட்டோமென்றதற்காக கழுத்தளவு குழிதோண்டி, அதற்குள்நிறுத்தி யானையைவிட்டுத் தலையை இடறிப்போடச் செய் வேனென்று பயமுறுத்தி, இடறவுஞ்செய்தார்.' எனவுங் கூறியுளது.

1874-ம் வருஷத்தில்,

(Rev. S. Winfred, B. A) ச. வின்பிரிட்டு ஐயர்

அவர்களால் எழுதிய

"சான்றோர்குல மரபு காத்தல்"

363-வது பக்கத்தில்,

"கூடைதொட்டு மண்சுமப்பீர்களா? சுமக்க மாட்டீர்களா? என்று வினவினான். ஒருபோதும் கூடைதொடோம் என்றைக்கிருந் தாலும் இறப்பது நிச்சயம். பந்துகள் போன்ற எங்கள் சிரசுகள் வெட்டுண்டு பூமிமீது உருண்டோடின போதிலும் வாசமலர்மாலைகள் சூடியமன்னவா? நாங்கள் ஒருபோதுங் கூடைதொடோம் என்றார் கள்" எனக்கூறியுள்ளது.

திருமாணிக்கம், கூடைதொடா கேஸ்.

திருமாணிக்கம் என்னும் கிராமம் மதுரையைச்சார்ந்த உசிலம் பட்டிக்கு தெற்கு பத்துமயில் தூரத்திலுள்ளது. இக்கிராமத்தில் பல சாதியார்களும் வசிக்கின்றார்கள். இவர்களெல்லாம் விவசாயிகள். இவர்களில் கிறிஸ்து நாடார்களும், இந்து நாடார்களும் சேர்ந்து இருபது வீடுகளிருக்கின்றன. 1922-ம் டிசம்பர் பெய்த மழை யால் இவ்வூர் கண்மாய் உடைந்து விட்டது. அதற்கு மண்வெட்டிப் போடும்படி கிராமமுனிசீப்பு, (கம்மவார் சாதி) மற்றக் குடிகளோடு நாடார்களையுங் கூப்பிட்டார். அதற்கு நாடார்கள் "கூடைதொட்டு மண்வெட்டி சுமக்கும் வழக்கம் தங்களுக்கில்லை" என்று மறுத்த தோடு, இதற்கு முன்பொருகால் இதே கண்மாய் உடைப்புக்கு ரூபா எழுகொடுத்து ரசீது வாங்கி யிருக்கிறோமென்றும், அதன்படி இப்போதும் ரூபாய்தான் தருவோமென்றுங் கூறினர். அதற்கு கிராம முனிசீப்பு அப்படி ரூபாய் வாங்கமுடியாது மண்வெட்டித்தான் போட வேண்டுமென்று கூப்பிட்டார். அவர்கள் இசையாமையால் நாடார் கள்மீது உசிலப்பட்டி டிவிஷன் சப் மாஜிட்ரேட்டுக்கு ரிபோர்ட்டுசெய் தார். மாஜிஸ்டிரேட்டு 34-பேர்களுக்கு சம்மன்போட்டு தருவித்து விசாரிக்க அவர்கள் முன்பணங்கொடுத்த ரசீதையும், நாடார்கள் "கூடைதொட்டு மண்வாறுவது வழக்கமில்லை" என்று க்ஷத்திரிய மித் திரன் மூன்றும்மலர், பத்தாம் இதழ் (1922 ஜூன்) 315-ம் பக் கத்திலுள்ள "கூடைதொடாத வறலாற்றை"யுங்காட்டி, தாவாசெய்த னர்.* கூடைதொட்டு மண் சுமக்காத வழக்கத்தை நாளதும் மதுரை முதலிய தேசங்களில் நேரில் கண்டுங் கேட்டும் அறியலாம். இவற் றால் "அள்ளாது குறையாது, சொல்லாது பிறக்காது" என்னும் பழ மொழிக்கிணங்க கூடைகொண்டு மண்சுமக்காத விஷயம் உண்மை யெனவறியலாம்.

---

* க்ஷத்திரிய மித்திரன், மலர் 4, இதழ் 5, பக் 146; மலர் 7, இதழ் 1, பக் 24

9. கோயிலின் மேலைகோபுர வாயில் நாடார்கள் செல்லும் வாயில்.

மதுரை, திருநெல்வேலி, திருச்செந்தூர், ஆழ்வார் திருநகரி முதலிய பாண்டிய நாட்டிலுள்ள பிரபல சிவ விஷ்ணுதேவாலயங்களுக்கு கோபுரங்களோடு மேல் வாயல்களிருந்தும், அவ்வாயல்களெல்லாம் தற்காலம் கற்சுவரால் அடைபட்டு இருக்கின்றன. அப்படி அவ்வாயல்கள் அடைபட்டிருப்பதற்குக் காரணம் என்னவென அறிந்துக்கொள்ள வேண்டுவது ஒவ்வொருவருக்கும் முக்கியமாம்.

பாண்டிய நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆலயத்திற்கும் நான்கு கோபுரவாயல்கள் சாதாரணமாகவுண்டு, அந்நான்கு வாயல்களினூடே நான்கு சாதியார்கள் பூர்வம் சென்றதாக நூற்களால் தெரிகின்றது.

விஸ்வகர்மா திருவாய் மலர்ந்தருளிய சிற்பசாஸ்திரம்,

11-வது செய்யுள்.

"அந்தணர் தென்றிசை யரசர் மேற்றிசை
வந்திடும் வணிகர்நல் வடக்க தாகுமாம்
தொந்தமில் சூத்திரர் தோன்றுங் கீட்டிசை
பிந்திய நடுவது பிர்ம ஸ்தானமே."

13-வது செய்யுள்.

"திடமர்கிய தென்மனை மாமறையோர்
குடசார்பெனு மேன்மனை கோவரசர்
வடசார்பெனு மாமனை வைசியராந்
துடராகிய கீழ்மனை சூத்திரரே"

என்னும் இவ்விருசெய்யுட்களில் கூறிய பிரகாரம் தெற்கில் பிராமணர்களும், மேற்கில் க்ஷத்திரியர்களும், வடக்கில் வைசியர்களும், கிழக்கில் சூத்திரர்களும் வசிக்க வேண்டுமென்பதும்; இந்நாற்றிசைக்கு மத்தியில் தேவாலயம் இருக்கவேண்டு மென்பதும் சாஸ்திரோக்த மாதலின், அந்தந்தபுறம் வசிக்கும் சாதியார், அந்தந்தபுறமுள்ள கோபுர வாயல்களினூடே சென்று ஸ்வாமிதரிசனஞ் செய்து வருவது சகஜமாயிருந்தது. இவ்வகையில் நகருக்கு மேற்புறம் வசிக்கும் அரசர்கள் மேல்கோபுரவாயில் வழியாய் சென்று சுவாமி தரிசனை செய்து வந்தனர். இம்மேல்வாயல்கள் பிற்காலத்தில் அவ்வரச வம்ஸத்தவர்களுக்கே ஸர்வ பாத்திய மாயிற்றென்க.

"திருக்குற்றாலக் குறவஞ்சி"
என்னும் பழைய நூலில், பாண்டிய அரசரைச் சுட்டி:—
"அப்பனே மேல வாசலி லரசே"

என்று பாடியிருக்கின்றது. இதனாலும் அரசர்கள் கோயில்களில் செல்லுதற்குரிய வழி மேலவாயிலெனவே யறியலாம். அவ்வழியாகவே அப்பாண்டிய வம்ஸத்திலுதித்த நாடார்கள் அரசிழந்த பிறகும் சென்று வந்தார்கள். இதனுண்மையை சுமார் 56-வருடங்களுக்குமுன் அதாவது A. D. 1871-ம் வருடம் அச்சிட்ட "சான்றோர் மரபு" என்னும் நூல், 47-வது பக்கத்தில்,

"பூர்வீகக் கோயில்களுக்கெல்லாம் இராஜரீக்கள் போய்நுழைந்து தேவபூசை நடத்தும் படிக்கான மேலவாசல் என்றொரு வாசவிருந்தது. வடுகரசர்கள் தேசத்தைப் பிடித்தபின் அந்த வாசல்களில் அநேகம் அடைக்கப் பட்டன. இதுவும் பிறசாதிக்காரர் சான்றோர் குலத்தை ஜென்மப்பகையாய்ப் பகைத்து வருவதும் தொன்று தொட்டுண்டாகி வந்திருக்கிற பகையைத் தெளிவுறக் காட்டுகிறது. திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த திருச்செந்தூர் கோயில் மேலவாசல் இன்னாள்மட்டும் நாடான் வாசல் என்று அவ்விடத்திலுள்ள சில பெரியோரது வாயில் பழமொழியாய் பேசப்பட்டு வருகிறது." எனக் கண்டிருக்கிறது.

ஸ்ரீவைகுண்டம், கண்ணபிரான் கோயிலின்மேலவாசலுக்கு சிங்க நாடான் வாசல் என்னும் பெயர் நாளதுவரை சமயாசமயங்களில், அவ்விடத்தி லுள்ளவர்களால் விளங்கியும் வருகிறது.

சுமார் 60-வருடங்களுக்குமுன் அச்சிட்ட, 'வணங்கான்மாலை' என்னும் நூலில் நாடார்களைச் சுட்டி "மேலவாசல் விசேடத்தோன்" எனக் கண்டிருக்கிறது.

இப்பகுதிகளை நோக்க நாடார்கள் தங்குல வரசர்களாகிய பாண்டியர்களது அரசாட்சி காலத்தே பரம்பரையாக அனுபவித்து வந்தது கோயில் மேலவாயிலென வறியலாம். இதற்கு அத்தாட்சியாக 1924-ம்ஸு மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, திருமலைநாய்க்கர் காலத்தில் அடைக்கப்பட்ட மேலவாயில் வழியை ரிசிவர் திறந்த காலத்தில் நாடார்களுக்கும், கோயிலாருக்கும் ஏற்பட்ட குழப்பத்தை இங்கு கவனிக்க வேண்டும். உடனே

அடுத்ததினமே கலெக்டர் உத்தரவால் அம்மேலேவாயில் முன்ன யவிட பலமாக சிமிட்டிச்சுண்ணும்பால் கட்டப் பட்டது. குழப்ப மும் ஒழிந்தது.

பண்டைத் தமிழை வளர்த்தும், தேவஸ்தானங்களைப் பரிபா லித்தும்வந்த பாண்டிய அரசர்கள் வம்ஸத்திலுதித்த நாடார்கள் ஊழ் வினைப் பயனுல் அரசிழக்கவும், வடுகராஜ்யம் தலையெடுக்கவும் ஆரம் பித்தகாலத்தில், வடுகரசர்கள் பாண்டிய வம்ஸத்தவர்களுக்கு, சொ ல்லமுடியாத பல இடுக்கண்களைப் புரிந்து வந்ததோடு, தேவஸ்தான சுதந்தரத்தையுங் கெடுத்து, வழக்கமாக பாண்டியர்கள் சென்று வந்த மேலே கோபுரவாயல்களையும் அடைத்துத் தடுத்தனர். அவ் வடைப்பே இப்பொழுதுங் காணப்படுவது. ஓரரசு மேம்பட்டு மற்ருே ரரசு தாழ்வடையுங் காலத்து இவ்விதம் பல நிகழ்ச்சிகள் நிகழுவது உலக இயற்கையே!

நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி.

:o:

புறவுரை.

புறவுரை என்றால் நூலுக்குப் புறம்பான விஷயத்தைச் சொல்லல்.

நாம் வசிக்கும் இத்தேசத்திற்கு ஆதியில் நம் முன்னோர்கள் இந்தியா வென்றும், அதில் வசிக்கும் நமக்கு இந்துக்கள் என்றும், நம்சமயத்திற்கு இந்து சமயமென்றும் அழைத்தனர்கள். இந்த இந்தியாவானது ஒரு பெரிய மாங்கனியைப் போன்ற உருவத்துடன் வடக்கே இமய மலையையும், கிழக்கே பர்மா வங்காளக் குடாக்கடலையும், தெற்கே இந்து மகா சமுத்திரத்தையும், மேற்கே யவனக் கடல் ஆப்கான் தேசத்தையும் எல்லைகளாகப் பெற்றிருக்கின்றது.* இந்தியாவிற்கு வடகிழக்கிலுள்ள மங்கோலியா, மஞ்சூரியா, தீபத்து, சைனு முதலிய தேசங்களை சாகத்தீவு என்பர். இச்சாகத் தீவிலேயே பூர்வகுடிகள் உற்பவித்தனர்.† அது சற்றேறக்குறைய ஆசியா கண்டத்தின் கீழ்ப் பாகத்திலுள்ள சீனுவைச் சார்ந்த மங்கோலியாவில் ஆமூர் நதியின் உற்பத்தி ஸ்தானமென யூகிக்கப் படுகின்றது.§ அவ்விடத்தில் உற்பவித்தமையால்தான் இப்பூர்வகுடிகள் "மங்கோலியர்" எனப்பட்டனர்.

The Saka-Dwipa or country north of Himalayas, we believe to have been the earliest cradle of the human race, in its renovations after the flood." Vide, Tylar's Oriental Historical Manuscripts, Vol. II, Appendix. A, P. 9.

---

* புறநானூறு, 6-வது அகவல் 'வடாஅது பனிபடுநெடுவரை வடக்குந், தெனுஅ துருகெழு குமரியின் றெற்குங், குணுஅது கரைபொரு தொடு கடற் குணக்குங், குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கு,

† கம்பராமாயணம், உயுத்தகாண்டம், படைகாட்சிப் படலம், 10-வது செய்யுள்; கூர்மபுராணம், நவகண்டத்துறைவோர் இயற்கை யுரைத்த வத்தியாயம், 17-வது செய்யுள்.

§ B. C. Allen's Assam District Gazetteer, Vol. I, Ch. II P, 19; Albert Fytchi's Burma, Past and Present, Vol. II, Ch. I, P. 1.

"இமயமலேயின் வடதேயம் அல்லது சாகத்தீவைப் பிரளயத்திற்குப் பிறகு மனிதர் உற்பத்திக்குத் தாயகமென நம்பப் படுகின்றது*" என்றார் டெயிலர் துரையவர்களும். அவ்விடத்தி லுதித்த பூர்வகுடிகள் பிறகு மூன்று வகுப்புகளாகப் பிரிந்து, மூன்று இடங்களில் வசித்து வந்தனர். சாகத்தீவிலிருந்து வடகிழக்கு வழியாய் இந்து தேசத்தில் பிரவேசித்து இமயமலேச் சாரலில் வசித்தவர்களை "தீபத்பர்மர்" என்றும், சாகத்தீவிலிருந்து வடகிழக்கு வழியாய் பெங்காலில் பிரவேசித்து ஆரியவர்த்தத்திலுள்ள குன்றுகளில் வசித்தவர்களை "கொல்லேரியர்" என்றும், சாகத்தீவிலிருந்து வடமேற்கு வழியாய் பஞ்சாபில் பிரவேசித்து, இத்தென்தேச மலேகளிலும் அதையடுத்த ஊர்களிலும் வசித்தவர்களை "திராவிடர்" † என்றும் அழைக்கப்பட்டு வந்தனர்.

"The olders dwellers in India consisted of many tribes, who, in the absence of a race-name of their own, are called the Non-Aryans or Aborigines." Vide. W. W. Hunter's Brief History of the Indian people, Ch. III, P. 33; and Ch. II, P. 32."

"பூர்வ குடிகள் பல சாதிகளாகப் பிரிந்து சாதிப் பெயரைப் பெறுவதற்குமுன் அனரியர் அல்லது பூர்வ குடிகள் என்றழைக்கப் பெற்றனர்" என அண்டர்துரை அவர்கள் கூறியிருக்கின்றார். இவ்விதம் யாதொரு சாதிப் பெயரையும் பெறாத இந்த பூர்வகுடிகள் பிறகு "தொழிலாலும், இடத்தாலும், பாஷையாலும், ஆசாரியராலும், நிறத்தாலும், விவாக பேதத்தாலும்" பலகுலத்தவர்களாகப் பிரிந்தனர்கள். இவர்களுக்குப் பிறகு குடியேறிய ஆரியர்கள் இப்பூர்வ குடிகளை "அன்னரியர்" அல்லது "(துர் + ஆரியர்) துராரியர்" என்றும் அழைத்து வந்தனர். "துராரியர்" என்பது நாளாவர்த்தியில் "துரானியர்" ஆகி, பிறகு "திராவிடர்" என மருவியது. திராவிடர்‡ இந்தியாவில் ஆரியர் பிரவேசிப்பதற்கு முன் மாட்சிமையோடு வா

* Longman's School Geography, P. 109; Hunter's Brief History of the Indian People, Ch. III, P. 41.

† Oppert's On The Original Inhabitants of India or Bharatavarsha, Ch. II, P. 42.

‡ Pope's History of India, Ch. I, P. 34; and On The Original Inhabitants of Bharatavarsha or India, Ch. I, P. 37.

ழுந்திருந்து, ஆரியர் பிரவேசித்ததும் மலைகளிலும், குகைகளிலும், காடுகளிலும் வசித்து வந்தனர்.

ஆரியர் இந்தியாவிற்கு வடவெல்லையாக வுள்ள இமயமலையில் உற்பவித்தவர்*. . ஆனால் சிலர் ஆரியர் உற்பத்தி மத்திய ஏஷியாவில் எனவும், சிலர் இந்துகுஷ் மலையில் எனவும், சிலர் காக்கஸஸ்மலையில் எனவுங் கூறுவர். அவ்விதங் கூறுதற்கு நூற்சான்றில்லை என வறிவர்†. சிந்துநதி பிரமபுத்திராநதி கங்காநதி§ இவைகளின் உபநதிகளாகிய சரஸ்வதி நதிக்கும், திருஷத்துவதி நதிக்கும் மத்திய பாகம் என மநுகூறுவதால்,¶ இப்பாகத்தையே பிரமவர்த்தம்+ எனவும், இப்பிரமபுரியிலேயே நவபிர்மாக்கள் வசித்து ஜீவராசிகளை உற்பத்தி செய்திருக்க வேண்டும் எனவும் ஊகிக்கப்படும். அதேனென்றால் மேற்கூறிய நதிகளின் உற்பத்தி ஸ்தானத்திலேயே "கைலைமலை" என்றும், "ருத்ருமலை" என்றுங்கூறும் மலைகளுள்ளன. உயர்வும், உன்னதமும், அழகும், மாட்சிமையும் பொருந்திய "கைலைமலையில்"o ஜெகதீசன் எழுந்தருளியதற்கும், பிர்ம புரியில் ஜெகஜீவ பரங்கள் தோன்றியதற்கும் இலக்காய் நிற்றலால், ஆரியர் உற்பத்திக்குக் காரணபூதமாயுள்ளது இமயமலை எனவே நாட்டப்படும். இமயமலையிலுதித்த இவ்வாரியர் தங்களுக்குத் தகுந்த பூமியை சுவாதீன மாக்கிக்கொள்ள இமயமலையை விட்டு, அணி அணியாய் வடமேற்குக் கணவாய் வழி

Ancient History of India, Vol. I, Pt. II, Ch. IV, P. 70 to 73; க்ஷத்திரியகுல விளக்கம், முகவுரை, பக்கம். 5, 6, 7.

† No record of the existing Aryan literature shows that either the Hindu-kush, or the Central Asia or the plateau of the Caucasus was their frish home". Vide, The Ancient History of India, Vol. I, Pt. II, Ch. IV, P. 67.

§ Pope's History of India, P. 23.

¶ மநுஸ்மிருதி, 2-வது அத்தியாயம், 17-வது சுலோகம்; Sinclair's History of India, Ch. I, P. 2; அபிதானகோசம், பக்கம். 32.

\+ Pope's History of India, Ch. I, P. 35.

o பெரியபுராணம், திருமலைச் சிறப்பு, 1-வது செய்யுள்; "Keylasa—The highest peak of the snow-clad Himalaya". Vide; The Mahavansa, Ch. LXXII, P. 236, In the footnote; and Pope's Histroy of India, P. 21; வியாசபாரதம், சபா பர்வம், 3-வது அத்தியாயம்.

யாக 'திராவிடர் அல்லது அன்னாரியரைத் துரத்திக்கொண்டு, சம்புத்தீவில் பிரவேசித்து இந்து நதியின் மேற்குக் கரையில் வசித்தனர்†. அதனால் இவர்கள் "இந்துக்கள்" என்னும் பெயரைப் பெற்றனர். இவர்களால் இவர்கள் வசித்த சம்புத்தீவும் "இந்தியா" •வெனப்பட்டது. இதை நோக்கியே பரசீகரும், "இந்துஸ்தானம்" என்பர். பிறகு இவ்வாரியர் சிந்து நதியைக்கடந்து, இமயமலைக்கும் விந்திய மலைக்கும் மத்தியிலுள்ள பாகத்தை ஆண்டமையால் அப்பாகம் 'ஆரியாவர்த்தா புண்ணிய பூமி' எனக்கூறிய அமர சுலோகப்படி "ஆரியவர்த்தம் (ஆரிய+அவர்த்தம்=ஆரியர்களால் நிறைந்தது) எனப்பட்டது §. ஆரியரால் துரத்தப்பட்ட "திராவிடர்" விந்தயமலைக்குத் தென்பாகத்தில் வசித்தலால் இத்தென்பாகம் "திராவிடம்" எனப்பட்டது.

இந்தியாவிற்கு வடவெல்லையாகவுள்ள இமயமலையின் சிகரங்களாகிய "குமடு, இமயம், மேரு, ருத்ரு, கைலை ¶" இவைகளை எல்லைகளாகவுடைய பிர்மபுரியில் நவபிர்மாக்கள் உதித்தனர். அவர்களில் "மரீசி, அத்திரி" என்பவர்கள் இருவராவர். அவ்விருவரில் மரீசி பிர்மாவுக்குக் காசிபரும், காசிபருக்கு சூரியனும் பிறந்து சூரிய குலத்தை விளக்கினர். இச்சூரிய குலத்துள் "சோழனும், தொண்டனும், ஈழனும்" உட்படுவர். அத்திரி பிர்மாவுக்குச் சந்திரன் பிறந்தான். இந்த சந்திரன் வம்சத்தில்o உதித்தவர்களையே சந்திரக் குலத்தவர் எனச் சொல்லப்படும். சந்திரனுக்கு புதனும், புதனுக்கு புரூரவனும்,

---

* Hunter's Brief History of Indian people, Ch. IV, P. 43, 44.

† The Manual of the Administration of the Madras Presidency, Vol. I, Ch. I, P. 1. in footnote.

§ மநுஸ்மிருதி, 2-வது அத்தியாயம், 22-வது சுலோகம்.

¶ Hugh Murry's History of British India, Ch. I, P. 20; Pope's History of India, Introduction, P. 21.

o Chandra-vansa, as the race of the Moon, the Lunar race of Kings or second great line of Kshatriya or royal dynasties in India. The progenitor of the Lunar race of kings, who reigned at Delhi or Hastinapura, was Soma the Moon, the child of the Rishi Atri and father of Budha". Vide, Professor Monier William's Sanskrit and English Dictionary, in 1872, P. 315.

புரூரவனுக்கு ஆயுவும், ஆயுவுக்கு நகுஷனும், நகுஷனுக்கு யாயதியும் உற்பவித்தனர்கள். யயாதிக்கு எது துருவசு துருகு அனு பூரு என ஐந்து புத்திரர்கள் பிறந்தனர்கள். இவர்களுள் எது வம்ஸத்தில் சந்திரகுலக் கிருஷ்ணன் முதலியோருதித்து துவாரகையை அரசாண்டும், துருகு வம்ஸத்தவர் வடமேல் நாட்டை அரசாண்டும், அனுவம்ஸத்தவர் அங்க வங்க கலிங்கநாடுகளை அரசாண்டும், பூருவம்ஸத்தில் சந்திரகுல பாண்டவர், துரியோதனுதியர் உதித்து அஸ்திஞபுரியை அரசாண்டும், துருவசுவம்ஸத்தில் பாண்டியர் உதித்து* பாண்டிய நாட்டை பரம்பரையாக அரசாண்டும் வந்தனர்.

கூர்ம புராணம், சந்திரன் வம்ஸமுறைத்த
வத்தியாயம், 12-வது செய்யுள்.

தென்னந் திக்கினிற் றென்னனு கெனத் துருவசுவா
மன்னர் மன்னனை மணிமுடி புனைந்து தென் கிழக்கிற்
பொன்ன வாங்கழ லெதுவினைப் புரத்தி யென் றளித்து
பன்னு மேற்றிசை யளிக்கெனத் துருகுவைப் பணித்தான்.

இலிங்க புராணம், சந்திரன் வங்கிச முறைத்த
வத்தியாயம், 10-வது செய்யுள்.

போற்றுந் தென்கிழ்பாற் றென்னனுகப் போற் வேற் துருவசுவை
மாற்றிப் பசும்பொன் மணிமவுலி புனைந்து வடமேல்பாற் றிசையிற்
கூற்று முட்குங் கொலைபுரியுங் குருதிவடிவேற் றுருகுவைத்தேன்
றாற்று மணிநாண் மலர்மாலைச் சுடர்செய் மவுலி சூட்டினுன்

இச்செய்யுள்களில் துருவசுவை தென்தேசத்திற்கு அரசனுக நியமிக்கப் பட்டு, "தென்னவன்" என்னும் பெயரை அளித்ததாகக் கூறியிருக்கின்றன. பாண்டியன் துருவசுபரம் பரையில் உதித்தவனுதலால் துருவசுவுக்குக் கொடுக்கப்பட்ட "தென்னவன்" என்னும் பெயரை பாண்டியனுக்குத் தேடிக் கொடுக்கப்பட்டது.

பாண்டியன் பெயர்.
திவாகரம்.

செழியன் தமிழ்நாடன் கூடற்கோ தென்னவன்
வழுதி மீனவன் பஞ்சவன் மாறன்

* Taylor's Oriental Historical Manuscripts, Vol. I, Ch. II, P. 120, 135; Ch. IV, P. 238; வியாசபாரதம், ஆதிபர்வம், 63-வது அத்தியாயம்

கௌரியன் வேம்பின் கண்ணிக்கோ கைதவன்
பொதியப் பொருப்பன் புனல்வையைத் துறைவன்
குமரிச்சேர்ப்பன் கோப்பாண் டியனே''

சூடாமணி நிகண்டு.

செழியனே கூடற் கோமான் றென்னவன் வேம்பின் றாரோன்
வழுதியே குமரிச் சேர்ப்பன் வைகையந் துறைவன் மாறன்
விழைவுறு பொதிய வெற்பன் மீனவன் கைதவன் சொற்
பழைய பஞ்சவனே வெய்ய கௌரியன் பாண்டியன் பேர்''

சிலப்பதிகாரம், காடுகாண்காதை,
21-22-வது வரிகள்.

"வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி".

தென்னவன் = பாண்டியன் (சதுரகராதி, பேரகராதி)
= A titular name of the Pandiyan dynasty of Madura. (Winslow)
= The same as பாண்டியன். A titular name of a race of King in the south, at Madura. (Rottler)

என்னுந் திவாகர நிகண்டகராதிகளால் துருவசுவுக்குக் கொடுக்கப்பட்ட தென்னவன் என்னும் பெயரை அவன் வம்ஸத்திலுதித்த பாண்டியனும் குலப்பெயராகப் பெற்றுவந்தான் என விளங்குகின்றன. இதோடு துருவசு சந்திரக் குலந்தவனுதலால் அவன் வம்ஸத்தில் உதித்த பாண்டியனும் சந்திரக் குலத்தவனே யாவன்.

நைடதம், போர்புரிப் படலம்,
6-வது செய்யுள்.

என்றலுங் கடவுட் டிங்க ளிருங்குல மிழித்துக் கூற
நன்றுநன் றென்ன நக்கு நாயவேல் வழுதி சீறி
உன்றலை துணிப்ப னென்று வொளிருவா ளுறையி னீக்கிக்
குன்றெரி வைர வொள்வாள் குரிசின்மேற் கனன்று சென்றான்.

சிலப்பதிகாரம், காடுகாண்காதை,
23,24,25-வது வரிகள்.

''திங்கட் செல்வன் றிருக்குலம் விளங்கச்

செங்க ணாயிரத் தோன்றிறல் விளங்காரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி"
சிலப்பதிகாரம், அந்திமாலைச் சிறப்புச் செய்காதை,
21-வது வரி.

"இனைய ராயினும் பகையரசு கடியுஞ்
செருமாண் டென்னர் குலமுத லாகலி
னந்தி வானத்து வெண்பிறை தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்பெறிந் தோட்டிப்"

இவைகளில் வரும் "திங்கள்குலம்" என்பது சந்திரனை விளக்கி, அச்சந்திரன் குலத்திலுதித்த பாண்டியனையுந் தெரிவித்தது.

"The son of Chandren is Buthan. Buthan had a son named Pururava-Chakravarti; and he had a son named Ayu. This Ayu had a son, named Naeuzhen. By the favour of Siva, this Nacuzhen received a son, named Yayathi. By Deviyani, the daughter of Sucren, Yayathi had the two following sons, Yathu and Duruvasu. By Sarmishti, the daughter of Vidaparuven, a king of Asuras, Yayathi had the following three sons, Turuven, Annu, Puru. Among these five sons, duruvasu's offspring, was the first Pandion. The place of his reigning was Manalur. Among those of this race, one, named Kulasegara Pandion, by the favour of siva, cut down a forest of cadambu trees, and built a town called Madura, where he reigned." Vide. Taylor's Oriental Historical Manuscripts; Vol. I, P. 120.*

"சந்திரனுக்குப் புதனும், புதனுக்குப் புரூரவனும், புரூரவனுக்கு ஆயுவும், ஆயுவுக்கு நகுஷனும், நகுஷனுக்கு யயாதியும் உதித்தனர்கள். யயாதி தெய்வயானையைக்கூடி எது துருவசு என்னும் புத்திரர்களையும், சன்மிஷ்டையைக் கூடி த்ருரு அனு பூரு என்னும் புத்திரர்களையும் பெற்றனன். இப்புத்திரர்களுள் துருவசுவம்ஸத்தில் பாண்டியன் உதித்தான். அவன் ஆண்ட இடம் மணலூர் அல்லது மணி

* Taylor's Oriental Historical Manuscripts, Vol. I, Ch. II, P. 11, 119; Gazetteer of Mysore, Vol. I, P. 208, 209.

பூரகமாகும். துருவசு வம்ஸத்தில் குலசேகர பாண்டியன் உதித்து சிவபிரானது கிருபையால், கடம்பவனத்தை அழித்து மதுரைப் பட்டணத்தை உண்டாக்கி அரசாண்டான்". எனவுங் கூறப்பட் டிருக்கின்றது.

இப்பகுதிகளால் சந்திரகுல யயாதியின் இரண்டாங் குமாரனும், ஏது சகோதரனுமாகிய துருவசுவை யயாதியால் தென்தேசத்திற்கு அரசனாக நியமிக்கப்பட்டு, தென்னவன் என்னும் பெயரை அளிக்கப் பட்ட.தெனவும், அவன் வம்ஸத்திலேயே பாண்டியர்கள் உதித்து பாண்டிய நாட்டை பரம்பரையாக ஆண்டு வந்தார்கள் எனவும், பாண்டிய குலத்தவர்களே நாடார்கள் எனப்படுவர் எனவும் மேலே எண்பித் திருத்தலாலும், இவர்களை சந்திர குலத்தவர் என விளக்க பாண்டிய நாடாகிய திருநெல்வேலி மதுரை திருவாங்கூர் முதலிய ஜில்லாக்களிலும், சேரனாடாகிய கோயம்புத்தூர் சேலம் முதலிய ஜில்லாக்களிலும் பரம்பரையாக வசித்து வருதலே போதுமான சாட்சியாக விருப்பதாலும், நாடார்கள் சந்திரகுல பாண்டிய வம்ஸத்தவர்கள் எனப்படுவர்.

சந்திரகுல துருவசுவுக்கு* 114-வது பரம்பரையில் வந்த பராக்கிரம பாண்டியனைச் சாலிவாகன சகாப்தம், 1246-ம் வருடத்திற்கு மேல் செல்லாநின்ற, ருதிரோற்காரி வருஷம், ஆனிமாதம் டெல்லியிலிருந்து வந்த ஆதி சுல்தான் மலுக்குநேமி என்னும், மகமதியனால் ஜெயிக்கப்பட்டு, சிறைசெய்துக் கொண்டு போகப்பட்டது. அதன் பின் துலுக்கர் 48-வருடம் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தனர்கள். சாலி 1293-ம் வருடத்திற்கு மேற்செல்லாநின்ற விரோதிகிருது வருடம் மைசூர் ராஜனின் தளகர்த்தனாகிய கம்பண்ண உடையான் பாண்டிய நாட்டை ஆளும் துலுக்கனை வெட்டித் துரத்திப் போட்டு, சிம்மாசனத்திற்கு வரக்கூடிய சோமசேகர பாண்டியனுக்குப் பட்டங் கட்டி வைத்தான். இப்பாண்டியனிலிருந்து 15-தலைமுறைகளாக அரசாட்சி செய்து, கடைசி பாண்டியனாகிய சந்திரசேகர பாண்டியனை வீரசேகர சோழன் சாலி 1461-ம் வருடம் செயித்து, பாண்டிய நாட்டைக் கைக்கொண்டான். சந்திர சேகரன் விஜயநகரம் கிருஷ்ண

* The Oriental Historical Manuscripts, Vol. I, P. 13 to 30; 195 to 206; and The Manual of The Administration of The Madras Presidency, Vol. I, P. 123.

ராயரிடம்* முறையிட்டு உதவிவேண்ட அவர் தன் தளகர்த்தனாகிய நாகப்பனாய்க்கனை அனுப்பி சோழனை ஜெயித்து மதுரையை சந்திர சேகர பாண்டியனிடம் ஒப்புவித்து வரும்படி உத்தரவு அளிந்தார். நாகம நாய்க்கன் அக்கட்டளையை சிரமேற் கொண்டு சோழராஜனை ஜெயித்து, பாண்டியனிடம் ஒப்புவிக்காது அரசைத்தானே ஆண்டு வந்தான்.† இதைக் கேள்வியுற்று கிருஷ்ணராயர் கோபங்கொண்டு, நாகப்ப நாய்க்கனைப் பிடித்துக்கொண்டு வரும்படி அவன் குமாரனாகிய விஸ்வனாத நாய்க்கனை அனுப்ப, அவன் தகப்பனென்றும் பாராது பிடித்துக்கொண்டு வந்தமையால் கிருஷ்ணராயர் சந்தோஷித்து, சந்திரசேகர பாண்டியனுக்குப் பிறகு மதுரையை உனக்கு பட்டங் கட்டி வைக்கின்றேன் என்று உறுதி மொழியளித்தனர்.§

சந்திரசேகர பாண்டியன் சாலி 1481-ம் (1559. A. D.)வருடத்தில் இறந்து விட்டான். இவனோடு பாண்டியராஜாக்களுக்கு அரசு ஒழிந்தது. இவன் இறந்ததை யறிந்த கிருஷ்ணராயர் விஸ்வனாத நாய்க்கனை அழைப்பித்து சந்திரசேகரபாண்டியன் இறந்துபோனதினால் நீபோய் அந்தப் பாண்டியநாட்டை ஆளென உத்தரவு அளித்தார். அவ்வுத்தரவை வடுகுகுலத்தவனாகிய விஸ்வநாத நாய்க்கன் மேற்கொண்டு மதுரைக்குச் சென்று சாலி 1481-க்குச் செல்லா நின்ற ரவுத்திரி வருடம் மார்கழி மாதம் 11-தேதிய தினம் சிம்மாசனாதிபதியானான்.¶ இவனிலிருந்து 15-வடுகு அரசர்கள் வரிசைக்கிரமமாக அரசாண்டு கடைசி வடுகு அரசனாகிய வங்காரு திருமலை நாய்க்கனால் 1736-ம் வருடம் வரைக்கும் மதுரை ஆளப்பட்டு, பிறகு மகமதியர் இம்சைக்குட்பட்டு, கடைசியில் அங்கிலேயர் இடம் ஒப்புவிக்கப்பட்டது.

---

* கிருஷ்ணராயர் வம்ஸம், Bellary Gazetteer, Ch. II, P. 31 to 37.

† Oriental Historical Manuscripts, Vol. II, P. 9, 11, 13, 88.

§ The Tanjore Maharatta Principality, Ch. II, P. 42; and Oriental Historical Manuscripts. Vol. II, P. 9 to 109.

¶ Visvanatha was the first of the Naicka rulers of Madura (A. D. 1559 to 1563). He tooke the country from his father Nagama, who was the successful general of the Vijayanagar king, had already subdued it. And himself proceeded to administer it with credit to himself and advantage to the country". Vide, Pandion Coins, P. 143;

நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி.

———:o:———

முடிவுரை.

———

தமிழ்நாட்டையாண்ட தமிழ் அரசர்களாகிய சேரசோழ பாண்டிய தொண்ட ஈழ ராஜாக்களுக்குப் பிந்தி ஆண்டுவந்த "குறும்பர், வடுகர், துலுக்கர், மராட்டியர்" வகையரா அரசாங்கத்தில், மேற்கூறிய தமிழ் அரசர்களில் **சந்திரகுலப் பாண்டிய வம்ஸத்தில் வந்த நாடார்கள்** தங்கள் குலத்திற்குரிய ஆதிக்கத்தை முற்றிலும் இழக்க நேர்ந்தது.

இலிங்க புராணம்,

கலியுகத்தியற்கை சொன்ன வத்தியாயம்,

1-வது செய்யுள்.

கடையுகத்திற் றருமநிலே வேர்சாயப்
பொய்மை கொடுங் களவு வஞ்ச
மடுகொலேமற் றிவைமுதல பாவங்க
டழைத்திடலா லனிகள் பாட
மடலவிழுங் கமலத்தார் மறையவர்வார்
கழல்வேந்தர் வணிகர் தொல்லே
யொடிவின்மறை நவில்கலா ரொழுகாத
நெறியதனி லொழுகு வாரே.

(இ-ள்) நான்கு யுகத்தின் கடையுகமாகிய கலியுகத்தில் தர்மமானது அழிந்து பொய் களவு வஞ்சனை கொலை முதலாகிய பாவங்கள் விசேஷப் படலால், பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்னும் மூன்று வர்க்கத்தவர்களும் வேதத்திற் கூறிய பழமையாகிய குலாசாரங்களை விட்டு ஒழுகுவார்கள்" எனவும்;

The earth, said, "O incarnation of justice ! I also cannot remain in this age, because men of the Soodru Caste, having become Rajas, will inflict very many acts of injustice on me, the weight of which I shall not be able to endure." Vide. The Prem Sagur, Ch. I, P. 6.

"பூமிதேவி (பரிட்சித்து மகாராஜனைப் பார்த்து) சொன்னதாவது:—ஓ நீதியே! ஒரு உருவமாயுடையவனே! நானும் இந்தக் கலியுகத்தில் வசியேன். சூத்திரர்கள் அரசராகி அநீதியை அனுசரிப்பார்கள். அது என்னால் தாங்கமுடியாது." எனவும் பாகவதத்தில் கூறியிருப்பதாக, அதன் டிரான்ஸ்லேடர் தெரிவித் திருக்கின்றார். ஆகிய இந்தப் பகுதிகளுக்கிணங்க கலியுக தர்மத்தால் சந்திரகுல நாடார்களும் வடுகராலும், யவனராலும் பிடிக்கப்பட்டு அரசிழந்தனர்

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னாவா மன்னர்க் கொளி. (திருக்குறள்.)

(இ-ள்) "அரசர்க்கு செங்கோன்மையே புகழாம். அஃதில்லாவிடில் அந்தப்புகழுண்டாவாம்" என்பதையொத்து, இந்தப் பாண்டிய குல நாடார்கள் அடையவேண்டிய புகழ்களெல்லாம் வடுகராலும் துலுக்கராலும் ஒடுங்கினமையால், இந்த நாடாள்வார்களது அறிவும், அழகும், அந்தஸ்தும், ஆசாரமும் அதாவது "கர்மாவோடு தர்மாவும்" நாளாவர்த்தியில் இவர்களை விட்டு விலகநேரிட்டன.

சங்கலிகித ஸ்மிருதி, 2-வது சுலோகம்;

വൈശ്വദേവേന യേ ഹീനാ ആതിഥ്യേന വിവർജിതാഃ ।
സർവേ തേ വൃഷലാ ജ്ഞേയാഃ പ്രാപ്തവേദാ അപി ദ്വിജാഃ ॥

"வைஸ்வ தேவே நயே ஹீநா ஆதித்யே நவி வர்ஜிதா:
ஸர்வேதே வ்ருஷலா ஜ்ஞெயா: வ்ராப்த வேதாத் வித்விஜா:,

(இ-ள்) பிராமணர்கள் வேத மோதினவர்களாக இருந்தாலும் அவர்களுக்குள் எவர்கள் வைச்வதேவமும், அதிதிபூஜையும் செய்யாதவர்களோ அவர்கள் எல்லோரும் சூத்திரர்கள் என்று அறியத் தக்கவர்கள்" எனவும்;

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். (திருக்குறள்.)

(இ-ள்) "பார்ப்பான் வேதத்தைமறந்தாலுங் கற்கலாம், குல ஒழுக்கங்கள் குறைந்தால் இழிகுலத்தவ னாவான்" எனவுங் கூறியவைகளுக் கிணங்க, இந்த அரச குலத்தவர்களாகிய நாடார்கள் அடையவேண்டிய குல ஒழுக்கங்களோடு கல்வி, ஆள்வினை, பொருள், தவம், என்னும் நான்கும் குலமேன்மைக் குறியன வாயினும் இராஜாங்க மாறுதல் அடைந்த காலத்தில் இருந்து, இந்த சந்திரகுல

காடார்களைவிட்டு ஒன்றன்பின் ஒன்றாக அகன்றமையால் இவர்கள் தாழ்ந்த குலத்தவர்களைப்போல் தோற்றப் படுகின்றனர்.

மகாபாரதம், ஆரணிய பருவம்,

மார்க்கண்டேயர் கதையுரைத்த சருக்கம்,

153-வது செய்யுள்.

உண்டிவிற்பர் மறையோர் மறைவிற்ப
ரோதுகற் புடைமை நீதிவிடுத்தே
கொண்டலொத்த குழன்மங்கையர் வேறோர்
கொழுநனுக்கு முலைவிற்பர் குலஞ்சேர்
தெண்டிரைக் கதிபராகிய மன்னர்
தேசமெங்கு முழல்வர் நிலைகெட்டே
மிண்டுரைத்த குலஹீனர்கள் போரில்
வெற்றிகொண்டு விசயம் புனைவாரே".

(இ-ள்) "வேதியர் வேதத்தையும், தின்பண்டங்களையும் விற்பார்; பெண்கள் பரபுருஷரை இச்சிப்பர்; அரசர்கள் தங்களது நிலை கெட்டு உழல்வர், ஈனர்கள் வெற்றியை அடைவர்" எனவும்;

ஷை சருக்கம், 145-வது செய்யுள்.

"வேதமோத நியமஞ் செபமோமம்
வேதவித்தகர் விடுப்பர் பின்னோர்
காதலாலிவை செலுத்துவர் மன்னர்
கவினுந்தேசு மொழுக்கங் களுமற்றே
யேதிலாரென வியங்குவர் நன்னீ
ரின்பனல்கு பலபண்ட மனைத்தும்
போதனல்லுரிசை பொய்க்கு மரங்கள்
பூத்தல்காய்த்தல் சிறிதே பலனுமே".

(இ-ள்) "வேதம்ஓதல், நியமம், ஜெபம், ஓமம் இவைகளை வேதியர் விடுப்பர். சூத்திரர்கள் இவைகளை அன்போடு செய்வர். அரசர்கள் தங்களது அழகும், தேசசும், குலாசாரங்களும் அற்று யாரோ எவர்களோ எனக் கூறவிளங்குவர். தின்பண்டங்கள் ருசியற்றும், மரங்களின் பலன்கள் குறைந்தும் விளங்கும்" எனவும்;

"சாமம் யஜசு ருக்கு இந்த வேதங்களினுடைய பலனை அடைவதற்குக் காரணமாகிய வருணாசிரம ஒழுக்கங்களை உடைய நடை

கலியுகத்தில் மனிதருக்குள் இல்லாமல் ஒழியும்" என விஷ்ணு புராணத்திலுங் கூறியிருக்கின்றது. இப்பகுதிகளில் ஒருகுலம் உயர்தலுக்கும் தாழ்தலுக்கும் குல ஒழுக்கமே காரணம் என விளக்கியிருக்கின்றது. இவைகளுக்கிணங்க இவ்வரசகுல நாடார்கள் தங்களுக்குரிய குலவொழுக்கங்களை இகலரசர்களின் இடுக்கணால் இழந்தமையின் இழிதலுற்றனர்.

"It is customary with the Kavaries as with other Naikans to wear the sacred thread. But I am informed the descendants of the Naikan Kings, who are now living at Vellie Kuriechi* do not conform to this usage on the ground that they are at present in a state of impurity and to degardation, and consquently ought not to wear the sacred emblem." Vide. Nelson's Madura District Manual, Part. II, P. 86.

"வடுகு அரசர் பூணூல் தரிப்பது வழக்கம். ஆனால் வெள்ளிக் குரிச்சியில் வாசஞ்செய்யும் வடுகு அரச வம்ஸத்தவர் தங்கள் அரசாட்சியை இழந்துவிட்ட காரணத்தால் இராஜகுல மகிமை யற்றோராய் ஈனப்பட்டுப் போனதிநிமித்தம் இக்காலத்தில் பூணூல் தரியாது வருகின்றார் என்று அறிந்துக்கொள்ள லாயினேன்" என்றார் நெல்சன்துரை அவர்கள், தாமியற்றிய மதுரை சரித்திரத்தில். வடுகு குலப் பார்ப்பாரும், வடுகுகுலச் செட்டிகளும் பூணூல் தரித்துவர, வடுகுகுல அரசர்கள் மாத்திரம் பகைஞரது துன்பமேற்று குலாச்சாரங்களை விட்டொழுக நேரிட்டது. இதைப்போல் அரசகுல நாடார்களும் தங்களுக்குரிய குலாசாரங்களை† விட்டொழுகி வந்தனர்.

பகவத்கீதை, 1-வது அத்தியாயம்,
40-வது சுலோகம்.

𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑍇𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌃𑌸𑌨𑌾𑌤𑌨𑌾𑌃 ।
𑌧𑌰𑍍𑌮𑍇𑌨𑌷𑍍𑌟𑍇𑌕𑍁𑌲𑌂𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌭𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑍁𑌤 ॥

"குலக்ஷயே ப்ரணஸ்யந்தி குலதர்மாஸ் ஸநாதநா:
தர்மேநஷ்டே குலம்க்ருத்ஸ்ந மதர்மோபி பவத்யுத:||

---

* Oriental Historical Manuscripts. Vol. II, P. 47, 49.

† குலாச்சாரம்—வருணாசாரம், சாதியொழுக்கம், The custom, decorum, or usage, of each class (Rottler).

(இ-ள்) "குலக்ஷயே=குல நாசமானது, ஸதி=உண்டாகுங் கால், ஸநாதநா=அநாதியாயிருக்கிற, குலதர்ம:=குலாசாரங்கள், ப்ரணஸ்யந்து=முற்றிலும் நாசமடையும், தர்மேநஷ்டே=ஆசாரம் நசித்தால், க்ருத்ஸ்நம்குலம்=குலம்முழுமையும், அதர்ம:=அனு சாரமானது, அபிபவதி=வியாபிக்கும்"* எனவுங் கூறியதற்கிணங்க, நாடார்கள் தங்களது குலாசாரங்களைவிட்டு ஒழுகி வந்தமையால் சூத்திரர்களைப்போல் காணப்படுகின்றனர்.

மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம்,
43-வது சுலோகம்.

𑌶𑌨𑌕𑍈𑌸𑍍𑌤𑍁 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌲𑍋𑌪𑌾𑌦𑌿𑌮𑌾𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌜𑌾𑌤𑌯𑌃 ।
𑌵𑍃𑌷𑌲𑌤𑍍𑌵𑌂 𑌗𑌤𑌾 𑌲𑍋𑌕𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌚 ॥

"ஸநகைஸ்து க்ரியாலோபா திமா: க்ஷத்ரிய ஜாதய:
வ்ருஷலத்வம் கதாலோகே ப்ராஹ்மணு தர்ஸநேநசா||"

(இ-ள்) பிராமணனிடத்தில் வணங்காமையாலும், உபநயன முதலிய கர்மலோபத்தாலும் அரசசாதி இவ்வுலகைத்தில் வரவர சூத்திரத்தன்மையை அடைந்தனர்" எனக் கூறியிருக்கின்றது. அப்படி குலாசாரத்தை விட்டு சூத்திரத்தன்மையை யடைந்தவர்களில் திராவிட தேசத்தை யாண்ட சந்திரகுல பாண்டிய வம்ஸத்தவர்களும் உட்படுவர்.

மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம்,
44-வது சுலோகம்.

𑌪𑍌𑌣𑍍𑌡𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌚𑍌𑌡𑍍𑌰𑌦𑍍𑌰𑌵𑌿𑌡𑌾𑌃 𑌕𑌾𑌮𑍍𑌬𑍋𑌜𑌾 𑌯𑌵𑌨𑌾𑌃 𑌶𑌕𑌾𑌃 ।
𑌪𑌾𑌰𑌦𑌾𑌪𑌹𑍍𑌲𑌵𑌾𑌶𑍍𑌚𑍀𑌨𑌾𑌃 𑌕𑌿𑌰𑌾𑌤𑌾 𑌦𑌰𑌦𑌾𑌃 𑌖𑌶𑌾𑌃 ॥

"பௌண்ட்ர காஸ்சௌட்ர த்ரவிடா: காம்போஜா யவநாஸ்ஸகா:
பாரதா பஹ்லபஸ் சீநா: கிராதா தரதா: கஸா:||

(இ-ள்) "பௌண்டரம், ஒட்டரம், திராவிடம்,§ போஜம், பாரதம் முதலிய தேசங்களை ஆண்ட அரசர்கள் அனைவரும் மேற் சொன்னபடி சூத்திரர்களாய் விட்டார்கள்." எனக் கூறியிருக்கின்றது. இப்பகுதியில் திராவிட தேசத்தையாண்ட சூரிய சந்திர குலத்தி

* வால்மீகிராமாயணம், ஆரணியகாண்டம், 33-வது சருக்கம்.

§ வியாச பாரதம், சபாபர்வம், 96-வது அத்தியாயம்.

லுதித்த சோழன்வம்ஸத்தவர்களும், தொண்டன்வம்ஸத்தவர்களும், ஈழன்வம்ஸத்தவர்களும், சேரன்வம்ஸத்தவர்களும், பாண்டியன் வம்ஸத்தவர்களும் சூத்திர வம்ஸத்தவர்களைப்போல் மாறியிருப்பதாகக் கூறியிருக்கின்றது.

"In the Kalee-yooga, the Vaisyas like the Kshatriyas are said to have fallen to a level with the Soodras." Vide. Ward's Account of the Hindoos, Vol. III, P. 66.

"கலியுகத்தில் வைசியர்கள் க்ஷத்திரியர்களைப்போல் சூத்திரர்களை ஒத்திருக்கின்றார்கள்" எனக் கூறி, மநுவின் அபிப்பிராயத்தை ஒத்து வருகின்றார். "மன்னர் கலினுந் தேசு மொழுக்கங்களு மற்றேயேதிலாரென விளங்குவர்" எனவும், "தேண்டிரைக் கதிபராகிய மன்னர் தேசமெங்கு முழல்வர் நிலைகெட்டு" எனவும் மேலே பாரதப் பகுதியிற் கூறியதும் இவ்வழக்கை யொட்டியே யென்க.

யாஞ்ஞுவல்கியர் "ஆபத்துக்காலத்தில் உயர்ந்த சாதியான் தாழ்ந்த சாதியான் தொழிலைப்புரிதல் இயற்கையே. அந்த ஆபத்து ஒழிந்தபின்பு தான் கையாண்டுவந்த தாழ்ந்ததொழிலை யொழித்துவிட்டு தங்குல முறைப்போலத் தத்தந்தொழிலில் முயலவேண்டுவதே வழக்கு. அவ்வாறின்றி, ஆபத்தொழிந்த பின்பும் அந்தத்தாழ்ந்த தொழிலை விடாவிட்டால் அவன்மகன் பேரன் முதலிய பரம்பரையாரும் அந்த அந்நியத் தொழிலை விடமாட்டார்கள். ஐந்தாறு தலைமுறையிற் பிறந்த சாதியார்கள் அந்த தொழிலுக்குத் தக்க சாதியோடு ஒத்த சாதியாகும்" எனக் கூறியிருக்கின்றார். இவ்வசனத்தை பராசரஸ்மிருதி, ஆசாரகாண்டத்தில் மாதவாசாரியார் உதகரித்திருக்கின்றார்.

ஞானப்பிரகாச சுவாமிகள் இயற்றிய சாதிநூல்,
சாதித்தாழ்வு முறை 2-வது செய்யுள்.

வெட்டிவே லரசன் றன்கீழ் மேவிய சாதித் தன்மை
யொட்டியே தனது செய்கை யொழிந்ததிவ் வழுந்திற் செய்கை
தட்டியே யஞ்சாறுன தலைமுறை தன்னி னேரே
செட்டியு மாகி வேளான் செய்கையு மாவ ரன்றே.

4-வது செய்யுள்.

இடருறு போதில்யாரு மிருங்குலத் தருமநீத்தே
விடருறு தொழிலுஞ் செய்வர் விளைந்தவவ் விடர்தாநீங்கில்

தொடருறு தமது சாதித் தொழிலலைப் படாது பின்னு
மடர்வுறப் புரிவ ராகி லவர்குலத் தலைவு றுரே''.

இவ்விரு செய்யுள்களும் மேலேகூறிய யாஞ்சவல்கியர் கருத்து களை யொட்டியவைகள். இவைகளில் கூறியவாறு அரசகுலத்தவர்களாகிய நாடார்கள் வடுகு அரசர்களால் தங்கள் சாதிக்குரிய கர்மங்களைவிட்டு, தாழ்ந்தோர் தொழிலைத்தொட்டு, வாழ்ந்துவருவதால், அந்நாடார்களை அரசர்கள் எனக்கூற அச்சமுறுகின்றனர். அப்படி அச்சமுறுதல் அறியாமை யென்க-

In Wilks' History of Mysore, Vol. I, P. 231. We read thus:—"These ceremonies are reserved for the three higher castes only; and of these, the second is entirely extinct." again in P. 179. "The second pure caste (Kshatriya Caste) has become extinct."*

"இந்தக் கிரியைகள் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்னும் இந்த முக்குலத்தவர்களுக்கே ஏற்படுத்தப்பட்டன. இவர்களுள் இரண்டாவது அதாவது க்ஷத்திரிய சாதி முற்றும் அழிந்து விட்டது." என வில்க்ஸ்துரை அவர்கள் கூறியிருக்கின்றார்.

" Darker days then followed on the loss of Independence, Kshatriyas and Vaisyas were equally prostrated. The bold myth was then proclaimed that all who were not Brahmans were Sudras".† Vide. "Ancient India" by Romesh Chunder Dutt, Book V, Ch. XV

" ஆரியவரசர்கள் தங்களது சுதந்தரத்தை இழந்ததும் தாழ்வை யடைந்தார்கள். அதனால் பிராமணர்கள் அல்லாதவர்களெல்லாம் சூத்திரர்கள் எனத் தைரியமாகச் சொல்லப்பட்டது". என ரோமஷ்சந்ர டற்று தாமியற்றிய பூர்வ இந்தியா என்னும் புத்தகத்தில் கூறியுள்ளார். இகலரசர்களுக்கு முன் ஆரிய அரசர்கள் தங்களது சுதந்தரத்தை யிழந்து தாழ்த்தப் பட்டார்கள். அப்படி தாழ்த்தப் பட்டமையால் ஆரிய அரசர்கள் அருகிவிட்டார்கள் என்னும் பொய்யை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இத்திராவிட தேசத்தில் நான்கு வகுப்பான குலத்துள் தமிழ்ப்பார்ப்பா

* Essay on Hindu Caste, Ch. I, P. 5.

† Talbays Wheeler's History of India Ch. II.

ரும், தமிழ்ச்செட்டிகளும், தமிழ்ச்சூத்திரரும் ஆகிய மூன்றுவகுப்பிருக்க, மற்ற ஒரு வகுப்பினராகிய அரசர்கள் மாத்திரம் என்னுயினர்கள். அவர்கள் அரசிலாது பிறதொழிலைப் புரியினும், அரசகுல அபிதானத்தையடைந்தே யிருப்பார். அத்தகையோரை அரசகுலத்தவர் எனக் கூறலே அறிவுடையோருக் கழகு. இகலரசர்கள் இராஜ்யத்தையும், குலத்தொழிலையுந்தான் பலவந்தத்தோடு பிடுங்கிக் கொள்ளுவார்களேயன்றி, அவர்களது சாதிப்பெயரையும் பிடுங்கிக் கொள்ளுதற்கு அவர்களால் ஏலாது.

"Those of the invading force who escaped slaughter were carried away into captivity, and being in turns unsuccessfully employed first as cultivators, then as wood-cutters and again as grass-cutters to the royal elephants, the ultimately elected to be braziers, and braziers they are still." Vide, W. W. Hunter's Imperial Gazetteer of India, Vol. I, P. 358.

"சண்டையில் வெல்லப்பட்டு கொலைக்குத் தப்பித்துக்கொண்ட அரசர்களை சிறையாக்கப்பட்டு. அவர்களை பயிரிடும் படியாகவும், கட்டை வெட்டும்படியாகவும், யானைக்குப் புல்லறுக்கும் படியாகவும் வற்புறுத்தினார்கள். கடைசியாக அவர்கள் கன்னாரத்தொழிலைக் கையாண்டுவந்தார்கள். அவர்கள் இப்பொழுதும் கன்னாராக விருக்கின்றார்கள்" என அண்டர்துரை அவர்கள் கூறியிருக்கின்றார். இப்பகுதியிற் கூறிய யுத்தத்தொழிலர் கன்னாரத்தொழிலைச் செய்யினும் கன்னார சாதிக்குரிய சாதிப்பெயர்களைப் பெறாமல் தங்களுக்குரிய அரசசாதிப் பெயர்களையே பெற்று நாளதும் விளங்கலைப்போல், நாடார்களும் அரசசாதிப் பெயர்களையே பெற்றுவருதலால் அவர்களே இத்தென்தேசத்து அரசராவர்.

அநேக வருடகாலமாகத் தமிழ்நாடுகளில் இடையறாது நிலைபெற்றிருந்த அரசகுலத்தவர்கள் கட்டோடே ஒழிந்து அருகிப்போய்விட்டார்கள் என்று சொல்லத்துணிவது புத்திக்கும், நியாயத்திற்கும் இயற்கைக்கும் ஒருவிதத்திலும் பொருந்தாத காரியம். சுமார் 1540-A. D. வருடம்போல் சோழ பாண்டிய வம்ஸத்தவர்கள் நாடிழந்தனர்கள் என்றும், அதுக்கப்புறம் தெலுங்கர்கள் 200-வருடமும், துலுக்கர்கள் 70-வருடமும்; அங்கிலேயர்கள் 120-வருட

மும் ஆண்டிருக்க, ஒரு நானூறு வருடத்திற்கு முந்தி அரசாண்ட அரசர்கள் கட்டோடு அழிந்துவிட்டார்கள் என்றால் நம்பப்படத் தக்கதன்று. க்ஷத்திரிய வதஞ்செய்த பார்ப்பனக் குலத்தவனாகிய சமதக்கினி முனியின் குமாரனாகிய பரசுராமன்* தன்தாயிக்குச் சூரிய குல கார்த்தவீரியார்ச்சுனனால் நேரிட்டக் கொலைக்குப் பிரதிபழி வாங்குப்படி சூரியகுல அரசரையெல்லாம் நாசஞ்செய்து வரும்போது, அரசரில் அநேகர் தங்கள் உயிர்தப்பும்படி தங்கள் க்ஷத்திரியகுலக் கருமங்களைவிட்டு, அந்நியராகப் பாவிக்க எப்படித்தொழில் தவறி ஒளித்தனர்களோ, அப்படியே இந்த பாண்டியகுல நாடார்களும் பிற அரசர்களது இடுக்கணால் குலாசாரங்களோடு முன்வர வேதுவில்லாமல் போய்விட்டமையால் அவ்விதங் கூறினார்கள்போலும்.

"In spite of the abilities they exhibit when suitably employed, and in spite of the reputation of their ancestors which has survived to this day, the descendants of the ancient rulers of the land have now lost nearly everything and are reduced to the most abject condition". Vide, On the Original Inhabitants of India or Bharatavarsha, Ch. IV, P. 75.

"பூர்வீக அரசர்கள் அவ்வளவு கீர்த்தியுள்ளவர்களா யிருந்த போதிலும், அவர்கள் வம்ஸத்தில் வந்தவர்கள் தற்காலம் அவர்களுக் குரிய யெல்லாஅங்கங்களுந் தோற்கப்பட்டு தாழ்த்தப்பட் டிருக் கின்றார்கள்." என ஆபர்ட்துரை அவர்கள் கூறியிருக்கின்றார். இதற் கிணங்க இந்த பாண்டியகுல நாடார்கள் தாழ்வுபட்டனர்.

Bishop Caldwell says, in his Comparative Grammar, "In a civilized age, the conquerors may be content with governing and taxing the conquered; but in a ruder age, and especially in a tropical climate, where labour is distasteful, the vanquished are ordinarily reduced to the condition of slaves".

* இப்போது உலகத்தில் க்ஷத்திரியர்களென்று வழங்கப் படுபவரனை வரும் ஜமதக்னியின் புத்திரனான பரசுராமனாற் கொல்லாமல் விடப் பட்ட க்ஷத்திரியர்களின் சந்ததிகளா யிருக்கிறார்கள்" என வியாச பாரதம், 14-வது அத்தியாயம், மந்திரபர்வத்தில் கூறியுள்ளது.

"இந்நாகரீக காலத்தில் வென்றோன் வெல்லப்பட்டவனிட மிருந்து வரும் வரியாலும், ஆளுதலாலும் திர்ப்தியடைவார்கள் ஆனால் அநாகரீககாலத்தில் அதாவது மகமதியர்காலத்தில், சாதாரணமாக உஷ்ணமுள்ளதேசத்தில் வழக்கப்படி வெல்லப்பட்ட வரசர்களுக்கு அருவருப்பான வேலையைக்கொடுத்து, அடிமை அந்தஸ்துக்குத் தாழ்த்தப்பட்டார்கள்."* என்றார் பிஷப் கால்வெல்துரை அவர்கள். இப்பகுதியின் பிரகாரம் சந்திரகுல நாடார்கள் தாழ்த்தப்பட்டனர்.

ஒவ்வொருசாதியாரும், அவரவர்களது சாதிப்பெயர்களோடு, தொழிலையும் ஏற்று நடந்து வரும்போது இந்த சந்திரகுல நாடார்கள் மாத்திரம் செய்புந்தொழில் வேறு,சாதிப்பெயர்கள் வேறாகப்பெற்று நடந்து வருதல் என்னோ? இவ்விதம் தொழில் மாறிவருவதற்கு இகலரசர்களின் இடுக்கணே காரணமாகும். காலமகிமையால் உயர்வுந் தாழ்வாகக் காணப்படலாம். இராஜஸ்தானத்திலுள்ள பிராமணர்கள் பயிரிடுந் தொழிலராகவும், பொதிமாட்டுக் காரராகவும், ஆடு மாடு மேய்க்குந் தொழிலராகவும் நாளதும் இருக்கின்றார்கள்.† அப் பிராமணர்கள் அத்தொழில்களைச் செய்யினும், அத்தொழிலுக்குரிய பெயர்களாகிய "உழவர், உப்புவணிகர், இடையர்" என்னும் பெயர்களைப் பெறாமல் பிராமணர்கள் எனவே விளங்கி வருவதைப்போல் நாடார்கள் வேறு தொழிலைச் செய்யினும் அத்தொழிலுக்குரிய பெயர்களைப் பெறாமல் "நாடர், நாடார்" என்னும் அரசகுலப் பெயர்களையே நாளதும் பெற்று அரசர்களென விளங்கி வருகின்றனர். அதனால் சந்திரகுலப் பாண்டிய வம்ஸத்தவர்கள் நாடார்கள் எனவே இப்பிரபந்தத்தால் பிரகாசப் படுவர்.

---

* John Eadie's Biblical Cyclopadia or Biblical Dictionary, P 111 to 115, under "Captive and Captivity"

† Vide, The Native States of India and Their Princes. P-14, 20, 24, 57; The Bengal District Gazetteer. Vol. III, P.94; Statistical Account of Bengal. Vol. IV. P. 46, 222. 329; The Salem District Manual, Vol. I, P. 130, The Madras Journal in 1850, Vol. XVI, No, 38, P. 54. The Wars of The Rajas Ch. VIII, P. 73, 78; Little Arthur's History of England. Ch. XII. P. 38; Ch. LVII. P. 248 Letters to Indian youth, Letters X, P. 100.

"ஊழிபெறினுந் தாம் பெயரார் சான்றாண்மைக்
காழியெனப் படுவர்" (திருக்குறள்.)

'உயர்ந்தோர்கள் காலம் வேறுபடினும் அவர்கள் குணம் வேறுபடாது" எனக்கூறிப் போந்த பாவினத்திற் கிணங்க இவ்வரசகுல நாடார்களது தொழில்கள் வேறுபடினும், இவர்களது "நடை, யுடை, குணம், குலம்" முதலியவைகள் மாறுபடாது நாளதும் நிலைத்து நிற்கின்றமையால் அரசர்கள் எனத் துணியப்படுவர்.

இலிங்கபுராணம், கலியுகத் தியற்கை சொன்ன வத்தியாயம்
10-வது செய்யுள்.

மதிமரபிற் புவிநிழற்று மாலைநெடுந்
தனிக்குடையோன் மன்னன் றேன்றி
கதிருமிழ்வெம் படையேந்தி யந்தணர்த
மொடுங்கூடிக் கலியீற் றின்க
ணதிர்திரைநீர்க் கட்டுலகி னருமறையி
னெறியொழுகா தகன்றோ ராவி
கொதியழல்வெஞ் சினத்திருகு கொடுங்கூற்று
முணவிருந்து கொடுக்கு மாதோ.

என்னும் பிரமாணத்தை அனுசரித்து இந்த சந்திரகுல பாண்டிய வம்ஸ நாடார்கள் தங்கள் சுயவரசாட்சி காலத்தில் எவ்விதம் மகிமை பெற்றிருந்தார்களோ அவ்விதமாகவே இனி சாக்ஷாத் பரம்பொருளாகிய பரமசிவம் ஏற்றகாலத்தில் மகிமைபெறச் செய்வார் என்பதற்கு ஐயமில்லை. சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீய வெல்லா மரனுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி.

—————:o:—————

புனைந்துரை.

புனைந்துரை என்றால் நாடார்களது குலங் கோத்திரங்களை அலங்கரித் துரைத்தல்.

1. வகுப்பு:—ஆரியர்.
2. சாதி:—க்ஷத்திரியர்.
3. குலம்:—சந்திரகுலம்.
4. பரம்பரை:—பாண்டியன் பரம்பரை.
5. கோத்திரம்:—அத்திரிமாருஷி கோத்திரம், கசிபருஷி கோத்திரம், மரீசி கோத்திரம் முதலியன.
6. பட்டப்பெயர்:—நாடன், நாடான், பாண்டியன் முதலியன.
7. குரு:-ஸ்ரீமத்-நின்றசீர்நெடுமாறநாயனார்*, ஸ்ரீமத்-ஏனாதிநாதநாயனார்†
8. ஆசாரியர்:—சேலம் ஜில்லா, பாசூர் க்ஷேத்திரத்தில் விளங்கும் சத்தியோஜாத மடத்து வகையராவாகிய ஸ்ரீமத்-பசுபதி புனுகுசட்ட குருக்கள் அவர்கள்.
9. தசாங்கம்:—

1. நாடு:—பாண்டியநாடு	6. கொடி:—மீனக்கொடி
2. நகர்:—மதுரை, கொற்கை	7. முரசு:—கொடிமுரசு
3. மலை:—பொதியமலை	8. யானை:—வெள்ளையானை
4. நதி:—வைகை, தாமிரபரணி	9. குதிரை:—கனவட்டம்
5. மாலை—வேப்பமாலை	10. தேர்:—தேர்

---

* "தாய் நெடுமாறர் துலாமதிப் பரணியில்." என்னும் பாசுரத்தால் சந்திரகுல பாண்டிய வம்ஸத்திலுத்த ஸ்ரீமத் - நின்றசீர் நெடுமாற நாயனார் ஐப்பிசிமீ பரணி நட்சத்திரத்தில் சிவபிரானது திருவடி நீழலடைந்தனர்.

† "காணா மேனாதியார் கன்னி யுத்திராடம்" என்னும் பாசுரத்தால் சூரியகுல சோழவம்ஸத்திலுதித்த ஸ்ரீமத்-ஏனாதிநாத நாயனார் புரட்டாசிமாதம், உத்திராட நட்சத்திரத்தில் சிவபிரானது திருவடி நீழலடைந்தனர்.

இந்த நட்சத்திர தினங்களை நாடார் வம்ஸத்தவர்கள் பரிசுத்தமாக வெண்ணி ஒருபொழுது, உபவாசம் காலட்சேபம், தான தருமம், விருந்திடல் முதலிய சத்கருமங்களால் பொழுது போக்குகின்றனர்.